REDEMPTION THROUGH GRACE

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்





INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai-600 119
INDIA

REDEMPTION THROUGH GRACE

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்

General Editor
G. JOHN SAMUEL

Editor
M. MARUTHAMUTHU

Associate Editor
S. RASU

English Rendering
K.G. SESHADRI

INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai-600 119
INDIA

REDEMPTION THROUGH GRACE

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்

First Edition 1998, PP. 382

Price - Rs.350 US $ 25

Publication No. 60

Copies can be had from

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Chennai-600 119.
India.

Phone : (Off.) 4961662, 4960831
(Res.) 4960085
Fax : 91-44-4960959
E-mail : ias@xlweb.com
world wide web site : http//xlweb.com/heritage/asian

Composed by

Institute of Asian Studies, Chennai - 600 119.

Printed by

Students Xerox and Offset Service,

Chennai-600 001. ✆:582513, 4343862

Transliteration Table

VOWELS

Short		Long		Dipthong	
அ	a	ஆ	ā	ஐ	ai
இ	i	ஈ	ī	ஔ	au
உ	u	ஊ	ū		
எ	e	ஏ	ē	**Velar Fricative**	
ஒ	o	ஓ	ō	ஃ	k̲

CONSONANTS

Stops		Nasals		Semi-Vowel		Trill	
க்	k	ங்	ṅ	ய்	y	ற்	ṟ
	ச்	c	ஞ்	ñ	வ்	v	
ட்	ṭ	ண்	ṇ				
த்	t	ந்	n				
ப்	p	ம்	m				
		ன்	ṉ				

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

ஆ.நி செ.	ஆசியவியல் நிறுவனம், சென்னை
இ க அ. மதுரை.	இறையியல் கல்லூரி, அரசரடி, மதுரை
உ வே.சா.நூ	உ.வே சாமிநாதையர் நூலகம்
கே ப.க.சு.நூ.	கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூலகம்
செ.அ கீ சு.நூ	சென்னை அரசினர்க் கீழ்த்திசைச் சுவடிநூலகம்
த.ச.ம நூ.	தஞ்சை சரசுவதி மகால் நூலகம்
த.ப க.	தமிழ்ப் பல்கலைக்கழகம்
ப	பக்கம்
பக்	பக்கங்கள்
பதி	பதிப்பாசிரியர்
ம.த.ச.	மதுரைத் தமிழ்ச்சங்கம்
வ எண்.	வரிசை எண்

CONTENTS

முகவுரை

உலக மொழிகள் பலவற்றிலும் தொன்மையானது தமிழ்மொழி. இம்மொழியானது தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே ஒரு நீண்ட இலக்கிய, இலக்கண வரலாற்றைப் பெற்று விளங்கியுள்ளது இத்தகைய சிறப்புடைய செம்மொழியான தமிழ்மொழியின் நூல்கள் அனைத்தும் பண்டைய காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதப்பெற்று காலங்காலமாக வழங்கப்பெற்று வந்திருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதிவரை நம் முன்னோர்கள் ஓலைகளில் எழுதி வந்திருக்கிறார்கள். நம்முடைய பாரம்பரியப் பொருள்களான இத்தகைய ஓலைச்சுவடிகளைப் பதிப்பித்து வெளியிட வேண்டுமென்பதில் மிகுந்த நாட்டமுடன் விளங்கும் நிறுவனங்களுள் ஒன்று சென்னை ஆசியவியல் நிறுவனமாகும்

இந்நிறுவனம் இதுவரை பதிப்பில் வராத இருபதிற்கும் மேற்பட்ட சுவடி இலக்கியங்களைப் பதிப்பித்து ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிட்டுள்ளது. அவ்வகையில் திங்களூர் அருள்மலை நொண்டி நாடகமும் விரிவான ஆராய்ச்சி முன்னுரையுடன் பதிப்பிக்கப்பெறுகிறது.

இச்சிற்றிலக்கியத்தைப் பதிப்பிக்கும் வாய்ப்பை நல்கிய நிறுவன இயக்குநர் வணக்கத்திற்குரிய டாக்டர் **ஜி. ஜான் சாமுவேல்** அவர்களுக்கு மிகவும் நன்றியுடையேன். இவ்வோலைச் சுவடியை இந்நிறுவனத்திற்கு அன்பளிப்பாக அளித்துதவிய சென்னை ஆவணக் காப்பக ஆணையர் திரு. **M. பரமசிவம்** இ. ஆ. ப அவர்களுக்கு நன்றி இந்நொண்டி நாடகச் சுவடியின் வேறு பிரதியை ஒப்பிட்டுப் பார்க்க அனுமதியளித்த தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறைத்தலைவர் முனைவர் **த.கோ. பரமசிவம்**, அன்புடன் உடனிருந்து உதவிய **திரு. மோ.கோ. கோவைமணி** ஆகியோருக்கும் நன்றியுடையேன்.

இந்நூலின் பாடவேறுபாடுகளைக் காண வேறு ஓலைப்பிரதிகளைத் தந்துதவிய பொறியியல் வல்லுநர் டாக்டர் **நா. கணேசன்** (ஹூஸ்டன், அமெரிக்கா), தியாகி கவிஞர் **ந. கந்தசாமி** (இராசிபுரம்), புலவர் **தே. ப. சின்னசாமி**

(நாமக்கல்) ஆகியோருக்கும்; இச்சுவடிகளைப் பெற்றுத் தந்து, திங்களூர் கல்வெட்டுகள், செப்பேடுகள் பற்றிய ஆய்வுச் செய்திகளைத் தந்துதவிய இந்நூலின் இணைப்பதிப்பாசிரியர் முனைவர் புலவர் **செ. இராசு** அவர்களுக்கும் நன்றி.

சுவடியியல் துறையில் என்னை ஈடுபடுத்தி எனது இலக்கிய ஆய்வு வளர்ச்சிக்கு ஆசானாக விளங்குபவர் இந்நிறுவனச் சுவடியியல் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் **பூ. சுப்பிரமணியம்** அவர்கள். இந்நூலின் செய்யுட்களைப் படியெடுக்கும்போதும் ஆய்வுரை எழுதும்போதும் எழுந்த ஐயங்களைத் தெளிவுபடுத்தி ஆய்வுக் கருத்துகளை வழங்கியுதவிய அப்பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கு மிகவும் நன்றிக் கடப்பாடுடையேன் இந்நூலின் பதிப்பிற்காகப் பாடல்கள், குறிப்புரை ஆகியவற்றைச் செம்மைப்படுத்தியுதவியவர் செல்வி **ஆர். ஜயலட்சுமி** அவர்கள் நூலின் அச்சுப்படிகளைத் திருத்திக் கருத்துரைகளை வழங்கியவர் முனைவர் **கி. ஜெயகுமார்** அவர்கள். இந்நூலினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தவியவர் பேராசிரியர் திரு. **K.G. சேஷாத்திரி** அவர்கள். நூலின் ஆங்கிலப் பகுதியின் அச்சுப்படியைத் திருத்தி உதவியவர்கள் டாக்டர் **M.S. நாகராசன்**, முனைவர். **V. கணேசன்** ஆகியோர். சுவடியிலிருந்து நூலைப் பெயர்த்து எழுதுவதிலும், ஆய்வுரையினைத் தூயபடியாக எழுதுவதிலும் துணைநின்று உதவியவர் என் துணைவியார் திருமதி **பிரேமா மருதமுத்து** நூலினை முழுமையாக எழுத்துப் பெயர்ப்பு செய்வதில் துணைநின்றவர்கள் திரு. **மொ. மாசிலாமணி**, திரு. **சு. வடிவேலன்** ஆகியோர் நூலின் சொல்லடைவு தயாரிப்பதற்கு உதவியவர் திருமதி **பாமா ரஞ்சித்குமார்** அவர்கள் இந்நூலினைக் கணினியில் பதிவு செய்து கொடுத்து தவியவர் திருமதி **நே. உமாராணி** அவர்கள். திங்களூர் அருள்மலை பற்றிய களஆய்வின் போது துணைசெய்தவர் அருள்மலை அர்ச்சகர் திரு. **T. S. சோமசுந்தர குருக்கள்** அவர்கள், திங்களூர் அருள்மலை ஆலயங்களின் புகைப்படம் எடுத்துதவியவர் திங்களூர் புகைப்படக் கலைஞர் திரு **T. S. மாரிமுத்து** அவர்கள், இந்நூலினை நன்முறையில் அச்சிட்டவர் **மாணவர் மறுதோன்றி அச்சகத்தார்**, இவர்கள் அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

மொ. மருதமுத்து

Preface

Tamil language, one of the ancient languages of the world, holds a long history of grammar and literature, even before Tolkāppiyar. With such a classical status, Tamil writings were carried out in Palm-leaf manuscripts by Tamil scholars till the mid - twentieth century. The Institute of Asian Studies has been greatly interested to bring out the hidden cultural treasures embedded in Palm-leaf manuscripts. It has also edited and published more than twenty such literary pieces with English translations. And now, **Tiṅkalūr Aruḷmalai Noṇṭi Nāṭakam** also falls into this catagory.

I acknowledge my indebtedness to the Director of the Institute of Asian Studies, **Dr. G. John Samuel** but for whose encouragement this publication would not have seen the light of day. I thank **Mr. M. Paramasivam** I.A.S. for having donated this Palm-leaf manuscript. My thanks are due to **Dr. Ta.Kō. Paramasivam** of Tamil University, Tanjavur, and **Mr. Kovai Mani**, for permitting me to make a comparison with other copies of this manuscript. I thank **Dr. N. Ganesan**, the poet **N. Kanthasami**, the poet **Tē. Pa. Chinnasami** for granting me manuscripts which have been of great help to me in variant readings and interpretation. I express my gratitude to **Dr. Rasu**, the co-editor of this work, for providing epigrapic information collected from Tiṅkaḷūr.

I sincerely thank **Dr. P. Subramaniam**, for having introduced me into the field of Manuscriptology at this Institute, and also for clearing my doubts while copying the manuscript and writing Preface to this edition. **Ms. R. Jayalakshmi** for her help in editing and writing notes, **Dr. K. Jayakumar** for his valuable suggestions, I thank Prof. **K.G. Seshadri** for his excellent translation of this work into English, **Dr. M.S. Nagarajan, Dr.V. Ganesan** for going through English section, **Mrs. Prema Maruthamuthu**, my wife, for her fair copying of the Preface, **Mr. M. Masilamani, S. Vadivelan** for their assistance in copying the Manuscript, **Mrs. Bama Ranjit Kumar** for preparing word Index, **Ms. N. Umarani** for her DTP work, **T.S. Soma Sundharam** for his assistance in doing research about the temple, **S.P. Marimuthu** for taking Photographs of the temples, **Students Xerox and Offset Printers** for their neat printing.

M. Maruthamuthu

பதிப்புரை

அறிந்த கருத்துக்களையும், உணர்ந்த உணர்ச்சிகளையும் அளந்து உரைப்பதற்குப் பயன்படும் கருவியே மொழியாகும் அம்மொழி பேசும் மக்களின் முடிந்த கொள்கைகளையும், முதிர்ந்த குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டு திகழும் இயல்புடையதுதான் இலக்கியம். இலக்கியவளம் இல்லாத மொழி மணம் வீசாத மலருக்கு ஒப்பானதாகும். தமிழ்மொழியில் சங்ககாலம் தொட்டு இன்றைய காலம்வரை பலவகையான இலக்கியங்கள் எழுந்துள்ளன. அதிலும் குறிப்பாக 17, 18ஆம் நூற்றாண்டுகளில் அம்மானை, குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம் முதலான பலவகைப் புதிய சிற்றிலக்கிய வகைகள் தோன்றித் தமிழ்மொழியை வளப்படுத்தியுள்ளன. அவ்வகையில் **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்** என்னும் நூலும் ஒன்றாகும்

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்

ஆசியவியல் நிறுவனத்தில் பாதுகாத்து வைக்கப்பெற்றுள்ள சுவடிகளில் 564ஆம் பதிவு எண்ணுள்ள **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்** என்னும் சுவடியின் பதிப்பு இந்நூலாகும்.

இந்நூல் இதுவரை பதிப்பிக்கப் பெறவில்லை ஆயினும் அமரர் ம.ப. பெரியசாமித் தூரனை ஆசிரியராகக் கொண்ட 'காலச்சக்கரம்' என்னும் இதழில் இந்நூல் தொடர்ச்சியாக முழுதும் வெளிவந்துள்ளது [1]. இத்தகவலை இந்நூலின் இணைப்பதிப்பாசிரியரும் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறைத் தலைவரும் கல்வெட்டறிஞருமான முனைவர் செ. இராசு அவர்கள் இந்நூலின் பதிப்பாசிரியருக்கு எழுதிய கடிதக் குறிப்பு தெரிவிக்கிறது. இந்நூல் வெளியான காலச்சக்கரம் இதழ்கள் தற்போது கிடைக்கப்பெறவில்லை.

சுவடி பற்றிய செய்திகள்

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம் எனும் இரு சுவடிகள் சென்னை ஆசியவியல் நிறுவனத்தின் சுவடி நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவ்விரு சுவடிகளையும் திரு. M. பரமசிவம் என்பவர் இந்நிறுவனத்திற்கு 10.4.1995 அன்று அன்பளிப்பாக அளித்துள்ளார். இவ்விரு சுவடிகளின் பதிவு எண்கள் 564, 573 ஆகும் அவற்றில் 564ஆம் எண்ணுள்ள சுவடியில் மட்டும் நூல் முழுமையாக உள்ளது. இச்சுவடியைக் கொண்டே இந்நூல் பதிப்பிக்கப் பெறுகிறது.

---

1 சுவடியிலிருந்து பெயர்த்து எழுதி வெளியிட்டவர் புலவர் வே ரா தெய்வசிகாமணிக்கவுண்டர்

புற அமைப்பு

இச்சுவடியானது 61 ஏடுகளுடன் 35 செ.மீ. நீளமும் 2. 5 செ.மீ. அகலமும் உடையதாகக் காணப்படுகிறது. ஏடுகள் சாதாரணப் பனையோலைகளால் ஆனவை. சுவடியின் முன்னும் பின்னும் வெற்றோலைகள் இரண்டு வைத்துக் கட்டப்பெற்றுள்ளன. சுவடியின் முன்னுள்ள வெற்றோலையை அடுத்து நூல் தொடங்குகிறது.

அக அமைப்பு

இச்சுவடியின் அக அமைப்பானது நூல் தொடக்கம், நூல்பகுதி, நூல்முடிவு என்னும் முப்பகுதிகளைக் கொண்டு அமைகிறது. சுவடியின் தொடக்கமாக முதல் ஏட்டின் இடது ஓரத்தில் 'ஹரிஓம் நன்றாக' 'குரு வாழ்க' என்னும் தொடர்கள் அமைந்துள்ளன. தொடர்ந்து நூல்பகுதியான காப்புப் பாடலும், காப்புப் பாடலுக்கடுத்து அவையடக்கப்பாடலும் தொடங்கி வாழிப்பாடல்களுடன் நூல் முடிவு பெறுகின்றது. இதனை அடுத்து சுவடி படி எடுத்தவரின் குறிப்பு காணப்படுகிறது.

சுவடியின் காலம்

> 'அப்பச்சிமாரய்யரது துணை லட்சிக்கவும். வெகுதானிய வருஷம்
> தைமாதம் 18ஆம் தேதி பெருந்துறை தாலுக்காவுக்குச் சே(ர்)ந்த
> மஜரா பூலுப்பட்டியிலிருக்கும் சின்னக்குமாரன் அப்பச்சிமாரய்யன்
> புளியமரங் காக்கும்போது எழுதினது. ராக்கிய(ண்)ணன் மசரி
> ஆத்தா(ள்) லட்சிக்கவும். அருள்மலை ஆண்டவர் லட்சிக்கவும்
> அத்தநாரீசர் பாதம்'

என்பது படி எடுத்தவர் எழுதியுள்ள குறிப்பு. இங்குக் குறிக்கப்பட்டுள்ள தமிழ் வருடம், மாதம், தேதி இவைகளுக்குச் சரியான ஆங்கில நாள் 29.1.1819 ஆகும். இதனால் இச்சுவடி படியெடுக்கப்பெற்ற சுவடி என அறியலாம்.

சுவடி எழுதப்பெற்றுள்ள முறை

சுவடியின் இடது ஓரங்களில் பக்க எண்களாகத் தமிழ் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. வலப்புற ஓரத்தில் சிறிது இடம் விடப்பட்டு நூல் இறுதிவரை எழுதப்பட்டுள்ளது. ஏட்டில் ஒரு பக்கத்திற்கு ஆறு வரிகள் இடம்பெற்றுள்ளன. அடிகளின் எண்ணோ பாடல்களின் எண்ணோ குறிக்கப்படவில்லை பாடல்களின் அடிகளும் சீர்களும் பிரிக்கப்படாமல் உரைநடை போன்றே இடையீடின்றித் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன.

எழுத்தமைப்பு

சுவடியில் எழுத்துக்கள் ஓரளவு படிக்கக் கூடியனவாக உள்ளன. ஒற்றெழுத்துக்கள் புள்ளியிடப்பெறவில்லை. எகர, ஒகர உயிர்மெய்க்குறில்,

நெடில் ஆகியவற்றில் வேறுபாடு இல்லை. ஏனைய உயிர், உயிர்மெய்களில் குறில் நெடில் வேறுபாடு பேணப்பட்டுள்ளது. ஒற்று மிகக்கூடாத இடங்களில் மிகுந்தும், ஒற்று வரக்கூடிய இடங்களில் வராமலும் உள்ளன. ர, ற, ழ, ள, ந, ண, ன ஆகிய இன எழுத்துக்களுக்கிடையே வேறுபாடுகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை. ஒரெழுத்து வரவேண்டிய இடத்தில் பிறிதோர் எழுத்து வந்து மயங்கி நிற்கின்றது.

சான்று

மாமறை - மாமரை (பா12:14), தெண்டனிட்டே - தெண்டநிட்டே (பா14:8)
அணிந்த - அனிந்த (பா.1), தொழிலது - தொளிலது (பா.10:11)
பூரணி - பூறணி (பா.10:2), மெந்தன் - மென்ந்தன் (பா 22:1)

இவ்வாறு அளவற்ற பிழைகள் மலிந்துள்ளதால் இவ்வேடெழுதியவரான சின்னக்குமாரன் என்பவர் போதிய மொழியறிவினைப் பெறாதவராக இருந்துள்ளமையை அறியமுடிகிறது. மூலச்சுவடியாக இருப்பின் இவ்வளவு பிழைகள் தோன்றுவதற்கு இடமில்லை. எனவே இச்சுவடி மூலச்சுவடி அன்று.

பாடவேறுபாட்டுச் சுவடிகள்

இந்நூலின் பதிப்புக்காக ஒப்பிட்டுப் பார்க்கப்பட்ட சுவடிகள்,

1. தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடி, எண் 3577
2. திரு டாக்டர் நா கணேசன், (ஹூஸ்டன், அமெரிக்கா) அவர்களின் தாள்சுவடி
3. தியாகி, கவிஞர் ந கந்தசாமி, (இராசிபுரம்) அவர்களின் ஓலைச்சுவடி மற்றும் இரு தாள் சுவடிகள்.
4. தமிழாசிரியர், புலவர் தே.ப. சின்னசாமி, (நாமக்கல்) அவர்களின் ஓலைச்சுவடி.

பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட இந்நிறுவனச் சுவடியில் இல்லாத (விடுபட்டுப்போன) சில பாடல்கள், பாடவேறுபாட்டிற்குப் பயன்படுத்திய தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடி, திரு. நா. கணேசன் அவர்களின் தாள்சுவடி ஆகியவற்றில் கிடைத்தன. அப்பாடல்களும் இப்பதிப்புநூலில் சேர்க்கப்பெற்று நூல் முழுமை பெற்றமைகிறது.

பதிப்புமுறை

சுவடிப் பதிப்புநூல் என்பது அனைத்துத்தர மக்களுக்கும் பயன்படுமாறு வெளிவருதல் வேண்டும். எனவே படியெடுப்போரால் நிகழ்ந்துள்ள பிழைகளைத் திருத்திப் பதிப்பிக்கும்முறை கையாளப்பட்டுள்ளது

இருந்தாலும் ஆய்வு அடிப்படைக்கு உதவுமாறு சுவடியிலிருந்தவை, பிழையென்று திருத்தப்பெற்றவை ஆகியன சுவடியிலிருந்தவாறே 'சுவடிச்சொல்' என்னும் பகுதியில் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் சுட்டப்பட்டுள்ளன. பதிப்பில் பாடவேறுபாடுகள் பல சுட்டப்பெற்று, அவ்வப்பாடலின்கீழ் கொடுக்கப்பெற்றுள்ளன

நூலில் பாடல்களின் அடிகளும் சீர்களும் பிரிக்கப்பெற்று உரியவடிவில் தரப்பெற்றுள்ளன. இந்நூலுள் 39 பாடல்கள் இடம்பெறுகின்றன. பாடல்களின் பெயர்கள், எண்களுடன் ஆய்வுரையில் இடம்பெறுகின்றன. பாடல்களுக்கான வரிசை எண் இடது பக்கத்திலும், சிந்துப் பாடல்களில் கண்ணி எண் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. நூலுக்கான 'சொல்லடைவில் பாட்டிலுள்ள சொற்களுக்குப் பாட்டு எண்ணும் வரி எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளன.

நூலில் பாடல்களின் பொருளுக்கேற்பச் சுருங்கிய தலைப்புகள் ஒவ்வொரு பாடலுக்கும் கொடுக்கப்பெற்றுள்ளன. அவை சுவடியில் இல்லாதவை என்பதைச் சுட்ட, அடைப்புக் குறிக்குள் அமைக்கப்பெற்றுள்ளன. அத்தலைப்புகளை மட்டும் தொடர்ந்து பார்த்தால் கதையின் போக்கு ஓரளவிற்குப் புலனாகிவிடும். மேலும் கதைமாந்தர் ஒருவரின் கூற்றையோ கதைநிகழ்ச்சியின் ஒரு பகுதியையோ உடனடியாக அறிய விரும்புவோருக்கு இத்தலைப்புகள் பெரிதும் உதவக்கூடும். பாடலின் அரிய சொற்களுக்கு வேண்டிய குறிப்புரைகள் அந்தந்தப் பாடல்களின் கீழே கொடுக்கப்பெற்றுள்ளன.

பிறநாட்டினரும், மொழியினரும் இந்நூலினை எளிமையாகப் பயில, நூலின் செய்யுட் பகுதியின் வரிவடிவம், ஆங்கில ஒலிபெயர்ப்பில் (transliteration) எழுதப்பெற்று, அவ்வப் பாடலின் கீழ் கொடுக்கப்பெற்றுள்ளது. இதற்கடுத்து நூற்செய்யுளின் ஆங்கில மொழிபெயர்ப்பும் அவ்வப்பாடலின்கீழ் இடம்பெறுகின்றது.

பிற செய்திகள்

நூலின் ஆய்வுரையில் நாடக இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, வகைகள் மற்றும் நொண்டி நாடகத்தின் தோற்றம், வளர்ச்சி வரலாறு, அமைப்புமுறை ஆகியனவும், திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தின் ஆசிரியர், காலம், திங்களூர் பற்றிய பல்வேறு செய்திகள், நூலமைப்பு, இலக்கிய நயங்கள் ஆகியனவும் கூறப்படுகின்றன.

ஆய்வுரையில் ஆங்காங்குத் திங்களூர் தொடர்பான நிழற்படங்களும், கொங்கு நாட்டு வரைபடமும் கொடுக்கப்பெற்றுள்ளன.

நூலின் இறுதியில் நூலுக்குக் குறிப்புரை எழுதவும், ஆய்வுரை எழுதவும் பயன்படுத்தப்பெற்ற அகராதிகள், சுவடிகள், நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றின் முறையான பட்டியல் துணைநூல்கள் என்னும் தலைப்பில் இடம்பெறுகின்றது. இதனைத் தொடர்ந்து, நூலின் பாட்டுமுதற் குறிப்பு அகராதியும், சொல்லடைவும் இடம்பெறுகின்றன. பாடலில் உள்ள சொற்கள் மட்டுமே இதில் இடம்பெறுகின்றன.

நூலின் பின்னிணைப்புப் பகுதியில், திங்களூர் அருள்மலை பற்றிய தனிப்பாடல்களும், நூலில் இடம்பெறும் கிருஷ்ணதாசு, அப்பச்சிமார் ஆகியோர் பற்றிய தனிப்பாடல்களும் இணைப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளன ஆய்வாளர்களுக்குப் பயன்படும் நோக்கில் சுவடிகளாகவும், பதிப்புநூல்களாகவும் அறியப்பெறும் நொண்டி நாடகங்களின் பெயர்ப் பட்டியல் இணைப்பு இரண்டில் கொடுக்கப்பெற்றுள்ளது. பெயரளவில் தெரியவரும் நொண்டி நாடகங்களின் தொகுப்புப் பட்டியல் இணைப்பு மூன்றில் தரப்பட்டுள்ளது இதுவரை வெளிவந்துள்ள நொண்டி நாடக நூலாய்வுகள் பற்றிய பட்டியல் இணைப்பு நான்கில் இடம்பெறுகிறது.

மொ. மருதமுத்து

Editor's Note

Language is a tool for expressing thoughts and feelings, ideas and emotions. Literature is a record of the ideals, experiences, convictions and life of a people. A language without literary wealth is like unto a flower without fragrance. In the ancient Tamil language from the *caṅkam* age down to the present, many kinds of literature have appeared. Especially in the 17th and 18th centuries, different kinds of minor literary pieces like *Ammāṉai, Kuṟavañci, Paḷḷu, Noṇṭināṭakam* etc., have appeared and enriched the language. *Tiṅkaḷūr Aruḷmalai Noṇṭināṭakam* is one such work.

This work has been edited from the palm-leaf manuscript No.564 kept in the Institute of Asian Studies, not till now printed. However, according to Dr.S. Raju, this *Noṇṭināṭakam* had appeared in a serial form in a journal called '*Kālachakkaram*' with the late M.P. Periasamy Thooran as the editor. Copies of the journal concerned are not available now. Two manuscripts of *Tiṅkaḷūr Aruḷmalai Noṇṭināṭakam* have been gifted to the Institute by Thiru M. Paramasivam. They are registered under No.564 and No.573. Only 564 is complete.

The manuscript is in palm-leaf, beginning with the invocation, the work, and the benediction followed by a note written by one Chiṉṉakumāraṉ who has copied it on 29.11.1819, the exact equivalent of the date mentioned according the Tamil calendar in the note. A number of orthographical errors and other mistakes in the script, reveal a certain lack of knowledge on the part of the copyist. This is not the original manuscript.

The following manuscripts were referred to for comparison in printing this edition.

i) Palm-leaf manuscripts of the Tamil University No.3577.

ii) The Paper manuscript of Dr. N. Ganesan (Houston, USA).

iii) Palm-leaf manuscript and two paper manuscripts of Tiyāki N. Kandasamy of Rāsipuram.

iv) Palm-leaf manuscripts of Pulavar T.P. Chinnasamy of Nāmakkal.

Some of the missing verses not seen in the manuscripts used for printing, were found in the manuscripts of the Tamil University and Mr. N. Ganesan, and so the present edition is in complete form.

The Method of Editing

While editing a manuscript and printing it, the errors committed by the copyists must be corrected before the printing. A list of such corrections so made, are shown at the end of each verse as footnotes. There are 39 verses in this work. They are numbered and titles have been given for each by the editor. A quick reading of the titles alone will give the reader an idea of the nature and content of the story. Rare words have been explained in the footnotes at the end of each verse.

An English transliteration is given below each verse to enable foreigners and non-Tamils to read the original easily. An English translation follows each verse.

The critical introduction contains the following: the rise of literature; its growth: its variety; the rise of *Noṇṭināṭakam,* its structure; details regarding the author of *Tiṅkaḷūr Noṇṭināṭakam*; his age; details regarding Tiṅkaḷūr; the structure of the work; its literary excellences.

Photographs concerning Tiṅkaḷūr and a map of Koṅkunādu have also been provided.

At the end of the edition a list of the dictionaries, manuscripts and other works used in preparing notes and the critical introduction, is given. An index of the first lines of the verses and also a Word Index are also given. Individual verses concerning Tiṅkaḷūr Aruḷmalai and certain historical characters like *Appaccimār. Krishnadāsu* and others, are given in Annexure I. Annexure II provides a list of *Noṇṭināṭakams* in palm-leaf manuscript and editions. Annexure III contains the list of *Noṇṭināṭakams* known by name only. The IV Annexure gives a list of research works concerning *Noṇṭināṭakams.*

M. Maruthamuthu

Translator's Note

The primary requirement for a good translation is that the translator must have bilingual valiancy in the source language and the target language. Even then there is no guarantee that the translation will be perfect. The best of them can be only approximations. There can be no total translations, for the genius of each language is uniquely its own.

Though this aesthetic position in regard to translation is true, in actual practice, translation from one language to another has been going on as one of the most worthwhile intellectual activities in the world, as it believes that meaning can be separated from the verbal expression in which it is cast. The translator concerns himself mainly with the essentials of the original work. He is well aware that all the four aspects of meaning, that is, - sense, feeling, tone and intention - cannot be transferred successfully from the Source Language to the Target Language. The success of the translation depends however, upon the degree of correspondence that the translator has been able to achieve in his work.

Fidelity to the original and artistic beauty in translation, are the two ideals for a good translator. But this is a herculean task that has baffled many a master in the field! A literal translation may become dull and prosaic. If he were to take liberties with the Source Text to make his own work artistically beautiful, he will be exposing himself to the charge of having sacrificed fidelity for beauty! The present translator has tried to be as close to the original text as possible, without taking needless liberties, following its spirit and essence, bearing in mind the need for a true communication of the meaning and the message of the *Noṇṭi nāṭakam* as intended by its 18th century author, Thiru Avinācipulavar.

Tiṅkaḷūr Aruḷmalai Noṇṭināṭakam

A play has generally five broad divisions; exposition, rising action, climax, denouement and solution. *Noṇṭināṭakam* as the name implies, is a form of dramatic art. It is acted and sung on the stage. It resembles in a way the Opera Buffa of the Italian stage (18th century), 'a play set for music with a light theme, less formal in style, with characters and plot drawn from ordinary life'. In the case of a *Noṇṭiṇāṭakam,* we see the language is from everyday speech. Sometimes it descends to the slang or even bawdy level as in the bedchamber

scene (Verse 22). The hero sings his words to some set tune or other. There is a strong element of the didactic in the play. The moral of the tale is; "crime does not play". The hero Pakaletti suffers because of his repeated criminal folly of stealing and his philandering nature. He gets his comeuppance at the hands of the whore Keṭṭimuttāḷ and also the soldiers of Hussain Khan when he tries to steal a troop-horse from their barracks.

An interesting aspect of the *Noṇṭināṭakam* is that it is cast mostly in the form of a monologue spoken by Pakaletti, the thief. However there are occasions when the author himself speaks and a few instances of other characters also speaking. Throughout, there is the unmistakable religious note, with the Lord of Aruḷmalai in the background who lends his name to the drama. A purple patch towards the end makes the hero fervently pray in words (Verse 38) which ring true from the lips of a converted sinner though they are not comparable to the hymns of the saints in religious literature.

A long list of religious shrines or holy places of worship is given by the author which the hero is purported to have visited; of course, there does not seem to be any planned itinerary, which persons going on pilgrimages generally have during their travel. The lines of the journey if drawn on a map, will crisscross each other in a crazy way (Verse 14). Pakaletti, the lusty thief with his braggadacio and tall talk about his expertise in stealing, reminds one of the character *Vice* in the English Morality plays. He is a typical anti-hero with his low profile as an ordinary thief, and a personification of human folly.

Characterization : Pakaletti is of course Everyman in his folly with his vanity and his philandering nature and his weakness for stealing. He suffers for his errors and weaknesses; he reforms after his punishment (Verse 36) from an unexpected quarter, proving the adage that a thief after many escapes will one day be caught. Having gone scot-free after stealing at the rich brahmin's house and then at the palace of the King of Banaras, he is caught red-handed at last by the guards of Commander Hussain Khan. He loses a leg and a hand and suffers terrible agonies. He is treated by holy men from Banaras who come that way, who advise him to go to Tiṅkaḷūr and pray to the Lord for getting back his lost limbs. He turns over a new leaf, goes to his native place, gets married and leads a good life thereafter. He is thus redeemed from his evil ways by the Grace of God.

We have then the trusting brahmin householder Subbaiyan who takes the hypocritical holy man to his house and fetes him, only to be plundered of all his wealth by the false thief. He is the typical gull to be met with in everyday life.

Keṭṭimuttāḷ is the typical prostitute out for making as much of money as possible from lustful men like Pakaletti. The scene where she indulges in amorous dalliance with the love-crazed Pakaletti is rather too luridly described with salacious details by the poet, and the translator has had to use all his wits to render a faithful translation without making it pornographic. Her compounding a love-philtre for Pakaletti reads like the hell-brew prepared by the witches in 'Macbeth'! Her mother Teṭṭimuttāḷ is the typical Bawd in a bordello, wily and greedy, who drives the hero away after depriving him of his wealth like a plucked chicken! The interlude of Keṭṭimuttāḷ provides comic relief to the religious motif of the plot.

The holy men from Banaras present a refreshing contrast to the other characters, with their good samaritan nature and their treatment of the wounds of Pakaletti to whom they make and present a pair of crutches. They are the mouth-piece of the writer to describe the greatness of Tiṅkaḷūr whither they direct Pakaletti to go for recovering his lost limbs. He prays to Lord Murukaṉ of Arulmalai most fervently and does recover his lost limbs proving thereby that "More things are wrought by prayer than this world dreams of. The work ends with a benedictory haily piece which is a veritable shower of blessings on all concerned with it, and all the people on earth!

The translator heartily thanks Dr. John Samuel, Director, Institute of Asian Studies for giving him an opportunity to render this interesting work into English.

K.G. SESHADRI

30.05.1998

ஆய்வுரை

உலகம் உவக்க உயர்ந்து வளர்ந்துள்ளது நாடகக்கலையாகும். இது காலத்துக்கும் இடத்துக்கும் தக்கவாறு, வாழும் மக்களின் இயல்புக்கும் உணர்வுக்கும் ஏற்ற நிலையில் தோற்றமும் மாற்றமும் கொண்டு, இன்று கலையாகவும் இலக்கியமாகவும் இணைந்து உருவாகி வளர்ந்து வந்துள்ளது. உலக நாடகங்களின் தோற்றமும் வகைகளும் பல நிலைகளில் இருந்தாலும் இக்கலை எப்படித் தோன்றியிருக்கும் என்பதற்கான காரண காரியத்தை ஆராயும்போது கிடைக்கும் அடிப்படைக் கருத்து **போலச் செய்தல்** என்னும் பண்பாகும்.

நாடகத்தோற்றம்

மனிதனின் குழந்தைப் பருவந்தொட்டே இருந்து வரும் இயல்பூக்கமான **போலச்செய்தல்** (Imitation) என்னும் பண்பானது விளையாட்டாக அமைந்து அது அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் ஒரு கலையாகவே அமைந்துவிடுகிறது எனவே மனிதனின் இயல்பாகிய இப்பண்பே நாடகத்தின் தோற்றம் என்பது தெளிவாகும் "போலச்செய்யும் விளையாட்டாகிய பண்பட்ட அந்தக் கலையே ஒரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு அதன் பொருள் விளக்கத்திற்கேற்ற பேச்சு நடைகளும் இணைகிற போது நாடகம் என்ற பெயரைப் பெற்று விடுகிறது"[1] என்பர்.

நாடகக்கலை

முதலில் மனிதனின் பல்வேறு உணர்வுகளின் அடிப்படையில் தோன்றிய உடலுறுப்பு அசைவுகள் பின்னர் நடனமாக மாறி அதன் பின்னர் தொடர் நிகழ்ச்சி விளக்க இயல்புக் காட்சியாக வளர்ந்து நாடகமாகி இலக்கிய நிலைக்கு உயர்ந்துள்ளதை நாம் அறியமுடிகின்றது உலகில் ஆங்காங்கு வாழும் மக்களின் பண்பு, உணர்வு, பழக்கவழக்கம், காலம், இடம் ஆகியவற்றிற்கு ஏற்ற நிலையில் நாடகக்கலை உருவாகி விடுகிறது. எனவேதான் நாடகமானது, காண்போரைக் கவர்ந்து மகிழ்ச்சியூட்டி, அவர்கள் வியந்து பாராட்டும் ஒரு கலையாக நிலைத்து நிற்கிறது

தமிழில் நாடகத் தோற்றம்

தமிழக வரலாறு எழுதுவார் அனைவரும் தொடக்க வரலாறாக, தொல்காப்பியரின் காலத்தையே முதலாவதாக வைத்து எழுதுகின்றனர்.

---

1 பூ சுப்பிரமணியம், (பதி), தேரூர்ந்த சோழன் யட்சகானம், பக் 19

அக்காலத்திற்கு முந்திய பலநூறு ஆண்டுகள் செம்மையான வாழ்வுடைய நிலமாகத் தமிழகம் இருந்தாலும், தமிழக வரலாற்றில் அவையெல்லாம் எழுதப்படுவதில்லை. அவ்வெல்லைக்கு வரலாற்று மூலங்கள் குறைவாக இருத்தலால் வரலாறு எழுதுவார் அனைவரும் **தொல்காப்பியம்,** சங்க இலக்கியம் இவற்றை அடிப்படையாக வைத்துத் தமிழக வரலாற்றைத் தொடங்குகின்றனர். ஆனால் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே **அகத்தியம், குணநூல், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், பரதசேனாபதியம்,** மதிவாணனாரின் **நாடகத்தமிழ்நூல்** ஆகியவை இருந்து கடல்கோளால் அழிந்தன் என்பது **சிலப்பதிகாரம்** அடியார்க்கு நல்லார் உரையிலிருந்து தெரியவரும் செய்தியாகும். ஆகவே நாடக வரலாறு **தொல்காப்பியத்துக்கு** முன்பிலிருந்தே தொடங்குகின்றது எனலாம்.

நாடகம் – சொல்லாட்சி

நாடகம் என்ற சொல் **தொல்காப்பியம்,** சங்க இலக்கியம், **சிலப்பதிகாரம்** ஆகிய அனைத்திலும் பயின்று வந்துள்ளதை நாம் காணமுடிகிறது.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"[2]

என்ற நூற்பா தொல்காப்பிய காலத்து நாடக வழக்குண்மையைக் காட்டுகிறது சங்க இலக்கியத்தில் **பத்துப்பாட்டு** நூல்களான **பெரும்பாணாற்றுப் படையிலும், பட்டினப்பாலையிலும்** நாடகம் என்ற சொல் பயின்று வந்துள்ளது.

'நாடக மகளிர் ஆடு களத்து எடுத்த'[3]
'பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்'[4]

இவ்விரு நூல்கள் நாடக மகளிர், ஆடுகளம், பாடல், நாடகம் என்ற சொற்களைப் பெற்று வந்துள்ளதால் அக்காலத்தில் இருந்த நாடக வழக்கை அறியமுடிகின்றது. **சிலப்பதிகாரம்** நடனத்தை ஆடிச் சிறப்பிக்கும் கணிகையை,

"நாடக மேத்து நாடகக் கணிகையொடு
ஆடிய கொள்கையின் அரும்பொருள் கேடுற"[5]

என்று கூறுகிறது.

---

2 தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் 56

3 பெரும்பாணாற்றுப்படை 55

4 பட்டினப்பாலை. 113

5 சிலப்பதிகாரம், பதிகம் அடி எண் 15

கூத்தர், கூத்து – சொல்லாட்சிகள்

தொல்காப்பியம், சங்க இலக்கியம், **திருக்குறள், சிலப்பதிகாரம்** ஆகியவற்றில் கூத்தர், கூத்து என்ற சொற்களும் ஆளப்பட்டுள்ளன.

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்' (தொல், பொருள். அகத்திணையியல். 30), 'கூத்தர் ஆடுகளம் கடுக்கும்' (புறம்28. 13), 'கூத்தாட்டும்' (கலி 85 34), 'கூத்து' (கலி65. 29.), 'கூத்தாட்டு அவைக்குழாம்' (திருக் 332), 'இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து' (சிலம்பு. 3:12) என வருமிடங்கள் சான்றாம்.

நாட்டியம் – சொல்லாட்சி

நாட்டியம் என்பது இசைக் கருவிகளுடன் இணைந்து ஆடும் ஆட்டமாகும் **சிலப்பதிகாரத்தில்** இச்சொல்லாட்சியை நாம் காணமுடிகிறது **சிலப்பதிகாரம்** நாட்டியம் பற்றிச் சிறப்பிக்கும்போது,

'நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து'[6]

எனக் கூறுகின்றது.

தமிழ்நாடக வரலாறு

நாட்டியத்தால் பெறும் இன்பத்தினை நீடிக்க விழைந்த மக்களின் வேட்கையே நாடகமாக மலர்ந்தது எனலாம். கருத்தினை வெளிப்படுத்திய நாட்டியம், கதை தழுவிய நாடகமாக மக்களிடம் தோன்றி வளரத் தொடங்கியது. தமிழ் நாடகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி நிலையைத் தெளிவாக அறிய இலக்கியக் குறிப்புகளும் கல்வெட்டுச் சான்றுகளும் துணைபுரிகின்றன. பண்டைத் தமிழர்கள் வீரர்களுக்காக எடுக்கும் நடுகல் விழாவில் பலவித ஆடல்களையும், தெய்வத் தொடர்பான கூத்துக்களையும் நிகழ்த்தியிருப்பதற்குச் சங்க இலக்கியம், **சிலப்பதிகாரம்** முதலான இலக்கியங்கள் நமக்குச் சான்று பகர்கின்றன

ஆடல் என்பது கூத்து என்றே வழங்கப்பட்டு வந்துள்ளது. கதை தழுவிய கூத்தையே நாடகம் எனக் கூறினர். நாடக இலக்கண நூல்கள் வகைப்படுத்திக் காட்டும் கூத்தின் வகைகளே பெரும் ஆய்விற்குரியனவாகின்றன என்றால் கூத்தும் நாடகமும் எந்த அளவிற்குச் சிறந்திருக்க வேண்டும் என்பதை நாம் அறியலாம்.

சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் இருவகைக் கூத்துக்களை, "1. வசைக்கூத்து, புகழ்க்கூத்து, 2, வேத்தியல், பொதுவியல் 3

---

6 சிலப்பதிகாரம், அரங்கேற்று காதை 3:40, 3:158

வரிக்கூத்து, வரிச்சாந்திக்கூத்து 4. சாந்திக்கூத்து, விநோதக்கூத்து, 5. ஆரியக்கூத்து, தமிழ்க்கூத்து 6 இயல்புக்கூத்து, தேசியக்கூத்து"[7] எனப் பலவகையாக விரித்துக்கூறுகிறார். இத்தகு செய்திகளால், முறைப்படுத்தப்பட்ட நாடக அமைப்புகளின் பழமையை மட்டுமன்றி, நடைமுறை நுணுக்கம், செயல்முறை ஆகியவற்றை உணர்த்துவனவாய் உலக நாடக அமைப்புகளுள் தமிழ்நாடகம் முதன்மையிடத்தைப் பெற்று விளங்குவதையும் அறியலாம்.

தேவாரம், திருவாசகம் ஆகிய பக்தி இலக்கியங்கள் எழுந்த காலத்திலும் நாடகம் வழக்கிலிருந்தமையை அந்நூல்களில் பயின்று வரும், 'நாடகமாடிட' (சுந்தரர் தேவாரம் பொது. அடைவு திருத்தாண்டகம். 8), 'நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து நான் நடுவே' (திருவாசகம், திருச்சதகம். 11) என்ற தொடர்களால் அறியமுடிகின்றது.

இராஜராஜன் காலத்தில் **இராஜ ராஜேஸ்வர நாடகம், இராஜராஜன் நாடகம்** என்னும் நாடகங்கள் தஞ்சை கோயிலில் நடைபெற்றன தொடர்ந்து பல அரசர்கள் காலத்திலும் இந்நாடகங்கள் வழங்கி வந்தமையை அறிகிறோம்

நாட்டுப்புற ஆடல்களாகிய 1. ஒயிலாட்டம், 2, கரகாட்டம், 3. காவடியாட்டம், 4. கும்மி, 5 கோலாட்டம், 6. தேவராட்டம், 7 பொய்க்கால் குதிரையாட்டம் போன்றவை குறிப்பிட்ட பொருளுடைய பாடல்களுக்கு ஏற்ப ஆடப்பெறும் ஆடல் வகைகளாகும்.

கதை தழுவிய கூத்து தமிழில் இன்றைய நிலையில் தெருக்கூத்து என்ற நிலையில் அருகிவிட்ட போதிலும் சங்கரதாச சுவாமிகள், பம்மல் சம்மந்த முதலியார், தி.க.ச. சகோதரர்கள் ஆகியோரால் மேடை நாடகமாக வளர்ச்சி பெற்றுத் திரைப்பட நிலையிலும் வளர்ந்து விட்டது. கேரளத்தின் கதகளி, கர்நாடகத்தின் யட்சகானம், ஆந்திராவின் பாகவத மேளா ஆகியவை நாடக வடிவங்களே. அவற்றின் தாக்கமும் தமிழில் ஏற்பட்டுப் பல யட்சகான, பாகவதமேளா நாடகங்கள் தமிழில் தோன்றியுள்ளன.

தமிழ் நாடகங்களின் பெயர்கள்

தமிழில் எழுதப்பட்ட நாடக இலக்கியங்கள் கூத்து என்று பெயர் பெறாமல் அலங்காரம், கீர்த்தனை, சரித்திரம், நாடகம், மாலையீடு, வாசகப்பா, விலாசம் என்னும் பெயர்களைப் பெற்று விளங்குவதைக் காணலாம். நாடகப் பொருளுக்கேற்பக் கலியாணம், சம்மாரம், தபசு, தூது போன்ற பெயர்களும் ஈற்றில் இடம் பெறுவதுண்டு. பண்பட்ட நிலையில் நிகழ்கலையாக, நாட்டுப்புறக் கலையாக, செம்மைபெற்ற கலையாகத் தமிழ் நாடகங்கள் நடத்தப்பெற்றுள்ளன.

---

7 சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, அரங்கேற்றுகாதை. 3:12

இலக்கிய வடிவங்களில் நாடகங்களின் தோற்றம்

சமுதாயக்களத்தின் கொடிகளாகிய இலக்கியங்கள், மண்ணின் வளத்திற்கும் போக்கிற்கும் ஏற்ற இலக்கிய மலர்களையே தோற்றுவிக்கின்றன. எனவே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட இயல்பினையுடைய இலக்கிய மலர்களே மலரமுடியும். தமிழ்நாட்டின் இடைக்கால அரசியல் சூழலும் சமூக அமைப்புகளும் 1. **குளுவ நாடகம்** 2. **குறவஞ்சி**, 3. **நொண்டி**, 4. **பள்ளு**, 5. **மகுடி** போன்ற பல நாடக வகைகள் தோன்றுவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கின்றன. மன்னர்களையே பாடிப்பாடிப் பழகிய புலவர் சமுதாயம், அவற்றை விட்டிறங்கிப் புதுமை காணும் எண்ணத்தில் சாதாரண மக்கள்மீது இத்தகைய இலக்கிய வகைகளை எழுதினார்கள். இவற்றை முழுமையான வளர்ச்சியுற்ற நாடகங்களாகக் கருதமுடியாவிட்டாலும், அவை பிற்கால நாடகங்களின் அமைப்புக்குப் பெருந்துணையாக இருந்திருக்கின்றன என்று உறுதியாகக் கூறலாம்

பள்ளு, குறவஞ்சி, நொண்டி ஆகிய மூன்று வகை இலக்கிய நாடகங்களும் தமிழ் நாடக வரலாற்றில் குறிப்பிடத்தக்கன. உழவர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் பள்ளு நாடகங்களும், குறத்தி குறி கூறுவதாக அமைந்த குறவஞ்சி நாடகங்களும், நகைச் சுவைக்கும் எள்ளல் சுவைக்கும் இடந்தரும் நொண்டி நாடகங்களும் ஆகிய இந்நாடகங்கள் பற்றிய செய்திகள் அறியத்தக்கனவாகும்

நொண்டி நாடகம்

தொல்காப்பியம் நகைச்சுவை என்னும் மெய்ப்பாடு தோன்றுதற்குரிய நிலைக்களங்களாக எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்ற நால்வகையைக் குறிப்பிடுகிறது இந்நகைச் சுவையை அடித்தளமாகக் கொண்டு எழுந்தவையே நொண்டி நாடகங்கள். **நொண்டிச் சிந்து** எனவும் **நொண்டி நாடகம்** எனவும் குறிக்கப்படும் இவ்விலக்கிய வகை, "கள்வனொருவன் படையிலுள்ள குதிரை யொன்றினைத் திருட முயன்றபோது கால் தறியுண்டு பின் நல்வழி பெற்ற செய்தியைச் சிந்து செய்யுளாற் புனைந்து கூறும் நாடகநூல்"[8] என விளக்கப்படுகின்றது. இந்நாடகம் தமிழ்மேடை நாடகத்துக்கு முன்னோடியாக அமைகின்றது. நகைச்சுவையும் எள்ளலும் நிறைந்து 17, 18ஆம் நூற்றாண்டுகளில் பெருகிய வழக்குடன் அமைந்த இந்நாடகம் மக்களை மகிழ்வித்து அறிவுபுகட்டும் நோக்கத்துடன் அமைகின்றது.

நொண்டி நாடகக் கருவின் தோற்றம்

இலக்கிய வகை ஒவ்வொன்றும் ஒரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டுதான் தோற்றம் பெறுகின்றது. அவ் வகையில் நொண்டி நாடகமும் திருட்டுத்தொழில் காரணமாக ஒருவன் கைகால்களை

---

8 ச வே சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப. 376.

இழக்கிறான் என்னும் ஒரு கருவைக் கொண்டு அமைகின்றது. நொண்டி நாடகக் கருவின் தோற்றத்தினைக் காரண காரியக் கோட்பாட்டின்படி ஆய்கின்றபோது சில விளக்கங்களும் முடிவுகளும் கிடைக்கின்றன. அவ்வாறு கிடைக்கும் முடிவு நாம் ஏற்கக் கூடியதாகவே இருக்கிறது.

தமிழ் நொண்டி நாடகங்களில் முதலாவதாக அறியப்படுவது **சீதக்காதி நொண்டி நாடகம்**. இந்நாடகம் கி.பி.1697-ற்குப்பின் எழுந்துள்ளது. நொண்டி நாடகம் எழுவதற்குத் தோற்றுவாயாக விளங்குவது, இதற்குச் சுமார் 50 ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்த மதுரைவீரனின் உண்மை வரலாறாகும்.

கி.பி. 1623-1659ஆம் ஆண்டு வரை மதுரையை ஆட்சி செய்தவர் திருமலை நாயக்க மன்னர் இவரது ஆட்சிக் காலத்தில் மதுரைவீரன் என்னும் வீரன் அரச குடும்பப் பெண்ணான வெள்ளையம்மாளைக் கவர்ந்து சென்று திருமணம் செய்து கொள்கிறான். இதையறிந்த திருமலை மன்னர் மதுரை வீரனைச் சிறை செய்துகொண்டு வரச்சொல்லி, மாறுகால், மாறுகை தறிக்க உத்தரவிடுகின்றார். மதுரைவீரனும் அவ்வாறே தண்டிக்கப்படுகின்றான். இவ்வுண்மைச் சம்பவ வரலாறு அக்காலத்தைய புலவர் ஒருவரால் **மதுரைவீரன் கதை**யாக நாட்டுப்புறக் கதைப்பாடல் வகையில் பாடப்பட்டது இக்கதையானது அக்கால கட்டத்தில் தமிழகம் முழுவதும் பரவி வழங்கி வரலாயிற்று.

தமிழிலக்கியத்தில் இக்கால கட்டத்திலிருந்துதான் திருட்டுக் குற்றத்தின் தண்டனையாக மாறுகால், மாறுகை தறிக்கும் வழக்கமுறை ஆரம்பமாகின்றது. பாண்டி நாட்டில் பேசப்பட்டு வந்த **மதுரைவீரன் கதை**யும் அதன் தொடர்பான மாறுகால், மாறுகை வாங்கும் வழக்கமும் தென்பாண்டி நாட்டில் வாழ்ந்து வந்த முத்தாலங்குறிச்சி க. கந்தசாமிப் புலவரால் தாமியற்றிய **சீதக்காதி நொண்டி நாடகத்**திற்குக் கருப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டது. பின்வந்த புலவர்களும் இக்கருத்தையே தாமியற்றிய நொண்டி நாடகத்திற்குக் கருப்பொருளாகக் கொள்ள ஆரம்பித்துள்ளனர் என்பதைத் தமிழிலக்கிய வரலாற்றில் அறியமுடிகின்றது.

நொண்டி நாடகம் எழுந்த காலச் சூழ்நிலை

இந்திய வரலாற்றில் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியும் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஒரு முக்கியப் பகுதியாகும். 1707இல் முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கசீப் இறந்ததும் முகலாய சாம்ராஜ்யம் சிதற ஆரம்பித்தது வரலாற்றில் அக்கால கட்டம் 'வரலாற்றின் பெரும் அராஜகம்' என்று குறிப்பிடப்படுகிறது. இந்தச் சிதறல் போக்கு ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, பிரான்சு ஆகியவற்றின் நுழைவினால் மிகுதியாயிற்று. ஆங்கிலேயர்கள் சென்னையில் இருந்து கொண்டும் பிரெஞ்சுக்காரர்கள்

புதுவையில் இருந்து கொண்டும் இந்தியாவின்மீது தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஒருவர்க்கொருவர் போட்டியிட்ட காலம் அது.

அக்கால கட்டத்தில் நம் நாட்டில் போர் செய்து வந்த படைகள் ஒன்று காலாட்படை, மற்றொன்று குதிரைப்படை குதிரைப்படைக்கே மதிப்பும் கௌரவமும் அதிகம் எனவே குதிரைப்படையை அதிகரிக்க எதிரிகளிடமிருந்து குதிரைகளைத் திருடிக் கொள்வது வழக்கமாக இருந்தது. ஆங்கிலப் படைக் குதிரைகளைப் பிரெஞ்சுக்காரர்களும், பிரெஞ்சுப் படைக் குதிரைகளை ஆங்கிலேயர்களும் திருடினர். குதிரையைத் திருட தெற்கத்திக் கள்ளர்கள் பயன்படுத்தப்பட்டனர். இத்தகைய கள்ளர்கள் கிழவர்களாகி ஊர் திரும்பியபிறகு தங்கள் பேரன்மார்களுக்கும் பிறருக்கும் தாங்கள் குதிரை திருடப்போன சூழல்களையும், நிகழ்த்திய வீரச்செயல்களையும், பட்ட துன்பங்களையும் தண்டனையால் தாங்கள் கைகால் இழந்ததையும் கதையாக எடுத்துக்கூறிப் பொழுது போக்குவது வழக்கம். இதை அடிப்படையாகக் கொண்டுதான் தமிழ்ச் சிற்றிலக்கிய வகையில் ஒன்றாக விளங்கும் **நொண்டிநாடகம்** தோன்றியிருக்க வேண்டும்.

பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்திற்குப்பின் எழுந்த **மதுரைவீரன் கதையின்** தாக்கமும், பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின்மீது அயல்நாட்டாரால் ஏற்பட்ட போர் விளைவு, குதிரைக் களவாடுதல், காலச்சூழ்நிலை ஆகிய இவை அனைத்தும் **நொண்டி நாடகம்** என்னும் இலக்கியவகைத் தோன்றுவதற்குக் காரணங்களாக இருந்துள்ளன

கருப்பொருள் ஆய்வு

உறித்தாபசன் கதை[9] எனும் சமணசமயக் கதையானது நொண்டி நாடகத்தின் கருப்பொருளையுடையதாக அமைகிறது. அக்கதை:

கௌசாம்பி என்னும் நகரத்து அரசன் ஸ்ரீஷேண மகாராசன். இவன் மனைவி ஸ்ரீமதி இவர்களின் புத்திரர்கள் ஸ்ரீதரன், சிவதேவன். அமைச்சர் மகன் ஸ்ரீதத்தன் இந்நகரில் பொய்யான தவ ஒழுக்கத்தையுடைய உறித்தாபசன் என்பவன் இருந்தான். இவன் பகல் நேரம் முழுதும் தொங்கும் உறியில் வீற்றிருந்து தவமேற்கொள்வான். இரவு நேரத்தில் வெளியில் வந்து அந்நகரிலுள்ள செல்வந்தர்கள் வீட்டில் பொன், பொருள்களைத் திருடி ஒரு வேசியிடம் கொடுத்து இன்பமாக இருந்துவிட்டு பொழுது புலவதற்குள் திரும்பவும் உறியின்மேல் சென்று இருந்து கொள்வான். இவ்வாறு

9 உறித்தாபசன் கதை, (ஓலைச்சுவடி எண். D 384) அ.கீ.சு. நூலகம், சென்னை

ஒவ்வொருநாளும் நடந்தவண்ணம் இருக்க, அவ்வூர் மக்களும் அரசனும் திருடன் யார் என்று அறியாமல் திகைக்கின்றனர்.

அமைச்சர் மகனான ஸ்ரீதத்தன் இதைக் கண்டுபிடிக்க ஒருநாள் அந்தி நேரத்தில் உறித்தாபசனிடம் வந்து மாலைக்கண் நோய் உள்ளவன் போல் நடித்து, அவன் வீட்டில் தங்கியிருக்கின்றான். உறித்தாபசன் வழக்கம் போல இரவில் உறியை விட்டு இறங்கி நகரிலுள்ள செல்வந்தர் வீட்டில் புகுந்து விலையுயர்ந்த பொருட்களைத் திருடி வந்து வேசியிடம் கொடுத்து இன்பம் அனுபவிக்கிறான் இந்நேரத்தில் அவனைப் பின் தொடர்ந்துவந்த ஸ்ரீதத்தன், படைத்தலைவன் விக்ரமகேசரிக்குச் செய்தி அறிவித்து அவனைப் பிடிக்கத் துணை செய்கின்றான் விசாரணை மன்னன்முன் நடக்கிறது விசாரணையில் வேசியின் மூக்கு அறுக்கப்படுகிறது பொய் ஒழுக்கனான உறித்தாபசனின் கைகால்கள் தறிக்கப்படுகின்றன இவ்வாறு இக்கதை முடிகிறது. திருட்டுத் தொழிலினால் உண்டாகும் கெடுதலை இக்கதை கூறுகிறது

பொருளைத் திருடி வேசியிடம் கொடுத்து இன்பமாக இருந்து முடிவில் அகப்பட்டு கைகால் அறுக்கப்படும் இத்தன்மைகளைக் கருப்பொருளாகக் கொண்ட இக்கதை நொண்டி நாடகக் கதைக் கருவிற்கு ஒப்புமை உடையதாக அமைகிறது.

நொண்டி நாடகம் வளர்ச்சி வரலாறு

இறைவனின் பெருமை, தலத்தின் சிறப்பு, சமய ஒழுக்கம் ஆகியவை பாசுரங்களாகப் பாடப்பட்ட வந்த வரலாறு, பொதுமக்கள் விரும்பும் காட்சி வடிவிலும், பாட்டு வடிவிலும் மாறிய பரிணாமமே **குறவஞ்சி, நொண்டி, பள்ளு** ஆகிய நாடக அமைப்புகளாகும்.

நொண்டி நாடகங்களில் முதலில் தோன்றியது **சீதக்காதி நொண்டி நாடகம்.** இதனை இயற்றியவர் முத்தாலங்குறிச்சி க கந்தசாமிப் புலவர். இந்நூலில் காணப்படும் செய்தியான துல்பர்கானின் செஞ்சி முற்றுகை கி.பி. 1697 முடிய எட்டாண்டுக்குட் பட்டதாகும். எனவேதான் கி.பி. 1697-ஆம் ஆண்டிற்குப்பின் இந்நூல் தோன்றியிருக்க வேண்டும் என்று தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டது மேலும் இந்நூலாசிரியர் **திருச்செந்தூர் நொண்டி நாடகம், திருவனந்தபுரம் நொண்டி நாடகம்** என்னும் இரு நொண்டி நாடகங்களையும் இயற்றியுள்ளார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்ந்த அமரம்பேடு மதுரகவிராயர் **திருக்கச்சூர் நொண்டி நாடகம்** என்னும் நூலை இயற்றியுள்ளார். இவர் தம்மை ஆதரித்த வள்ளலான புதுவை ஆனந்தரங்கம் பிள்ளையின் கொடைத்தன்மையை இந்நூலின் பல்வேறு பாடல்களில் பாடியுள்ளார்.

இந்த காலகட்டத்தில் அனந்தபாரதி என்பவரால் **திருவிடை மருதூர் நொண்டி நாடகம்** என்னும் நூல் பாடப்பெற்றுள்ளதை அறியமுடிகின்றது இந்நூலிற்கு முன்பு தோன்றிய சில நொண்டி நாடகங்களின் பெயர்களை இந்நூல் தருகிறது. அவை: 1. **திருச்செந்தூர் நொண்டி நாடகம்** 2. **சாத்தூர் நொண்டி நாடகம்** 3 **பழனி நொண்டி நாடகம்** 4 **குன்றக்குடி நொண்டி நாடகம்.**

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கும் கடைப்பகுதிக்கும் இடையில் (கி.பி 1750-1780) கு. அவிநாசிப் புலவரால் **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்** என்னும் நூல் இயற்றப்பட்டுள்ளது. கி.பி. 1800இல் தஞ்சை வேதநாயகம் சாஸ்திரி என்பவர் **ஞான நொண்டி நாடகம்**, 1809இல் **சென்னபட்டணப் பிரவேச நொண்டி**[10] ஆகிய இரு நூல்களையும் இயற்றியுள்ளார்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வீரராகவையங்கார் என்பவர் **திருப்புல்லாணி நொண்டி நாடகம்** என்னும் நூலையும், மாரிமுத்துப் பிள்ளை என்பவர் **தில்லைவிடங்கன் அய்யனார்** நொண்டி நாடகம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார்கள். மேலும் இந்நூற்றாண்டில் **திருமலையாதிபன் நொண்டி நாடகம்** என்னும் நூலை மன்னர் பெருமாள் புலவர் என்பாரும், **ஆதிமூலேசர் நொண்டி நாடகம்** என்னும் நூலை குழந்தைக் கவுண்டர் என்பாரும், **திருக்குடந்தை சாரங்கபாணி நொண்டி நாடகம்** என்னும் நூலை அரியலூர் சண்பக மன்னார் என்பாரும் இயற்றியுள்ளார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சதாசிவம் பிள்ளை என்பவரால் **இல்லற நொண்டி நாடகம்** என்னும் நூலும், தபோமணிப் பிள்ளை என்பவரால் **தெட்சணா நொண்டிச் சிந்து** என்னும் நூலும், கோவளம். முத்துராமக் கவிராயர் என்பவரால் **திருத்தணிகை நொண்டி நாடகம்** என்னும் நூலும் இயற்றப்பெற்றுள்ளன. இந்நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் திருவாமாத்தூர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் என்பவர் **புதுவை நொண்டி நாடகம்** என்னும் நூலை இயற்றியுள்ளார்

இருபதாம் நூற்றாண்டில் 1940-ற்குப் பின் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை என்பவரால் **காந்தி சரித்திர நொண்டிச் சிந்து** என்னும் நூலும், சுதந்திரத் தியாகியும் கவிஞருமான ஊமையம்பட்டி ந. கந்தசாமி என்பவரால் **அலிப்புரம் நொண்டி நாடகம்** என்னும் நூலும் இயற்றப்பட்டுள்ளன இவ்விரு நொண்டி நாடகங்கள் மட்டுமே இந்நூற்றாண்டில் எழுந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

---

10. Encyclopaedia of Tamil Literature, Vol. 1. Institute of Asian Studies, P.394

தமிழிலக்கிய வரலாற்றில் இதுவரை சுமார் 44 நொண்டி நாடகங்கள் தோன்றி உள்ளனவாக அறியமுடிகிறது இவற்றில் சுமார் 15 நொண்டி நாடகங்கள் மட்டுமே அச்சாகி வந்துள்ளன பிற நொண்டி நாடகங்கள் சுவடி நிலையிலேயே இருந்து அழிந்த வண்ணம் இருக்கின்றன.

நொண்டி நாடகங்களின் இலக்கிய நோக்கம்

நொண்டி நாடகங்கள் எள்ளலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியனவாதலின் இந் நாடகங்கள் மக்களைக் களிப்பூட்டி, அவர்களுக்கு நல்லொழுக்கத்தைக் கற்பிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன

இறைவனைப் போற்றுதல், சமயத்தைப் பரப்புதல், அறநெறிக் கருத்துக்களை மக்களுக்கு உணர்த்துதல், ஆதரித்த வள்ளல்களின் புகழ் பாடுதல் ஆகியவை நொண்டி நாடக இலக்கியங்களின் நோக்கமாக அமைந்துள்ளது. பிற்காலங்களில் தேசிய உணர்வு, கட்சிக் கொள்கை ஆகியவற்றைப் பரப்ப நாடகக்கலை பயன்படுத்தப்பட்டதுபோல, இந்நாடகங்கள் எழுந்த காலத்தில் சமயநெறி, தலப்பெருமை போன்றவற்றைப் பரப்ப இவை பயன்படுத்தப்பட்டுள்ளன

ஒருவனே மேடையின்மீது தோன்றி பாடித் தன் வரலாறு கூறுவதாக அமையும் நொண்டி நாடகத்தை ஒரு **Mono-acting** நாடகமாகக் கொள்ளலாம்.

நொண்டி நாடகம் – பெயர்க்காரணம்

நொண்டி ஒருவன் தன் கடந்தகால வாழ்வினை இசைப்பாடலில் பாடி நடித்துக் காட்டியமையின் இது **நொண்டி நாடகம்** எனப்பட்டது. நொண்டி நாடகத்தை ஆடுகிறவன் ஒரு காலை மடித்துக் கட்டிக்கொண்டு ஆடுவதால் இதனை **ஒற்றைக்கால் நாடகம்** என்றும் கூறுவார்கள்.

நொண்டி நாடகம் – இலக்கணம்

இலக்கியத்திற்கு இலக்கணம் கூறும் **சிதம்பரப்பாட்டியல், பன்னிரு பாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப் பாட்டியல்** போன்றவை நொண்டி நாடகத்திற்கு இலக்கணம் கூறவில்லை. ஆனால் **பிரபந்தத்திரட்டு** என்னும் பாட்டியல் நூல் மட்டும்,

“கலிப்பாவுந் தாழிசையும் நான்மணி மேற்காட்டல்
நலத்துறுச **டானனம்** நற்பா - வலிக்காவிற்
காலற்ற லேகாங் கிரிகலிவெண் பாச்சிந்தாய்க்
கோலுற்றார் **நொண்டி**யென்று கொண்டு” [11]

11 அன்னிதாமசு, பிரபந்தத்திரட்டு, (பதி), ப 21

சடானனம், நொண்டி என்னும் இரு இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறுகின்றது வன்செயல் காரணமாகத் தண்டிக்கப்பட்டு, ஒரு காலிழத்தலைக் கூறுவது ஏகாங்கிரியாம் (ஏக+அங்கிரி = ஒருகால்). இது நொண்டி எனவும் கூறப்படும். இவ்விலக்கியவகை கலிவெண்பா, சிந்து ஆகிய யாப்புகளில் அமைந்து வரும் எனவே தொடக்ககாலப் பாட்டியல் நூல்கள் எழுந்த காலத்தில் நொண்டி நாடகங்கள் தோன்றவில்லையென்பதும், **பிரபந்தத் திரட்டு** நொண்டி நாடகத்திற்கு இலக்கணம் கூறுவதால் நொண்டி நாடகம் இந்நூலுக்குமுன் தோன்றியிருக்கவேண்டும் என்பதும் தெரிகிறது.

நொண்டி நாடகத்தில் கலிவெண்பா, சிந்து ஆகிய பாக்கள் இடம் பெற்றிருந்தாலும் அவற்றுள் சிந்துப்பாக்களே மிகுதியாக உள்ளன. எனவே இந்நாடகம் யாப்பமைப்புக் காரணமான **நொண்டிச்சிந்து** எனவும் வழங்கப்பெறும். இவ்விலக்கிய வகையின் இலக்கிய வழக்கினை, குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம், **குன்றக்குடி குமரன் நொண்டிச்சிந்து** எனவும், திருக்குடந்தை சாரங்கபாணி நொண்டி நாடகம், **சாரங்கபாணி நொண்டிச்சிந்து** எனவும், திருப்புல்லாணி நொண்டி நாடகம், **திருப்புல்லாணி நொண்டிச் சிந்து** எனவும் வழங்கப்பெறுவதிலிருந்து அறியமுடிகின்றது.

சிந்துப்பாடல்கள் சி. சுப்பிரமணிய பாரதியார், அண்ணாமலை ரெட்டியார் இவர்களாலும், இவர்களுக்குப்பின் வந்தோர்களாலும் சிறப்பாக வளர்ச்சியுற்றன என்றாலும் இவர்களுக்கு முன்னமே தோன்றிய பல்வேறு நொண்டி நாடகங்களை இயற்றிய புலவர்களால் இது பெருவளர்ச்சி பெற்றுள்ளதை அறியமுடிகின்றது

சிந்துப்பாடலின் இலக்கணம்

'இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்புதல்' என்ற நன்னூலாரின் கொள்கைப்படி சிந்துநூல்களுக்கும் இலக்கணம் எழுதப்பட்டுவிட்டது. திருவாரூர் இயற்றமிழ் பயிற்றகத்தின் மூலமாக த. சரவணத்தமிழன் என்பார் யாப்புநூல் என்னும் ஒரு இலக்கண நூலை 1981இல் இயற்றி வெளியிட்டுள்ளார். அந்நூலில் அவர் சிந்துவிற்கு இலக்கணம் கூறியுள்ளார். அச்சூத்திரங்கள்:

> "சிந்துப் பாக்கள் **நொண்டிச் சிந்து**
> **காவடிச் சிந்**தென ஆவகை இரண்டே"[12]
> "**இராமப் பையன் நொண்டிச் சிந்து**
> கையாள் வதற்கு மெய்யாய் அரிதே"[13]

---

12 யாப்புநூல், சூத்திரம் 133
13. யாப்புநூல், சூத்திரம் 134

"முதலடிச் சீர்களும் தனிச்சொல் அன்றி
மறியடிச் சீர்களும் எண்ணொத் திருப்பின்
சமனிலைச் சிந்தாம் ஒன்றின்மற் றொன்றுசீர்
மிகுநிலை யாயின் **வியனிலைச் சிந்தாம்**"[14]

இச்சூத்திரங்களினால் சிந்துப்பாக்கள் நொண்டிச் சிந்து, காவடிச்சிந்து என இரு வகையாகும் என்பதும், நொண்டிச்சிந்து எளிதென நினைத்துப் பாவெழுதத் தொடங்குபவர் தோற்பர்; காரணம் இதில் தளைக்கட்டுப்பாடு உள்ளதால் அரிது என்பதும், தனிச்சொல் ஒழிய முதலடிச் சீர்களும், மடங்கிவரும் மற்றைய அடிச்சீர்களும் ஒத்த எண்ணை உடையதாக இருப்பின் 'சமனிலைச் சிந்து' எனவும், ஓரடியைவிட மற்றோர் அடியின் சீர் மிகுந்த நிலையானால் 'வியனிலைச் சிந்து' எனவும் அமையும் என்பது பெறப்படுகிறது.

புலவர் குழந்தை '**யாப்பதிகாரம்**' என்னும் நூலில் சமனிலைச் சிந்து, வியனிலைச் சிந்து[15] என்னும் இப்பெயர்களை மருட்பாவிற்குக் காரிகை உரையாசிரியர் தந்த பெயரின் அடிப்படையில் கூறியிருக்கிறார் எனவே, சமனிலைச் சிந்தும் வியனிலைச் சிந்தும் ஆகிய இரண்டும் நொண்டிச்சிந்தில் இடம்பெறும் என்பது மேற்கண்ட இலக்கண நூல்களால் அறியமுடிகின்றது. தனிச்சொல் வருமிடத்தில் நொண்டுவது போன்ற தடை இருப்பதால் இது நொண்டிச் சிந்து எனப் பெயர் பெற்றிருக்கலாம்

தமிழ் நொண்டி நாடகங்கள் அனைத்திலுமே இவ்வகைச் சிந்துகள் இடம்பெற்றுள்ளன உதாரணமாக **சீதக்காதி நொண்டி நாடக** நூலில் வரும் சிந்துப்பாடலை ஆராயலாம்.

"கொண்டுவாறே னென்றெழுந்தேன் - குயில்
கூச்செறி யப்பெரு மூச்செறிந்தாள்
பெண்டுபோற்கண் ணீர்சொரிந்தாள் - மனம்
பேதலித்தாள் என்மேல் காதலித்தாள்"[16]

இதில் முதலடியில் இரண்டு சீரும் தனிச்சொல்லும் இரண்டாம் அடியில் மூன்று சீருமாக அமைந்துள்ளது. இரண்டாம் அடிக்கு முதலடி ஒரு சீர் குறைந்து காணப்படுகிறது. எனவே முதலடிச் சீர்கள் தனிச்சொல்பெற்று இரண்டாம் அடிச்சீர்களும் ஒத்த எண்ணை உடையதாக இருப்பதால் இது சமனிலைச் சிந்தாகும்

---

14 யாப்புநூல், சூத்திரம் 135
15. யாப்பதிகாரம், ப100-111
16 சீதக்காதி நொண்டி நாடகம், பா 6:41

"வாதாடும் பேர்களைத் தடுப்பேன் - எதிர்
மாற்றலர்மூக் கில்தும்பைச் சாற்றையும் விடுப்பேன்
வேதாந்த குருவைக்கை யெடுப்பேன் - கள்ள
விச்சைக்குப் பத்திரட்டி பிச்சையுங் கொடுப்பேன்"[17]

இதில் முதலடியில் மூன்று சீரும் தனிச்சொல்லும் இரண்டாம் அடியில் நான்கு சீருமாக அமைந்துள்ளது. இரண்டாம் அடிக்கு முதலடி ஒரு சீர் குறைந்து காணப்பெறுகிறது. எனவே முதலடியைவிட இரண்டாம் அடியின் சீர் மிகுந்து காணப்பெறுவதால் இது வியனிலைச் சிந்து ஆகும். ஆகவே அசையோ சீரோ முதலடியைவிட அடுத்தஅடி நீண்டிருப்பது நொண்டிச் சிந்தாகும் என்பது பெறப்படுகிறது.

நொண்டி நாடகம் பெயர் பெறும் முறை

நொண்டி நாடகத்தின் நூற்பெயர் பெரும்பான்மையும் பாடப்பெற்ற தலத்தின் பெயர், அருள் வழங்கிய இறைவனின் பெயர், தலத்தையும் தலத்தின் இறைவன் பெயரையும் சேர்த்துப் பெயர் பெறுவன என்ற அடிப்படையில் அமைகின்றன.

அவிநாசி நொண்டி நாடகம், சூரனூர் நொண்டி நாடகம், திருக்கச்சூர் நொண்டி நாடகம், திருச்செந்தூர் நொண்டி நாடகம், திருப்புல்லாணி நொண்டி நாடகம், திருவிடை மருதூர் நொண்டி நாடகம், பழனி நொண்டி நாடகம் முதலியன பாடப்பெற்ற தலத்தின் பெயரால் பெயர்பெற்றவையாகும். **அகிலாண்டேசுவரி நொண்டிநாடகம், ஆதிமூலேசர் நொண்டி நாடகம், குமாரமுத்தையன் நொண்டி நாடகம், குளத்தூரய்யன் நொண்டிநாடகம், செந்தில் வேலவர் நொண்டி நாடகம், திருமலையாதிபன் நொண்டி நாடகம்** ஆகியன இறைவன் பெயரால் பெயர் பெற்றுள்ளனவாகும்.

குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம், திருக்குடந்தை சாரங்கபாணி நொண்டி நாடகம், புல்வயல் குமரேசர் நொண்டி நாடகம் முதலியன தலத்தையும் தலத்தின் இறைவன் பெயரையும் சேர்த்துப் பெயர் பெற்றுள்ளன. இவையன்றித் தன்னை ஆதரித்த வள்ளலின் பெயரால் **சீதக்காதி நொண்டி நாடகமும்**, தான் பெற்ற ஞானத்தின் பெயரால் **ஞான நொண்டி நாடகமும்** பெயர் பெற்றுள்ளன

---

17. சீதக்காதி நொண்டி நாடகம், பா 4: 11

நொண்டி நாடகம் அமைப்பு

நொண்டி நாடகத்தில் நொண்டியானவன் தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டு தன் வரலாற்றைக் கூறுவான். அவன் தன் நாட்டு வளம், தன் குடும்ப வரலாறு, கற்ற கல்வி முறை, மணவினை நிகழ்ச்சி, பல தலங்களுக்கும் சென்று வழிபட்டமை போன்றவற்றைக் கூறிய பின்னர், தீய நண்பன் ஒருவனோடு கூடிப் பலவிடங்களில் திருடிய நிகழ்ச்சிகளை விரித்துரைப்பான்.

திருட்டுத்தொழிலால் கிடைத்த செல்வத்தைத் தாசியிடம் இழந்து, தாய்க்கிழவியால் விரட்டப்பட்டு, மேன்மேலும் திருட்டுக்களில் ஈடுபடும்போது ஒருமுறை அரசனின் படைக்குதிரையைத் திருட, காவலரால் பிடிபட்டு மாறுகால், மாறுகை தறிக்கப்படுகின்றான். கைகால்களை இழந்து துன்பப்பட்டுக் கிடக்கும்போது நல்லார் ஒருவரால் வழிகாட்டப்பட்டுக் குறிப்பிட்ட புண்ணியத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டு, மீண்டும் கைகால்கள் வளரப் பெற்று நலம் பெறுவதோடு நாடகம் முடிவுறும். பெரும்பாலான நொண்டி நாடகங்கள் இத்தகைய அமைப்பினையே கொண்டுள்ளன சிற்சில நாடகங்களில் இவ்வமைப்பு சிறிது வேறுபட்டும் காணப்பெறும்.

நூல் அமைப்பு முறை

நொண்டி நாடகத்தில் காப்புப்பாடல் முதலில் அமைகிறது. பின்னர் கடவுள் வணக்கம், நூற்பயன், அவையடக்கம், நூல்பகுதி, வாழிப்பாடல் முதலியன அமைகின்றன. சில நொண்டி நாடகங்களில் சில பகுதிகள் குறைந்தும் காணப்படுகின்றன எந்தச் செயலையும் விநாயகரை வணங்கித் தொடங்குவது வைதீக மரபாக உள்ளது. இம்மரபிற்கேற்ப பெரும்பாலான நொண்டி நாடகங்களில் விநாயகர் வணக்கமே காப்புப் பாடலாக முதலில் அமைந்துள்ளது.

திங்களூர் அருள்மலை நொண்டிநாடகம்

நொண்டி நாடக அமைப்பில் எழுந்த நூல்களுள் **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகமும்** ஒன்றாகும் இந்நூல் திங்களூருக் கருகிலுள்ள அருள்மலையில் வீற்றிருக்கும் முருகபெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. இந்நூல் இப்பெயர் மட்டுமன்றி **அருள்மலை நொண்டி நாடகம்** எனவும், **திங்களூர் நொண்டி நாடகம்** எனவும் வழங்கப்பெறும் எனபதனை வேறுபிற சுவடிகள் [18] நமக்குத் தெரிவிக்கின்றன.

நூலாசிரியர்

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தின் ஆசிரியர் திரு கு. அவிநாசிப் புலவர் அவர்கள். இதனை இந்நூலின் அகச்சான்றின்வழி அறியலாம். இவர்

---

18. அ. தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடி எண் 3577
ஆ நாமக்கல், தமிழாசிரியர், புலவர், தே.ப. சின்னசாமி அவர்களின் ஓலைச்சுவடி.
இ டாக்டர் நா. கணேசன் அவர்களின் கையெழுத்துச் சுவடி

செங்குந்தர் குலத்தைச் சேர்ந்தவர் என்றும், தந்தையார் பெயர் குள்ளையன் என்றும், மாமன் முத்துராமய்யன் என்றும் இந்நூலின் பாடல்கள் குறிப்பிடுகின்றன. அப்பாடல்கள்:

"செங்குந்தர் குலத்தில் **அவிநாசி** - சொன்ன
செந்தமிழைப் பாடியாடச் சந்தனமும்பூசி" (பா. 8:10)

". . . . . .செங்குந்தர்
குலக்கொழுந் தான குள்ளையன் தனயன்
இலக்கணத் தொகையான் இனிய **அவிநாசி**
நாவலன் ஆனவன் நன்னூல் தெரிந்து
. . . .
. . . .
நற்றமி ழாலே நாதன் அருள்மலை
கொற்றவன் மீதில் கூறிய நொண்டியை" (பா. 38: 158-176)

"வாத்தியன் வைத்தியன் **அவிநாசி** - வாணன்
மாமனாக வந்தமுத்து ராமய்ய வசீகரன்" (பா 39:12)

எனவரும் பாடலடிகளால் விளங்கும் மேலும் இவர் அவிநாசி நாவலன் என்றும் அழைக்கப்பெறுவார் என்பதும் பெறப்படுகிறது இவர் முருகனின்மீது மிகுந்த பக்தியுடையவர் என்பதும், முருகனின் அருளைப் பெற்றவர் என்பதும்,

"கந்தமே மிகுந்த கடப்பமா ளிகையான்
கந்தவேள் கருணா கடாட்சம் உற்றவன்" (பா. 38:155, 156)

எனவரும் பாடலடிகளால் தெரிகிறது. இவர்தம் இலக்கணப் புலமையினை 'இலக்கணத் தொகையான்' எனும் தொடர் புலப்படுத்துகிறது. மேலும் இவர் **பன்னிரு பாட்டியல், சிதம்பரப் பாட்டியல்** முதலான பாட்டியல் நூல்களையும், ஐம்பெருங் காப்பியங்களையும் படித்து நாவலராகவும் விளங்கியமையை,

"பன்னியல் பொருத்தம் பாட்டியல் கற்றவன்
பன்னூல் சிதம்பரப் பாட்டியல் தெரிந்தவன்
பஞ்சகா வியங்கள் படித்த நாவலன்" (பா.38. 171-173)

எனும் பாடலடிகளால் அறியலாம்.

இந்நூலாசிரியரின் ஊர்ப்பெயரினை அறியமுடியவில்லை. திங்களூரின் செழிப்பையும், அவ்வூர் பெருமக்களையும் பலவகையில் சிறப்பித்துப் பாடுவதிலிருந்து இவர் அவ்வூரைச் சார்ந்தவராக இருத்தல்

வேண்டும் என்று கருத இடமுளது இவரைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள இந்நூலையன்றி வேறு கருவிகள் (source) எவையும் கிடைக்கவில்லை.

காலம்

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கும் இறுதிப்பகுதிக்கும் இடையில் இந்நூலாசிரியர் வாழ்ந்திருக்க வேண்டும். இதனை இந்நூலில் இடம் பெறும் பல்வேறு செய்திகளின்மூலம் அறியமுடிகின்றது. இவர் இந்நூலில் வரலாற்றுப் பாத்திரங்களின் பெயர்களாக, உசேன் கான்சாகிப், ஆண்டமுத்துராயன், கிருஷ்ணதாசு, காளிமன்னன் ஆகியோரைக் குறிப்பிடுகின்றார்

மைசூர் ஹைதர் அலி பாச்சா, திப்புசுல்தான் இவர்களின் நண்பனும் கோயமுத்தூர் பகுதியின் படைத்தலைவனுமான உசேன் கான்சாகிபைப் பற்றி இந்நூலாசிரியர் நொண்டியின் கூற்றாக,

“அதிவீர பராக்கிரம சூரன் - நல்ல
அசரத்துக் கானுசாயபு உசேனுமகாராசன்” (பா.34:21)
“மட்டில்லாப் படைக்குச் சருதானி - யார்க்கும்
வல்லவன் உசேனுகானு நல்லமகராசன்” (பா. 34:23)
“தாடாளன் உசேனுகானு சாயபு - வெகு
தன்னிமையாக நாலுநாள் அன்னமுந் தந்தாரே” (பா.34:24)

எனவரும் பாடலடிகளால் குறிக்கின்றார். இவ் உசேன்கான்சாகிப் கோயமுத்தூரை வென்று இவர்கள் இருவரின் பாராட்டைப் பெற்றுள்ளான். இச்செய்தியைக் கூறும் தனிப்பாடலான ‘அவினாசியில் நாவறுத்து முத்தி பெற்ற விருத்தம்’ என்னும் பாடல்,

“சீர்பெற்ற கலியுக சகாத்தியம் நாலாயிரத்
திருநான்கு நூறுதனிலே
சேர்மிகுதி தொண்ணூற் றெட்டுமேல் பிங்களம
தென்னும் சம்வஸ்தரத்தில்
சிந்திக்கும் உயர்ஆனி மாசம்மூ வைந்துவில்
தியதிஆ தித்தவாரம்
செப்பரிய புனர்பூஷ நாளதனில் ஐந்து
சீர்கடிகை தனில்மேலே
பார்பெற்ற சீரங்கப் பட்டணச் சமஷ்த்தானம்
பாச்சாவு அவருடையநண்

பதுகொண்ட கோயமுத்தூர் வென்றகானுச் சாயபு
அவர்மெச்சும் அவினாசியில்
பண்புபெறு இபராமு சாயபு மெச்சும்
. . . . நஞ்சயதுரை
பரிவுபெறு கிருஷ்ணய்யன் இனியம் செய்து
பாக்கியம் விளங்குநாளில் . . . ”[19]

என்று கூறுகிறது. இப்பாடலில் கலியுக ஆண்டு 4898, தமிழ் பிங்கள வருடம் ஆனி மாதம் 15ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை புனர்பூசநாள் என்பது குறிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சரியான ஆங்கில தேதி 25.6.1797 ஆகும். ஹைதர் அலி 7.12.1782இல் இயற்கை எய்தினார் என வரலாறு கூறுகின்றது. எனவே ஹைதர்அலி பாச்சாவின் நண்பனான உசேன் கான்சாகிபை இந்நூலாசிரியர் குறிப்பிடுவதால் 18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கும் இறுதிப் பகுதிக்கும் இடையில் அதாவது (கி.பி. 1750-1800) இவர் வாழ்ந்தவர் என விளங்குகின்றது

திங்களூர் – பெயர்க்காரணம்


‘திங்கள்’ என்னும் சொல்லுக்கு சந்திரன், மாதம், திங்கட்கிழமை என்னும் பொருள்கள் உள்ளன. சந்திரனைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல் திங்கள் என்பதாகும். எனவே சந்திரன் என்ற பொருளிலும், இங்குள்ள சந்திர மௌலீஸ்வரர் எனும் சிவன் ஆலயத்தின் பெயராலும் இவ்வூர் ‘திங்களூர்’ என்று வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

திங்களூர் சமணப்பள்ளியில் காணப்படும் முதல் கொங்குச் சோழமன்னன் கோநாட்டான் விக்கிரம சோழனின் 40ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வூரினை ‘சந்திரவசதி’[20] என்று குறிக்கிறது. பஸ்தி என்ற சமணச் சொல் தமிழில் ‘வசதி’ என்று வழங்கப்படுகிறது. இங்குள்ள சிவன் கோயில் கல்வெட்டிலும் இவ்வூரின் பெயர் **சந்திரபுரம், சந்திரபுரி**[21] என்று கூறப்பட்டுள்ளது

“பத்திரபாகு முனிவர் காலத்தில் தென்னகம் வந்த சந்திரகுப்த மௌரியர் சிரவணபௌகொளாவில் சல்லேகணை விரதமிருந்து உயிர் துறந்தார். சிரவண் பௌகொளாவில் அவர் உயிர் துறந்த மலை சந்திரகிரி என்றும், அவர் நினைவாக எடுக்கப்பட்ட கோயில் சந்திரபஸ்தி, சந்திரகுப்த பசதி என்றும் அழைக்கப்படுகிறது. சந்திரகுப்த மௌரியரின் காலத்தில்தான்

---

19. பல்வகைத் தனிப்பாடல்கள், சுவடி எண். 572 ப 97.
20 South Indian Temple Inscriptions, Vol. I 256-260; ARE 614 of 1905
21. South Indian Temple Inscriptions, Vol. I. ARE 603, 605 of 1905


TRAVANCORE HIGH RANGES
KONGU NADU
WITH SUB-NADUS AS DERIVED FROM EPIGRAPHICAL RECORDS.

கொங்குநாடு

தமிழ்நாட்டிலும் சமணம் பரவியது எனவே திங்களூரைக் குறிக்கும் சந்திரவசதி என்னும் இப்பெயர் சந்திரகுப்த மௌரியன் பெயரால் ஏற்பட்ட கோயிலாக இருக்கலாம்"[22] என்று கொங்கு ஆய்வாளரும் கல்வெட்டறிஞருமான புலவர் செ இராசு அவர்கள் கூறுவர்

எனவே சந்தரவசதி, சந்திரபுரம், சந்திரபுரி ஆகிய பெயர்கள் நாளடைவில் தூய பழந்தமிழில் திங்களூர் என்று மாறிவிட்டது போலும். திங்களூர் என்ற பெயர் வழக்கு பதினாறாம் நூற்றாண்டிலிருந்து வந்திருக்கலாம் என்று கருதஇடமுளது

திங்களூர் அருள்மலை - அமைவிடம்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் திங்களூர் அமைந்துள்ளது. இவ்வூர் விசயமங்கலத்திலிருந்து கோபிச் செட்டிப்பாளையம் செல்லும் பாதையில் இருக்கின்றது திங்களூருக்கு நேர் மேற்கே 6 கிமீ. தொலைவில் தோரணவாவி எனும் ஊருக்கருகில் அருள்மலை உள்ளது.

வரலாற்றில் திங்களூர்

திங்களூர் இடம் பெற்றுள்ள ஈரோடு மாவட்டம், பண்டைய கொங்குநாட்டின் ஒரு பகுதியாகும். இந்நொண்டி நாடக நூலில், 'கொங்குதேசம்' (பா 39.85), 'கொங்குநாடு' (பா 14*109), 'கொங்கு மண்டலம்' (பா 38 14), 'கொங்குலகு' (பா. 16.13, 26.29) என்னும் சொற்களும், 'குறுப்புநாடு' (பா 4.36, 8.16, 38 14, 38.40, 38-51, 38.114, 39 51, 39 84) என்னும் சொற்களும் இடம்பெற்றுள்ளன. எனவே கொங்கு நாட்டின் வரலாறே திங்களூர் வரலாறாகக் கொள்ளப்படுகிறது.

கொங்குநாடு

பழந்தமிழ்நாடு சேர, சோழ, பாண்டிய நாடுகளுடன் கொங்குநாடும் தொண்டைநாடும் சேர்ந்து ஐந்து நாடுகளாக விளங்கியது. இதனைத் **தண்டியலங்காரப்** பழைய மேற்கோள் பாடல் 'வியன்தமிழ்நாடு ஐந்து'[23] என்றும், **திருமந்திரம்** 'தமிழ் மண்டிலம் ஐந்து'[24] என்றும், நாமக்கல் மாவட்ட ஏருமைப்பட்டிக் கல்வெட்டு 'ஐவர் ராசாக்கள்'[25] என்றும் கூறுகின்றன. சங்க இலக்கியங்களான **நற்றிணை** 'கொற்றச்சோழர் கொங்கர்ப் பணீஇயர்' [26] என்றும், **குறுந்தொகை** 'ஒளிறுவாள் கொங்கர்'[27] என்றும், **பதிற்றுப்பத்து**

---

22 செ இராசு, கொங்கு நாட்டு வரலாற்றில் சமண சமயம் (முனைவர் பட்ட ஆய்வேடு), ப. 8

23 தண்டியலங்காரம், நூற்பா 75, 24 திருமந்திரம் பா.1646 25 சேலம் மாவட்டக் கல்வெட்டுக்கள், 26 நற்றிணை பா 10, 27 குறுந்தொகை, பா 383

'ஆகெழு கொங்கர், 'கொங்கர் ஆபரந்தன்ன'[28] என்றும், **அகநானூறு** 'கொங்கர் படுமணி ஆயம்', 'கொங்கர் ஓட்டி'[29] என்றும், **புறநானூறு** 'கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே'[30] என்றும் கொங்குநாடு, கொங்கு மன்னர்கள் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன.

சிலப்பதிகாரம், திருமுறைகளிலும், **திவ்வியப் பிரபந்தத்திலும்** கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டு முதல் காலந்தோறும் பொறிக்கப்பட்ட பல கல்வெட்டுக்களிலும் முற்காலப் பாண்டியர் செப்பேடுகளிலும் கொங்குநாடு குறிக்கப்பட்டுள்ளது.[31]

கொங்குநாடு தனக்கென்று எப்பொழுதும் தனியான எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் ஆகியவற்றைக் கொண்டது. இதனை மேற்கண்ட இலக்கியங்களும், கல்வெட்டுகளும் உறுதிப்படுத்துகின்றன. நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி மாவட்டங்களின் சில பகுதிகளும், திண்டுக்கல் மாவட்டம் பழனிப் பகுதியும், திருச்சி மாவட்டக் கரூர், குளித்தலைப் பகுதிகளுமே பண்டைய கொங்கு நாடாகும்.

"வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்குக்
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்
களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவு கொங்கு"[32]

என்பது ஒரு தனிப்பாடல் இதன்மூலம் கொங்குநாட்டின் வடக்கு எல்லை பெரும்பாலை என்பதும், தெற்கு எல்லை பழனிமலை என்பதும், மேற்கு எல்லை வெள்ளியங்கிரிமலை என்பதும், கிழக்கு எல்லை குளித்தலை என்பதும் பெறப்படுகின்றன.

குறுப்புநாடு – திங்களூர்

கொங்குநாடு முன்பு 24 உள்நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. அவற்றுள் 24ஆம் நாடு குறுப்புநாடு. 'இயல்செறி குறுப்புநாடு' என்று பாராட்டப்படுவது. கொங்குநாட்டின் மிகப்பெரிய உள்நாட்டுப்பகுதி இதுவேயாகும். கி.பி. 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இப்பிரிவு ஏற்பட்டுவிட்டதை சுந்தரர் தேவாரம்,

---

28. பதிற்றுப்பத்து, பா 22, 77 29 அகநானூறு, பா 79, 253 30 புறநானூறு, பா 373 31 ஆவணம் 1, ப 68 (அக்டோபர் 1991) 32 புலவர் செ இராசு, கொங்குநாட்டுச் செம்பூத்தகுல வரலாறு, ப.1.

'கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய்'[33]

என்னும் பாடலடியின் மூலம் அறியமுடிகின்றது குறும்புநாடு என்பதே வலித்தல் விகாரம் பெற்று குறுப்புநாடு ஆயிற்று குறுப்புநாடு 32 பழம்பதிகளையுடையது இந்நாடு விசையகிரி, **அருள்மலை**, திட்டமலை, வெள்ளிமலை, பவழமலை, கதித்தமலை ஆகிய 6 மலைகளையும், நொய்யல் (காஞ்சிநதி), பவானி, சவுந்தரமாநதி ஆகிய 3 நதிகளையும், விசயமங்கலம், கத்தாங்கண்ணி, குன்னத்தூர், பாலதொழு, கொடுமணல், நல்லூர், **திங்களூர்**, சிறுவலூர், கோசனம், ஈஞ்சம்பள்ளி, திருப்பூர், ஊத்துக்குழி, அமுக்கயம், பெரியபாளையம், சிறுக்கழிஞ்சி, தெக்கலூர், மண்ணறை, அல்லாளபுரம், வெள்ளரிவெளி, செவியூர், அயிலூர், தாளூன்றி, முடச்சியூர், ஆதியூர், கொளப்பலூர், குருமந்தூர், கலிங்கயம், கூடலூர், செங்கப்பள்ளி, வாய்ப்பாடி, குடுப்பதி, சீனாபுரம், அலங்கயம் முதலிய 33 ஊர்களையும் உடையது.

கொங்குநாட்டினைக் கொங்குச் சோழர்கள் ஆண்ட காலத்தில் குறுப்புநாடு 'வீரசோழபுரநாடு'[34] எனவும் வழங்கப்பட்டது என அறியமுடிகின்றது குறுப்புநாட்டு ஊர்களில் ஒன்றான திங்களூர் பண்டைய காலத்தில் சந்திரபுரம், சந்திரபுரி என்று அழைக்கப்பட்டது. எனினும் தற்போது திங்களூர் என்றே வழங்கப்படுகிறது.

கொங்குநாட்டினை ஆண்ட அரசுகள்

கொங்குநாடு சேரமன்னர்கள் கங்கர்கள், பிற்காலச் சோழ, பாண்டிய மன்னர்கள், ஒயிசள மன்னர்கள், விசயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள், மைசூர் மன்னர்கள் ஆகியோரின் ஆட்சியில் இருந்து வந்துள்ளது கி.பி. 1800-க்கு மேல் இப்பகுதி ஆங்கிலேயரின் வசம் வந்தது.

கல்வெட்டில் திங்களூர்

சமணம், சைவம், வைணவம் ஆகிய முச்சமயங்களும் செழித்து விளங்கியது திங்களூர். இவ்வூரில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல கல்வெட்டுகள் உள்ளன புஷ்பந்தந்த தீர்த்தங்கரர் கோயிலில் 3 கல்வெட்டுகளும், சந்திரமௌலீசுரர் கோயிலில் 12 கல்வெட்டுகளும், அழகிய ராஜப்பெருமாள் கோயிலில் 4 கல்வெட்டுகளும் ஆக 19 கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

புஷ்பந்தந்த தீர்த்தங்கரர் கோயிலின் சமணப் பள்ளியில் முதல் கொங்குச் சோழ மன்னன் கோநாட்டான் விக்கிரமசோழனின் நாற்பதாம்

---

33. சுந்தரர் தேவாரம், ஊர்த்தொகைப்பாடல்
34 கத்தாங்கண்ணிக் கல்வெட்டு

ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்ளது இதில் சாலிவாகன சக ஆண்டு 967 குறிக்கப்பட்டுள்ளது. அரசனின் ஆட்சியாண்டும் சக ஆண்டும் குறிக்கப்பட்ட முதல் கொங்குச் சோழனின் கல்வெட்டு இதுவேயாகும்

கல்வெட்டுகளில் எங்கும் காணக்கிடைக்காத ஆய்த எழுத்து 'அஃகம்' என்ற சொல்லில் இவ்வூர் சிவன்கோயில் கல்வெட்டில் கிடைக்கிறது. இக்கோயிலின் கல்வெட்டில் இறைவனின் திருநாமங்களாகச் சந்திரபுரஉடையார், சந்திரபுரீசுவரமுடையார் என்னும் பெயர்கள் குறிக்கப்பெற்றுள்ளன. இக்கோயிலில் கி.பி 1275ஆம் ஆண்டு வெட்டப்பட்ட தூண்கல்வெட்டு ஒன்று கீழிருந்து மேல்நோக்கிப் படிக்கும்படியாக உள்ளது. இதுபோன்ற கல்வெட்டொன்று அறச்சலூரிலிருந்து எடுத்துவரப்பட்டு ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக இந்நூலின் இணைப் பதிப்பாசிரியரும், கொங்கு ஆய்வாளரும் கல்வெட்டறிஞருமான முனைவர் செ. இராசு அவர்கள் கூறுவர்[35]

அழகிய ராஜப்பெருமாள் கோயில் கல்வெட்டில் காணப்பெறும் 'சுந்தர பாண்டிய விண்ணகரம்' என்னும் பெயரானது, இவ்வூர் பாண்டியர் காலத்தில் வழங்கி வரப்பெற்ற பெயரினைக் காட்டுகிறது. பாண்டிய நாட்டுச் சுந்தரபாண்டியபுரத்திலிருந்தும், கேரள சிங்க வளநாட்டுப் பிரதேயம் திருப்பத்தூரிலிருந்தும், தொண்டை நாட்டு அரகண்டநல்லூரிலிருந்தும் திங்களூர்க் கோயில்கட்குக் கொடை வழங்கியுள்ளதை அறியமுடிகின்றது. எனவே திங்களூர்க் கோயில் தமிழ்நாட்டில் ஒரு சிறந்த கோயிலாக இருந்தது தெரியவருகின்றது.

திங்களூர்க் கோயில் கல்வெட்டுகளில் காணப்படும் வேதம்பாடுதல், கணிதம் போன்ற சொற்கள் இவ்வூர் அக்காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கிய நிலையினை நமக்கு நினைவூட்டுகின்றன. ஊரில் குளம் வெட்டி வைத்த செய்தியும், கோயில்களுக்கு நந்தா விளக்கு வைத்த செய்தியும், விஜயமங்கலத்துக் குடியானவன் ஒருவன் சந்திரமௌளீசுவரர் கோயிலைச் செப்பனிட்ட செய்தியும், கோயில்களுக்குத் தானம் கொடுக்கப்பட்ட செய்தியும், 'குலோத்துங்க சோழன் சந்தி' என்று சோழ மன்னன் பெயரால் ஒரு வழிபாடு நடத்தப்பட்டு வந்ததுமான செய்திகளும் அறியமுடிகின்றன.

திங்களூர்க் கல்வெட்டுகள் மெக்கன்சியின் உதவியாளர்களால் படியெடுக்கப்பட்டு சென்னை அரசினர்க் கீழ்த்திசைச் சுவடிநூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.[36]

---

35 நேர்காணல் 13.4.97

36 Ms. D 3302 - IV-94; South Indian Temple Inscriptions, Vol. I, No.256, P.237

இலக்கியத்தில் திங்களூர்

திங்களூரின் பெருமைகளை இலக்கியங்களும் தனிப்பாடல்களும் புகழ்கின்றன. அவற்றின் மூலம் அதன் வளம், சமயப்பெருமை, இலக்கிய வளம், குடிப்பெருமை ஆகியன அறியப்படுகின்றன.

கொடுமணல் இலக்கியத்தில் ஒன்றான **கந்தசாமிக் காதல்** என்னும் நூல் கந்தசாமிக் கவுண்டரின் காணியூரை,

"நல்லூர் கொடுமணலூர் நாரியெழு மாதைநகர்
வெல்லும் மருதுறையும் விளங்கு**திங்கள் மாநகரும்**"[37]

என்றும்,

"மாதுசெறி பிரமியத்தார் வானிகூ டல்பதியார்
ஓதும் மருதுறையார் உற்ற**திங்கள் மாநகரார்**"[38]

என்றும்,

"மங்கள கலியாணி மசரிஉமை மாதாவே
திங்களூர்ப் பனங்காடை தென்னரசைக் காணீரோ"[39]

என்றும் குறிப்பிடுகிறது. இங்குத் திங்களூர் 'திங்கள் மாநகர்' என்றும், பனங்காடை குலத்தினர்க்கு அவ்வூர் காணியூர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

கொடுமணல் இலக்கியமான **பொன்னையன் காதல்** என்னும் மற்றொரு நூலும் இவ்வூரைக்,

"கோமான் புகழ்விளங்குங் குறுப்புவள நாடுதனில்
தேமாங் கனிவிளங்குந் **திங்கள்நக** ராளுமன்னன்"[40]

என்றும் சுட்டுகிறது

கொங்குநாட்டின் ஊர்த்தொகையைக் குறிப்பிடும் பாடல் ஒன்றில்,

'. . . . பீடுபெறு **திங்களூர்**'[41] என்றும், பணங்காடைக் குலத்தாரின் 35 காணி ஊர்களைக் குறிப்பிடும் தனிப்பாடல் ஒன்றில் 'கடிகமழ்ந் தருள்**திங்களூர்**'[42] என்றும் இவ்வூர் குறிக்கப்படுகிறது

---

37 செ. இராசு, (பதி), கொடுமணல் இலக்கியங்கள், கந்தசாமிக்காதல், கண்ணி. 29
38 மேற்படி நூல், கண்ணி. 113
39 மேற்படி நூல், கண்ணி. 422
40. மேற்படி நூல், கண்ணி 16
41 இ. சுந்தரமூர்த்தி, (பதி), கொங்கு மண்டலசதகம், ப.232
42 செ இராசு, ஆனங்கூர் கரியகாளியம்மன் கோயில் காணியாளர்கள் வரலாறு, ப. 75

திங்களூரின் பெருமையையும் சிறப்பையும் கூறும் தனிப்பாடல் ஒன்று இந்நிறுவன ஓலைச்சுவடியிலிருந்து கிடைத்தது.

"அந்தமுள சந்திரபுர நாதரும் அழகரும்
ஆனநற் காளியுமையும்
ஆச்சிபெறு திங்களூர் வேதியர்கள் கவிவாணர்
அனுதினம்நினைந்த திங்களூரு
சந்திரபுரம் இந்திரநகர் தருமபுர மென்கின்ற
சதுர்யுகம்பெறு திங்களூரு
சதுர்வீமன் கைவாளில் பூதமா மினியனை
சங்கரித்திடும் திங்களூரு
விந்தையுட னேவந்து சத்துருவின் எருமைகூத்து
விளையாடிவரும் திங்களூரு
வெற்றிபெறு பூமன் புரந்தகதை காரண
மிகுந்துவளர் திங்களூரு
செந்திருவி ளங்கிய காராளர் பலர்குடிகள்
சேர்ந்துவளர் திங்களூரு
செல்வக் குறுப்புவள நாட்டினில் கதியுள
செயமான திங்களூரே"[43]

என்றெல்லாம் அப்பாடல் திங்களூரைப் புகழ்கின்றது இவ்வாறு பல இலக்கியங்களாலும் புகழப்படும் ஊர் திங்களூராகும்.

இந்நொண்டி நாடகத்தில் திங்களூர் அருள்மலை

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தில் திங்களூரானது, 'வரம்பெற்ற மாமுனிவர்ஓதும் திங்கள்மாநகர்' (பா 29), 'செந்திரு மடந்தையோதும் திங்கள்மாநகர்' (பா 31), 'தெள்ளு செந்தமிழோர் போற்றும் திங்கள்மாநகர்' (பா 33), 'கொக்கு மாதளைகள் வாழை குலாவிய திங்களூர்' (பா 35), 'தண்டமிழ் விளங்குகின்ற சந்திரபுரம்' (பா 11) என்றும் பலவாறு குறிக்கப்படுகின்றது. இவ்வாறு குறிக்கப்பெறுவதிலிருந்து இவ்வூரின் பெருமையினையும் சிறப்பினையும் அறியமுடிகின்றது.

---

43 ஆசியவியல் நிறுவன ஓலைச்சுவடி, பல்வகைத் தனிப்பாடல்கள், எண் 572. பக் 213, 234

மேலும் இவ்வூர், 'அம்புலிநகர்' (பா.38 80), 'இந்துமாநகர்' (பா.38.15, 38.93), 'இந்தூர்' (பா.38 78), 'மதிநகர்' (பா.38.84) எனவும் ஆசிரியரால் கூறப்படுகிறது. இவ்வூரின் பழைய பெயர்களான சந்திரபுரம், சந்திரபுரி என்னும் இரு பெயர்களும் இந்நூலிலும் குறிப்பிடப்படுவதை 6, 11, 12, 38.74 ஆகிய பாடலடிகளின் வழி அறியமுடிகின்றது.

இந்நொண்டி நாடகத்தில் அருள்மலையானது, 'அமரர் பரவும் காட்சியணிந்த திங்களூர் அருள்மாமலை' (பா1), 'அல்லிமலர்த் தாமரைத் தடாகஞ்சூழ்ந்த அருள்மலை' (பா.2), 'கன்னியர்சூழ் அருள்மலை' (பா.7) 'கவிஞோர் போற்றும் அருள்மலை' (பா.9), 'இலக்கணக் கவிஞோர் போற்றும் இறையவன் அருள்மாமேர்' (பா17), 'திசைபுகழ் அருள்மாமேர்' (பா.27), 'நதியணி அருள்மாமேர்' (பா.37) என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகின்றது.

திங்களூர், அருள்மலை என்பன தற்போது வெவ்வேறு ஊராக வழங்கப்பெற்று வருகின்றன. இந்நூல் எழுந்த காலத்தில் 'திங்களூர் அருள்மலை' என்ற பெயரில் ஒரே ஊராக இருந்ததாகத் தெரிகிறது. திங்களூர் என்ற தொடர்களும், அருள்மலை என்ற தொடர்களும் நூலில் தனித்தனியாகக் காணப்பட்டாலும் இரண்டும் ஒரே பகுதியைக் குறிக்கின்றன

இந்நூலாசிரியர், அருள்மலை முருகனைக் குறிப்பிடுமிடத்து, 'திங்களூரருள் மாமலையான்' (பா1), 'திங்கள் மாநகரில் மேவும் சந்திரநாதர் பெற்ற சண்முகன்' (பா.31), 'திங்கள்மாநகரில் மேவும் வள்ளி தெய்வானை கந்தன்' (பா.33) 'திங்களூர்வாழ் முக்கணன் அருள்மாமேரில் முருகர்' (பா.35) எனப் பலவாறு குறிப்பிடுகின்றார். திங்களூரைச் சுட்டுமிடத்து, 'மதிநகர் எய்தால் வல்வினை பயக்கும் அன்னக ரதிலே அருள்மலைப் பெருமையை' (பா.38. 84, 85) என்றும், 'இந்தலோகத்தில் இந்துமாநகரில் அந்தமாமலைபோல் அருள்மலை யுளது' (பா.38.93,94) என்றும் குறிப்பிடுகின்றார்

இவ்வாறு இந்நூலாசிரியர் குறிப்பிடுவதிலிருந்து இவ்விரு ஊர்களும் அக்காலத்தில் 'திங்களூர் அருள்மலை' என ஒரேபெயரில் அழைக்கப்பெற்று வந்துள்ளமையை அறியமுடிகின்றது.

திங்களூரின் சிறப்புகள்

இந்நொண்டி நாடகநூலின் வழியாக திங்களூர் பற்றிய சிறப்புகள் பல அறிய வருகின்றன இவ்வூரில் அமைந்துள்ள சிறப்புமிக்க கோயில்களாக, சந்திரநாதர் கோயில், நெட்டூரழகர் கோயில், கொண்டத்துக்காளி அம்மன் கோயில், அப்பச்சிமார் மடக்கோயில், அருள்மலை ஆண்டவர்கோயில் ஆகிய கோயில்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன இத்துடன் மேலும் இவ்வூரின் சிறப்புகளாக,

"கொங்குமண் டலத்தில் குறுப்புநன் னாட்டில்
இந்துமா நகரென் றிருக்கும் தலமதிலே
அய்ந்தலை நாகம் ஆடவெண் சாரை
தவளைக் கல்லும் சந்திர லிங்கமும்
தவளைச் சங்கும் சடைப்பனை யதுவும்
பூமன் தினமும் போற்றுமய்ங் கரனும்
வீமன் கிணறும் வெண்டாமரைக் குளமும்
திக்குளோர் புகழத் தென்னர சுடனே
முக்குக் கல்லும் முன்வட துருத்தியும்
இரத்தக் கள்ளியும் இரணமுகப் பூதமும்
சித்துமு லிகையும் செந்தமிழ்ச் சங்கமும்
தோன்றவே காணாச் சுனைக்கரு நொச்சியும். " (பா.38.14-25)

என ஆசிரியர் விரித்துக்கொண்டே செல்கிறார்.

திங்களூர்ச் செப்பேடு[44] இதனை உண்மையென நிரூபிக்கின்றது. இச்செப்பேடு,

". . யிந்த நகரில் இருக்கிற அதிசியம் அய்ந்தலைநாகன் ஆடவெண்சாரை
தவளை கல்லு சந்திரலிங்கம் சடப்பனையும் பூமநதியும்
பொருந்திய ஐங்கரன் பீமன் கிணறு வெண்டாமர குளம்
தெற்கு தென்னரசு மேற்கு முக்குகல்லு வடக்கு வடதுருத்தி
கிழக்கு ரத்த காள ரணமுகப்பூதம் செந்தமிழ் சங்கம்
காணா சுனையும் கருநொச்சியும் . . . ."[45]

என குறிப்பிடுகின்றது. குறுப்புநாட்டுத் தனிப்பாடல்[46] ஒன்று 'வெண்சாரை கருநொச்சி காணாத சுனையும் மெய்ப்பாய் இருக்கும் நாடு' என்றும், அதிசயாமலை விருத்தம் [47] என்னும் பாடலானது 'இஷ்டமாய் சித்திதரு கருநொச்சி யும்புவியில் ஆருமறி யாத சுனையும்' என்றும் குறிப்பிடுவதிலிருந்து இதனைத் தெற்றென அறியமுடிகின்றது.

---

44 ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் - சின்னியம்பாளையத்தில் மொட்டையப்ப நாடார் என்பவரிடம் இச்செப்பேடு உள்ளது

45. ஆவணம், இதழ் 7 ப 98

46 கொடுமணல் இலக்கியங்கள், ப. 112

47. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி-3, ப.56

சந்திரநாதர் கோயில்

திங்களூர் என்று இவ்வூர் பெயர் பெறுவதற்குக் காரணமாய் அமைந்தது சந்திரநாதர் கோயில் என்பது முன்பே சுட்டப்பட்டது ஊரின் கிழக்குப்பக்கத்தில் இக்கோயில் காணப்படுகிறது இக்கோயிலின் வாசல் மேற்குப்புறமாக அமைந்துள்ளது கோயில் வாசலுக்கு முன்பாக கருட கம்பம் ஒன்றும் அமைக்கப்பெற்றுள்ளது கார்த்திகை தீபத்தன்று இக்கருட கம்பத்தின் மீது ஏறி தீபம் வைப்பார்கள் இக்கோயிலைப் பற்றி இந்நொண்டி நாடகம்,

"திங்கள் மாநகரில் சிறந்த சிவாலயம்
அங்கே யோரடிக்கு ஆயிரலிங்கமும்
தெப்பவா விகளும் சிறந்த தடாகமும்
ஒப்பில் லாத்தங்க உயர்ந்தஉப் பரிகையும்
சித்திர மண்டபம் சிகர கோபுரங்கள்
. . . .

சந்திர சேகரருந் தான்பெரிய நாயகி" (பா.38 41-59)

எனவும் சிறப்பிக்கின்றது இதனைத் திங்களூர்ச் செப்பேடு,

"சிறந்த ஆலயம் சந்திர சேகரசுவாமி பெரியநாயகி அம்மன்
கலியாண சுப்பிரமணியர் நட்டூர் அழகர் கொண்டத்துக்காளி அம்மன்
புட்பநாத சுவாமி . தெப்பவாவி உண்டு கோட்டை உப்பரிகை
பன்னகசாலையும் இப்படியாப்பட்ட அதிசயமிருந்தது"[48]

என கூறுகின்றது

நெட்டூரழகர் கோயில்

சந்திரநாதர் கோயிலுக்குத் தென்பக்கத்தில் இக்கோயில் அமைந்துள்ளது இக்கோயிலின் வாசல் கிழக்குப்புறமாக அமைந்துள்ளது கோயில் வாசலுக்குமுன் கருட கம்பம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது இக்கோயிலினை இந்நொண்டி நாடகம்,


'நந்துதா னிலங்கும் நட்டூரழகரும்' (பா 38 60)
'ஆழியுண்ட நட்டூர் அழகரும் வாழி' (பா.39.19)

என்று சிறப்பிக்கின்றது

48 ஆவணம், இதழ் 7, ப 99



சந்திரநாதர் கோயில்



நெட்டூரழகர் கோயில்

கொண்டத்துக் காளிஅம்மன் கோயில்

சந்திரநாதர் கோயில், நெட்டூரழகர் கோயில் இவ்விரண்டினையும் கடந்து கிழக்குப் பக்கத்தில் வருகிறபோது நீண்ட பெரிய மதில்சுவருடன் இக்கோயில் காணப்படுகிறது மேற்கூறிய இரு கோயில்களைவிட அதிக பரப்பளவில் இக்கோயில் காணப்பெறுகிறது இக்கோயிலின் வாசல் வடக்குப் புறமாக அமைந்துள்ளது இக்கோயில் வாசலுக்குமுன்பும் கருட கம்பம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது கார்த்திகைக் தீபத்தன்று இக்கருடகம்பத்தின்மீது ஏறித் தீபம் வைப்பார்கள் கோயிலில் நுழைவதற்கு முன்பாக பெரிய வாயிலுடன் இருபுறமும் திண்ணைகளும், அறைகளும் அமைந்து வீட்டின் முகப்பு தோற்றம் போல் காணப்பெறுகிறது கோயிலில் நுழைந்ததும் கொண்டத்துக் காளி அம்மனின் பெரிய உருவம் (சுதையாலானது) காட்சியளிக்கின்றது

இக்காளியம்மனின் வரலாறாக அவ்வூர் மக்களிடம் கிடைக்கப்பெறும் செய்தி: திங்களூர் கொண்டத்துக் காளியும், பாரியூர் அம்மனும் சகோதரிகள். ஒருநாள் திங்களூர் கொண்டத்துக்காளி பாரியூர் அம்மன் விழாவுக்குச் செல்லும்போது வயல் நடவை மேற்பார்த்த பள்ளன், அம்மனை (பெண்வடிவாகச் சென்ற அம்மன்) நாற்று நடவு செய்த பின்னர் போகலாம் என்று தடுத்தான் அம்மன் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை அம்மன் மிகவும் கோபமாகித் தன் திரிசூலத்தால் பள்ளனைக் குத்திக்கொன்று பின்னர் பாரியூர் சென்றதாக ஐதீகம்

இக்காளியம்மனைப் பற்றி இந்நொண்டி நாடகம்,

"பாதிநடுச் சாமத்தில் பள்ளன் - நடுப்
பாத்தியில் காளியம்மனை நாத்துநடச் செய்யவே
திரிசூலங் கொண்டுபள்ளன் தன்னை-வெட்டிச்
செயங்கொண்ட சந்திரபுரி நயங்கொண்ட பதியாள்" (பா.610,11)

என்றும்,

"நாத்தை எடுத்து நடுப்பாத் தியிலே
பார்த்து நடென்ற பள்ளனை மிதித்து
வாளது கொண்டு வதைத்தகொண் டத்துக்
காளிநா யகியும்" (பா.38 61-64)

என்றும் கூறுகின்றது மேற்கண்ட நேர்காணல் செய்தியையும், இந்நொண்டி நாடகநூலின் பாடலடிகளையும் உறுதி செய்யும்வண்ணம் திங்களூர்ச் செப்பேடு காணப்படுகிறது.



கொண்டத்துக்காளி அம்மன் கோயில்



அப்பச்சிமார் கோயில்

"அம்மன் கோவிலுக்கு வடபுறம் பள்ளர் வீடு 100 யிருக்கும். யிந்த நூறு வீட்டிலே பெரியதனக்காரன் வீரபத்திரப் பள்ளன் இருப்பான். அவன் பில்லி சூனியம் படித்துக்கொண்டு அம்மனை ராத்திரி காலம் வயலுலே நாத்து நடச்சொல்லி ரொம்ப உபத்திரம் செய்து வருவான். உபத்திரம் பொறுக்கமாட்டாமல் ஒருநாள் வயலுக்குப் போர்காமல் இருந்துகொண்டாள். அந்தப்பள்ளன் அம்மன் வயலுக்கு வரவில்லை என்று சாமத்தில் வந்து காளிகாளி என்று கூப்பிட்டான். அம்மன் பேசாமலிருந்ததினாலே கதவைக் காலாலே உதைத்தான். அப்போ அம்மன் பள்ளனை சூலாயுதத்தினாலே குத்திகொண்ணு போட்டு யிந்த நகரில் பள்ளர்குடி நிலைக்காமல் போகக்கூவதுஎன்று சாபம் கொடுத்தது . ."[49]

இத்தகு பெருமையுள்ள இக்காளியம்மனைச் சிறப்பித்துப் பல தனிப்பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. ஓலைச்சுவடியில் இவ் அம்மனைப் பற்றிப் பதிப்பாசிரியர்க்குக் கிடைத்த சில தனிப்பாடல்கள் இப்பதிப்புநூலின் பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ளன.

அப்பச்சிமார் கோயில்

திங்களூர் வடமேற்குத் திசையில், 1 கி.மீ. தூரத்தில் இக்கோயில் காணப்படுகிறது இக்கோயிலின் வாசல் தெற்குப்புறமாக அமைந்துள்ளது இக்கோயிலை ஒட்டியே மடமும் அமைக்கப்பெற்றுள்ளது வேட்டுவத் தலைவர்களுக்காகவே கட்டப்பட்ட இக்கோயிலில், அப்பச்சிமார், மாரய்யன், ஈட்டிமாறன், கத்திமாறன், நல்லாயுதமாறன், ராக்கியண்ணன், வீரய்யன், மசரியம்மன் முதலான தெய்வங்கள் காணப்படுகின்றன கொங்குநாட்டில் ஏழு அப்பச்சிமார் கோயில்கள் இருந்தபோதிலும் இக்கோயிலே முதன்மையானதாகும். திங்களூர் பட்டக்காரர் மட்டுமே இக்கோயிலில் வழிபாடு நிகழ்த்தும் உரிமை பெற்றவர் ஆவர். இக்கோயிலைப் பற்றி இந் நொண்டி நாடகத்தில்,

"மாரய்யனும் ராக்கியண்ணனும் சூழ - மடத்தில்
மசரியம்மன் செழிக்கும் சசிநகருக்கிசைந்த" (பா.614)
'அப்பச்சி மாரய்யன் அன்னசத்திரமும்' (பா.38 67)

என்று கூறப்படுகிறது. அக்காலத்தில், இது கோயிலாகவும் மடமாகவும் சிறப்புற்று விளங்கியமையை அறியமுடிகின்றது இக்கோயிலின் பெயர்க் காரணத்தையும், இதன் வரலாற்றினையும் 'இந்நூலில் அறியவரும் பிற செய்திகள்' என்னும் தலைப்பில் விரிவாகக் காணலாம்.

---

49. ஆவணம், இதழ் 7, ப 99, 100

அருள்மலை ஆண்டவர் கோயில்

திங்களூருக்கு நேர்மேற்கே 6 கிமீ தொலைவில், தோரணவாவி எனும் ஊருக்கருகில் இக்கோயில் காணப்படுகிறது. இக்கோயில் மலைமீது அமைந்துள்ளது குறுப்புநாட்டில் உள்ள ஆறு மலைக்கோயில்களுள் இக்கோயிலும் ஒன்றாகும் இக்கோயிலுள் முருகபெருமான் எழுந்தருளியுள்ளார். இக்கோயில் தோரணவாவி எனும் ஊரின் பாதுகாப்பில் இருந்து வருவதை, 'ஸ்ரீ அருள்மிகு அருள்மலை ஆண்டவர் திருக்கோவில், தோரணவாவி' என்று காணப்பெறும் கோயில் நுழைவாயிலின் பெயர்ப்பலகைத் தெரிவிக்கின்றது. இந்நொண்டி நாடகநூல் தோன்றிய காலத்திலும், அருள்மலைக் கோயில் இவ்வூரின் பாதுகாப்பில் இருந்துவந்துள்ளதை,

"தோரண வாவிநகர் சூழ - நாச்சி
சொல்லருள் மலைக்கினிய செல்வமுரு கேசன்" (பா.6.14)

'தோரணவாவி நகர் அருள்மலை' (பா.10 4)

'தோரணவாவிசூழ் துரைக்குகன்' (பா.25)


என வரும் பாடலடிகளால் அறியமுடிகின்றது

அருள்மலைக் கோயிலின் மலைஅடிவார மேல்பகுதி முழுவதும் கருங்கற்களால் கட்டப்பெற்று வட்ட வடிவில் காணப்படுகிறது இதற்கும் மேல் பகுதி உயர்ந்த மதில் சுவரால் கட்டப்பெற்றுள்ளது இக்கோயிலின்மேல் செல்வதற்கு நடை படிகள் அமைந்துள்ளன கோயிலின் சந்நிதி கிழக்குமுகமாக அமைந்துள்ளது. சந்நிதிக்கு முன்பாக மயிலும் கொடிக்கம்பமும் அமைக்கப்பெற்றுள்ளன சிவன்கோயிலில் நந்தி, மூலவரை நோக்கி அமைந்து காணப்பெறுவதுபோல் இக்கோயிலில் மயில், மூலவரை நோக்கிக் காணப்பெறுகிறது.

இக்கோயிலின் தேர் மிகப்பெரியதாகக் காணப்பெறுகிறது. திருவிழாவின்போது தேரினை அலங்கரிப்பதற்கு வசதியாக படிகளுடன் கூடிய மேடை ஒன்றும் தேரின் அருகில் அமைக்கப்பட்டுள்ளது. தேரில் புராணச் செய்திகளை விளக்கும் வண்ணம் அழகிய வேலைப்பாடுகளையுடைய மரச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

அருள்மலையைப் பாடிய புலவர்கள்

அருள்மலை முருகனை இந்நூலாசிரியர் மட்டுமன்றி, இவர் காலத்திற்குப் பின் வாழ்ந்த நஞ்சையப் புலவர் என்பவரும் போற்றிப் புகழ்ந்து பல பாடல்களைப் பாடியுள்ளார். "இவர் வேளாளர். இவரது ஊர் திங்களூர் தோரணவாவி. இவர் எருமை மேய்த்துக்கொண்டிருந்தவர். அருண்மலையின்



அருள்மலை ஆண்டவர் கோயில்



தேர்

எருமைக் கன்றைப் புலி கொண்டுபோய்விட்டது கோவில் அர்ச்சகர் சுப்பையா எருக்கம்பாலைக் கறந்து கொடுத்தபோது இவர் ஒரு பாடல் பாடினார் என்று தெரிகிறது சிவகிரி வேலாயுத சுவாமி பேரில் மழைபெய்யும்படி பாடினார்"[50] என்று இப்புலவரைப் பற்றி பிற்காலப் புலவர்கள் எனும் நூல் கூறுகின்றது

இப்புலவர், அருள்மலை முருகன்மீது பாடிய சில பாடல்கள் ஓலைச் சுவடியிலிருந்து பதிப்பாசிரியர்க்குக் கிடைத்தன அப்பாடல்கள் இப்பதிப்பு நூலின் பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ளன இப்புலவரின் சந்ததியினரில் இன்னும் ஒருவர் வாழ்ந்து வருவதாக இந்நூலின் இணைப்பதிப்பாசிரியரும் கல்வெட்டறிஞருமான முனைவர் செ இராசு அவர்கள் கூறுவர்

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகநூலின் அமைப்பு

நொண்டி நாடகம் தமிழ் நாடக வகையைச் சேர்ந்த ஒரு சிற்றிலக்கியம். இது நாடகம் என்பதை, 'சிறக்கும் நொண்டி நாடகத்தைத் தெரிந்து பாட'[51] எனவும், 'செந்தமிழால் தெரிந்து நொண்டி நாடகத்தின் சீரெடுத்து நயந்து பாட'[52] எனவும், 'விருத்திலகு நொண்டி நாடகந்தன்னை யான்பாட'[53] எனவும் வரும் நொண்டி நாடக நூல்களின் பாடலடிகளால் அறியலாம் திங்களூர் அருள்மலை நொண்டி நாடகமும் நொண்டி நாடக நூல்களின் அமைப்பினையே பெற்றிலங்குவதை,

செந் தமிழா லுற்ற
பனுவலிசை யாகநொண்டி பாடி யாட" (பா1)
"பல்லியஞ்சேர் நொண்டி நாடகத்தை யானும்
பாடலுற்ற விபரமது பகரக் கேண்மோ" (பா 2)

எனவரும் பாடலடிகளால் அறியமுடிகிறது

நொண்டி நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நொண்டி நாடகத்தின் அமைப்பும், அமைப்பில் உள்ள ஒற்றுமை வேற்றுமை நிகழ்ச்சிகளும், நாடக நிகழ்ச்சிகள் அமைந்த வரிசைப்படியே ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன

கடவுள் வணக்கம்

நொண்டி நாடகத்தில் காப்புப்பாடல் முதலில் அமைந்துள்ளது பின்னர் கடவுள் வணக்கம், அவையடக்கம், தோடயம், நூற்பயன், வாழ்த்து

---

50 பிற்காலப் புலவர்கள், ப 474

51 சீதக்காதி நொண்டி நாடகம், பா1

52 திருவிடை மருதூர் நொண்டி நாடகம், பா1

53 திருப்புல்லாணி நொண்டி நாடகம், பா1

முதலியன அமைந்துள்ளன இவற்றில் சில பகுதிகள் குறைந்தும் சில நொண்டி நாடகங்கள் காணப்படுகின்றன. தமிழ்ச் சிற்றிலக்கியங்களில் விநாயகர் வணக்கத்தைக் காப்புப் பாடலாக அமைத்து நூல் இயற்றப்படுவது மரபாக உள்ளது இம்மரபிற்கேற்ப **ஆதிமூலேசர் நொண்டி நாடகம், திருக்குடந்தை சாரங்கபாணி நொண்டி நாடகம், திருக்கச்சூர் நொண்டி நாடகம்** முதலான பல நொண்டி நாடகங்களில் விநாயகர் வணக்கமே காப்புப் பாடலாக அமைந்துள்ளது. இவ்வமைப்பிற்கேற்ப **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்திலும்,**

"தாமநறுந் தண்டுளபத் தாரைச் சூடுந்
தாமோதரன் மருகன்தாள் காப்பு ஆமே" (பா.1)

என்று விநாயகர் வணக்கமே காப்புப் பாடலாக அமைந்துள்ளது.

நொண்டி நாடகங்களில் காப்புப் பாடலுக்கடுத்து கடவுள் வணக்கம் இடம் பெறுகின்றது பொதுவாக விநாயகர், முருகன், சிவன், திருமால், கலைமகள் ஆகியோரினைத் துதித்துப் பாடுவதாக இது அமைகின்றது. இருப்பினும், பாட்டுடைத் தலைவராக அமையும் இறைவனை மட்டுமே துதிப் பாடலாகக் கொண்டு சில நொண்டி நாடகங்கள் காணப்படுகின்றன **குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம், திருச்செந்தூர் நொண்டி நாடகம், திருமலை நொண்டி நாடகம், பழனி நொண்டி நாடகம்** முதலிய நொண்டி நாடகங்கள் விநாயகர், முருகன், சிவன் ஆகியோர் மீது கடவுள் வணக்கம் பாடுகின்றன **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தில்** பொதுக்கடவுளர்கள் மீது பாடும் கடவுள் வணக்கப்பாடல் இடம்பெறவில்லை.

அவையடக்கம்

கடவுள் வணக்கத்திற்கு அடுத்து அவையடக்கப்பாடல் கூறுவது பெரும்பாலான நொண்டி நாடகங்களில் காணப்படுகிறது. **திருக்கச்சூர் நொண்டி நாடகத்தில்,**

"சுந்தர பூமி தன்னைச் சூழ்கடல் மீது நாவாய்
விந்தையாய் மிதக்கத் தோணி மிதந்திடுந் தன்மை தானே"[54]

என்று அவையடக்கப்பாடல் கூறப்படுகின்றது. **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தில்** அவையடக்கப் பாடலானது,

"சொல்லெடுத்துப் பொருள்யாப்பு அலங்கா ரத்தைச்
சொல்லுதமிழ் நாவலர்முன் காவு மீதில்

---

54 திருக்கச்சூர் நொண்டி நாடகம், பா 4

நல்லமொழி குயில்கூவக் கண்டு காக்கை
நடத்துதொனி யொக்குமெந்தன் அறிவுதானே" (பா 2)

என அமைந்து வருகின்றது சிலநொண்டி நாடகங்களில் அவையடக்கத்திற்கு முன்பாக தோடயம் என்ற பகுதி இடம்பெற்று வருகின்றது.

தோடயம்

தோடயம் எனும் வடசொல் நாடகச் சிறப்புப் பாயிரத்து முதற்கவியைக் குறிக்கும் இக்கவி ஒரு தெய்வம் அல்லது பல தெய்வ வாழ்த்தாக அமையும் **குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம், ஞான நொண்டி நாடகம்** ஆகிய இரண்டிலும் கடவுள் வணக்கத்தைத் தொடர்ந்து தோடயம் இடம்பெறுகின்றது **குன்றக்குடி குமரன் நொண்டி நாடகத்தில்** தோடயம் பலதெய்வ வாழ்த்தாக அமைந்துள்ளது. கணபதி, குடுமியான்மலை இறைவன் முதலியோர் இதில் இடம்பெறுகின்றனர் **ஞான நொண்டி நாடகத்தில்** தோடயம் கிறிஸ்துவின் வணக்கமாக அமைந்துள்ளது.

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தில் அவையடக்கப் பாடலுக்கடுத்து தோடயம் இடம்பெறுகின்றது இப்பாடலில் ஒரு தெய்வ வாழ்த்தாக ஆவினன்குடி முருகனையும், அருள்மலை முருகனையும் வாழ்த்திப் பாடுவதாக அமைகின்றது. இதற்கடுத்து முருகனின் பெருமைகளாக, அவர் அசுரர்களை அழித்த செயலும், அவரது தசாங்கச்சிறப்பும், திங்களூர் அருள்மலையின் சிறப்பும் மூன்று பெரிய பாடல்களில் கூறப்படுகின்றன இவ்வாறு நூலின் பாட்டுடைத் தலைவரையும் தலத்தையும் சிறப்பித்து நொண்டியின் வருகைக்கு முன்பாகவே பாடும் இவ்வமைப்பு இந்நொண்டி நாடகத்தில் மட்டுமே காணமுடிகிறது

மேற்கூறிய காப்பு, கடவுள் வணக்கம், அவையடக்கம், தோடயம் ஆகிய யாவும் கவிக்கூற்றாகவே எல்லா நொண்டி நாடகங்களிலும் அமைந்து வந்துள்ளன இந்நொண்டி நாடகத்திலும் அவ்வாறே அமைந்து வருகிறது.

நொண்டியின் வருகை

நொண்டி நாடகங்களில் கவிக்கூற்று, கவிதை, விருத்தம் முதலியன கதைமாந்தரின் வருகையைக் கூறுவதாகவும் கதை நிகழ்ச்சியை விவரிப்பதாகவும் அமைந்துள்ளன கீர்த்தனை, குறவஞ்சி, தெருக்கூத்து ஆகிய நாடகங்களில் கட்டியங்காரன் தோன்றிக் கதைத்தலைவனின் வருகையைக் கூறுவான். ஆனால் நொண்டி நாடகங்களில் அவ்வாறின்றி, நொண்டியானவன் சபையில் தோன்றித் தன்னைத்தானே அறிமுகம் செய்துகொள்வான். இவ்வமைப்பு முறையிலிருந்து **ஆதிமூலேசர் நொண்டி நாடகமும், திருக்கச்சூர் நொண்டி நாடகமும்**

வேறுபட்டு விளங்குகின்றன இவ்விரு நொண்டி நாடகங்களிலும் நொண்டியின் வருகைக்கு முன்பாகக் கட்டியங்காரன் வருகை கூறப்படுகின்றது.

பெரும்பான்மையான நொண்டி நாடகங்களின் அமைப்பினை ஒத்தே இந்நொண்டி நாடகமும்,

"மன்னுதஞ்சா வூர்த்தசுக்கன் மதுரை எத்தன்
வணங்குபக லெத்திநொண்டி வந்துற் றேனே" (பா7)

என்று நொண்டியின் வருகையைக் கூறுகின்றது

ஆதிமூலேசர் நொண்டி நாடகம், திருக்கச்சூர் நொண்டி நாடகம், திருக்குடந்தை சாரங்கபாணி நொண்டி நாடகம், தில்லைவிடங்கன் ஐயனார் நொண்டி நாடகம் ஆகிய நாடகங்களில் மட்டுமே இடையில் வசனம் காணப்படுகின்றது சபையில் உள்ளோர் நொண்டியைப் பார்த்துப் பெயர், குலம், கை கால்கள் வெட்டப்பட்டதன் காரணம் முதலியன கேட்பதாக வசனம் அமைந்துள்ளது **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தில்** வசனம் இடம்பெறவில்லை அதனால் கதையோட்டம் விறுவிறுப்பாக அமைந்து செல்கிறது

கதை நிகழ்ச்சிகளில் சில மாறுபாடுகள்

நொண்டி நாடகங்களில் கதையின் முற்பகுதியாகச் சபையில் நொண்டி தோன்றித் தன் பெருமை கூறுதலும், இரண்டாவது பகுதியாகத் திருடச் செல்லுதலும், மூன்றாவது பகுதியாகத் திருடிய பொருள்களை வேசியிடம் இழப்பதும், நான்காவது பகுதியாகத் திரும்பவும் திருடச்சென்று அகப்பட்டுத் தண்டிக்கப்படுவதும், இறுதிப்பகுதி தன்னுடைய தவறை உணர்ந்து இறைவனை நாடி அருள் பெறுவதுமாகிய ஐந்து பகுதிகளைக் கொண்டிலங்குகிறது. பொதுவாக இவ்வைந்து பகுதிகளை நொண்டி நாடகங்கள் பெற்றிருந்தாலும் கதையோட்டத்தின் சிற்சில இடங்களில் சில மாறுபாடுகளைப் பெற்றும் காணப்படுகின்றன

திருடர் தம் பெருமை கூறுதல்

குறவர்களின் வாழ்க்கை முறையினை அறிவதற்குக் குறவஞ்சி நூல்களும், பள்ளர்களின் வாழ்க்கை முறையினை அறிவதற்குப் பள்ளு நூல்களும் பயன்படுவதைப் போன்று கள்ளர்களின் (திருடர்களின்) வாழ்க்கை முறையினை அறிய நொண்டி நாடகங்கள் பயன்படுகின்றன. இந் நாடகங்களில் இடம்பெறுகின்ற திருடர்களைக் குலத்தொழிலால் திருடர்களாக இருப்பவர்; சூழ்நிலையால் திருடர்களாக ஆனவர் என இருவகையினராகப் பிரிக்கலாம் இவ்விரு வகையினருள் முதல்பிரிவைச் சேர்ந்தவர்களே நொண்டி நாடகங்களில் அதிகமாக இடம்பெறுகின்றனர்

சாத்தூரப்பன் நொண்டி நாடகத்தில் வருகின்ற நொண்டியும், **பழனி நொண்டி நாடகத்தில்** வருகின்ற வாதிசிங்களனும் குலத்தொழிலால் திருடர்கள் அல்லர் சாத்தூரப்பன் நொண்டி, யாத்திரை சென்ற இடத்தில் திருடர்களுடன் சேர்ந்து, அவர்தம் தொழிலைக் கற்றுக்கொண்டு திருடனாகிறான். வாதிசிங்களன் படைத்தலைவனாக இருந்து பொருள்களை எல்லாம் வேசிக்குக் கொடுத்துத் திருடனானான் இவைதவிர, ஏனைய நொண்டி நாடகங்களில் திருடர்கள் குலத்தொழிலால் திருடர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகமும் குலத்தொழிலால் ஆன திருடனையே குறிப்பிடுகின்றது. இந்நூலின் நொண்டி பகலெத்தி கள்ளமறவர் குலத்தில் தோன்றியவன் ஆவான்.

> "நாட்டிலுள்ள நொண்டியர்க்கு மிண்டன் - வெகு
>
> நலத்துடன் திருட்டுக்குப் பெலத்தகோ தண்டன்
>
> சூட்டும்கவி நாவலர்க்குத் தொண்டன் - வெகு
>
> துஷ்டலரை வெட்டிவிரு திட்டபிர சண்டன்" (பா.8:9)

என்று இவனது பெருமை கூறப்படுகிறது.

திருடச் செல்லுதல்

பெரும்பாலான நொண்டி நாடகங்களில் நொண்டி, தன் குலப் பெருமையைக் கூறி முடித்ததும் திருடச் செல்வதாக அமைந்துள்ளன. ஆனால் **தில்லைவிடங்கன் ஐயனார் நொண்டி நாடகத்திலும், பழனி நொண்டி நாடகத்திலும்** வருகின்ற நொண்டிகள், இறைவனை வணங்கி வரம் பெற்றுச் செல்வதாக அமைந்துள்ளன. **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்,** இவ்விரு நொண்டி நாடகங்களின் தன்மையை ஒத்து காணப்படுகின்றது இந்நாடகத்தில் வருகின்ற நொண்டி பகலெத்தி காளியை வணங்கி வரம் கேட்பதை,

> "பாலும் பழம்போலே - திருட்டுப்
>
> பலித்தே நானுங் கெலித்தாலே
>
> நாலில் ஒருபங்கு - உனக்கு
>
> நான்தரு வேனே பராந்தகியே" (பா 10:6)

என்றுவரும் பாடலடிகளால் இதை அறியமுடிகின்றது.

பொருளை வேசியிடம் இழத்தல்

நொண்டி தான் திருடிய பொருள்களை வேசியிடம் இழப்பதை அனைத்து நொண்டி நாடகங்களிலும் காணமுடிகிறது. **திங்களூர்**

அருள்மலை நொண்டி நாடகத்தில் வருகின்ற நொண்டி, திருடிய பொருள்களைப் பணத்திற்கு (பொன்னுக்கு) விற்று, அப்பணத்தினை வேசியிடம் தந்து இழக்கிறான் இவ்வாறு தான் திருடிய பொருளை விலைக்கு விற்று, அப்பணத்தை வேசியிடம் இழப்பதை வேறு எந்த நொண்டி நாடகத்திலும் காணமுடியவில்லை.

நொண்டியிடமிருந்து பொருள்களைப் பறிக்கத் தாசியும், அவளது தாயும் நூற்றுக்கும் மேற்பட்ட மருந்துபொருட்களைச் சேர்த்து மருந்துசெய்து அவனுக்குச் சோற்றிலும், வெற்றிலையிலும், வெஞ்சனத்திலும் கொடுக்கும் முறை எல்லா நொண்டி நாடகங்களிலும் காணப்படுகிறது. இம் மருந்திடும் முறையை ஒருசில நொண்டி நாடகங்கள் விரித்தும், ஒருசில நொண்டி நாடகங்கள் சுருக்கியும் கூறும் **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்** இதனை விரித்துச் சொல்கின்றது.

தண்டனை அடைதல்

வேசியிடமிருந்து வெளியேற்றப்பட்ட கள்ளன், அரச குதிரையைத் திருட முயன்றபோது காவலாளர்களால் பிடிபட்டு மாறுகால், மாறுகை தறிக்கப்படுவதாகப் பெரும்பாலான நொண்டி நாடகங்களில் அமைந்துவருகிறது திங்களூர் அருள்மலை நொண்டிநாடகமும் இவ்வமைப்பையே பெற்றிலங்குகிறது

திருப்புல்லாணி நொண்டி நாடகம், தில்லைவிடங்கன் ஐயனார் நொண்டி நாடகம் ஆகிய இரண்டிலும் இவ்வமைப்பு வேறுபடுகின்றது **திருப்புல்லாணி நொண்டி நாடகத்தில்** வருகின்ற கள்ளன், பெண்ணை வலிய முறையில் அடைய நினைத்து அகப்பட்டு மாறுகை மாறுகால் வாங்கப்படுகிறான். **தில்லைவிடங்கன் ஐயனார் நொண்டி நாடகத்தில்** வருகின்ற கள்ளன், யானையைத் திருடச் சென்று அகப்பட்டு கைகால் வாங்கப்படுகிறான்

குன்றக்குடி குமரன் நொண்டி நாடகம், சாத்தூரப்பன் நொண்டி நாடகம் ஆகிய இரண்டிலும் ஒற்றைக்கால் மட்டும் தறிக்கப்படுவது குறிக்கத்தக்கது வேறு எந்த நொண்டி நாடகங்களிலும் இத்தகு அமைப்பு காணப்பெறவில்லை. **ஆதிமூலேசர் நொண்டி நாடகத்தில்** வருகின்ற கள்ளன், கை,கால்களைத் தானே வெட்டிக்கொண்டு தாசியைச் சந்திக்க வருகின்றான் இவ்வமைப்பு இந்நொண்டி நாடகத்தில் மட்டும் காணப்படுகிறது நொண்டி நாடகங்களில் பெரும்பான்மை திருடுகிற சமயத்தில் அகப்பட்டு தண்டனை அடைதல் காணப்படுகிறது **பழனி நொண்டி நாடகத்தில்** மட்டும் திருடிய பொருள் பயன்பாட்டிற்கு வருகின்றபோது, அது திருடிய பொருள் என்று கண்டுபிடிக்கப்பட்டு அதனால் தண்டனைக்குள்ளாவதாக வருகின்றது.

அருள் பெறுதல்

நொண்டி நாடகங்கள் எல்லாவற்றிலும் நொண்டியானவன், இறைவன் அருளை, அவ்விறைவன் எழுந்தருளியுள்ள தலத்தினில் சென்று பெறுவதைக் காணமுடிகின்றது அவ்வாறே **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தின்** நொண்டியும் திங்களூர் அருள்மலைக்குச் சென்று முருகனின் அருளைப் பெற்று நலம் பெறுவதாக அமைகின்றது. **ஆதிமூலேசர் நொண்டி நாடகத்தில்** இறைவன் அருளை அரங்கத்திலேயே நொண்டி பெறுவதாகக் கூறப்படுகின்றது

நூற்பயன்

இப்பகுதி, இக்கதையைக் கேட்போர் இறைவனின் பதத்தைப் பெறுவர் என்ற பொருளில் இடம்பெறும். சைவ சமய நூலாகிய **குன்றக்குடி குமரன் நொண்டி நாடகத்தில்** 'பெருகும் இக்கதையைக் கேட்போர் பேறுபெற்றோரே' என்று இடம்பெற்றுள்ளது. **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்திலும்**, வேறு எந்த நொண்டி நாடகத்திலும் இத்தகு அமைப்பு காணப்படவில்லை.

வாழ்த்து

நூலின் இறுதியில் வாழ்த்துப்பாடுதல் **ஆதிமூலேசர் நொண்டி நாடகம், சாத்தூரப்பன் நொண்டி நாடகம்** தவிர்த்த ஏனைய நொண்டி நாடகங்களில் காணப்படுகின்றது **திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்திலும்** வாழ்த்துப்பகுதி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

"பார்புகழ் நொண்டிநாடகந் தன்னை - தினம்
படித்துப் படித் துக்கொண்டு நடித்தார்கள் வாழி" (பா 39:22)
"இன்பமுடன் காதினில் கேட்போரும் - இதை
எழுதிப் படித்தபேர்கள் கிளையெல்லாம் வாழி
தென்புடன் தியாகத்தந்தார் வாழி - அனு
தினமும்புவி யிலுள்ளோர் தினம்தினமும் வாழி" (பா.39:23)

நூலின் இறுதியில் வாழ்த்துப்பாடி மங்களம் பாடுதல் **திருக்கச்சூர் நொண்டி நாடகத்தில்** மட்டும் காணப்படுகிறது

ஒரே கருத்தை வேறுபட்ட சமயத்தால் விளக்கும் இந்நொண்டி நாடகங்களின் அமைப்பு முறையில் **திங்களூர் அருள்மலை நொண்டிநாடகம்** முதலும் இறுதியும் பெரும்பாலும் ஒத்திருப்பினும் மேற்கண்ட கதை நிகழ்ச்சியில் ஒருசில வேறுபாட்டையும் கொண்டிலங்குவதைக் காணமுடிகின்றது.

நூலின் கதைச்சுருக்கம்

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தின் கதைத்தலைவன் பகலெத்தி என்னும் கள்ளனாவான் இவன் பல வித்தைகளை முறைப்படி கற்றபின் பலவிடங்களில் திருடி வாழ்க்கை நடத்துகிறான் ஒருநாள் சந்தைப்பேட்டை என்னும் ஊரில் ஒரு திருமணவீட்டில் பொருள்களைத் திருடி, அப்பொருள்களை விற்று பணமாக்கிக் கொண்டு பவானி சங்கமேஸ்வரர் ஆலயத்திற்குச் செல்கிறான். அக்கோயிலில் பரதநாட்டியம் செய்கின்ற தாசி கெட்டிமுத்தாளைக் கண்டு அவள்மீது ஆசை கொள்கிறான் அவளும் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று உபசரிக்க, அவளுடன் இன்பமாக இருந்து வருகின்றான். சில நாட்களில் பணம் முழுவதையும் அவளிடம் இழந்து தாய்க்கிழவியாலும், தாசியாலும் ஏசப்பட்டு விரட்டப்படுகிறான்.

கள்ளன் காசிக்குச் சென்று அங்கு அரண்மனையில் திருடுகிறான். திரும்பவும் கெட்டிமுத்தாள்மீது மோகமாகி அவளிடம் வந்து இரண்டு மாதம் இன்பமுடன் இருந்து பொருள் அனைத்தையும் இழக்கிறான். மீண்டும் அவர்களால் விரட்டப்படுகின்றான் பின்னர், கள்ளன் குதிரைப்பாளையம் என்னும் ஊருக்குச் செல்கிறான். அங்குக் கூடாரமிட்டுத் தங்கியிருந்த உசேன் கான்சாகிப் என்னும் படைத்தலைவனின் குதிரையைத் திருடும்போது காவலாளர்களால் பிடிபடுகிறான்

படைத்தலைவனின் கட்டளைப்படி கள்ளன் கை, கால்கள் துண்டிக்கப்பட்டுக் காட்டில் துன்புற்றுக் கிடக்கிறான். அப்போது அவ்வழியில் வந்த காசி அந்தணர்கள் அவனின் கைகால் புண்களை மருந்திட்டு ஆற்றி, திங்களூர் அருள்மலைக்குச் சென்று முருகனை வழிபட்டால் கைகால் மீண்டும் வளரும் என்றுகூறி அவனை ஆற்றுப்படுத்திச் செல்கின்றனர். கள்ளனும் அவ்வாறே செய்ய, கைகால் மீண்டும் வளரப்பெற்றுத் திருந்தி நலமுடன் வாழ்கிறான்

பாவமைப்பு

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம் எனும் இந்நூல் செய்யுள் வடிவினது. பெரும்பாலான பாக்கள் **தரு** என்ற பெயரில் நொண்டிச் சிந்தாக அமைந்துள்ளன. நூலின் இடையிடேயே அறுசீர், எண்சீராலான **விருத்தப்பாக்**களும் உள்ளன. **விருத்தப்பாக்கள்** இடம்பெறும் நிலையில் அவ்வப் பாக்களுக்கு மேலே '**விருத்தம்**' என்று சுட்டப்படுகிறது விருத்தம் முடிந்து '**சிந்து**' தொடருமிடத்து **தரு** என்ற குறிப்பு இடம் பெறுகின்றது.

இந்நூலில் 1 அகவல்பாவும், 19 சிந்துப்பாடல்களும், 19 விருத்தங்களும் ஆக 39 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

	பாவகை	பாட்டு எண்	பாடல் எண்ணிக்கை
1.	அகவல்	பா.எண்-38	= 1
2	சிந்து	பா.எண் - 3, 4, 6, 8, 10, 12, 14, 18, 20 22, 24, 26, 28, 30, 32, 34, 36, 39	= 19
3	விருத்தம்	பா எண் - 1, 2, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21, 23, 25, 27, 29, 31, 33, 35, 37	= 19
			39

இலக்கிய நயங்கள்

புலவன் தான் படைக்க முயலும் படைப்புக்களில் உயிரோட்டம் இருப்பதையே விரும்புவான். உயிரோட்டமுடைய இலக்கியங்களால் மட்டுமே மக்கள் மனதில் நிலையானதோர் இடம்பிடிக்க இய்லும். இலக்கியத்தை உயிரோட்டம் உடையனவாகச் செய்வன அதன் இலக்கிய நயங்கள் எனப்படும் இலக்கியத் திறனே ஆகும்.

இத்தகைய இலக்கிய நயங்களை, 1 சொல்நயம், 2. பொருள்நயம், 3. ஓசைநயம், 4 அணிநயம் என்னும் பாகுபாட்டில் காணலாம்.

சொல்நயம்

ஒரு மொழியின் நடை வெற்றியடைய மிகவும் பயனுடையவை சொற்களே. எந்த ஒரு படைப்பாளனும் தான் படைக்கும் இலக்கியத்தில் சிறந்த சொற்களையே கையாளுவான். அவ்வகையில் இந்நொண்டி நாடகத்தைப் பாடிய திரு. கு அவிநாசிப்புலவர் அவர்கள் எத்தன்மையான சொற்களைக் கையாண்டுள்ளார் என்பதைக் காணலாம்.

'மதிநதிவெண் சடைமுடியான் சந்திரநாதன் மலரடி' (பா.9)

என்னும் தொடரில் சிவனின் மலரடியைக் கூற வந்த புலவர், மதியை அணிந்த சிவன் என்றும், நதியை யணிந்த சிவன் என்றும், ஒளி பொருந்திய சடைமுடியினை உடைய சிவன் எனவும் பொருள்படும் வண்ணம் சொற்கள் பலவற்றை அடுக்கிக் கையாண்டுள்ளதைக் காணலாம். இவ்வாறு 'கன்னலென மிருதுவசனமொழிகள் பேசும் கன்னியர்' (பா 7), 'அதிமதுர வாக்கியஞ்சொல் கவிஞோர்' (பா 9), 'முல்லைப்பூ வனஞ்சூழ் கழுக்குன்ற மூதூர்' (பா.14.14), 'அருள்சேர் கருவூர்' (பா.14.15), 'தருவளர் கொடுமுடி' (பா.14.16), 'தொனிச்சங் கோசையுள்ள விருத்தாசலம்' (பா 14.17), என்று சொற்களுக்குச் சிறந்த

அடைமொழிச் சொல்லைத் தந்து சொல்நயம் மிக்க இலக்கியமாகப் படைத்துள்ளதை நூல்முழுக்கக் காணமுடிகின்றது.

பொருள் நயம்

இலக்கியப் படைப்பாளனின் படைப்புத்திறனை அளவிட உதவும் கருவிகளில் ஒன்று பொருள்நயம் ஆகும் இது கருத்தாழமும், சுவையான நடையும், அடுக்குத் தொடரும், தொடர்நிலையில் பொருள்களை விளக்குதல் போன்ற பல்வேறு கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வகையில் கு. அவிநாசிப் புலவர் இயற்றிய இந்நொண்டி நாடகநூலில் சில பொருள்நயமுடைய பாடல்களைக் காணமுடிகிறது

"கோட்டானை முகத்தானுக் கிளையானை மயிலானைத் தென்குறுப்பு
நாட்டானை அருள்மலை வீட்டானை வணங்கிநித்தம் நண்ணாவூரில்
காட்டானை பிடிக்கரெண்டு வீட்டானை வைத்திருந்த கன்னிமாய்கை
போட்டானை ரதிமானை வேட்டானை படுக்கைமனை புகுந்தேன்நானே"
(பா.21)

இப்பாடலில் 'ஆனை' என்ற சொல் பத்து இடங்களில் வந்திருந்தாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளை உடையதாக அமைகின்றது கோட்டானை முகத்தான் - கொம்புடைய யானை முகத்தை யுடைய விநாயகன் இளையான், மயிலான், தென்குறுப்பு நாட்டான், அருள்மலை வீட்டான் - முருகன் காட்டானை - காட்டு யானை ரெண்டு வீட்டானை - இரு தனங்களை. போட்டானை - மன்மதனை வேட்டானை - விரும்பி இவ்வாறு பலபொருளில் வந்து நயம் பயப்பதாகவும் சிலேடை அணி உடையதாகவும் இப்பாடல் அமைந்துள்ளது

"திங்கக் கட்டிய மாங்கனி பலாப்பழம்
தென்னங் காய்மடல் நெற்கதிர் வாழைப்பூ
தொங்கக் கட்டிய தோரண வாவிசூழ்
துரைக்குகன் மைத்துனன் கையின் வாளியால்
கொங்கைக் கட்டிக்கும் குளிர்ந்த முகத்துக்கும்
குறிஞ்சித் தேனுக்கும் கெட்டிமுத் தாளுக்கும்
தங்கக் கட்டிபோல் ஆறாயிரம் பொன்னைத்
தாசிக் கீய்ந்துநான் தன்னாசு மானேனே" (பா.25)

இப்பாடலில் 'கட்டிய' என்னும் சொற்கள் பலமுறை வந்திருந்தாலும் வெவ்வேறு பொருள்களுக்கு அடுக்காக வந்து தொடர்நிலையில் பொருள் விளக்குவனவாக அமைந்துள்ளன.

ஓசை நயம்

இலக்கியப் படைப்பின் வெற்றியில் ஓசைநயம் சிறப்பிடம் வகிப்பதாகும். இன்றைய நிலையில், நாட்டுப்புற இலக்கியங்களின் செல்வாக்கை உலக மக்கள் யாவருமே வியந்து போற்றிடக் காரணமாய் அமைவது அதனுள் அமைந்துள்ள ஓசைநயமெனும் இசையேயாகும்

இலக்கியங்களில் இத்தகைய இசை எனும் ஓசைநயம் வருவதற்கு எதுகை, மோனை, இயைபு என்ற யாப்பிலக்கணங்கள் மிகவும் பயன்பட்டு வருகின்றன. எதுகையும் மோனையும் இலக்கிய ஆற்றின் இரு கரைகளாகும். இந்நொண்டி நாடகநூலில் வருகின்ற சிந்துப்பா அனைத்துமே ஓசைநயங்களைப் பெற்றுக்காணப்படுகிறது.

"தானவர்கள் தேவர்சிறை மீள - நல்ல
தம்பிலட்சத் தொன்பதுபேர் வந்துபுடை சூழ
வேனசுர ரானகிளை மாள - நல்ல
விந்தைபெறு விண்ணுலகை யிந்திரன்அர சாள" (பா.41)
"மூதண்ட கூடபகி ரண்டம் - கன
முகடும் அதிரிட விகடமிடவேபிர சண்டம்
பூதவெள்ளஞ் சூழ்ந்திடவே விண்டத் - தமரர்
போற்றிசெய்ய மாற்றலர்கள் கூற்றெனவே ஒண்ட" (பா 4.3)

இப்பாடல்கள் எதுகைத்தொடை அமைந்தும் மீள, சூழ, மாள, சாள; அண்டம், சண்டம், விண்ட, ஒண்ட என்னும் இயைபுத்தொடை அமைந்தும் ஓசைநயம் பயப்பதாக வருகின்றன

அணிநயம்

தான் படைத்திடும் இலக்கியத்திற்கு அழகு செய்யும் அணிகலன்களாகப் புலவர் அணிவிப்பதே 'அணி' என்ற செய்யுள் உறுப்பாகும். அணிகள் பல உண்டு. அவற்றுள் மிகுதியாகப் பயின்று வருவன உவமை அணியாகும் இந்நொண்டி நாடகத்துள் உவமையணி, சிலேடையணி, மடக்கணி, உருவக அணி ஆகிய அணிகள் பயின்றுவந்துள்ளன.

உவமைகள்

இந்நூலில், பாமர மக்களின் பேச்சு வழக்கிலுள்ள உவமைச் சொற்களும் அமைந்து வருகின்றன. 'வல்ல புற்றிலே கரடி புற்றாஞ்சோறு வாங்கினது போல்' (பா.247), 'உழுந்தாட்டுங் கழுந்துபோல்' (பா.28.13), 'எதிரிடும் புலிபோல்' (பா 28.14), 'பொன் காச்ச மரம்போல்' (பா.30.3), 'சிட்டுப்

பறந்தாற்போல்' (பா.30.13), 'அஞ்சக்காரன் போல்' (பா 30.15), 'வானி ஆத்தில் கரைத்த புளிபோல்' (பா 34.3), 'ரதியும் மதனும் போல்' (பா 39.16) என்பன போன்ற உவமைகள் மட்டுமன்றி இலக்கிய வழக்கு உவமைகளும் இடம்பெற்றுள்ளன

'காரைப் பழித்த குழல் மின்னாள்' (பா 18.8), 'வள்ளைக்குழை நாவி எட்டூ '(பா.18.9), 'மாயவிழிமீன்' (பா 18.9), 'முருக்கமலர் இதழ்' (பா.18.9), 'கொங்கை ரெண்டுந் தங்கக் கும்பம்' (பா 18.10), 'வயிறோ மாலழகர் பள்ளி கொண்ட ஆலிலை' (பா 18.14), 'சிங்கத்திடை' (பா 18.14), 'அல்குல் அரசிலை' (பா.18.14), 'கதலிக் கம்பத்துடை' (பா 18.15) 'அடி கூர்மம்' (பா.18.15) என இந்நூலில் உவமைகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

மடக்கணி

ஒரு பாடலில் அடிதோறும் வந்தத் தொடரே மீண்டும் மீண்டும் வந்து வேறுவேறு பொருள் தந்தால் அது மடக்கணி எனப்படும். இந்நூலில் பயின்றுவந்துள்ள மடக்கணிப் பாடலுக்குச் சான்று:

"மாசங்க பாணியன் தந்தான் பிதாவின் மருகனென்று
மாசங்க மொத்த தென்னருள் மாமலை வள்ளல்தந்தை
மாசங்க மேசுரன் மால்வா னியூரில் வல்லிபங்கில்
மாசங்க மாயிருந் தேன்மருந் தானதை வைத்தனளே" (பா 23)

இப்பாடலில் 'மாசங்கம்' எனும் சொல் நான்கு முறை வந்துள்ளது. இச்சொல் சங்கு, சங்கநிதி, சங்கமேசுரன், விருப்பம் ஆகிய நான்கு பொருள்களில் வந்து நயம் பயப்பதாக அமைகிறது.

இவ்வாறு இந்நூல் பல்வேறு இலக்கிய நயங்களைப் பெற்றுக் காணப்படுகிறது. இலக்கிய நயங்கள் மட்டுமன்றி சாதாரண மக்களின் மத்தியில் உலவுகின்ற பேச்சுமொழிகள், பழமொழிகள் மற்றும் அவர்களிடம் நிலவி வருகின்ற நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், புராணக்கதைகள் ஆகியவற்றையும் இந்நூலாசிரியர் எடுத்தாண்டிருப்பது அவர்தம் உலகியல் அறிவைப் புலப்படுத்துவதாக அமைகின்றது.

பேச்சுமொழிச் சொற்கள்

இந்நூலில் சிந்து வகையில் அமைந்த பாடல்கள் அனைத்தும் பேச்சுமொழிச் சொற்களையே மிகுதியாகக் கொண்டுள்ளன. '**பூந்தேன்** மனைதனில்' (பா 12.16) 'நானுங் **கெலித்தேனே**' (பா.12.23) 'எந்தவீடு **எந்தவண்டை**' (பா.16.7) என்னும் சொற்களும்,

"கட்டியதைத் தோளில்போட்டேன் - உக்கிராணக்
காரன்முகத் திலேநான் காறியுமிழ்ந்தேன்
பொட்டெனவே வெளியில் வந்தேன் - இந்தமட்டும்
போதுமென்று நானுமொரு காதம்நடந்தேன்" (பா.16.17)

எனும் பாடலடிகளும் இதற்குச் சான்றாக அமைகின்றன.

பழமொழிகள்

மக்களின் அன்றாட வாழ்க்கையில் பழமொழிகள் பெரும் அளவில் பங்குகொண்டு வந்துள்ளன. இது குறுகிய சொற்களாலாகி, எளிதில் பொருளைப் புரியவைக்கவும், புரிந்ததை மனதில் பதியவைக்கவும் பயன்படுகிறது. நூலில் வரப்பெறும் கதைமாந்தர்களின் செயல்களையும் சிறப்பினையும் உயர்த்த இவை பயன்படுத்தப்பெற்றுள்ளன. இவ்வகையில் இந்நூலாசிரியர், இந்நூலில் இடம்பெறும் கதைப்பாத்திரங்களின் வழி பழமொழியினை வெளிப்படுத்துகின்றார்.

'ஆசைகொண்ட பேர்க்கு ரோசம் உண்டோ' (பா.32.6)
'ஆற்றிலொரு காலும் சேற்றிலொரு காலும்' (பா.32.3
'கேடு வரும்போது மதி கெட்டுவரும்' (பா.34.12)
'பழம் நழுவியே பாலில் வீழ்ந்தபடி' (பா 20.13)
'பொறுத்தார் அரசாள்வார்' (பா.32.5)
'வட்டவாசிக்கி மாவிடிக்கவே ராசிக்கம்பு சேதம்' (பா.34.4)

என வரும் பழமொழிகளைத் தக்க இடங்களில் பயன்படுத்தியிருப்பது ஆசிரியரின் உலகியல் அறிவைக்காட்டுகிறது

நம்பிக்கைகள்

பழங்காலந்தொட்டு இன்று வரை மக்கள் சகுனங்களில் நம்பிக்கை வைத்திருப்பது கண்கூடு அதேபோன்று இந்நூலாசிரியரும் தம் நூலில் சகுனம், விதி ஆகியவற்றில் மக்களுக்குள்ள நம்பிக்கைகளை காட்டியுள்ளார்.

'வலது புறத்துக்கெவுளி தெட்சண வாக்கருள்வாய்' (பா.10.8), 'வலத்தில் இருந்த கடான் இடத்திலேற' (பா.12.1), 'போத்து வலமானது' (பா.12.2), 'கெருடன் இடமாக' (பா 12.3), 'சயனம் பார்க்கையிலே' (பா.12.3) ஆகிய சொற்கள் யாவும் நற்சகுனங்களைக் குறிப்பதாக வருகின்றன

'போத்து இடத்தினிலேற' (பா.34.10), 'ஒற்றைப்பார்ப்பான் குறுக்கே வருதல்' (பா.34.10), 'ஆந்தை ஒற்றைச்சத்தம்' (பா 34.11), 'கொடி யிடமாதல் (காகம்) (பா.34.11), 'நாவிதன் வருதல்' (பா.34.11) ஆகியன தீச்சகுனங்களாக இந்நூலில் அமைந்துள்ளன.

விதி

மக்களை நல்வழிப்படுத்தி அறநெறியில் வாழ்வதற்கு அவர்களால் உருவாக்கப்பட்டவை கடவுள், சமயம், விதி ஆகிய நம்பிக்கைகள் ஆகும். 'விதி' என்பது அவர்களின் வாழ்வில் தினமும் இழையோடுகின்ற ஒரு சொல் ஆகும். இச்சொல்லைப் புலவர் பெருமக்கள் தாங்கள் படைக்கும் நூல்களில் கொண்டுவந்து மக்களிடம் அதை திரும்பவும் வைக்கின்றனர். அவ்வகையில் இந்நூலாசிரியர், நொண்டி என்னும் கதைப்பாத்திரத்தின் மூலம் இதனை அறிவுறுத்துகின்றார்.

விதியின் வலிமையினை,

"மதியினால் வாழ்வாருண்டோ வையகந் தன்னிலேதான்
விதிதனை வெல்லப்போமோ" (பா 37)
'விதிவல் வினையால் விலக்கமாட்டார்கள்' (பா.38.83)

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன

பொதுவாகச் செய்த குற்றத்தை எண்ணி, மனம் வருந்தும்போதே மனிதன் மன்னிப்பைப் பெற்றுவிடுகிறான். என்றாலும், இந்நொண்டி நாடக நூலில் வரப்பெறும் நொண்டி பகலெத்தி, தான் தாழ்நிலைக்கு வரக் காரணம், முன்பு தான் செய்த தீவினைகளே என எண்ணி மனம் வருந்தி, அருள்மலை முருகனை வேண்ட அருள் கிடைக்கிறது. இதனால் ஆசிரியர் மக்களுக்கு இறை நம்பிக்கையை உணர்த்துகின்றார்.

புராணச் செய்திகள்

சிற்றிலக்கியங்களில் புராணக்கதைகளின் தாக்கம் மிகுதியாக இடம் பெறுவதைக் காணமுடிகிறது. அவ்வகையில் இந்நொண்டி நாடகநூலிலும் புராணச்செய்திகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. சில சான்றுகள்:

இந்நூலாசிரியர், முருகபெருமானின் பெருமையை, 'அயனைக் குட்டிச்சிறைதன்னில் வைத்துச் சிஷ்டித்த சிங்காரன்' (பா.6.1), 'நக்கீரர் சிறைமீட்ட உக்கிர வசீரன்' (பா.6.2), 'தென்னவன்கூன் சுரந்தீர்த்த புண்ணிய தயாளன்' (பா.6.3), 'பச்சைமயில் பரியேறும் உச்சித வசீரன்' (பா.6.6) என்றும், நொண்டி தாசியிடம் பொருளை இழந்து தவிக்குமிடத்தில் அவனது கூற்றாக, 'வாலியொரு பெண்ணால் இறந்தான்' (பா.34.7), 'சீலமுடி ராவணனும் அன்று சீதையாலிறந்தான்' (பா.34.7), 'கீசகன் பெண்ணால் இறந்தான்' (பா.34.8), 'இரணியனை நகத்தில் அரிவகுந்தான்' (பா.36.12), 'வேலன் வேங்கை மரமாதல்' (பா.36.9), 'தேவேந்திரன் தனக்காயிரங்கண் தேகமெல்லாம்' (பா.36.10) எனவும் புராணச்செய்திகளைத் தக்க இடங்களில் எடுத்தாளுகின்ற திறன் சிறப்பிற்குரியதாகின்றது.

இந்நூலில் அறியவரும் பிறசெய்திகள்

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகநூலிலுள்ள சில பாடலடிகளின் மூலம் கொங்குநாட்டின் அக்கால அரசியல் சூழ்நிலைகளும், அந்நாட்டுச் சமூகத்தாரின் அறச்செயல்கள் மற்றும் பழக்கவழக்கங்களும் அறியப்படுகின்றன. மேலும் இந்நூல், அக்காலத்தில் நாடகமாக மக்களிடையே நடிக்கப்பெற்று வழங்கி வந்தமையையும் அறியமுடிகின்றது.

அக்கால அரசியல் சூழ்நிலை

இந்நொண்டி நாடகம் எழுந்த காலமான பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி, தமிழகமானது மதுரை, செஞ்சி, தஞ்சாவூர் ஆகிய மூன்று பெரிய சமஸ்தான அரசுகளை உடையதாக விளங்கிவந்துள்ளது. தமிழகத்தில் கொங்குநாடு மட்டும் மைசூர் சமஸ்தானத்துடன் இருந்துவந்துள்ளது ஆக இந்நான்கு சமஸ்தானங்களும் அக்காலத்தில் சிறப்புற்றிருந்தமையை இந்நூலாசிரியர், நொண்டி தன்குலப்பெருமையைக் கூறுமிடத்து கூறுகின்றார்

“தேவர்சூழ் மதுரையில் ஒருத்தன் - நல்ல
செஞ்சியில் ஒருத்தன் தஞ்சாவூரினில் ஒருத்தன்
நாவலர்புகழ் மைசூருக் கொருத்தன் - இந்த
நாலுசமஸ் தானம்மெய்க்க நானும்திங்க ளூரான்” (பா.8.9)

மேற்கூறிய காலகட்டத்தில் ஆங்கிலேயர்கள், மதுரையைக் கைப்பற்றி முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி மன்னரிடமும், தஞ்சாவூரைக் கைப்பற்றி துளசா, அமர்சிங் ஆகியோரிடமும் ஒப்புவித்து கப்பம் பெற்று வரலாயினர். கி.பி.1761இல் செஞ்சியைக் கைப்பற்றித் தங்களின் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டனர்.

    கூத்தாடக் ஙகயிலொரு மாத்திரைக்கோல் தெண்டு
[3]வல்லாள கண்டனென் தகப்பன் - ஆர்க்கும்
    வலுத்தவன்கள் ளமறவர் குலத்தினில் உதித்தோன் 2

மாயப்பூனைப் புலித்தேவன் தம்பி - சின்னான்
    மறவன்வள வில்நாங்கள் உறவுகொண் டாடிக்
காயக்கமும் கற்றசின்னாத் தேவன் - தந்த
    [4]கன்னியைக் கலியாணம் பண்ணியே கொடுத்தார் 3

[5]மாமதுரைப் பட்டணத்தில் நாங்கள் - குடி
    வந்துஇனி ஐந்துதலை [6]முறையாய் இருந்தோம்
நாமும்மனை யாளுடன்சீ ராடி - [7]குறுப்பு
    நாட்டுக்குள் ளேவெகு நோட்டமாய்வந் தேனே 4

கல்லுருகும் மந்திரமுங் [8]கற்றுத் - திருட்டுக்
    கள்ளவண்ட சேர்வையில்வல் லோனென்றுபே ரெடுத்தேன்
உல்லாச மாகவுமே இன்று - எனக்கு
    உடன்பிறப் [9]பானவர்கள் நாலுபேர்கள் உண்டு 5

[10]வல்லாண்மை யாகவுமே தண்டு - முண்டு
    வார்த்தைத்த சுக்கனென்று மூத்தவன்பேர் உண்டு
செல்லாப்பணத் தையெல்லாங் கொண்டு - வந்து
    செலுத்துங் [11]கேப்பமாரியென் றொருத்தன்பேர் உண்டு 6

ராவெத்தி பகலெத்தி என்பேர் - எனக்கு
    நடுவலவன் பேர்கரட கனவன் பேராம்
மாவெத்தி என்றொருத்தன் பேராம் - இந்த
    மாயவித்தை யாலேதந்தை தாயும்வைத்த பேராம் 7

[12]தேவர்சூழ் மதுரையில் ஒருத்தன் - நல்ல
    செஞ்சியில் ஒருத்தன் தஞ்சாவூரினில் ஒருத்தன்
நாவலர்புகழ் [13]மைசூருக் கொருத்தன் - இந்த
    நாலுசமஸ் தானம்மெய்க்க நானும்திங்க ளூரான் 8

நாட்டிலுள்ள நொண்டியர்க்கு மிண்டன் - வெகு
    நலத்துடன் திருட்டுக்குப் பெலத்தகோ தண்டன்

சூட்டும்கவி நாவலர்க்குத் தொண்டன் - வெகு
துஷ்டலரை வெட்டிவிரு திட்டபிர சண்டன் 9

(நூலாசிரியர் பெயர்)

செங்குந்தர் குலத்தில்அவி [14]நாசி - சொன்ன
செந்தமிழைப் பாடியாடச் சந்தனமும் பூசி
தங்கமுர்த [15]வல்லியொரு தாசி - [16]வீட்டுத்
[17]தண்டுமுண்டுக் காரருக்கு நொண்டுநுளை பேசி 10

பாதாள அஞ்சனமும் கற்றேன் - [18]மாயப்
பறவைஅஞ் சனத்தையும் திறமையாய்ப் படித்தேன்
வேதாளந் தன்னையும்வெல் வேனே - வெகு
விசையுடன் [19]கூத்தாடக் கச்சைகட்டி னேனே. 11

- தானத் தந்தானத் தந்தந் தானா -

வீரதண்டை - வீரத்துக்கு அறிகுறியாகக் காலில் அணியும் அணிவகை காங்குச்சல்லடம் - இடுப்பினின்று அடித்தொடைவரைத் தரிக்கும் கால்சட்டை அங்கிராக்கு - நீண்ட சட்டை குல்லா - தொப்பி மாத்திரைக்கோல் - மந்திரக்கோல் தெண்டு - தண்டு - கோல். வல்லாளன் - வலிமையானவன். புலித்தேவன் - மறவர் குலத்தலைவர். சின்னான் மறவன், சின்னாத்தேவன் - புலித்தேவனின் தம்பி. வளவை - வீடு காயக்கம் - மோக மயக்கம் மனையாள் - மனைவி குறுப்புநாடு - கொங்கு நாட்டின் 24 நாடுகளில் ஒன்று நோட்டம்- தகுதி கள்ளவண்ட சேர்வை - கள்ளர்களின் கூட்டம் வல்லோன் - திறமையோன் நாலு - நான்கு என்பதன் குறைச்சொல் தண்டுமுண்டு - மூர்க்கத்தனம் தசுக்கன் - ஒருவனின் பெயர் கேப்பமாரி - அயோக்கியன், ஒருவனின் பெயர். ராவெத்தி பகலெத்தி- இரவிலும் பகலிலும் ஏமாற்றித் திருடுபவன், இந்நூலில் வரும் நொண்டியின் பெயர் கரடகன் - தந்திரி, ஒருவனின் பெயர். மாவெத்தி - பெரிய ஏமாற்றுக்காரன், ஒருவனின் பெயர் நாலு சமஸ்தானம் - நான்கு இராஜ்ஜியங்கள், அவை மதுரை, செஞ்சி, தஞ்சாவூர், மைசூர் திங்களூரான் - திங்களூரைச் சார்ந்தவன் நொண்டி- முடமானவன். மிண்டன்- திண்ணியோன் பெலத்த - பலத்த -வலிமையான. துஷ்டலர்- கொடுமையானவர், கெட்டவர் பிரசண்டன் - திறமையாளன் செங்குந்தர் குலம் - கைக்கோளர் இனம், சாதி அவிநாசி - இந்நூலாசிரியரின் பெயர் தங்கமுர்தவல்லி - தாசியின் பெயர் நொண்டுநுளை - இழிவான செயல் பாதாள அஞ்சனம் - பாதாளவஞ்சனம் - அஞ்சனம் மூன்றனுள் மறைபொருளைக் காண உதவுவது. வேதாளம்- பேய், பிசாசு. விசை - வேகம், வெற்றி

சுவடிச்சொல் - 2 நொண்டுக் 3 வள்ளாள 5 மாதுரப்

பாடவேறுபாடு - 1. அங்குறாக்குத் 4 கன்னிகைக் 6 முறையாக 7 குருப்பு 8. கற்றேன் 9 பானபேர்கள் 10. வல்லாமை 11 கப்பமாரி 12. தேவர்சூழும் 13

மயிலைக் 14 னாசி 15. வல்லியென்றொரு 16. வீட்டில் 17. தண்டு மிண்டுக் காரருக்கு நொண்டு நொணைப்பேசி. 18 நல்ல 19. கூத்தாடத் துசங்கட்டினேனே

(Pakaletti taṉ kulapperumai kūṟutal)

Taru

kālukku vīrataṇṭai pūṭṭi - noṇṭi
kāṅkuccal laṭantoṭṭuk kaccaikaṭṭi ṉēṉē
mēlukku aṅkirākkut toṭṭu - nalla
veṟṟipeṟa neṟṟiyilkas tūrippoṭṭu miṭṭu

kullāvai yumtarittuk koṇṭu - noṇṭi
kūttāṭak kaiyiloru māttiraikkōl teṇṭu
vallāḷa kaṇṭaṉeṉ takappaṉ - ārkkum
valuttavaṉ kaḷḷamaṟavar kulattiṉil utittōṉ
māyappūṉaip pulittēvaṉ tampi - ciṉṉāṉ
maṟavaṉvaḷa vilnāṅkaḷ uṟavukoṉ ṭāṭik
kāyakkamum kaṟṟaciṉṉāt tēvaṉ - tanta
kaṉṉiyaik kaliyāṇam paṇṇiyē koṭuttār

māmaturaip paṭṭaṇattil nāṅkaḷ - kuṭi
vantuiṉi aintutalai muṟaiyāy iruntōm
nāmummaṉai yāḷuṭaṉcī rāṭi - kuṟuppu
nāṭṭukkuḷ lēveku nōṭṭamāyvaṉ tēṉē

kallurukum mantiramuṅ kaṟṟut - tiruṭṭuk
kaḷḷavaṇṭa cērvaiyil vallōṉeṉṟu pēreṭuttēṉ
ullāca mākavumē iṉṟu - eṉakku
uṭaṉpiṟap pāṉavarkaḷ nālupērkaḷ uṇṭu

vallāṇmai yākavumē taṇṭu - muṇṭu
vārttaitta cukkaṉeṉṟu mūttavaṉpēr uṇṭu
cellāppaṇat taiyellāṅ koṇṭu - vantu
celuttuṅ kēppamāriyeṉ ṟoruttaṉpēr uṇṭu

rāvetti pakaletti eṉpēr - eṉakku
naṭuvalavaṉ pērkaraṭa kaṉavaṉ pērām
māvetti eṉṟoruttaṉ pērām - inta
māyavittai yālētantai tāyumvaitta pērām

tēvarcūḻ maturaiyil oruttaṉ -nalla
ceñciyil oruttaṉ tañcāvūriṉil oruttaṉ
nāvalarpukaḻ maicūruk koruttaṉ - inta
nālucamaṣ tāṉammeykka nāṉumtiṅka ḷūrāṉ

nāṭṭiluḷḷa noṇṭiyarkku miṉṭaṉ - veku
nalattuṭaṉ tiruṭṭukkup pelattakō taṇṭaṉ
cūṭṭumkavi nāvalarkkut toṇṭaṉ - veku
tuṣṭalarai veṭṭiviru tiṭṭapira caṇṭaṉ

(Nūlāciriyar peyar)

ceṅkuntar kulattilavi nāci - coṉṉa
centamiḻaip pāṭiyāṭac cantaṉamum pūci
taṅkamurta valliyoru tāci - viṭṭut
taṇṭumuṇṭuk kārarukku noṇṭunuḷai pēci

pātāḷa añcaṉamum kaṟṟēṉ - māyap
paṟavaiañ caṉattaiyum tiṟamaiyāyp paṭittēṉ
vētāḷan taṉṉaiyumvel vēṉē - veku
vicaiyuṭaṉ kūttāṭak kaccaikaṭṭi ṉēṉē.

Pakaletti sings his family's praise

- Tāṉat tantāṉat tantan tāṉā

8. A hero's anklet around my leg
A coloured pair of drawers tied with a sash,
A shirt with long sleeve above,
I come; with a round dot of fragrant musk,
On my forehead for success worn,
And withal a cap on my head,
A wand in my hand, for dancing I come!
My father mighty Kantaṉ was born
In Kaḷḷamaṟava clan related to Ciṉṉāttēvaṉ
Younger brother of the wily cat, Pulittēvaṉ,
Well-versed he was, learned in *Kāyakalpam*[6];
Married to a maiden, he lived in great Maturai City
For generations five in prosperity!

And I, quarrelling with my wife came away from there
And went to Kuṟuppu region.
I learnt magic that can melt even rock
And among the gang of thieves, I became a name
In the profession of stealing!
Happily I had brothers four;
Bold and strong and fierce, was the eldest
Called Tacukkaṉ; Kēppamāri, the next one
Was an adept in passing counterfiet coins;
The next by name Karaṭakaṉ was the third;
I known as Rāvetti-Pakaletti,
(Well able to steal by night or day!)
Was the fourth. The last one was called Māvetti,
(The great cheat): these were the names
Given by our father and mother to us!
One of us worked in Maturai, city of the Gods;
One in Ceñci; One in Tañcāvūr;
One in Mysore, sung by scholars:
Thus these four, flourished in the four royal states.
And I myself, to Tiṅkaḷūr belong;
Mightiest I am among the lame ones in the land,
And strongest among the thieves in ability to steal:
Servitor I am, to the poets and bards,
And known for my ability to cut down knaves.

The author's name

In the weaver's caste, was born the poet of this piece,
Avināci by name, who indited this verse
In goodly Tamil sweet.
From an obstinate inmate of the house,
Of a certain whore by name Taṅkamirtavalli,
By base strategem I learnt the black art
Of mesmerising others with help of dark unguents

Wherewith to enslave victims; and also
Bird-magic with which to vanquish even a Vētāḷ;
Thus armed, I got ready to sing
And dance this piece in rapid motion;
Tying my sash round the waist
For unimpeded measures swift!

- Tāṉat tantāṉat tantantāṉā

6. Kāyakalpam - elixir for prolonging life.

(பகலெத்தி இறைவனை வணங்கி வேண்டுதல்)

விருத்தம்

9. அதிமதுர வாக்கியஞ்சொல் கவிஞோர் போற்றும்
அருள்மலைவே லாயுதனை அன்பாய்ப் போற்றி
[1]மதிநதிவெண் சடைமுடியான் சந்திர நாதன்
மலரடியை அனுதினமும் மறவா தேற்றி
விதுரன்கைச் சிலையொடித்த அழகன் மாயன்
[2]மேவுபொற்ப தாம்புயத்தை விரும்பி வேண்டிச்
சதிகளவு செய்யவுங்கொண் டத்துக் காளி
சந்நிதியில் வரங்கேட்கத் தான்வந் தேனே.

அதிமதுரம் - மிக இனிமையான வாக்கியம் - சொல் அருள்மலை வேலாயுதன்- அருள்மலையில் வீற்றிருக்கும் முருகன் மதிநதிவெண் சடைமுடியான் - குளிர்ச்சி பொருந்திய நிலவையும் கங்கை நதியையும் சடையில் அணிந்தவன், சிவன். சந்திரநாதன் - சந்திரனைத் தலையில் அணிந்தவன், சிவன் அனுதினம் - தினந்தினம். ஏற்றி - வணங்கி, போற்றி விதுரன் - திருதராட்டிரன், பாண்டு இவர்கட்குத் தம்பி கைச்சிலை- கையிலுள்ள வில் - அழகன் மாயன் - அழகிய திருமால். மேவு - விரும்பு, பொருந்து. பொற்பதாம் புயம் - பொன்னாலாகிய பாதம். சதிகளவு - வஞ்சித்துத் திருடுதல் கொண்டத்துக்காளி - திங்களூரில் எழுந்தருளியிருக்கும் காளியம்மன். சந்நிதி- ஆலயம். வரம் - பேறு, அனுக்கிரகம்

பாடவேறுபாடு - 1 மதிநதிசூழ் 2 மிக்கபொற் பாதம்

(Pakaletti iṟaivaṉai vaṇaṅki vēṇṭutal)

Viruttam

atimatura vākkiyañcol kaviñōr pōṟṟum
aruḷmalaivē layutaṉai aṉpāyp pōṟṟi

matinativeṉ caṭaimuṭiyāṉ cantira nātaṉ
malaraṭiyai aṉutiṉamum maṟavā tēṟri
viturankaic cilaiyoṭitta aḻakaṉ māyaṉ
mēvupoṟpa tāmpuyattai virumpi vēṇṭic
catikaḷavu ceyyavuṅkoṇ ṭattuk kāḷi
cannitiyil varaṅkēṭkat tāṉvan tēṉē.

Pakaletti Prays to God for His Grace

9. Lovingly adoring Lord Vēlāyutha
Enshrined in Aruḷmalai, sung by sweet-tongued bards,
Never forgetting even for a day
To praise the flowery feet of the Lord
Who wears on his white matted locks
The cool moon and the river,
Yearning for the Lotus-feet golden
Of the lovely Lord Tirumāl,
Who did break the bow of Vitura,
I have come here to the shrine
Of Koṇṭattukkāḷi of Tiṅkaḷūr,
That my enterprise of thieving
And cheating, may prosper!

(காளியை வணங்கி வரம் கேட்டல்)

தரு

– தனத்தன்ன தன்னா – தானத்
தந்தானனா தந்தானனா –

10. காளி கரகபாலி கிருபை - அருள்
கங்காளியே [1]வரு பொன்காளியே
ஆழி சூழ்உல கேழும் - [2]போற்றிய
அந்தரியே சிவ சுந்தரியே 1

[3]நாரண கௌமாரி - கொண்டத்து
நாயகியே நல்ல தாயகியே
[4]பூரண கலைவாணி - [5]நல்லவெண்
பூதத்தியே விந்து நாதத்தியே 2

ஆறாதா ரப்பொருளே - அருள்சிம்
மாசனத்தி புலி யாசனத்தி
நாராயணி பரையே - அரனிட
நங்கச்சியே மாயன் தங்கச்சியே 3

காரணி திரிசூலி - அருள்
கருணா கரியே கிருபாகரியே
தோரண வாவிநகர் - அருள்மலை
துலங்கு கருணை அலங்காரி 4

முத்தித் திருவருளே - அருளிய
மோனத்தியே சிவ ஞானத்தியே
பத்திப் பராசத்தியே - தன
பாரத்தியே கிரு பாசத்தியே 5

பாலும் பழம்போலே - திருட்டுப்
பலித்தே நானுங் கெலித்தாலே
நாலில் ஒருபங்கு - உனக்கு
நான்தரு வேனே புராந்தகியே 6

என்றே உபசாரம் - [6]சொல்லி
எண்டிசை நோக்கியே [7] தெண்டனிடவே
இன்றே எனக்குவரம் - கைக்குமுன்
ஏற்கைய தாகவே [8]கேட்குமுன்னே 7

[9]கலகலென் றுத்திரமுஞ் - சொன்னது
கண்டேனம்மா கலி விண்டேனம்மா
வலதுபுறத் [10]துக்கெவுளி - தெட்சண
வாக்கருள்வாய் என்று கேட்குமுன்னே 8

(பகலெத்தி தன் வல்லமையைக் கூறுதல்)

வாய்மேல டித்தாற்போல் - சொன்ன
மாத்திரமே வழி பார்த்தேனய்யா
மாயப்பொடி யெடுத்தேன் - சொக்குப்பொடி
மந்திரமுங் கள்ளத் தந்திரமும் 9

நீர்மேல் நடந்திடுவேன் - நட்டாத்தில்
நீச்சலிலே வெகு பாச்சனய்யா
ஆர்தான் எனக்குநிகர் - [11]ஆனையை
[12]அம்மானை ஆடுவேன் சும்மாவல்ல 10

[13]மானத்தை வில்லாக - எனக்கு
வளைக்கிற தொழிலது பழக்கமய்யா
[14]வானுற்ற மணல்தன்னைக் - கையில்
வருத்தமில்லா மல்கயிறு திரித்திடுவேன் 11

பந்தயப் பேச்சாலே - கணத்தில்
பறக்கவே நான்வெகு சுருக்கனய்யா
சந்தோஷ மாச்சுதென்று - துடையைத்
தட்டியே முத்த மிட்டேனே. 12

- தந்தானத் தானதனனா -

கிருபை - கருணை கங்காளி - மாகாளி, பார்வதி ஆழி - கடல். ஏழுலகம் - ஏழுலகங்கள் நாரண - நாரணி - துர்க்கை கௌமாரி - சத்த மாதர்களில் ஒருத்தி, பார்வதி. கொண்டத்து நாயகி - திங்களூரில் எழுந்தருளியிருக்கும் காளியம்மன் தாயகி - கொடையாளி பூரண - பூரணம், நிறைவு, முழுமை கலைவாணி - சரசுவதி வெண்பூதத்தி- பூதநாயகி - உமையம்மை ஆறாதாரம் - சடாதாரம்- ஆறு ஆதாரங்கள், அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பனவாம். சிம்மாசனத்தி- சிங்க ஆசனத்தில் வீற்றிருப்பவள், சக்தி புலியாசனத்தி - புலியாசனத்தில் வீற்றிருப்பவள், சக்தி நாராயணி - சத்தமாதர்களுள் ஒருத்தி, துர்க்கை பரை - பார்வதி. அரன் - சிவன். நங்கச்சி - மனைவி மாயன் - திருமால் தங்கச்சி - தங்கை என்பதன் கொச்சைச் சொல் தோரணவாவி - ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் திங்களூருக்கும் அருள்மலைக்கும் இடையில் உள்ள ஊர். அருள்மலை -. திங்களூர் மற்றும் தோரணவாவிக்கருகில் உள்ள மலை, முருகன் தலம் துலங்கு - பிரகாசி. முத்தி - மோட்சம். மோனம் - மௌனம் சிவஞானம் - தெய்வஞானம். பராசக்தி - பஞ்ச சத்தியில் ஒன்று, அவை இச்சாசத்தி, கிரியாசத்தி, சிற்சத்தி, ஞானசத்தி, பராசத்தி என்பனவாம் தனபாரம் - கொங்கை. கிருபாசத்தி - கிருபையுடைய பார்வதி திருட்டு- களவு. பலித்தே - பலித்தல் - வாய்த்தல். கெலித்தாலே - வெற்றிபெற்றாலே நாலில் - நான்கில், நான்கு என்பதன் வழக்குச்சொல். புராந்தகி - உமையாள். உபசாரம் - வழிபாடு, வாழ்த்து. எண்டிசை- எண்திசை - எட்டுத்திசைகள் தெண்டனிட - வணக்கமிட கைக்கு - உடனே, சடுதி. ஏற்கை - அங்கீகாரம், இணங்குகை. உத்திரம் - உத்தரம் - மறுமொழி கலி - சனி, வறுமை. விண்டு - அகலுதல் கெவுளி - கவுளி - பல்லி. தெட்சணம் - தெற்கு, வலப்பக்கம். நட்டாத்தில் - நட்டாற்றில் - நடுஆற்றில் நீச்சல் - ஆழம், நீந்துதல். பாச்சன்- பாய்தலில்நான் ஆர்தான்- யார்தான். ஆனை - யானை. மானம் - வானம் - ஆகாயம். கயிறு - வடம். பந்தயப்பேச்சு- போட்டிக்காக ஏற்படுத்தப்படும் பேச்சு. கணத்தில் - நொடிப்பொழுதில்.

பாடவேறுபாடு - 1 வளர் 2. போற்றும் 3. நாரணி கெவுமாரி 4.பூரணி கலவேணி 5.வெகுகண 6. சொல்லியே 7. தெண்டனிட்டு 8. கேட்கையிலே 9 கலகலவென் 10. துக்கெளளி 11 யானையை 12. அம்மாலை போடுவேன் 13 வானத்தை 14. கானுற்ற.

(kāḷiyai vaṇaṅki varam kēṭṭal)

Taru

kāḷi karakapāli kirupai - aruḷ
kaṅkāḷiyē varu poṉkāḷiyē
āḻi cūḻulā kēḻum - pōṟṟiya
antariyē civa cuntariyē

nārana kaumāri - koṇṭattu
nāyakiyē nalla tāyakiyē
pūraṇa kalaivāṇi - nallaveṉ
pūtattiyē vintu nātattiyē

āṟātā rapporuḷē - aruḷcim
mācaṉatti puli yācaṉatti
nārāyaṇi paraiyē - araṉita
naṅkacciyē māyaṉ taṅkacciyē

kāraṇi tiricūli - aruḷ
karuṇā kariyē kirupākariyē
tōraṇa vāvinakar - aruḷmalai
:ulaṅku karuṇai alaṅkāri

muttit tiruvaruḷē - aruḷiya
mōṉattiyē civa ñāṉɛttiyē
pattip parācattiyē - taṉa
pārāttiyē kiru pācattiyē

pālum paḻampōlē - tiruṭṭup
palittē nāṉuṅ kelittālē
nālil orupaṅku - uṉakku
nāṉtaru vēṉē purāntakiyē

eṉṟē upacāram - colli
eṇticai nōkkiyē teṇṭaṉitavē

inrē enakkuvaram - kaikkumun
ērkaiya tākavē kēṭkumunnē

kalakalen ruttıramuñ - connatu
kaṇṭēnammā kali vinṭēnammā
valatupurat tukkevuḷi - teṭcaṇa
vākkaruḷvāy enru kēṭkumunnē

(Pakaletti tan vallamaiyaik kūrutal)

vāymēla ṭittārpōl - conna
māttiramē vaḷi pārttēnayyā
māyappoṭi yeṭuttēn - cokkuppoṭi
mantıramuṅ kaḷḷat tantiramum

nīrmēl naṭantiṭuvēn - naṭṭāttil
nīccalilē veku pāccanayyā
ārtān enakkunikar - ānaiyaı
ammānai āṭuvēn cummāvalla

mānattai villāka - enakku
vaḷaikkira toḷilatu paḷakkamayyā
vānurra manaltannaik - kaiyil
varuttamillā malkayiru tirittiṭuvēn
pantayap pēccālē - kaṇattil
parakkavē nānveku curukkanayyā
cantōṣa māccutenru - tuṭaiyait
tuṭṭiyē mutta miṭṭēnē.

- tantānat tānatananā

Prayer to Goddess Kāḷi for her boon

Tanattanna tannā - tānat
tantānanā tantānanā

10. Kāḷi, great Kāḷi with skull in hand
Who grants Grace! Golden Kāḷi! Antari,
Adored by all the sea-girt worlds!
Civacuntari! - Nāraṇi! Kaumāri!
Koṇṭattunāyaki! Benefactress great!

Goddess of learning perfect! Goddess Uma,
Sovereign of the elements! Embodiment of energy!
Essence primordial of sound!
Supreme Ens of Essence sextile!
Grace incarnate seated in the Lion-throne!
Goddess on the tiger-throne!
Nārāyaṇi! Goddess Pārvati! Harā's spouse!
Sister to Lord Tirumāl! O Primal cause!
Goddess with Trident, armed! Grant us grace,
O compassionate one! Gracious one!
Goddess radiant in Aruḷmalai
Beside Tōraṇavāvi, decked with blazing jewels!
Divine Grace, yielding Liberation!
Goddess of silence eloquent!
Giver of Civa-Consciousness! Parācakti
Inspiring devotion! Goddess of the bounteous breasts!
Goddess Cakti yielding grace!
If my plan to steal were to succeed
As smoothly as milk and honey,
A fourth part shall I offer you,
O Purāntaki! Thus when I honour you
With various names offering obeisance
In all directions eight, straight I hear
The lizard to my right does approve
With its clucking! Omen positive,
That my prayer is granted
Even before I asked! Her Grace I have seen!
Sure it is, my penury will pass!

Pakaletti speaks about His Prowess

Even as the accordant sound from the gecko
Came, in immediate response to my prayer,

I knew and saw my way ahead!
Took I my magic powder
And prepared myself for the work ahead:
You know, I can walk on water:
Many a magic spell, guile and wile I know!
I can swim rapidly in midriver!
Who is there my peer in this?
I can play with a tusker
As if it were a juggler's ball!
I don't say this as a boast!
I can bend the sky like a bow:
I am used to these tricks-
Standing in the air, without effort,
I can weave sand into a rope!
In competitive challenge I can fly in the sky;
In a trice I can do anything.
Thus happily I beat my thighs
In joy and kissed my hands.

Tantāṉat Tāṉa taṉaṉā.

(பகலெத்தி பண்டாரவேசம் பூணுதல்)

விருத்தம்

11. தண்டமிழ் விளங்கு கின்ற சந்திர புரத்தில் நின்று
குண்டலம் தரித்துக் கொண்டு குகனிரு பதத்தை வாழ்த்தி
பண்டுள கிழவன் போலே பண்டார [1]வேச மாறிக்
கொண்டுதான் [2]தெற்கு நோக்கிக் குறிப்புடன் புறப்பட் டேனே.

தண்டமிழ் - இனிய தமிழ் சந்திரபுரம் - திங்களூரின் மற்றொரு பெயர்; பழைய பெயர் குண்டலம் - காதணி தரித்தல் - அணிதல். குகன் - முருகன் பதம் - பாதம் - திருவடி. பண்டு - பழமை பண்டாரம் - சிவனடியான். வேசம் - வேடம் குறிப்பு - அடையாளம், விருப்பம்.

பாடவேறுபாடு *- 1. வேஷ மாகி 2. தெற்கே*

(Pakaletti paṇṭāravēcam pūṇutal)

Viruttam

taṇṭamiḻ viḷaṅku kiṉṟa cantira purattil niṉṟu
kuṇṭalam tarittuk koṇṭu kukaṉiru patattai vāḻtti
paṇṭuḷa kiḻavaṉ pōlē paṇṭāra vēca maṟik
koṇṭutāṉ teṟku nōkkik kiṟupputaṉ puṟappaṭ ṭēṉē.

Pakaletti dons a mendicant's garb

11. From Cantirapuram ringing with sweet Tamil speech,
Adorned with ear-rings
Disguised in the garb of an ancient,
A mendicant wearing saffron robes,
Southwards I wended my way with purpose set.

(பகலெத்தி சென்னிமலைக்கு வருதல்)

தரு

-தன்னத் தனதன்னா -

12 வருகிற வழிதனிலே - [1]சணத்தில்
வலத்திலி [2]ருந்தகடான் இடத்திலேற
திருவுளச் செயலெனவே - திருட்டுச்
சீக்கிர மாகவே வாய்க்குமென்றே 1

பின்னையும் நாலடிதான் - வருகையில்
போத்துவல மானதைப் பார்த்தனய்யா
என்னுட யோகமென்றே - [3]மனத்தில்
எண்ணிக்கொண் டேன்பூசை பண்ணிக்கொண்டேன் 2

கெருடன் இடமாகத் - துடைதட்டிக்
[4]கேக்கையிட்டுச் சயனம் பார்க்கையிலே
மறுபடி பால்குடமும் - வந்தது
வாச்சுது மத்தியானம் ஆச்சுதென்றேன் 3

[5]விசயா புரிகடந்தேன் - சென்னிமலை
வீதிகண்டேன் விபூதி கொண்டேன்
[6]புசமேல் தரித்துக்கொண்டேன் - [7]மெய்யில்
பூசிக்கொண் டேன்கையை வீசிக்கொண்டேன் 4

சங்குசே கண்டியுடன் - உத்திராட்சம்
    தரித்துக்கொண் டேன்மெல்லச் சிரித்துக்கொண்டேன்
செங்கையில் பிரம்பெடுத்தேன் - மார்பில்
    செச்சையுட னேலிங்கம் வைச்சுக்கொண்டேன் 5

பாத்திரம் மயிலிரட்டை - திருநீற்றுப்
    [8]பையும்பி ரம்புமொரு கையிலெடுத்தேன்
சூத்திரச் சாதியென்று - தெரியாமல்
    துலுக்கக்கன் னடப்பேச்சைப் பிலிக்கக்கொண்டேன் 6

பாதக் குறட்டுமேலே - [9]சுருக்கதாய்ப்
    படக்குப்படக் கென்றுநான் நடக்கையிலே
வீதியில் கண்டபேர்கள் - [10]காலில்
    வீழ்ந்தாரே சுற்றிச் சூழ்ந்தாரே 7

[11]கொடுத்தேன் திருநீற்றைக் - கைகட்டிக்
    கொண்டுகுனிந்து [12]மெல்லத் தெண்டனிடுவார்
படுப்பார் எழுந்திருப்பார் - திருநீற்றைப்
    பாங்குடனே [13]மெல்ல வாங்கிக்கொள்வார் 8

(சுப்பய்யன் அழைத்து விருந்திடுதல்)

[14]பார்ப்பார் அக்ராரத்திலே - வருகையில்
    பண்டாரம் தன்னைவந்து கண்டார்களே
கூப்பிடுவார் சிலபேர் -அவ்விடத்தில்
    குப்பய்யன் தம்பிசின்னச் சுப்பய்யனும் 9

[15]வீட்டுக்கு வாருமென்று - கூட்டிப்போய்
    விருந்துக்கு நீங்களும் இருங்களென்றே
கூட்டுக் [16]கறியுடனே - கத்தரிக்காய்
    குழம்புக் [17]கறியும்வெகு நலம்பெறவே 10

பதினெட்டுக் [18]காய்கறியும் - இலையில்
    படைத்தே அன்னமும் கொடுத்தானே
கெதிகெட்டுப் போனவன்போல் - இடையொன்று
    கேட்டேனே [19]இலையொன்று போட்டானே 11

உப்புத் திருமஞ்சனம் - [20]வர்க்கவகை
உள்ளதெல் [21]லாமினி அள்ளிவைத்தான்
வைப்பாய் வாழ்த்திக்கொண்டேன் - நானும்
வாய்ப்புடன் சாப்பிட்டு ஏப்பமிட்டுக் 12

கொண்டேன் அதன்பிறகு - [22]பார்ப்பான்
கொடுத்தஓர் அடைக்கிலை மடிக்கையிலே
உண்டவீட் டுக்குரண்டகம் - செய்கிற
துள்ளது நமக்கிது நல்லதென்றேன் 13

(விருந்திட்ட வீட்டில் பகலெத்தி திருடுதல்)

மாமறை தனைப்படித்த - சுப்பய்யன்
மனையாட்டி யும்வெகு பணிபூட்டி
நேமுக மாகவுமே - அவளிட
நித்திரைசோ தித்துரா வெத்தநினைத்தேன் 14

அர்த்தசா மந்[23]தன்னிலே - எனக்கு
அன்னமிட்ட வீட்டினில் கன்னமிடவே
நித்திரை தனைவெறுத்தேன் - கதவை
நெம்பிவைத் தேன்வெகு தெம்புவைத்தேன் 15

பூந்தேன் மனைதனிலே - [24]அவளுட
பொன்னுடைமை தனைக்கண்டு என்னுடைமைஎன்றேன்
ஆய்ந்தேன் உடைமைவகை - [25]அதுக்குநான்
அட்டவணை [26]எழுதினேன் சட்டமுடனே 16

கொந்தள ஓலைகளும் - சடைவில்லைக்
[27]குப்பியுட னேசரப் பணியும்
வந்திதோள் வந்தியுடன் - தங்க
[28]வளையல்சர வாவிலிக் குலைமுருகும் 17

அபரஞ்சி யாலிழைத்த - பதக்கத்தில்
ஆணிமுத் தைக்கண்டு திராணிவைத்தேன்
[29]சபரஞ் சிதமான -குடமணித்
தாவட மும்பவளத் தாவடமும் 18

பாடகம் கொலுசுதண்டை - கால்சரப்
பணியுடன்உத் தண்டரள மணியுடனே

சூடகம் கைக்கடயம் - தங்கச்
சுட்டியுட னேநல்ல அட்டிகையும் 19

பலபல பணிகளெல்லாம் - பதையாமல்
பறித்தே னேவெகு திறத்துடனே
கலைமகள் கவிதைவளர் - சுப்பய்யன்
கண்டைப் பாகுடன் முண்டாசையெடுத்தேன் 20

நித்திரை [30]செய்குமென்றேன் - உங்களுக்கு
நினைவான [31]போதிலென்னை நினையுமென்றேன்
அத்தனையும் பறித்தேனே - சாம்பலை
அடித்தேனே ஓட்ட மெடுத்தேனே 21

(பழனிமலைக்கு வருதல்)

வறுமைகள் தீர்ந்ததைய்யா - [32] சிவன்மலை
[33]வழியாக வேவெகு தெளிவுடனே
அறியாதான் போலே - காங்கயம்
அடுத்தே னேபதம் படித்தேனே 22

பாரோர் புகழுகின்ற - காடையூர்ப்
[34]பண்ணோது வார்புகழ் பொன்னூதியூர்
தாரா புரங்கடந்தேன் - பழனித்
[35]தலத்துக்கு வந்துநானுங் கெலித்தேனே. 23

- தன்னத் தன தன்னா -

சணத்தில் - சனப்பொழுது, நொடிநேரம் வலம் -வலப்பக்கம் கடான் - கடா- ஆடு, எருமை இவற்றின் ஆண். இடம் - இடப்பக்கம். திருவுளச்செயல் - கடவுள் சித்தம். வாய்க்கும் - கிடைக்கும். பின்னை - பின்பும். நாலடி - நான்கடி, நான்குஅடி என்பதன் வழக்குச் சொல். போத்து - செம்போத்து என்னும் பறவை யோகம் - நற்பேறு; அதிர்ஷ்டம் கெருடன் - கருடன் கேக்கையிட்டு - ஒலியிட்டு சயனம் - சகுனம். விசயாபுரி - விசயமங்கலம் எனும் ஊர். சென்னிமலை - ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஊர், முருகன் தலம் புசம் - புயம் - தோள், முன்கை. மெய் - உடல் சேகண்டி- கோல் கொண்டடிக்கும் வட்டமணி வகை உத்திராட்சம் - ருத்ராட்சம் - உருத்திராட்சமணி செங்கை - சிவந்த கை. பிரம்பு - கோல் செச்சை-சந்தனக்குழம்பு. லிங்கம் - சிவலிங்கம், அடையாளம் பாத்திரம் - இரப்போர் கலம், உண்கலம் மயிலிரட்டை - மயில்தோகை திருநீற்றுப்பை - விபூதிப்பை துலுக்கக் கன்னடப்பேச்சு - உருதும் கன்னடமும் கலந்த பேச்சு பிலுக்கி- ஆடம்பரமாக்கி பாதக்குறடு - மிதியடி. சுருக்கதாய் - விரைவாய். தெண்டம் -

வணங்குதல். பார்ப்பார் - பிராமணர். அக்ராரம் - அக்கிரகாரம் - அக்ரகாரம், பிராமணர்வீதி. அன்னம் - உணவு. கெதிகெட்டு - போக்கிடமின்றி. திருமஞ்சனம் - அபிடேகம். வைப்பாய் - பெருமையாய். வாய்ப்பு - வளமை. ஏப்பம் - நிறைதல், நிறைவாக உண்டபின் ஏற்படும் ஒருவகை ஒலி. அடைக்கிலை - அடைக்காய் - தாம்பூலம், வெற்றிலைபாக்கு. ரண்டகம் - இரண்டகம் - நம்பிக்கைத் துரோகம். மாமறை - மேன்மையான வேதம் மனையாட்டி - மனைவி. வெகுபணி - மிகுதியான ஆபரணம். பூட்டி - அணிந்து நேமுகம் - நேர்முகம் என்பதன் குறைச்சொல் நித்திரை - தூக்கம் - உறக்கம் சோதித்து - ஆராய்ந்து. ராவெத்த - இராவெத்த - இரவில் ஏமாற்ற கன்னமிடல்- களவு செய்தல். நெம்பு - உயர்த்து, தள்ளு. தெம்பு - பலம். சட்டமுடன் - ஒழுங்குடன், திருத்தமுடன் கொந்தள - கொந்தளம் - கூந்தல். ஓலை - காதணி. சடைவில்லை - பெண்கள் தலைப்பின்னலில் அணியும் அணி. குப்பி - கடுக்கன். சரப்பணி - வயிரம் அழுத்தின கழுத்தணி. வந்தி - தோள்வந்தி - வந்திகை, தோளின் கீழாகக் கையில் அணியும் அணி. சரவாவிலி - பொன் வளையல். குலைமுருகு - கொத்தான காதணி. அபரஞ்சி - புடமிட்டபொன். பதக்கம் - கழுத்தணி. ஆணிமுத்து- உயர்தரமான முத்து. திராணி - சாமார்த்தியம். சபரஞ்சிதம்- சபாரஞ்சகம் - சபையிலுள்ளோர் மனத்தைக் கவர்வது தாவடம் - கழுத்தில் அணியும் மாலை. பவளத்தாவடம் - பவளத்தாலான கழுத்தணி பாடகம் - மகளிர் காலணி வகை கொலுசு - கைகால்களில் அணியும் பொன் அல்லது வெள்ளியாலான அணி. தண்டை - காலணி கால் சரப்பணி - காலணி. உத்தண்டரளமணி - உத்தண்டமணி- பொன் மணிகளாலான மாதர் கழுத்தணி. சூடகம்- கை வளை. கைக்கடயம் - கைக்கடகம் - கங்கணம், மகளிர்கையணி. தங்கச்சுட்டி - பொன்னாலான மகளிர் நெற்றியணி. அட்டிகை - கழுத்தணி. பணி - ஆபரணம் பதையாமல் - வருந்தாமல், பயமில்லாமல். கலைமகள் - சரசுவதி. கண்டைப்பாகு - சரிகையினாலான தலைப்பாகை. முண்டாசு - தலைப்பாகை நித்திரை - உறக்கம். சாம்பல்- எரிந்து ஆறின சாம்பல்தூள். வறுமை - தரித்திரம். சிவன்மலை - கொங்கு நாட்டில் புகழ்பெற்ற முருகன் உறையும் மலை, காங்கேயத்திலிருந்து திருப்பூர் செல்லும் வழியில் உள்ளது. காங்கயம் - காங்கேயம். பதம் - திருவடி. காடையூர் - காங்கேய நாட்டிலுள்ள ஓர் ஊர். பண்ணோதுவார் - இசைப்பாட்டைப் பாடுபவர். பொன்னூதியூர், தாராபுரம் - கொங்கு நாட்டிலுள்ள ஊர்கள். பழனி - பழனிமலை

பாடவேறுபாடு - 1 செணத்தில் 2. காடன் 3 மனதினில் 4. கேள்க்கையிட்டுச் 5 விசையாபுரி 6 புஷ்பம் 7. மெய்யினில் 8. பையுடன் ருத்திராட்சம் 9 சுருக்காய் 10 காலினில் 12. மெள்ளத் 13 மெள்ள 15. வீட்டுக்குள்ளே 19. இலை போட்டானே 20 வருகல்வகை 21 லாமங்கே 23. தனிலே 24. அவளிட 27. குப்பிகளும் 28. வளைகள்சர வாவிவிநல் குலைமுருகும் 30. செய்யுமென்றேன் 31. போதிலெனை 32. சிவமலை 33 வழியாலே 34. பாதை வழியாகவே பொன்னூதியூர் கண்டேன் 35. தலபிரபலங் கண்டு சவி ப்பகன்றேனே

சுவடிச்சொல் - 11. குடுத்தேன் 14. பாப்பார் 16. கரியுடனே 17. கரியும் 18 காய்கரியும் 22. பாப்பான் 25. அதுக்குனான் 26. எளுதினேன் 29 சபாரஞ்சி.

(Pakaletti cennimalaikku varutal)

Taru

varukira valitanilē - canattil
valattili runtakatān itattilēra
tiruvulac ceyalenavē - tiruttuc
cīkkira mākavē vāykkumenrē

pinnaiyum nālatitān - varukaiyil
pōttuvala mānataip pārttanayyā
ennuta yōkamenrē - manattil
ennikkon tēnpūcai pannikkontēn

kerutan itamākat - tutaitattik
kēkkaiyittuc cayanam pārkkaiyilē
marupati pālkutamum - vantatu
vāccutu mattiyānam āccutenrēn

vicayā purikatantēn - cennimalai
vītikantēn vipūti kontēn
pucamēl tarittukkontēn - meyyil
pūcikkon tēnkaiyai vīcikkontēn

cankucē kantiyutan - uttirātcam
tarittukkon tēnmellac cirittukkontēn
cenkaiyil pirampetuttēn - mārpil
ceccaiyuta nēlinkam vaiccukkontēn

pāttiram mayilirattai - tirunīrrup
paiyumpi rampumoru kaiyiletuttēn
cūttirac cātiyenru - teriyāmal
tulukkakkan natappēccaip pilikkakkontēn

pātak kurattumēlē - curukkatāyp
patakkuppatak kenrunān natakkaiyilē
vītiyil kāntapērkal - kālil
vilntārē curric cūlntārē

kotuttēn tirunīrraik - kaikattik
kontukunintu mellat tentanituvār

paṭuppār eḻuntiruppār - tiruniṟṟaip
pāṅkuṭaṉē mella vāṅkikkoḷvār

(cuppayyaṉ aḻaittu viruntiṭutal)

pārppār akrārattilē - varukaiyil
paṇṭāram taṉṉaivantu kaṇṭārkaḷē
kūppiṭuvār cilapēr - avviṭattil
kuppayyaṉ tampiciṉṉac cuppayyaṉum

viṭṭukku vārumeṉṟu - kūṭṭippōy
viruntukku nīṅkaḷum iruṅkaḷeṉṟē
kūṭṭuk kaṟiyuṭaṉē - kattarikkāy
kuḻampuk kaṟiyumveku nalampeṟavē

patiṉeṭṭuk kāykaṟiyum - ilaiyil
paṭaittē aṉṉamum koṭuttāṉē
ketikeṭṭup pōṉavaṉpōl - iṭaiyoṉṟu
kēṭṭēṉē ilaiyoṉṟu pōṭṭāṉē

upput tirumañcaṉam - varkkavakai
uḷḷatel lāmiṉi aḷḷivaittāṉ
vaippāy vāḻttikkoṇṭēṉ - nāṉum
vāyppuṭaṉ cāppiṭṭu ēppamiṭṭuk

koṇṭēṉ ataṉpiṟaku - pārppāṉ
koṭuttaōr aṭaikkilai maṭikkaiyilē
uṇṭaviṭ ṭukkuraṇṭakam - ceykiṟa
tuḷḷatu namakkitu nallateṉṟēṉ

(viruntiṭṭa viṭṭil pakaletti tiruṭutal)

māmaṟai taṉaippaṭitta - cuppayyaṉ
maṉaiyāṭṭi yumveku paṇipūṭṭi
nēmuka mākavumē - avaḷiṭa
nittiraicō titturā vettaniṉaittēṉ

arttacā mantaṉṉilē - eṉakku
aṉṉamiṭṭa viṭṭiṉil kaṉṉamiṭavē
nittirai taṉaiveṟuttēṉ - kaṭavai
nempivait tēṉveku tempuvaittēṉ

pūntēṉ maṉaitaṉilē - avaḷuṭa
poṉṉuṭaimai taṉaikkaṇṭu eṉṉuṭaimaieṉṟēṉ
āyntēṉ uṭaimaivakai - atukkuṉāṉ
aṭṭavaṉai eḻutiṉēṉ caṭṭamuṭaṉē

kontaḷa ōlaikaḷum - caṭaivillaik
kuppiyuṭa ṉēcarap paṉiyum
vantitōḷ vantiyuṭaṉ - taṅka
vaḷaiyalcara vāvilik kulaimurukum

aparañci yāliḷaitta - patakkattil
āṇimut taikkaṇṭu tirāṇivaittēṉ
caparañ citamāṉa - kuṭamaṇit
tāvaṭa mumpavaḷat tāvaṭamum

pāṭakam kolucutaṇṭai - kalcarap
paṇiyuṭaṉut taṇṭaraḷa maṇiyuṭaṉē
cūṭakam kaikkaṭayam - taṅkac
cuṭṭiyuṭa ṉēnalla aṭṭikaiyum

palapala paṇikaḷellām - pataiyāmal
paṟitē ṉēveku tiṟattuṭaṉē
kalaimakaḷ kavitaivaḷar - cuppayyaṉ
kaṇṭaip pākuṭaṉ muṇṭācaiyeṭuttēṉ

nittirai ceykumeṉṟēṉ - uṅkaḷukku
niṉaivāṉa pōtileṉṉai niṉaiyumeṉṟēṉ
attuṉaiyum paṟittēṉē - cāmpalai
aṭittēṉē ōṭṭa meṭuttēṉē.

(Paḻaṉimalaikku varutal)

vaṟumaikaḷ tīrntataiyyā - civaṉmalai
vaḻiyāka vēveku teḷivuṭaṉē
aṟiyātāṉ pōlē - kāṅkayam
aṭuttē ṉēpatam paṭittēṉē

pārōr pukaḻukiṉṟa - kāṭaiyūrp
paṇṇōtu vārpukaḻ poṉṉūtiyūr
tārā puraṅkatantēṉ - paḻaṉit
talattukku vantuṉāṉuṅ kelittēṉē.

- taṉṉat taṉa taṉṉā -

Pakaletti comes to Chenn̲imalai

Tan̲n̲a - Tan̲a - Tan̲n̲ā-

12. On my way at a certain moment,
A he-buffalo went from right to left;
Deeming it an omen, by His Grace,
Confident that my theft will be encompassed,
Soon enough I went ahead;
A few feet more, and a bird flew
From left to right-a crow-pheasant
Portending good; and I performed a prayer
Within my mind, blessing my luck!
A brahminy-kite went to the left!
I beat my thighs in joy hearing its cry
As a good omen! Again I saw
A pot of milk being carried, another good omen;
Midday came when I neared Vijayamaṅkaḷam.
Passing it, I came to Cen̲n̲imalai
With its goodly streets, where I took sacred ash
And smeared myself all over my arms,
Forehead and body; swinging my hands, I walked,
Happily I wore a string of shells round my neck,
And a chaplet of eleocarpus beads, to boot;
In my hand I held a round gong and a wand;
On my chest bedaubed with sandal-paste,
Hung a *linkam*, symbol of a Saivaite true!
A holy vessel, peacock-feathers
A sachet of sacred ash, and a cane in hand,
Disguising my low caste, I spoke
In a dialect of Kannada with Urdu mixed:
On my wooden sandals I walked briskly,
'Pat - pat - pat', ever so confidently!
On seeing which the people on the street
Fell at my feet and gathered round me

Believing me to be a holy man!
Folding their hands in reverence
Meekly they bowed before me;
Some did fall prostrate on the ground,
And then get up to receive piously
The sacred ash from my sachet holy.

Cuppaiyaṉ Inviting Pakaletti to Dinner

In the Brahmin street as I walked along
Many did come to see the mendicant.
Some did invite me to their homes;
One Cuppaiyaṉ, younger brother of Kuppaiyaṉ,
Insisted thus: "Please honour us with your visit
And dine with us, O holy man!"
And oh, what a fare it was!
Curry with sauce, brinjal-broth
Along with eighteen kinds of vegetables,
On the plantain leaf he served
Along with cooked rice! I fell to it,
Like one who had not seen food
For long! Seasoned viands with salt to taste,
Varieties of food, he heaped on my leaf,
Bidding me, again and again, to eat;
Gratefully I blessed him and ate my fill,
And well satisfied, let out a belch!
And after, the brahmin offered me
Betel-leaf with betel-nut to eat
As it is the practice, after a goodly dinner.
"Betraying the trust where one has eaten
Is sinful: May be true, but not for me"
Said I to myself!
"Well it is to steal here,
Even where I have been feted!"

Pakaletti stealing in the house of his host

The wife of Cuppaiyan̲, the learned brahmin,
Wore on her person many a rich ornament
And costly jewel; straight I decided,
To test if she had slept soundly,
Before I began my handiwork!
At dead of night I planned,
To make a hole in the wall with my iron-crow;
Sleep I scorned and bided my time,
Till all was silent in the house;
Then I lifted up the door with all my strength;
And entered the room where the women slept.
Seeing her jewels and her belongings golden,
Said I to myself: "Henceforth they are mine!"
I scrutinised each jewel and listed them all:
Jewels for the hair, round piece for the crown;
Ear-studs; diamond collar; armlet
On the elbow; golden bangles; clusters
Of ear-rings; bracelets of gold!
Very expertly I removed the necklace
Inlaid with prime pearls!
Chaplets of virgin gold, bound to attract
All eyes in an assembly; collar of coral;
Jewels round the legs; anklets;
Gold chain for the hand; necklace of gold beads;
Bracelets; gold bands for wrists;
Forehead-jewel of gold; choker of gold
For the neck. Many a jewel thus did I filch
With finesse from the sleeping beauty!
I removed too Cuppaiyan̲'s turban,
Mine own host's, worked with golden filigree!
"Sleep on, Sir and Madam!" I said to them:

"You will be thinking of me, when you wake up!"
All valuables in the room I purloined,
And blowing my magic powder o'er them,
I fled from the place.

Arrival at Pal̠an̠i Hills

"Oh gone is my penury!", I cried in joy;
Past Civan̠malai I wended my way
And reached kāṅkēyam even like a kind
And all too innocent person, singing many a hymn
Pious and devout! Crossing on my way
Kāṭaiyūr praised by all and Pon̠n̠ūtiyūr,
Reputed for its Saivite singers of hymns,
I passed by Tārāpuram and at last
Reached the holy hill of Pal̠an̠i,
Rejoicing in my success thus far.

Tan̠n̠attan̠a tan̠n̠ā

(மதுரைக்கு வருதல்)

விருத்தம்

13 அருள்மலைக் குகனை வாழ்த்தி அய்யர்தென் பழனி வேலர்
திருவடி யதனைக் கண்டு தியானமாய்த் தெண்டஞ் செய்து
மருமல ரருள்திண் டுக்கல் வழியது [1]கடந்து நானும்
[2]பெருமைசேர் மதுரை கண்ட பிரபலஞ் சொல்லு வேனே.

அருள்மலைக்குகன் - அருள்மலையில் வீற்றிருக்கும் முருகபெருமான். தெண்டம் - தண்டம் - பணிதல், வணக்கம். மருமலர் - வாசனை மிகுந்த மலர். பிரபலம்- பெருமை.

***பாடவேறுபாடு** - 1 கண்டு நடந்து 2. மருவு பாண்டியன் தேசத்தில் மதுரைமா நகருற் றேனே.*

(Maturaikku varutal)

Viruttam

arul̤malaik kukan̠ai vāl̤tti ayyarten̠ pal̠an̠i vēlar
tiruvaṭi yatan̠aik kaṇṭu tiyān̠amāyt teṇṭañ ceytu

marumala raruḷtiṉ ṭukkal vaḻiyatu kaṭantu nāṉum
perumaicēr maturai kaṇṭa pirapalañ collu vēṉē.

Arrival at Madurai

13. Singing the praise of Lord Kukaṉ of Aruḷmalai
I worshipped at the feet of the Lord Paḻaṉivēlaṉ,
And meditating on Him and making my obeisances,
I continued on my journey
And reached Tiṇṭukkal rich in fragrant flowers.
Preceeding southwards I reached the city of Maturai,
Of whose grandeur I shall now speak:

(தலயாத்திரை செல்லல்)

தரு

14 கோட்டைக் [1]கொத்தளமதிலும் - நல்லநல்ல
கொம்மைகளும் சித்திரப் பொம்மைகளும்
நாட்டும் புகழ்படைத்த - வைகை
நதியழகும் மதுரைப் பதியழகும் 1

கண்டேன் விழிகுளிரச் - சொக்கரைக்
கருத்திலே நானும் இருத்திக்கொண்டேன்
விண்டலம் புகழுகின்ற - மதுரை
மீனாட்சி என்னாட்சி கடாட்சியென்றேன் 2

பாதம் பணிந்துகொண்டேன் - மதுரைப்
பதியிலிருந்து வைகை நதிகடந்தேன்
ஓதும் புகழ்படைத்த - கள்ளழகர்
உபையபத மிருக்கும் சபையுங்கண்டேன் 3

பாவம் பறிகொடுத்தேன் - அழகரைப்
பணிந்துதீர்த் தந்துளசி புனைந்துகொண்டேன்
சீவிலிப் புத்தூரில் - பரம
சிவனிரு பதத்தையுங் கவனஞ்செய்தேன் 4

திருச்செந் தூரில்வந்தேன் - முருகரைத்
தியானித்துக் கொண்டுமத் தியானத்திலே

கருச்செந் தூரைவிட்டேன் - அக்கியானங்
கடந்துவிட் டேன்வழி நடந்துகொண்டேன் 5

[3]இராமேசு பரமுங்கண்டேன் - முராரி
இராமரைச் சேவித்து நாமமிட்டேன்
போமேசு ரங்கள்விட்டேன் - பாவத்தைப்
[4]போக்கிக்கொண் டேன்வடக்கு நோக்கிக்கொண்டேன் 6

திருக்கே தாரத்தையும் - கண்டு
தொழுதேனே செல்வமும் ஆனேனே
உருக்கே தாரம்விட்டேன் - தீவினை
ஒழித்துவிட் டேன்கலி துலைத்துவிட்டேன் 7

காளத்தி நாதரையும் - கண்ணாரக்
[5]கண்டுகொண் டேன்மெள்ளத் தெண்டனிட்டேன்
பாழுற்று வினைகளெல்லாம் - பருதிமுன்
பனிக்குலம் போலவே தணிந்ததய்யா 8

ஆரூர்த் தியாகரையும் - சேவித்து
அங்கத்தில் வினைதனை மங்கவிட்டேன்
தேரூர் வீதியுள்ள - கும்பகோணத்
தெருவில் சிவனைக்கண்டு கருதிக்கொண்டேன் 9

திருவரங்கத் துக்குவந்தேன் - புன்னையாற்றில்
தீர்த்தமாடி [6]ரங்கரைப் போற்றிக்கொண்டேன்
அருணா சலந்தனிலே - இருக்கும்
அண்ணாமலை நாதர் உண்ணாமுலையாள் 10

திருவடி தனைப்பணிந்தேன் - மறுநாள்
திருப்பதி கண்டு கருப்பதியைவிட்டேன்
தரணியில் [7]மனிதர்செய்யும் - [8]பாபநாசத்
தலத்தைச் சேவித்துவெகு [9]பலத்துடனே 11

திருத்தணி வேலரிட - பதத்தையும்
தெரிசித்துக் கொண்டுநானு மொருபுத்தியாய்
கருத்தணி தனைக்கடந்தேன் - நல்ல
கண்ணனூர் மாரிபதம் விண்ணப்பஞ் செய்தேன் 12

கச்சிப் பதியில்வந்தேன் - அவ்விடத்தில்
கம்பநாதர் பதத்தையும் கும்பிட்டுக்கொண்டேன்
கச்சுப் பதுமுலையாள் - என்று
காமாட்சி யைப்போற்றக் கடாட்சமுற்றாள் 13

தில்லைப் பதியில்வந்தேன் - அவ்விடத்தில்
[10]சிதம்பர நாதர்பொற் பதம்பணிந்தேன்
முல்லைப் பூவனஞ்சூழ் - கழுக்குன்ற
மூதூர் [11]அரனிட பாதங்கண்டேன் 14

திண்டோ தரன்போலே - திருச்சி
ராப்பள்ளி யிலுமொரு ராப்பள்ளிதான்
[12]கொண்டேன் எழுந்திருந்தேன் - சீரங்க
கோவிந்த [13]நாதரைச் சேர்வைசெய்தேன் 15

அருள்சேர் கருவூரில் - பசுபதி
[14]அரனிட பதத்தையும் சரணஞ்செய்தேன்
தருவளர் கொடுமுடிவாழ் - மகுடலிங்கர்
[15]தாளைக்கண் டேன்செவ் வேளைக்கண்டேன் 16

தொனிச்சங் கோசையுள்ள - விருத்தாசலம்
துதித்துக்கொண் டேன்மனதில் மதித்துக்கொண்டேன்
இனிச்செங் கோட்டில்வந்தேன் - அர்த்தநா
ரீசனைப் போற்றிமறு வேசமெடுத்தேன். 17

கொத்தளம் - மதில் மேலுள்ள மறைவிடங்கள், மதிலுறுப்பு. மதில் - கோட்டைச்சுவர். கொம்மை - மூலை. சித்திரப்பொம்மை - ஓவியப்பாவை, பொம்மை பதி - ஊர் சொக்கர் - மதுரைச் சிவபிரான் விண்டலம் - தேவருலகம். என்னாட்சி - என்னாச்சி - என்தாயே கடாட்சி - அருள்செய் பாதம் - திருவடி. கள்ளழகர் - பாண்டிய நாட்டிலுள்ள அழகர்மலையில் கோயில் கொண்டுள்ள திருமால். உபையபதம் - உபயபதம்- இருதிருவடிகள் சபை - சபா மண்டபம். பாவம் - தீவினை. தீர்த்தம் - ஆராதனை நீர் துளசி - திருத்துழாய் ஸ்ரீவிலிப்புத்தூர் - ஸ்ரீவில்லிப்புத்தூர். கவனம்- கருத்து திருச்செந்தூர்- முருகக்கடவுளின் ஆறு படைவீடுகளுள் ஒன்று; தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது. மத்தியானம் - மதியம், நண்பகல். கருச்செந்தூர் விட்டேன் - பிறவியை விட்டேன் அக்கியானம் - அஞ்ஞானம் - அறியாமை இராமேசுபரம் - இராமேச்சுரம் - இராமேஸ்வரம். முராரிஇராமர் - திருமாலாகிய இராமர். சேவித்து - வணங்கி. நாமம் - நெற்றியில் அணியும் நாமம் போமேசுரங்கள் விட்டேன் - செருக்கானதை தொலைந்துபோக விட்டேன் வடக்கு - வடதிசை.

திருக்கேதாரம் - இமயமலையில் உள்ள ஒரு சிவத்தலம். தாரம் - மனைவி. தீவினை - பாவம் கலி - துன்பம். காளத்திநாதர்- சீகாளத்தி என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் பாழுற்று - அழிந்து. வினை - தீவினை, பாவம். கலி - துன்பம் காளத்திநாதர் - சீகாளத்தி என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான். பாழுற்று - அழிந்து வினை - தீவினை, பாவம் பருதி -பரிதி -சூரியன். பனிக்குலம் - பனிக்கூட்டம் ஆரூர்த்தியாகர் - திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தியாகேசுவரர், சிவன். அங்கம் - உடல், சரீரம் மங்கவிட்டேன் - கெடச்செய்தேன். தேரூர்வீதி - தேர் ஊர்கின்ற (செல்கின்ற) வீதி. கும்பகோணம் - திருக்குடந்தை என்னும் தலம். திருவரங்கம் - ஸ்ரீரங்கம்- சீரங்கம் புன்னையாறு - பொன்னியாறு, நதி. ரங்கர்- திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள அரங்கநாதர், திருமால் அருணாசலம் - திருவண்ணாமலை. அண்ணாமலைநாதர் - திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான். உண்ணாமுலையாள் - திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை, உமை. திருப்பதி - திருவேங்கடம் என்னும் திருமால் தலம். கருப்பதி - கருவூர் - பிறப்பு தரணி- பூமி பாபநாசம் - பாவநாசம் - பாவம் நீக்கும் தலம். பலம்- வலிமை திருத்தணி - திருத்தணிகை, முருகக்கடவுளின் ஆறு படைவீடுகளில் ஒன்று. வேலர் - முருகர். கண்ணனூர் மாரி - திருச்சி மாவட்டம் கண்ணனூரில் எழுந்தருளியிருக்கும் மாரியம்மன். விண்ணப்பம் செய்தேன் - வணங்கி முறையிட்டேன் கச்சிப்பதி - காஞ்சிபுரம் கம்பநாதர்- காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதர், சிவன் பதம் - திருவடி கச்சு - கச்சணிந்த. பதுமுலை -பெருத்த முலை காமாட்சி - காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை, உமை தில்லைப்பதி - சிதம்பரம் என்னும் தலம். கழுக்குன்றம் - திருக்கழுக்குன்றம். மூதூர் - பழமையானஊர் அரன் - சிவன். திண்டோதரன் - பருமனானவன் திருச்சிராப்பள்ளி - திருச்சி ராப்பள்ளி - இரவில் தூங்கி. சீரங்க கோவிந்தநாதர் - சீரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள திருமால். சேர்வை - தரிசனம். அருள்சேர் - கருணை மிகுந்த. கருவூர் - கரூர் பசுபதி - கரூரில் எழுந்தருளியிருக்கும் சிவன். தருவளர்-மரங்கள் வளர்கின்ற கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடி, கொங்கு நாட்டின் ஏழு சிவத்தலங்களுள் ஒன்று. மகுடலிங்கர்- திருப்பாண்டிக்கொடுமுடியில் எழுந்தருளியிருக்கும் சிவன். தாள் - திருவடி. செவ்வேள் - முருகவேள் தொனிச்சங்கு - சங்கோசை விருத்தாசலம் - திருமுதுகுன்றம், கடலூர் மாவட்டத்திலுள்ள ஒரு சிவத்தலம் செங்கோடு - திருச்செங்கோடு, சேலம் மாவட்டத்திலுள்ள ஒரு சிவத்தலம். அர்த்தநாரீசன்- பாதியுடம்பு பெண்வடிவான சிவன், திருச்செங்கோட்டிலுள்ள இறைவன் மறுவேசம் - மறுவேடம்- மாறுவேடம்.

பாடவேறுபாடு - 1. கொத்தள மதில்களும் 2. கடாட்சி என்னாட்சி என்றேன். 3. ராமேஸ் பரமுங் 4 போக்கிவிட்டேன் 5 கண்டேன் 6. ரங்கநாதரைப் 7 மனிதர்செய்த 8. பாவநாசத் 9 பிலத்துடனே 10. சிதம்பரதேவர் பொற்பதத்தைச் சேர்வைசெய்தேன் 11. ராமனிட 12. கொண்டெழுந் திருந்தேன் 13. நாதனைச் 14. அரனிரு பதத்தையுங் கவனஞ் செய்தேன் 15 தாள்கண் டேன்செவ் வேள்கண்டேன்

(Talayāttirai cellal)

Taru

kōṭṭaik kottaḷamatilum - nallanalla
kommaikaḷum cittirap pommaikaḷum
nāṭṭum pukaḻpaṭaitta - vaikai
natiyaḻakum maturaip patiyaḻakum

kaṇṭēṉ viḻikuḷirac - cokkaraik
karuttilē nāṉum iruttikkoṇṭēṉ
viṇṭalam pukaḻukiṉṟa - maturai
mīṉāṭci eṉṉāṭci kaṭāṭci yeṉṟēṉ

pātam paṇintukoṇṭēṉ - maturaip
patiyiliruntu vaikai natikaṭantēṉ
ōtum pukaḻpaṭaitta - kaḷḷaḻakar
upaiyapata mirukkum capaiyuṅkaṇṭēṉ

pāvam parikoṭuttēṉ - aḻakaraip
paṇintutīrt tantuḷaci puṉaintukoṇṭēṉ
cīvilip puttūril - parama
civaṉiru patattaiyuṅ kavaṉañceytēṉ

tiruccen tūrilvantēṉ - murukarait
tiyāṉittuk koṇṭumat tiyāṉattilē
karuccen tūraiviṭṭēṉ - akkiyāṉaṅ
kaṭantuviṭ ṭēṉvaḻi naṭantukoṇṭēṉ

irāmēcu paramuṅkaṇṭēṉ - murāri
irāmaraic cēvittu nāmamiṭṭēṉ
pōmēcu raṅkaḷviṭṭēṉ - pāvattaip
pōkkikkoṇ ṭēṉvaṭakku nōkkikkoṇṭēṉ

tirukkē tārattaiyum - kaṇṭu
toḻutēṉē celvamum āṉēṉē
urukkē tāramviṭṭēṉ - tīviṉai
oḻittuviṭ ṭēṉkali tulaittuviṭṭēṉ

kāḷatti nātaraiyum - kaṇṇārak
kaṇṭukoṉ tēṉmeḷḷat teṇṭaṉiṭṭēṉ
pāḻuṟṟu viṉaikaḷellām - parutimuṉ
paṉikkulam pōlavē taṉintatayyā

ārūrt tiyākaraiyum - cēvittu
aṅkattil viṉaitaṉai maṅkaviṭṭēṉ
tērūr vītiyuḷḷa - kumpakōṇat
teruvil civaṉaikkaṇṭu karutikkoṇṭēṉ

tiruvaraṅkat tukkuvantēṉ - puṉṉaiyāṟṟil
tīrttamāṭi raṅkaraip pōṟṟikkoṇṭēṉ
aruṇā calantaṉilē - irukkum
aṇṇāmalai nātar uṇṇāmulaiyāḷ

tiruvaṭi taṉaippaṇintēṉ - maṟunāḷ
tiruppati kaṇṭu karuppatiyaiviṭṭēṉ
taraṇiyil maṉitarceyyum - pāpanācat
talattaic cēvittuveku palattuṭaṉē

tiruttaṇi vēlariṭa - patattaiyum
tericittuk koṇṭunāṉu moruputtiyāy
karuttaṇi taṉaikkaṭantēṉ - nalla
kaṇṇaṉūr māripatam viṇṇappañ ceytēṉ

kaccip patiyilvantēṉ - avviṭattil
kampanātar patattaiyum kumpiṭṭukkoṇṭēn
kaccup patumulaiyāḷ - eṉṟu
kāmāṭci yaippōṟṟak kaṭāṭcamuṟṟāḷ

tillaip patiyilvantēṉ - avviṭattil
citampara nātarpoṟ patampaṇintēṉ
mullaip pūvaṉañcūḻ kaḻukkuṉṟa
mūtūr araṉiṭa pātaṅkaṇṭēṉ

tiṇṭō taraṉpōlē - tirucci
rāppaḷḷi yilumoru rāppaḷḷitāṉ
koṇṭēṉ eḻuntiruntēṉ - ciraṅka
kōvinta nātaraic cērvaiceytēṉ

aruḷcēr karuvūril - pacupati
araṉita patattaiyum caraṇañceytēṉ
taruvaḷar koṭumuṭivāḷ - makuṭaliṅkar
tāḷaikkaṇ ṭēṉcev vēḷaikkaṇṭēṉ

toṉiccaṅ kōcaiyuḷḷa - viruttācalam
tutittukkoṇ ṭēṉmaṉatil matittukkoṇṭēṉ
iṉicceṅ kōṭṭilvantēṉ - arttanā
rīcaṉaip pōṟṟimaṟu vēcameṭuttēṉ

Pilgrimage

14. Imposing with its ramparts, its lovely figures
Of mortar made, its fortifications,
And the river Vaikai with its lasting fame-
Maturai, the city beautiful, I saw!
I drank in, with my eyes its glory.
The form of Lord Cokkanātar, I fixed in my mind;
I hailed the Goddess Mīṉāṭci, adored
By all the Celestials, praying to Her:
"O Goddess mine! grant me your Grace:
I prostrate at your divine feet"
And then left the city behind me,
Crossing the river I went towards the temple
Of the farifamed God, Kaḷḷaḻakar[7]
Where I fell at His twain feet divine,
And rid myself of all my sins!
Offering worship to Aḻakar, I sprinkled on my head
The holy water offered to me and the sprigs
Of sacred-basil, given in the sanctum.
At Srivilliputtūr I meditated
On the feet divine of Lord Paramacivaṉ!
To Tirucentūr then I came
And meditated on Lord Murukaṉ! by noon,

I had left behind my cycle of birth:
The sea of ig norance, I had crossed.
I went on my way again and saw
Rāmēsvaram the holy, and bowed before Murāri,
Lord Rāma, enshrined therein, and made
A mark on my forehead like Vaishnavites do!
All my ego and self I surrendered;
And wiped were my sins in full!
Saw I in the north holy Kētāram
Where I worshipped. Richer I grew
In merit; lost were all my sins and evil:
My *Kali* [8] I wiped off.
I saw too, the Lord of Kālahatti!
With all my eyes I feasted on His form!
Gently I genuflected before Him,
And all my rotten sins, like mists
Before the Sun were dissolved for sure!
I then worshipped Lord Tiyākarāja:
My corporeal sins, then I shed.
I went to Kumpakōṇam with its car streets;
I saw Lord Civa and fixed Him in my mind,
Came I then to Tiruvaraṅkam
And bathing in the holy Kāvēri,
I prayed before Lord Raṅkanāta!
At Aruṇācalam holy, I bowed
Before the Lord of Aṇṇāmalai and His spouse,
Goddess Uṇṇāmulai. The next day at Tiruppati
I prayed and rid myself of the cycle of birth,
I visited Pāpanacam where the sins of all are destroyed.
And at Tiruttaṇi I prayed to the divine feet
Of Lord Vēlaṉ with single-minded devotion

And I crossed the sea of birth,
At Kaṇṇaṉūr I offered prayers
To the feet of Goddess Māriammaṉ for Her grace.
To Kāñci city then I came:
I worshipped at the feet of Ēkāmparanātar
The Lord therein, and hailed the Goddess Kāmākshi,
Of the cinctured-breast, so beautiful
And obtained Her gracious blessings.
I came then to Tillai city where I prayed
Before the golden feet of Lord Citamparanāta!
At Tirukkaḻukuṉṟam engirt with jasmine groves,
I adored the feet of Lord Civa enshrined therein.
Just for a night I stayed and slept
At Tiruccirāppaḷḷi even like a giant huge!
Then rose up in the morning and worshipped
Lord Kovinda, slumbering in Srirańkam!
At Karūr, city of Grace, I worshipped
Lord Pacupati and His divine feet;
At Sylvan Koṭumuṭi, full of trees,
I saw and adored the feet of Makuṭalińkar
Enshrined therein, and too, the Red Lord Murukaṉ!
I thought in my mind of holy Viruttācalam,
With its ever-sounding conches and prayed
To its God therein ensconced.
Then to Tiruccenkōṭu I came,
Where I hailed Lord Artanārisvara
In His androgynous form divine;
I then changed my disguise.

7. Kaḷḷaḻakar - Tirumāl enshrined in Aḻakarkoil
8. Kali - suffering

(தலயாத்திரை செல்லல்)

தரு

14*. கோட்டைக் கொத்தள மதில்களும் - சிங்கார
கொம்மைகளும் சித்திரப் பொம்மைகளும்
நாட்டுப்பொற் றாமரைக்குளம் - வைகை
நதியழகும் மதுரைப் பதியழகும் 1

கண்டேன் விழிகுளிர - சொக்கரைக்
கருதிமீ னாட்சியம்மன் தெரிசனமும்
கண்டேன் மனதாரச் - சன்னதியைக்
கூடிப்பணிந்து மேற்கு நாடிச்சென்றேன் 2

திருப்பரங் கிரிமுருகன் - பதத்தை
தெரிந்துதெரி சனங்கொண்டு இருந்தெழுந்தேன்
மருபழ முதிர்சோலை - நாதரை
வணங்கிக் கள்ளழகரைப் பணிந்துகொண்டேன் 3

[1]வண்டியூர் தனில்வந்தேன் - குளத்தினில்
வயனமாய் நீராடித் தயவுடனே
கொண்டல் மாயவன்தனையும் - கண்டுமனக்
குறைதீர்ந்து திருப்பெருந் துறைஅடுத்தேன் 4

மாணிக்க வாசகனார் - செய்துவைத்த
வண்ண மனச் சன்னதியெல்லாம்
பேணித் தொழுதுதினம் - அரத்துறைப்
பித்தனைப் பணிந்தேன் சித்தம் மகிழ்ந்தேன் 5

திருவேரகந் தொழுதேன் - மிக்கதிருச்
செந்தூர் குன்றுதோறும் வந்தாடல்செய்யும்
முருகேச னைப்பணிந்தேன் - அங்கேவினை
முடிக்கிவிட் டேன்வழி நடக்கலுற்றேன் 6

---

*பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட முதன்மைச்சுவடியின் 14ஆவது பாடலானது பாடவேறுபாட்டிற்குப் பயன்படுத்தப்பெற்ற தாள்சுவடியில் முற்றிலுமாக மாறுபட்டமைகின்றன. மற்றும் தாள் சுவடியில் பாடல்கள் கூடுதலாக உள்ளதால் இங்கு இப்பகுதி தரப்படுகின்றன.

இராமேஸ்வ ரத்தைக்கண்டேன் - தனுஷ்கோடி
[2]என்னும்தீர்த் தம்படிந்து புண்ணியம்பெற்றேன்
ஸ்ரீமான்ராம லிங்கரைப் - பணிந்தபின்
சீக்கிரமாய் மேற்கு நோக்கினேனே 7

திருநெல்வே லியிலுள்ள - தேவர்களைத்
தெரிசித்து குற்றாலங் கிரியில் வந்தேன்
பரவிய பாவநாசப் - புனல்மூழ்கி
பரனடி தொழுதேன் ஒருமனதாய் 8

அகத்திய முனியிருக்கும் - பொதிகைமலை
அடியில்உள் ளவர்களை அடிதொழுதேன்
மிகுத்தகன் னியாகுமரி - தாமிர
வேணி [3]பொருனைநதி பேணிப் பணிந்தேன் 9

[4]தலம்ஸ்ரீவில் லிப்புத்தூர் - தொழுதனன்
சங்கர நாராயண மங்கையைப் பணிந்தேன்
சிலம்பெனும் சதுரகிரியை - வலம்வந்து
தேடிச்ச டாதரியை நாடிப் பணிந்தேன் 10

[5]வேணாட்டில் புத்திடங்கொண்ட - ஈசுரன்
வாழுந் தலத்தையும் சேர்ந்துதொழுதேன்
கோணாத [6]சுந்தரனார்தம்மை -வெள்ளையானை
கூட்டிப் போகவந்த நாட்டிலுற்றேன் 11

[7]திருவஞ்சைக் களந்தொழுதேன் - பகவதியை
சேவடி வணங்கியென் பாவம்விட்டேன்
அருமைநஞ் சுண்டகூடல் - கற்பிணி
[8]ஆற்றினில் மூழ்கிவினை தீர்த்திடவே 12

தேவகிரி யுமையவளை - நஞ்சுண்ட
சிவனையும் கண்டுவெகு தவமடைந்தேன்
பாவமெனுங் கடல்கடந்தேன் - கூடநாட்டு
பண்ணவர்கள் தெரிசனம் புண்ணியம்பெற்றேன் 13

உடுப்பிசுப்பி ரமண்யதலத்தில் - வந்து
ஓங்குமுரு கய்யனைக்கண்டு ஆங்குபணிந்தேன்

வடக்கெனுந் திசைநடந்தேன் - டில்லியெனும்
மக்காவையும் கண்டு நிக்காமலே 14

குருகுலத் தாரெல்லாம் - அவரவர்வாழ்ந்த
குருக்ஷேத் திரமும் வரும்அஸ்தினாபுரமும்
. . . . - கொண்ட
ஆரணியம் வாழ்வே தாரண்யம்கடந்தேன் 15

அந்தத் தேசங்களில் - சிவஸ்தலத்து
அதிசயங் கண்டுவெகு கதியடைந்தேன்
விந்தை அயோத்திநகர் - தொழுதபின்
விருது துவாரகா புரிகடந்தேன் 16

கங்கை யமுனைநதியை - கண்ணால்
கண்டுபுன லாடிக் கொண்டுமகிழ்ந்தேன்
அங்கிருக்குந் தலங்களிலே - கோகர்ணம்
அடுத்தேனே பாவம் விடுத்தேனே 17

இலங்கையில் ராவணனார் - கொண்டுவந்த
இலிங்கத்தைப் பணிந்தனன் நலம்பெறவே
துலங்கிய ஜெகந்நாதம் - கிருஷ்ண
சுவாமியைத் தொழுதனன் நேமமாய் 18

திருப்பதியில் தனிவெங்கடா - ஸ்தலபதி
சேவடி தொழுதனன் ஆவலுடன்
மருப்புனை விருத்தாசலம் - கழுக்குன்றம்
வாழும் பரமர்இரு தாள்பணிந்தேன் 19

கண்ணப்பர் எச்சிலும் நுகர்ந்தோன் - [9]நாளாறில்
காட்சிதந்த காலத்தில் ஆட்சிஅரனை
விண்ணப்பம் செய்துதொழுதேன் - பூங்கோதை
மெல்லியரைக் கண்டிறைஞ்சி வல்லமைபெற்றேன் 20

ஆரணனும் நாரணனும் - காணாத
அண்ணாமலை யைப்பணிந்து உண்ணாமுலை
நாரணியின் தாள்பணிந்தேன் - குணதிசை
நாடினேனே தடங் கூடினேனே 21

தில்லைச் சபாபதியைத் - தெரிசித்து
சிவகாமியைத் தொழுதேன் தவறாமலே
வல்லதிரு ஞானசம்பந்தர் - பொருந்திய
வரமுற்ற சீர்காழி அரனைக் கண்டேன் 22

திருமறைக் காடுதொழுதேன் - சுவாமிமலை
செட்டீசரைத் தொழுதேன் கெட்டியாகவே
அருமறை யோர்பரவும் - கும்பகோணம்
அதிலுள்ள தேவரையும் துதிசெய்தேன் 23

சீர்பெறு திருவாரூர் - அதில்வந்து
தியாகரைத் தொழுதுநல்ல யோகமுற்றேன்
பார்புகழ் கம்பைநதியின் - புனலாடி
பாவமறவே கச்சிக் கோவிலும்சென்றேன் 24

ஏகாம் பரநாதர் - காமாட்சி
ஈஸ்வரியைத் தெரிசித்தேன் ஆச்சரியமாய்
[10]வாகான கண்ணனூரில் - மாரியை
வாழ்த்தித் தடம்பிடித்தேன் மேல்திசையில் 25

திருவானைக் காவலுற்றேன் - அகிலாண்ட
தேவிசம்பு கேஸ்வரனைக் கூவிப்பணிந்தேன்
மருவான சீரங்கத்தில் - பள்ளிகொண்ட
வளமைரங் கரைப்போற்றி உளமகிழ்ந்தேன் 26

காவேரி கொள்ளிடத்தில் - தீர்த்தமாடிக்
கள்ளமில்லாத் திருச்சிராப் பள்ளிவந்தேன்
தேவாதி தேவர்கள்தொழும் - தாயுமான
சிவனைப் பணிந்துமனக் கவலையற்றேன் 27

கொங்குநாட்டுப் பாதைவழியே - கட்டளையும்
குளித்தலையும் கடந்துமேற்கு வழித்தடமாய்
அங்கிருக்கும் ஆபெருணி - நதிப்புனல்
ஆடிக்கொண் டேன்கதித் தேடிக்கொண்டேன் 28

கரூர்பசு பதிலிங்கம் - தெரிசனம்
கண்டுவடி வுடையாளைக் கண்டுபணிந்தேன்
குருவான குருதீட்சனை - வெஞ்சமாக்
கூடலில் கண்டுவடக்கே நாடிச்சென்றேன் 29

கொடுமுடியில் மகுடலிங்கரைத் - தெரிசித்து
குங்குமஞ்சேர் வடிவுள்ள மங்கையைக் கண்டேன்
நெடிவாழ் வீரநாரணர் - பாதத்தை
நேருடன் பணிந்துகா வேரிகடந்தேன் 30

நமக்கினி நினைத்ததெல்லாம் - பலித்திடும்
நழுகாதென் றேவடக்கு வழிநடந்தேன்
உமைக்கொரு பாதியுடல் - அர்த்தபாகம்
உதவியசெங் கோட்டுப் பதியில்வந்தேன் 31

கோதைநகர் வீதியழகும் - நாககிரிக்
கோபுரத்துப் பிள்ளையாரைச் சேவித்தபின்பு
மாதுகுற வள்ளிநாயகர் - தெரிசனை
வாசனைக்கண் டத்தனாரி ஈசனைக்கண்டேன் 32

நாகீர ராதிகேசவர் - பாதத்தை
நன்றாய்த் தொழுதுமன தொன்றாகவே
வாகான நிலத்தம்பிரான் - சந்நிதியை
வாசமாய்ப் பணிந்துமறு வேசமெடுத்தேன். 33

திருப்பரங்கிரி - திருப்பரங்குன்றம், முருகக்கடவுளின் ஆறு படைவீடுகளுள் ஒன்று மரு - வாசனை பழமுதிர்சோலை - முருகக் கடவுளின் ஆறு படைவீடுகளுள் ஒன்று வண்டியூர் - மதுரையின் ஒரு பகுதி வயனமாய் - வகையாய். கொண்டல்மாயவன்- மேகம் போன்ற திருமால் திருப்பெருந்துறை - மாணிக்கவாசகரை சிவன் ஆட்கொண்டருளிய தலம் மாணிக்கவாசகன் - சமயக்குரவர் நால்வரில் ஒருவர். அரத்துறை- ஓர் ஊர் பித்தன் - சிவன். சித்தம் - உள்ளம், மனம் திருவேரகம் - முருகக்கடவுளின் ஆறுபடைவீடுகளுள் ஒன்று முருகேசன் - முருகப்பெருமான். தனுஷ்கோடி - இராமேசுவரத்திற்குத் தென்கிழக்காக நீண்ட தரைமுனையிலுள்ள பிரசித்தமான தீர்த்தகட்டம், இது கடலழிப்பால் மறைந்துவிட்டது. ராமலிங்கர் - இராமர் வழிபட்ட சிவன். குற்றாலங்கிரி - குற்றாலமலை புனல் - ஆறு, நீர். பரனடி - சிவனின் திருவடி பொதிகைமலை -பொதியமலை தாமிரவேணி - தாமிரபரணி என்னும் பொருனைநதி, பாண்டிநாட்டிலுள்ளது பேணி - விரும்பி சங்கரநாராயண மங்கை - கோமதி அம்மன் சிலம்பு - மலை சதுரகிரி -திருவனந்தபுரத்தருகிலுள்ளஓர் மலை, சிவத்தலம். சடாதரி - சடையைத் தரித்தவள், பார்வதி வேணாடு - வேள்+நாடு, கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் திருவிதாங்கூர்ச் சீமையின் பெரும்பகுதி அடங்கிய பிரதேசம். புத்திடங்கொண்ட - புற்றினை இருப்பிடமாகக் கொண்ட கோணாத - நெறிபிறழாத சுந்தரனார் - சுந்தரர் சமயக்குரவர் நால்வரில் ஒருவர் திருவஞ்சைக்களம்- மலைநாடான சேரநாட்டில் (கொச்சியில்) உள்ளது, சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான்

கட்டுமெட்டும் வெகு திட்டமய்யா 1

ரதகெச துரகதமும் - பதாதிகள்
ரவநிதமும் நல்ல நவநிதியும்
குதிரைத் தளகர்த்தரும் - கோட்டைக்
குறித்தனம் செய்குமவர் சுறுக்குங்கண்டேன் 2

துலுக்கர் மராட்டியரும் - குடகரும்
தெலுங்கர் வடுகருடன் கலிங்கரும்
மலுக்கர் வங்காளருடன் - [4]உக்கிர
வாரும்வெடிச் சேவுகர் வீரியரும் 3

பாரா நடக்கிறவர் - பீச்சாண்டிப்
பண்டாரம் எந்தவூர் என்றவுடனே
பேரூர் [5]அவினாசித் - தலமென்று
பேருஞ்சொன் னேன்திங்க ளூருஞ்சொன்னேன் 4

(அரண்மனையில் களவாட நினைத்தல்)

[6]அரண்மனை வாசலிலே - நடக்கிற
ஆக்கினை [7]அரண்மனை நோக்கங்கண்டேன்
இரவில் களவாட - [8]வருவோமென்று
எண்ணியே சோறெடுத் துண்ணநடந்தேன் 5

கடைவீதி கள்தோறுங் - கடைக்கொரு
காசுகொ டென்றேனே கூசாமலே
அடடாப் [9]பீச்சாண்டி - சும்மா
அதக்கிக் குதக்கியேண்டா சுதக்குகிறாய் 6

இந்தாருங் [10]காசுயென்றார் - அவர்கள்
ஈந்தவுட னேகையை ஏந்திக்கொண்டேன்
சந்தோஷ [11]மாச்சுதென்று - நல்ல
[12]சாதமும் வாங்கியே போதவுண்டேன் 7

இரவியன் போய்மறைந்தான் -[13]அம்மாசை
இருட்டுக்குள் திருட்டும் பிரட்டுஞ்செய்ய
[14]திரமுடி யெந்திரமும் - கள்ளத்
தந்திரமும் நல்ல மந்திரமும் 8

மெச்சவே திலதமிட்டேன் - என்னுட
மித்துருக்கும் சத்துராதிக்கும் எத்திசைக்கும்
கச்சுப் புரைதனிலே - இருந்த
கன்னக்கோ லையும்இடை தன்னில்சொருகி 9

சொக்குப் பொடிஎடுத்தேன்- நானும்
சுறுக்குடன் கச்சைகட்டி இறுக்கிக்கொண்டேன்
திக்கெனவே நானெழுந்தேன் - [15]காசித்
திருடருக்கு நானொரு [16]திருடனென்று 10

(களவாட அரண்மனைக்குச் செல்லுதல்)

[17]அரண்மனை தனையடுத்தேன் - பாரா
அடிக்கடி நடக்கிற [18]திடத்தைக்கண்டேன்
சருகுசத்தப் படாமலே - கொத்தவால்
சாவடிக்குள் ளேநல்ல தாவுங்கண்டேன் 11

இருந்தேன் வெகுநேரம் - அவ்விடத்தில்
இரும்பூதம் வந்திடும் பெரும்பூதம்போல்
கருங்காலிக் கட்டைக்கும்வாய் - நாணாக்
கண்டக்கோ டாலியென முண்டக்காரன்போல் 12

எழுந்தேன் [19]அவ்விடம்விட்டு - பின்னையும்
[20]எட்டியேஅடி வைத்துநான் கிட்டவரவே
உழுந்தாட்டுங் கழுந்துபோலே - சேவுகர்
[21]உக்கிரம தாகவே நிற்கையிலே 13

இதுவென்ன மோசமென்றே - [22]மனத்தில்
எண்ணுமுன் னேஒரு கன்னடியன்
எதிரிடும் புலிபோலே - உச்சிமுண்டா
[23]இல்லெக்க வந்துவிட்டாய் என்றுசொல்லவே 14

வடுகப் பயலொருவன் - வெறிப்பூக்கு
மால்வாடு கொங்கவாடு மாறுமாறென்றான்
திடுதிடென் றோடிவந்தேன் - அவ்விடத்தில்
துலுக்கப் பயலொருவன் [24]பெலத்துவந்து 15

அத்தேரி பாணிச்சொத் - தென்று
அதட்டிமி ரட்டியவன் உதைக்கவந்தான்
சுத்தாலைச் சுவருக்குள்ளே - வருகையில்
சுணங்கனென் றொருநாய் குணங்கெடுதி 16

கள்ளென்று லொள்ளென்று தான் -உளைத்ததைக்
கண்டுகொண் டேன்சுவர் ஒண்டிக்கொண்டேன்
சள்ளுச் சள்ளெனவே - இதுவெகு
சள்ளென் றேபிறகு மெள்ளவந்தேன் 17

பிடித்தபி சாசுக்கினி - பெரியோர்கள்
புண்ணாக்குஞ் சோறென்றுஞ் சொன்னார்களே
கடிக்கிற நாய்க்கினிதான் - பெருந்துடைக்
காலில் சதையறிந்து பாலிக்கவே 18

கொடுத்தேன் படுத்ததய்யா - பதையாமல்
குறுக்கிக் கொள்ளவும்வெகு சுறுக்குடனே
....
.... 19

புறகடை தனையடுத்தேன் - அங்கேயொரு
பொக்கவாய்க் கிழவிக்குக் குக்கிருமலாம்
சரட்டுச் சரட்சடெனவே - நீசும்மா
சண்ணென்றே மனத்தில் எண்ணிக்கொண்டேன் 20

[25]காக்குந் தலையாரி - வலம்பய்யன்
கரட்டுமுரட் டெனவே குறட்டையிட்டான்
தூக்கத்தைச் சோதித்துக்கொண்டேன் - சுற்றுத்
திண்ணைச்சுவரைச் சுரங்கமிட இருந்துகொண்டேன் 21

கன்னக் கோலெடுத்தேன் - அருள்மலைக்
[26]காங்கயன் தனைப்போற்றி ஓங்கியிடித்தேன்
வின்னப் படுத்திக்கொண்டேன் - வீட்டுக்குள்
விளக்கினி எரிகிற வெளிச்சங்கண்டேன் 22

சுரங்கத்தின் வாசலிலே - சொக்குப்பொடி
[27]சூத்திர மந்திரத்தைத் தூத்திவிட்டேன்
துரங்கத்தின் மனிதனைப்போல் - காசிராசன்
தூக்கத்தில் [28]சொர்க்கவேளை மார்க்கமுங்கண்டேன். 23

-- தந்தானத் தனதன்னா --

பிரபலம் - கீர்த்தி, சிறப்பு களபகஸ்தூரி - சந்தனமும், கஸ்தூரியும் கஸ்தூரி - கஸ்தூரிமானிடமிருந்து கிடைக்கும் வாசனை மெழுகு. கட்டுமெட்டு - காவல் நிறைந்த மதில் சூழ்ந்த பகுதி ரதகெச துரகதம் பதாதிகள் - தேர், யானை, குதிரை, காலாட்கள். ரவநிதம் - அணிவகுப்பு. நவநிதி - குபேரனின் ஒன்பது வகை நிதிகள்: கச்சபநிதி, கற்பநிதி, சங்கநிதி, நந்தநிதி, நீலநிதி, பதும்நிதி, மகாநிதி, மகாபதுமநிதி, முகுந்த நிதி என்பனவாம். கோட்டைக் குறித்தனம் - கோட்டையை காவல் செய்யும் திறன். சுறுக்கு - சுறுசுறுப்பு குடகர் - சேரநாட்டார் வடுகர் - தமிழகத்தில் வாழும் தெலுங்கு இனத்தவர் உக்கிரவார் - உக்கிராணக்காரன் - களஞ்சியம் காப்பவன் வெடிச்சேவுகர் -வெடிச் சேவகர்- துப்பாக்கி ஏந்தி நிற்போர் வீரியர் - வீரர்கள் பாராநடக்கிறவர் - பாராக்காரன்- காவல் காப்பவன். பீச்சாண்டிப் பண்டாரம் - பரதேசி பேரூர், அவிநாசி - கோவை மாவட்டத்தில் உள்ள ஊர்கள். திங்களூர் - ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர் ஆக்கினை - கட்டளை, உத்தரவு கூசாமல் - நாணமில்லாமல் அதக்கிக் குதக்கிக் கதக்குதல்- கடித்துக்குதப்பி மெல்லுதல்(வெறும் வாயை ஏண்டா மெல்லுகிறாய் என்று பொருள்) ஈந்த - தந்த. போத- போதிய அளவு, விரைவாக இரவியன் - சூரியன் அம்மாசை - அமாவாசை - சூரியனும் சந்திரனும் கூடி நிற்குந் திதி. பிரட்டு - புரட்டு - வஞ்சகம். திரமுடி - திரம் + முடி - உறுதியான முடிச்சு எந்திரம் - மந்திரச் சக்கரம் மெச்ச - புகழ திலதம் - நெற்றிப் பொட்டு மித்துரு - நண்பன். சத்துராதி - சத்துரு - பகைவன். கச்சுப்புரை - அரைப்பட்டிகை. கன்னக்கோல் - சுவரகழ் கருவி சொக்குப்பொடி - மயக்கும்பொடி. சுறுக்கு - விரைவு. காசியில் - காசிநகரில் சருகு சத்தம் - காய்ந்த இலையின் ஓசை கொத்தவால் சாவடி - நகரத்தின் கடைத்தெரு தாவு- உறைவிடம், பள்ளம் இரும்பூதம் - இருக்கின்ற பூதம் கருங்காலிக் கட்டை - கருங்காலி மரத்தின் கட்டை. வாய்நாணா - முனை மழுங்காத கோடாலி - மரத்தைப் பிளக்கும் கோடரி பின்னை - பின்பு உழுந்து- உளுந்து கழுந்து - தேய்ந்து மழுங்கித் திரண்ட வடிவமான மாவரைக்கும் கல். உக்கிரம் - கோபம், கடுமை கன்னடியன் - கன்னடநாட்டினன் உச்சிமுண்டன் - பைத்தியக்காரன் உச்சிமுண்டா - பைத்தியக்காரா. இல் - வீடு. எக்க - எதற்கு இல்லெக்க - (இங்கு எதற்கு) வீட்டிற்கு எதற்கு வந்தாய். வடுகன் - தெலுங்கன் வெறிப்பூக்கு - வெறி கொண்ட மால்வாடு - புலையன் கொங்கவாடு - திருடன் மாறுமாறு - அடிஅடி. பெலத்து - வேகமாக. அத்தேரி பாணிச்சொத் - வேசி மகன் என்னும் பொருளுடைய உருதுச்சொல்.

சுத்தாலை- சுற்றாலை- சுற்றுச்சுவர், பிரகாரம். சுணங்கன் - நாய். உளைத்தல் - ஊளையிடுதல். சள்ளுச் சள்ளெனல்- நாய்குரைக்கும் ஒலிக்குறிப்பு. சள்ளு - தொந்தரவு. மெள்ள - மெதுவாக பிசாசு - பேய். துடை - தொடை என்னும் உறுப்பு. பாலிக்க - கொடுக்க. குறுக்கி - உடலைச்சுருக்கி சுறுக்குடன் - விரைவுடன். புறகடை - புறக்கடை- வீட்டின் பின்புறம். பொக்கவாய் - பல்லில்லாத வாய் குக்கிருமல் - குக்கு + இருமல், வயிறு குலுங்க இருமுதல். சரட்டுச் சரட்டெனல் - வீரைந்து ஒலிக்கும்.ஓர் ஒலிக்குறிப்பு - சண்ணென்று- சண்ணுதல்- வைதல் தலையாரி - ஊர்க்காவற்காரன். வலம்பய்யன் - தலையாரியின் பெயர். கரட்டுமுரட்டெனல்- ஓர் ஒலிக்குறிப்பு குறட்டை - உறக்கத்தில் மூச்சுவிடும் ஒலி சுரங்கமிட- கன்னமிட கன்னக்கோல் - சுவரைத்துளையிடும் கருவி அருள்மலைக் காங்கயன் - அருள்மலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமான். ஓங்கி - வலுவாக. வின்னப்படுத்தி - சிதைத்து சுரங்க வாசல் - நிலவறை, தரைமட்டத்திற்கு அடியில் உள்ள பாதை. தூத்தி - தூற்றி - தூவுதல், இறைத்தல். துரங்கத்தின் மனிதன் - கந்தர்வன். சொர்க்கவேளை - தேவலோகம், துறக்கம். இங்கு நல்ல தூக்கம், கனவு.

பாடவேறுபாடு - 1. காசிநகர் 5. அவநாசி 8 வருவமென்று 9. பூச்சாண்டி
10. காசுமென்று 11 மாகவுமே 12. சாதங்கள் 14 தரைமுடி 15. காசியில்
16 திருடரென்றேன் 18 திறத்தைக்கண்டேன், 19. இடம்விட்டு
20 எட்டிவைத்து நான்கிட்டவரவும் 21. உக்கிரமாகவே 22 மனத்தினில்
23 இல்லெக்க பந்துவிட்டானென்று 24 புலத்துவந்து 26 காங்கையன்
27. சூஷ்த்திர மந்திரத்தை ஏத்திவிட்டேன் 28. சொக்குவளை.

சுவடிச்சொல் - 2 பிறபலமும் 3 அரமனை 4. உக்கிறவாரு 6. அரமனை 7. அரமனை
13 அம்மாவசை 17. அரமனை 25 காற்க்குந்

(Kācinakaraic cuṟṟip pārttal)

Taru

aḻakuḷḷa kācitaṉṉil - muṉṉūṟṟu
aṟupattu nāluviṭip pirapalamum
kaḷapakas tūriyuḷḷa - araṇmaṉaik
kaṭṭumeṭṭum veku tiṭṭamayyā

ratakeca turakatamum - patātikaḷ
ravanitamum nalla naṇvanitiyum
kutirait taḷakarttarum - kōṭṭaik
kuṟittaṉam ceykumavar cuṟukkuṅkaṇṭēṉ

tulukkar marāṭṭiyarum - kuṭakarum
teluṅkar vaṭukaruṭaṉ kaliṅkarum
malukkar vaṅkāḷaruṭaṉ - ukkira
vārumveṭic cēvukar viriyarum

.pārā naṭakkiṟavar - piccāṇṭip
paṇṭāram entavūr eṉṟavuṭaṉē
pērūr aviṉācit - talameṉṟu
pēruñcoṉ ṉēṉtiṅka ḷūruñcoṉṉēṉ

(Araṇmaṉaiyil kaḷavāṭa niṉaittal)

araṇmaṉai vācalilē - naṭakkiṟa
ākkiṉai araṇmaṉai nōkkaṅkaṇṭēṉ
iravil kaḷavāṭa - varuvōmeṉṟu
eṇṇiyē cōṟeṭut tuṇṇanaṭantēṉ

kaṭaivīti kaḷtōṟuṅ - kaṭaikkoru
kācuko ṭeṉṟēṉē kūcāmalē
aṭaṭāp piccāṇṭi - cummā
aṭakkik kuṭakkiyēṇṭā kaṭakkukiṟāy

intāruṅ kācuyeṉṟār - avarkaḷ
īntavuṭa ṉēkaiyai ēntikkoṇṭēṉ
cantōṣo māccuteṉṟu - nalla
cātamum vāṅkiyē pōtavuṇṭēṉ

iraviyaṉ pōymaṟaintāṉ - ammācai
iruṭṭukkuḷ tiruṭṭum piraṭṭuñceyya
tirumuṭi yentiramum - kaḷḷat
tantiramum nalla mantiramum

meccavē tilatamiṭṭēṉ - eṉṉuṭa
mitturukkum catturātikkum etticaikkum
kaccup puraitaṉilē - irunta
kaṉṉakkō laiyumiṭai taṉṉilcoruki

cokkup poṭṭieṭuttēṉ - nāṉum
cuṟukkuṭaṉ kaccaikaṭṭi iṟukkikkoṇṭēṉ
tikkaṉavē nāneḻuntēṉ - kācit
tiruṭarukku nāṉoru tiruṭaṉeṉṟu

(Kaḷavāṭa araṇmaṉaikkuc cellutal)

araṇmaṉai taṉaiyaṭuttēṉ - pārā
aṭikkaṭi naṭakkiṟa tiṭattaikkaṇṭēṉ
carukucattap paṭāmalē - kottavāl
cāvaṭikkuḷ ḷēnalla tāvuṅkaṇṭēṉ

iruntēn̲ vekunēram - avviṭattil
irumpūtam vantiṭum perumpūtampōl
karuṅkālik kaṭṭaikkumvāy - nān̲āk
kaṇṭakkō ṭāliyen̲a muṇṭakkāran̲pōl

eḻuntēn̲ avviṭamviṭṭu - pin̲n̲aiyum
eṭṭiyēaṭi vaittunān̲ kiṭṭavaravē
uḻuntāṭṭuṅ kaḻuntupōlē - cēvukar
ukkirama tākavē nir̲kaiyilē

ituven̲n̲a mōcamen̲r̲ē - man̲attil
eṇṇumun̲ n̲ēoru kan̲n̲aṭiyan̲
etiriṭum pulipōlē - uccimuṇṭā
illekka vantuviṭṭāy en̲r̲ucollavē

vaṭukap payaloruvan̲ - ver̲ippūkku
malvāṭu koṅkavāṭu mār̲umār̲en̲r̲ān̲
tiṭutiṭen̲ r̲ōṭivantēn̲ - avviṭattil
tulukkap payaloruvan̲ pelattuvantu

attēri pān̲iccot - ten̲r̲i
ataṭṭimi raṭṭiyavan̲ utaikkavantān̲
cuttālaic cuvarukkuḷḷē - varukaiyil
cun̲aṅkan̲en̲ r̲orunāy kun̲aṅkeṭuti

keḷḷen̲r̲u loḷḷen̲r̲utān̲ - uḷaittataik
kaṇṭukon̲ ṭēn̲cuvar oṇṭikkoṇṭēn̲
caḷḷuc caḷḷen̲avē - ituveku
caḷḷen̲ r̲ēpir̲uku meḷḷavantēn̲
piṭittapi cācukkin̲i - periyōrkaḷ
puṇṇākkuñ cōr̲en̲r̲uñ con̲n̲ārkaḷē
kaṭikkir̲a n̲āykkin̲itān̲ - peruntuṭaik
kālil cataiyar̲intu pālikkavē

koṭuttēn̲ paṭuttatayyā - pataiyāmal
kur̲ukkik koḷḷavumveku cur̲ukkuṭan̲ē
. . . .
. . . .

puṟakaṭai taṉaiyaṭuttēṉ - aṅkeyoru
pokkavāyk kiḻavikkuk kukkirumalām
caraṭṭuc caraṭṭeṉavē - nīcummā
caṉṉeṉṟē maṉattil eṇṇikkoṇṭēṉ

kākkun talaiyāri - valampayyaṉ
karaṭṭumuraṭ ṭeṉavē kuraṭṭaiyiṭṭāṉ
tūkkattaic cōtittukkoṇṭēṉ - cuṟṟut
tiṇṇaiccuva raiccuraṅka miṭairuntukoṇṭēṉ

kaṇṇak kōleṭuttēṉ - aruḷmalaik
kāṅkayaṉ taṉaipōṟṟi ōṅkiyiṭittēṉ
viṇṇap paṭuttikkoṇṭēṉ - viṭṭukkuḷ
viḷakkiṉı erikiṟa veḷiccaṅkaṇṭēṉ

curaṅkattiṉ vācalilē - cokkuppoṭi
cūttira mantirattait tūttiviṭṭēṉ
turaṅkattiṉ maṉitaṉaippōl - kācirācaṉ
tūkkattil corkkavēḷai mārkkamuṅkaṇṭēṉ.

-tantāṉat taṉataṉṉā-

Sight seeing in Banāras

28. Oh, fine and lovely was the city of Banāras,
With its famous streets three hundred
And sixty four, and the king's palace
With its well-guarded ramparts,
And redolent with odorous musk and sandalpaste;
Chariotry, elephantry, cavalry and infantry-
Were all there in parade formation!
All the nine kinds of wealth were in plenty,
Therein. Troops of horsemen moved about,
Briskly, keeping watch in the city. I saw
Among them men from Cēra land, Telugus
Vaṭukars, Kaliṅkas, Malukkas and Bengalis;
Storekeepers and cooks and men in-charge
Of granaries; gunners, soldiers, sentries

Walking their beat, were all there,
They asked me; 'You frightful bugbear,
You mendicant! from where do you come?"
I mentioned my name and places
Such as Pērur, Avināci, and Tiṅkaḷūr!

Planning to burgle the palace

I walked around and noted down
The appointments around the king's place;
Deciding to steal from the palace,
I spent my time in the busy streets
I ate my meal of cooked rice
And in the market-place begged
Unashamedly from shop to shop,
Pestering them with my talk; 'Hey, you,
You bugbear of a beggar! Why are you talking rot?
With no sense? Here, - take this coin!.
Happily I stretched my hands to receive
Their alms and used it all to eat again,
My fill! The sun disappeared in the west
Conveniently for me, it was the night
Of the new moon, ideal for fraud
And plunder! I prepared myself
For the job ahead; with a well-knotted rope,
Guile and wile and spells of magic,
And decked my forehead with a fine mark
(Well known to all my friends and foes
In all directions). From my waist-pouch
I took my iron-jemmy and struck it
Into my sash; checked my magic powder,
And quickly rose to show my mettle
Before the thieves of Banāras!

Proceeding to the palace for stealing

As I neared the palace I saw
The vigilant sentries walking about
In fixed frequency, firm-footed;
Without treading on the dry leaves
Lest they betray my presence by their rustling,
I went past the Guard-house
And bided my time inside a pit;
Like a bigger goblin driving the local goblin,
Like an axe whose edge remains unblunted
Even by an adamantine black thorn-tree,
I rose from my hiding place, a sturdy ruffian,
And stepped forth eight paces;
But to my dismay, I found the king's servants
Fiercely standing, solid and hard as a grinding-stone.
As a stood bewildered not knowing what to do,
A Kannadiga sprang like a tiger before me,
Crying! "you madcap! why have you come
To this place?"; and another watchman,
A Vaṭuka, shouted aloud! 'A thief! A thief!
A base wretch! Beat him! Beat him!'
And I ran helter-skelter away from them.
A Muslim guard swiftly ran upto me,
Abusing me roundly in vile words!
'You bastard, you son of a bitch, you whoreson!'
And with many a threat, tried to kick me
And beat me; and I ran and ran.
Near the rampart round, a fierce dog
Barked savagely at all this noise;
I struck close to the wall in fear,
Worried to death at this new trouble.
I moved away slowly and silently;
The wise have said; 'feed the goblin

With food or oil cake!: 'and so to the dog
That tried to taste the flesh of my thighs,
I gave something to eat; and shrinking myself
As well as I could, I quickly reached
The rear of the palace. An old toothless crone
Was coughing in racking bout after bout;
Abusing her and inwardly cursing her,
I came upon the headman Valampayyaṉ
Fast asleep, loudly snoring, 'Grrh, Brrh!
I tested if he was really sleeping,
And then satisfied, I decided to make a hole
In the wall of the mansion;
Taking out my iron-jemmy, I prayed
To Lord Kāṅkēyaṉ of Aruḷmalai
Before attacking the wall with my tool.
I broke the wall and through the gap,
Saw lights burning within the house,
At the entrance to my tunnel, I strewed
My magic powder and chanted my Mantras,
Upon his bed in his chamber I saw
The king of Kāci in slumber deep,
Handsome as a Gandharva in Heaven.

(காசிராசனின் அரண்மனையில் களவு செய்தல்)

விருத்தம்

29 *வரம்பெற்ற [1]மாமுனிவ ரோதும் திங்கள்*
[2]மாநகரில் வந்தஅரு ணாசலப் பிரானைக்
கரம்பற்றி மலரெடுத்துக் கொண்டு தூவிக்
கருத்திலேயி ருத்தியினிக் காசி ராசன்
விரும்பிப்பொன் னாலமைத்தப் படுக்கை வீட்டை
மின்னுகன்னக் கோலதனால் கன்ன மிட்டு
சுரங்கத்தின் வாசலிலே வந்து [3]பூந்து
துணிவுடனே களவுசெய்யத் [4]தொடங்கி னேனே.

ஓதும் - ஓதுதல் - மந்திரஞ் செபித்தல், பாடுதல். திங்கள் மாநகர் - திங்களூர் அருணாசலப்பிரான் - சிவன் கருத்திலே - உள்ளத்திலே, மனத்திலே படுக்கை வீடு - படுக்கையறை, பள்ளியறை மின்னுகன்னக்கோல் - ஒளிவிடும் கன்னக்கோல் கன்னமிட்டு- கொள்ளையிட்டு. சுரங்கவாசல் - நிலவறை வாசல் பூந்து - புகுந்து களவு செய்ய - திருட

பாடவேறுபாடு - 1 முனிதொழும் திங்க ளூரில் 2. வள்ளல்எங்கள் அருள்மலைப் பிரானைப் போற்றி 3 புகுந்து 4 துடங்கி னேனே

(Kāciırācanin aranmanaiyil kaḷavu ceytal)

Viruttam

varamperra māmuniva rōtum tiṅkaḷ
mānakaril vantaaru ṇācalap pirāṉaik
karamparri malareṭuttuk koṇṭu tūvik
karuttilēyi ruttiyiṉik kāci rācaṉ
virumpippoṉ ṉālamaittap paṭukkai viṭṭai
miṉṉukaṉṉak kōlataṉāl kaṉṉa miṭṭu
curaṅkattiṉ vācalilē vantu pūntu
tuṇivuṭaṉē kaḷavuceyyat toṭaṅki ṉēṉē.

Proceeding to burgle the palace

29. Meditating upon Lord Aruṇācala
Enshrined in Tiṅkaḷūr adored by Sages blest,
And mentally offering flowers to Him
With hands folded in worship pious,
I crossed into the golden bedchamber
Of the king of Kāci (having broken through
The wall with my jemmy bright)
With intent bold to burgle the palace.

(காசிராசனின் அழகும் அரண்மனைச் சிறப்பும்)

தரு

– தன்ன தன்ன தானா த்ன்னதன்ன
தன்ன தனதன தன்னா –

30. மன்னர் கிரீடபதி - மகராசன்
மாலுக்கச் சேரியின் ஓலக்கத்தைச்
சொன்னால் வாய்மணக்கும் - துரைமகன்
தூங்கும் மஞ்சம்மீதில் பாங்குடனே 1

நித்திரை தான்செய்கிற - துரைமகன்
நேர்த்தியை நானங்கே பார்த்தனய்யா
சத்திரிய [1]குலவசீகரன் - கொண்ட
[2]சத்தியுஞ் சிவனும்போல் நித்திரைசெய்தான் 2

(பலவகை அணிகலன்களைக் கவர்தல்)

மச்சுமேல் ஏறிக்கொண்டேன் - பார்க்கவும்
வாச்சுது பொட்டிகள்பொன் காச்சமரம்போல்
வச்சிரக் கடையங்களும் - நல்ல
வளமுள்ள பணிதிகழ் பளபளென 3

தங்கச் சரப்பணியும் - அரைஞாண்
சாதிமுத் தொண்டொடிகள் சோதிமின்ன
செங்கையில் முருகுடனே - தேசத்தைத்
திறைகொள்ளும் திருவும் பிறையுடனே 4

பொட்டியிலே இருந்த - [3]உடைமையைப்
பூட்டிக்கொண் டேன்தலை ஆட்டிக்கொண்டேன்
சட்டம தாகவுமே - சாலுவை
சரப்பணி [4]முருகுடன் கரப்பணியும் 5

முத்துத் துராய்கள்வைத்த - பாவையும்
முகத்தில் பளபளப்பாய்ச் சுகித்துக்கொண்டேன்
சித்தேச ரூபனைப்போல் - நானும்
தேடியே நிலைக்கண் ணாடியிலே 6

மூத்த தலைமகன்போல் - என்னிட
முன்னழகை யும்நல்ல பின்னழகையும்
பார்த்தேன் மனதார - இந்தப்
பார்த்திபன் அழகிலும் நேர்த்தியய்யா 7

(பலவகை நாணயங்களைக் கவர்தல்)

பணத்தையும் விளக்குமுன்னே - நோட்டங்கள்
பார்த்துக் [5]கணக்குத்தொகை சேர்த்தனய்யா
கணக்குடன் கோட்டையைவிட்டு - நூறுபொன்
காசிப்பணம் நூறுபொன் நேசமுடன் 8

ராச கோபாலி நூறுபொன் - வீர
ராயனும் நேயமதாய் ஆயிரம்பொன்
பேசிய மதுரைப்பணம் நூறுபொன் - நல்ல
[6]பெஞ்சைநகர்ப் பணம்நானூற் றஞ்சுபொன்னாம் 9

உளுந்தூர்ப்பணம் நூறுபொன் - நல்ல
ஒயிலுடன் மயிலிப்பணம் நூறுபொன்
வளம்பெறும் [7]சுலுத்தானி - நூறுபொன்
வாய்ப்புடன் கண்டிராயன் நாற்பதுபொன்னாம் 10

நாகரம் நூறுபொன்னாம் - நல்ல
நவாபு பணமும் [8]மூவிருநூறுபொன்
[9]ஆகத்தொகை யதுதான்கணக்கினில் - ரண்டு
ஆயிரம் பொன்னுந்தொ ளாயிரம்பொன்னாம் 11

முடிப்பதை முடிந்துகொண்டேன் - மேல்மிச்சம்
மூப்புடன் கண்டிராயன் நாற்பதுபொன்
தடத்துச் செலவுக்கினி - வேணுமென்று
தனியே முடிந்துவெகு கனிவுடனே 12

(வடகரை நாட்டிற்கு மீண்டும் வருதல்)

சிட்டுப் பறந்தாற்போல் - காசித்
தேசத்தை விட்டுமொரு மாசத்திலே
பட்டணந் தனையடுத்தேன் - [10]சக்கர
பாணித்துரைக் கஞ்சுபொன் [11]காணிக்கைவைத்தேன் 13

மறுநாள் எழுந்திருந்தேன் - [12]பெங்களூர்
[13]மாட்டள்ளி சாம்பள்ளித் தாட்டியேவந்தேன்
தறுவாயிலே [14]கணவாய் - தாண்டவுந்
தையல்கெட்டி முத்தாள்மீதில் மையலானேன் 14

[15]கொலைகாரியை நினைத்தேன் - என்னுட
கொஞ்சப்புத் [16]தியாலேவெகு அஞ்சக்காரன்போல்
சலுதாய் நடந்துவந்தேன் - காவேரிபுரம்
[17]தாட்டியே வடகரை நாட்டில்வந்தேன் 15

- தந்தானனாத தானனாதனனா-

கிரீடபதி - முடிமன்னன் மகராசன் - பேரரசன். மாலுக்கச்சேரி - காசி அரசனின் பெயராக இருக்கலாம் ஓலக்கம் - சபை, சபாமண்டபம் மஞ்சம் - கட்டில். பாங்கு - அழகு நித்திரை - உறக்கம் சத்திரிய குலம் - அரச குலம் வசீகரன் - அழகு மிக்கவன். சத்தி சிவன் - உமையும் சிவனும் மச்சு - மேல்மாடம் வாச்சுது - வாய்த்தது. காச்ச - காய்த்த வச்சிரக்கடையம் - வைரத்தினாலான கங்கணம். பணி - அணிகலன், பட்டாடை. சரப்பணி - வைரம் பதித்த கழுத்தணி அரைஞாண் - இடுப்பில் கட்டும் கயிறு சாதிமுத்தொண்டொடி - நல்ல முத்துக்களாலான ஒளி பொருந்திய வளையல். செங்கை - அழகிய சிவந்த கை முருகு - அழகு, இளமை திறை - அரசிறை, கப்பம். திரு - செல்வம், சிறப்பு. பிறை - பிறை போன்ற தலையணி உடைமை - அணிகலன். சாலுவை - பொன்னாடை. முருகு - காதணி. கரப்பணி - கரம்+பணி - கை அணிகலன். முத்துத்துராய்கள் வைத்த பாவை - முத்தாலான தலையணிகளுடன் கூடிய முக கவசம். சுகித்து - இன்பமாகி, மகிழ்ந்து. சித்தேசரூபன் - சாலவித்தை கற்றவன், மாயக்காரன். மூத்த தலைமகன் - முடிமன்னன், அரசன். பார்த்திபன் - அரசன், காசி நாட்டரசனைக் குறித்தது. விளக்கு - தீபம். நோட்டம் - நாணய சோதனை. கோட்டை - அரண்மனை. காசிப்பணம் - காசிநாட்டில் வழங்கி வரப்பெற்ற பணம். ராசகோபாலி, வீரராயன் - மைசூர் இராச உடையார்கள் ஆட்சியில் கொங்கு நாட்டில் வழங்கி வரப்பெற்ற நாணய (பொன்) வகைகள். மதுரைப்பணம் - மதுரையில் வழங்கிவரப்பெற்ற பணம். பெஞ்சைநகர்ப்பணம் - பெங்களூரில் வழங்கிவரப்பெற்ற பணம். உளுந்தூர்ப்பணம் - உளுந்தூர்ப்பேட்டையில் வழங்கி வரப்பெற்ற பணம். மயிலிப்பணம் - மைசூர்ப்பட்டணத்தில் வழங்கி வரப்பெற்ற பணம் சுலுத்தானி - முகமதியர்களால் வழங்கிவரப்பெற்ற பணம் கண்டிராயன் - மைசூர் இராச உடையார் மன்னர்களால் வழங்கிவரப்பெற்ற பணவகை. நாகரம் - பணவகை நவாபுபணம் - ஆர்க்காட்டு நவாபுகள் காலத்தில் பயன்படுத்திப்பெற்ற நாணயம். முடிப்பு - பணமுடிச்சு மேல்மிச்சம் மூப்புடன்- மேல் துணியின் முனையில். தடம் - வழி சிட்டு - குருவி வகை, சக்கரபாணித்துரை - சக்கரப் படையைக் கையிலுடைய திருமால் காணிக்கை - கடவுளுக்கு அளிக்கப்பெறும் பொருள் மாட்டள்ளி சாம்பள்ளி - பெங்களூரிலிருந்து கொங்கு நாட்டிற்கு வருகிற வழியில் உள்ள ஊர்கள், இவ்வூர்கள் மேட்டூர் அணைக்குள் மறைந்து விட்டன தறுவாய் - அந்த நேரத்தில். கணவாய் - மலையிடையுள்ள வழி. தையல் - பெண். அஞ்சக்காரன் - அஞ்சற்காரன் - தபாற்காரன் சலுதாய் - விரைவாய். காவேரிபுரம் - வடகரை நாட்டில் உள்ள மேட்டூர் அணையில் மறைந்த ஊர்களில் ஒன்று தாட்டி - தாண்டி. வடகரை நாடு - கொங்குநாட்டின் 24 நாடுகளில் ஒன்று, பவானி யாற்றின் வடகரையில் உள்ளது

பாடவேறுபாடு - 1 குலவசீரன் 2 சத்தியஞ் சிவனைப்போல் 3. உடமையைப் 4. முருக்குடன் 5. கணக்கைக் கூட்டிச் 6. பெஞ்சைப் பணங்கள் நூற்றஞ்சு பொன்னாம் 7 சுல்தானி 8. இருநூறுபொன் 9 ஆகத்துகை 11. காணிக்கைதந்தேன் 12 வெங்களூர் 13 மாட்டளி சாம்பளித் தாண்டியே வந்தேன் 16. தியாலேயினி 17. தாண்டியே.

சுவடிச்சொல் - 10. சக்கிற 14. கணுவாய் 15. குலைகாரியை நினைந்தேன்.

(Kācirācaṉiṉ aḻakum araṇmaṉaic ciṟappum)

Taru

maṉṉar kirīṭapati - makarācaṉ
mālukkac cēriyiṉ ōlakkattaic
coṉṉāl vāymaṇakkum - turaimakaṉ
tūṅkum mañcammītil pāṅkuṭaṉē

nittirai tāṉceykiṟa - turaimakaṉ
nērttiyai nāṉaṅkē pārttaṉayyā
cattiriya kulavacīraṉ - koṇṭa
cattiyuñ civaṉumpōl nittiraiceytāṉ

(Palavakai aṇikalaṉkaḷaik kavartal)

maccumēl ēṟikkoṇṭēṉ - pārkkavum
vāccutu poṭṭikaḷpoṉ kāccamarampōl
vaccirak kaṭaiyaṅkaḷum - nalla
vaḷamuḷḷa paṇitikaḷ paḷapaḷeṉa

taṅkac carappaṇiyum - araiñāṇ
cātimut toṇṭikaḷ cōtimiṉṉa
ceṅkaiyil murukuṭaṉē - tēcattait
tiṟaikoḷḷum tiruvum piṟaiyuṭaṉē

poṭṭiyilē irunta - uṭaimaiyaip
pūṭṭikkoṇ ṭēṉtalai āṭṭikkoṇṭēṉ
caṭṭama tākavumē - cāluvai
carappaṇi murukuṭaṉ karappaṇiyum

muttut turāykaḷvaitta - pāvaiyum
mukattil paḷapaḷappāyc cukittukkoṇṭēṉ
cittēca rūpaṉaippōl - nāṉum
tēṭiyē nilaikkaṇ ṇāṭiyilē

mūtta talaimakaṉpōl - eṉṉiṭa
muṉṉaḻakai yumnalla piṉṉaḻakaiyum
pārttēṉ maṉatāra - intap
pārttipaṉ aḻakilum nērttiyayyā

(Palavakai nāṇayaṅkaḷaik kavartal)

paṇattaiyum viḷakkumuṉṉē - nōṭṭaṅkaḷ
pārttuk kaṇakkuttokai cērttaṉayyā
kaṇakkuṭaṉ kōṭṭaiyaiviṭṭu - nūṟupoṉ
kācippaṇam nūṟupoṉ nēcamuṭaṉ

rāca kōpāli nūṟupoṉ - vīra
rāyaṉum nēyamatāy āyirampoṉ
pēciya maturaippaṇam nūṟupon - nalla
peñcainakarp paṇamnāṉūṟ ṟañcupoṉṉām

uḷuntūrppaṇam nūṟupoṉ - nalla
oyiluṭaṉ mayilippaṇam nūṟupoṉ
vaḷamperum culuttāṉi - nūṟupoṉ
vāyppuṭaṉ kaṇṭirāyaṉ nāṟpatupoṉṉām

nākaram nūṟupoṉṉām - nalla
navāpu paṇamum mūvirunūṟupoṉ
ākattokai yatutāṉ kaṇakkiṉil - raṇṭu
āyiram poṉṉunto ḷāyirampoṉṉām

muṭippatai muṭintukoṇṭēṉ - mēlmiccam
mūppuṭaṉ kaṇṭirāyaṉ nāṟpatupoṉ
taṭattuc celavukkiṉi - vēṇumeṉṟu
taṉiyē muṭintuveku kaṉivuṭaṉē

(Vaṭakarai nāṭṭiṟku mīṇṭum varutal)

ciṭṭup paṟantāṟpōl - kācit
tēcattai viṭṭumoru mācattilē
paṭṭaṇan taṉaiyaṭuttēṉ - cakkara
pāṇitturaik kañcupoṉ kāṇikkaivaittēṉ

maṟunāḷ eḻuntiruntēṉ - peṅkaḷūr
māṭṭaḷḷi cāmpaḷḷit tāṭṭiyēvantēṉ
taṟuvāyilē kaṇavāy - tāṇṭavun
taiyalkeṭṭi muttāḷmītil maiyalāṉēṉ

kolaikāriyai niṉaittēṉ - eṉṉuṭa
koñcapput tiyālēveku añcakkāraṉpōl

calutāy naṭantuvantēṉ - kāvēripuram
tāṭṭiyē vaṭakari nāṭṭilvantēṉ.
- tantāṉa ṉāta tāṉaṉātaṉaṉā -

The splendour of the king's palace and its beauty

30. Oh! it was a sight beautiful and splendid!
To speak of the greatness of the durbar-hall
Of the crowned monarch, the great king,
Were sweet and fragrant to the tongue!
I saw happily the beautiful sight,
Of the charming Kshatriya Prince and his wife,
In slumber sweet upon the royal bed,
Even like Civa with his spouse Pārvati.

Pakaletti seizing varieties of ornaments

Climbing the stairs, in the first floor
I saw chests rich with their contents
Even like gold-yielding trees!
Diamond bracelets; gold collars shining bright;
Waist-chains made of gold; bangles
Overlaid with pedigree-pearls;
Twisted bands of gold for the hand; wealth
From the revenue of the land entire
Congealed in gold; crescent-shaped jewel
For the head; all these jewels found in the chests
I adorned myself with, nodding my head
In exultation great! Shawls, necklaces,
Wristlets, a precious mask for the face
Bejewelled with pearls - these I put on,
And enjoyed my own appearance
Standing before a full length mirror.
Like a magician transformed or evenlike
The first Citizen of country-

The king himself, I looked, magnificent!
I enjoyed the sight
Of my own splendorous figure,
Seen from the front and also from behind
From the reflection in the mirror :
Truly the king of Kāci is a handsome man!

Seizing various specie of gold coins

In the light of the lamp I examined
The different currencies and reckoned
Their aggregate value;
From the palace I plundered these:
One hundred coins of Kāci gold; lovingly I took,
Rājakōpali coins one hundred; Vīrarāyaṉ coins,
One thousand; coins current in Maturai one hundred;
Bangalore gold coins, four hundred and five;
Coins current in Uḷundūrpet one hundred;
Mayili coins of gold, one hundred;
Coins used by Mohammedans-Sultani gold -
One hundred; Kaṇṭirāyaṉ gold current in Mysore,
Forty sovereigns; Nākaram gold one hundred pieces;
Nawab's coins, six hundred goodly pieces -
I reckoned two thousand and nine hundred
Pieces of gold altogether, which I gathered
Into a bag securely tied;
Of this I took the forty pieces of Kaṇṭirāyaṉ gold,
Tied at the end of my upper cloth for immediate use.

Returning to Vaṭakara country

Swift as a swallow I left Banāras,
And in the space of a month, came to Paṭṭaṇam
I offered five sovereigns to the Go d Chakrapāṇi
(For favours received) Rising early the next day,

I resumed my journey southwards,
Crossing Bangalore, Māṭṭaḷḷi and Sāmpaḷḷi
On the way back to Koṅku country
Travelling through the mountain-pass
I suddenly remembered
The murderous enchantress, the damsel Keṭṭimuttāl!
Losing the little wit I had, in the tide
Of returning passion, rapidly I walked
Like a postman on duty and crossed
Kavēripuram to reach Vaṭakarai again.

(தாசியின் மனைக்கு மீண்டும் வருதல்)

விருத்தம்

31 செந்திரு மடந்தை [1]யோதும் திங்கள்மா நகரில் மேவும்
சந்திர [2]நாதர் பெற்ற சண்முகன் தன்னை வாழ்த்தி
விந்தைசேர் வானி யூரில் [3]மெல்லியல் மனையைத் தேடி
வந்துநான் அவளுக் கீய்ந்த வளமையை [4]உரைத்திட் டேனே.

செந்திரு - திருமகள். மடந்தை - பெண் ஓதும் - செபஞ்செய்யும், பாடும் திங்கள்மாநகர் - திங்களூர். மேவும் - பொருந்தும் சந்திரநாதர் - சந்திரனைத் தலையில் அணிந்த சிவன், சந்திரமௌலீஸ்வரர். சண்முகன் - முருகப்பெருமான். விந்தைசேர் - சிறப்புமிகுந்த வானியூர் - பவானி எனும் ஊர். மெல்லியல் - பெண், இங்கு தாசி கெட்டிமுத்தாள் மனை - வீடு. ஈய்ந்த - கொடுத்த வளமை - மாட்சிமை.

பாடவேறுபாடு - 1. சூழ்ந்த திங்களூர் செழிக்க மேவும் 2. சேகரனார் 3. மெல்லிகை
4. உரைக்கின் றேனே.

(Tāciyiṉ maṉaikku mīṇṭum varutal)

Viruttam

centiru maṭantai yōtum tiṅkaḷmā nakaril mēvum
cantira nātar peṟṟa caṇmukaṉ taṉṉai vāḻtti
vintaicēr vāṉi yūril melliyal maṉaiyait tēṭi
vantunāṉ avaḷuk kīynta vaḷamaiyai uraittiṭ ṭēṉē.

Returning to the Temple-Dancer's house

31. Offering prayers inwardly to the Lord, Caṇmuka
Sired by Civa with a crescent-moon adorned,
And enshrined in Tiṅkaḷūr ever-adored by Goddess Lakshmi,
I went in search of the house
Of the gentle belle Keṭṭimuttāḷ
I shall now relate the sordid tale
Of how I gave away all I had to the dame.

(தாய்க்கிழவியும் தாசியும் வரவேற்றல்)

தரு (நீலிச்சிந்து)

— தந்தானத் தனதன தனனா
தனதான தத்தனா —

32 வடகரை நாட்டிலுயர் - திரு
வானிகூட லுக்கினி நானும்வந்து
கடைவீதி யில்புகுந்தேன் - அந்தக்
கன்னிகை யாளிட தன்மனையில் 1

பூந்தேன் புலிபோலே - புலி
போனுக்குள் சிக்கவே தானுங்கண்டு
காந்தாரி போல்கிழடி - வந்து
கையெடுத்துக் கும்பிட்டு அய்யாவென்றாள் 2
அப்பா மருமகனே - வானி
[2]ஆற்றிலொரு காலும் சேற்றிலொரு காலும்
வைப்பாரோ என்சாமி - நீயும்
வாடிக்கை யாகவே கூடிக்கொள்ள 3

கெட்டிமுத்து மாதை - விலைக்
கிரயமாக வேமுறி தரேனென்றாள்
கெட்டிமுத்தாள் ஓடிவந்து - என்னைக்
கெஞ்சியே உன்னிட தஞ்சமென்றாள் 4

பொறுத்தார் அரசாள்வார் - இன்னம்
[3]பொங்குவார் பங்கப்பட்டேங்குவார்
பொறுமை பொறுத்ததுரை - உன்னைப்
போலே கிடைக்குமோ ஞாலத்திலே 5

கோபம் பொறுக்கவேணும்- ஆசை
கொண்டபேர்க்கு ரோசம் உண்டோவென்றாள்
சோப விடாய்தீர - [4]நேற்றுச்
சொப்பனந் தன்னிலே மெய்ப்புடனே 6

சாமிவர வுங்கண்டேன் - எங்கள்
தரித்திர தோஷமுந் தீரக்கண்டேன்
காமவெறி [5]யதனைக் - கண்ணில்
கட்டிவைத் தாப்போலே கொட்டுதய்யா 7

செய்த குற்றங்குறையைச் - சொல்லித்
தீருமென்றாள் மையல் தீருமென்றாள்
கொய்த மலரணைமேல் - என்னைக்
கூடிக்கு லாவியேமுத் தாடிக்கொண்டாள் 8

(தாய்க்கிழவியின் பொய்வார்த்தை)

வைபோக [6]மாகவுமே - ரெண்டு
மாசமும் இருந்தேன் நேசமதாய்
பொய்பொருந்த வேயுரைத்தாள் - யாரோ
போட்டிக்கு என்னிட வீட்டையுமே 9

கன்னம் போட்டுப் பாவிமகன் - எந்தக்
கள்ளனோ என்முதல் உள்ளதெல்லாம்
பொன்னுடைமை பூஷணமும் - தங்கப்
[7]பொட்டியிலே நானும் இட்டுவைத்திருந்தேன் 10

கண்டது கண்டாற்போல் - என்னைக்
காணாமலே கொண்டு [8]போனானென்றாள்
என்றாள் கிழட்டோரி - பொய்கள்
எள்ளள வாகிலுஞ் [9]சொல்வதில்லை 11

அப்பா மருமகனே - என்று
[10]அய்யய்யோ வென்றொரு பொய்யுரைத்தாள்
[11]நெய்ப்பா ருள்ளமதில் - இனி
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமோவென்று 12

(தாசி பணம்பறித்து வெளியேற்றல்)

காலாடிப் பொட்டிமகள் - என்முன்
கண்ணைப் பிசைந்தவள் நின்னழுதாள்
மேலான பொன்னுடைமை - பொட்ட
வெப்பிலி தப்பிலி யானாளே 13

கெட்டிமுத்து மாமயிலுக்கு - நல்ல
கெட்டி முத்துச்சர மிட்டேனே
அட்டிகையும் பொன்காரை - முத்து
அன்னத் தளுக்கைப்போல் பண்ணுவனோ 14

நித்திய உடைமையெல்லாம் - மகள்வெகு
நேர்த்தியாகப் போட்டுப் பார்த்தாளே

15

எண்ணி [12]எண்ணித்தானே - [13]நல்ல
ஈரெட்டு நூறுபொன்னை விட்டெறிந்தேன்
கண்ணே [14]கண்மணியே - உந்தன்
கையிலுள்ள தெல்லாம் வையுமென்றாள் 16

என்றாளே பொளவாச்சி - அவளுக்கு
ஈந்தனய்யா பணம் நேர்ந்தனய்யா
ஒன்றும் லபிக்கவில்லை - நானும்
ஒட்டாண்டி யானேனே தெட்டுணியாலே 17

கெட்டிமுத்து மாமயிலாள் - என்னைக்
கெட்டிக் காரனென்று தெட்டிவிட்டாள்
[15]கெட்டான பதரேஎன்றாள் - நானும்
[16]கெட்டு முட்டைச் சாம்பலானேனே 18

-தந்தானத் தானதனனா -

வடகரை நாடு - கொங்குநாட்டின் 24 நாடுகளில் ஒன்று. உயர் - மேன்மை. திருவானிகூடல் - பவானி எனும் ஊர். கன்னிகை - பெண், இங்கு தாசி கெட்டிமுத்தாள் பூந்தேன் - புகுந்தேன் என்பதன் கொச்சைச்சொல் போனு - பொறி சிக்கவே - அகப்படவே. காந்தாரி - துரியோதனனின் தாய் கிழடி - முதியவள், தாசியின் தாய் தெட்டிமுத்தாள். வானியாறு - பவானிநதி சேறு - சகதி வாடிக்கை - வழக்கம்.

கெட்டிமுத்து -தாசியின் பெயர். விலைக்கிரயம் - விலைத்தொகை. முறிதரேன் - அடிமைப்பத்திரம் தருகிறேன் தஞ்சம் - அடைக்கலம் பொங்குவார் - கோபிப்பார். பங்கம் - அவமானம், துன்பம் ஞாலம் - பூமி ரோசம் - மானம் சோபவிடாய் - புணர்ச்சித்தாகம் சொப்பனம் - கனவு. மெய்ப்புடன் - உண்மையுடன். சாமிவரவும்- சாமியாகிய உன்னுடைய வருகையும். தரித்திரதோஷம்.- வறுமைப்பிணி. மையல்- காம மயக்கம் கொய்த - பறித்த மலரணை - பூவாலாகிய படுக்கை கூடிக்குலாவி - சேர்ந்து மகிழ்ந்து முத்தாடி - முத்தாடுதல் - முத்தமிடுதல் வைபோகம் - ஆடம்பரம், மகிழ்வு மாசம் - மாதம். நேசம் - அன்பு, தகுதி. கன்னம் - கன்னக்கோல். கள்ளன்- திருடன் முதல் - உடைமை, செல்வம் பூஷணம் - அணிகலன் கிழட்டோரி - கிழட்டு நரி, இங்கு தாசியின் தாய் தெட்டிமுத்தாள். எள்ளளவாகிலும் - சிறிதளவாகிலும் நெய்ப்பு- இரக்கம். ஒளித்து - மறைத்து காலாடிப் பொட்டிமகள்- தொழிலற்றுத் திரியும் தாசிமகள், கெட்டிமுத்தாள். பொட்ட வெப்பிலி -பொட்டல் + வெப்பல்; பொட்டல் வெளியான நிலம், பயிர்கள் இல்லாத வெற்றிடம். தப்பிலி - போக்கிரி, ஒன்றுமில்லாத. அதாவது பயிர் பூண்டில்லாத வெற்று நிலத்தைப்போன்று உடலில் அணிகலன்கள் இன்றித் தாசி வெறுமையாக இருந்தாள் என்பதாகும். கெட்டிமுத்துச்சரம் - உறுதியான முத்துமாலை. அட்டிகை - கழுத்தணி. பொன்காரை- பொன்னாடை முத்து அன்னத்தளுக்கு - அன்னப்பறவை வடிவிலமைந்த முத்தாலான மூக்குத்தி. நித்திய - தினந்தினம். நேர்த்தி - அழகு. ஈரெட்டுநூறு - இரண்டு x எட்டு x நூறு = ஆயிரத்து அறுநூறு, அல்லது இரண்டு x எண்ணூறு - ஆயிரத்து அறுநூறு என்றும் கொள்ளலாம் பொளவாச்சி - கெட்டிக்காரி லபிக்கவில்லை - காரியம் பலிக்கவில்லை ஓட்டாண்டி - ஒன்றுமில்லாதவன், பிச்சைக்காரன் தெட்டுணி - தட்டுவாணி- வஞ்சித்துப் பறிக்கும் தாசி தெட்டி - தள்ளி. கெட்டானபதர் - பயனில்லாத பதர்நெல். கெட்டுமுட்டைச் சாம்பல் - எரிந்த விராட்டிச் சாம்பல்.

பாடவேறுபாடு - 1. போல் கிழவி 2 ஆத்திலொரு காலும் சேத்திலொருகாலும் 3 பொங்கினார் பங்கப்பட்டு மங்கிடுவார் 4 நேத்துச் 5. தேளைக் 6. மாகவே 7 பொட்டியிலு மேநானும் வைத்திருந்தேன் 8 போனாரே 9. சொல்லவில்லை 10 ஐயய்யோ 11 நெர்ப்பாருலகமதில் 12 எண்ணிநானே 13 அந்த 14 கண்ணின் மணியே 15 கெட்டாய் 16 கேனம் பிடித்தவ னானேனே.

(Tāykkiḻaviyum tāciyum varavēṟṟal)

Taru

vaṭakarai nāṭṭiluyar - tiṟu
vāṉikūṭa lukkiṉi nāṉumvantu
kaṭaiviti yilpukuntēṉ - antak
kaṉṉikai yāḷiṭa taṉmaṉaiyil

pūntēn pulipōlē -puli
pōnukkuḷ cikkavē tānuṅkaṇṭu
kāntāri pōlkiḻaṭi - vantu
kaiyeṭuttuk kumpiṭṭu ayyāvenṟāḷ

appā marumakanē - vāni
āṟriloru kālum cēṟrilorukālum
vaippārō encāmi - nīyum
vāṭikkai yākavē kūṭikkoḷḷa

keṭṭimuttu mātai - vilaik
kirayamāka vēmuṟi tarēnenṟāḷ
keṭṭimuttāḷ ōṭivantu - ennaik
keñciyē unniṭa tañcamenṟāḷ

poṟuttār aracāḷvār - innam
poṅkuvār paṅkappaṭ ṭēṅkuvār
poṟumai poṟuttaturai - unnaip
pōlē kiṭaikkumō ñālattilē

kōpam poṟukkavēṇum - ācai
koṇṭapērkku rōcam uṇṭōvenṟāḷ
cōpa viṭāytīra - nēṟruc
coppanan tannilē meyppuṭanē

cāmivara vuṅkaṇṭēn - eṅkaḷ
tarittira tōṣamum tīrakkaṇṭēn
kāmaveṟi yatanaik - kaṇṇil
kaṭṭivait tāppōlē koṭṭutayyā

ceyta kuṟraṅkuṟaiyaic - collit
tīrumenṟāḷ maiyal tīrumenṟāḷ
koyta malaraṇaimēl - ennaik
kūṭikku lāviyēmut tāṭikkoṇṭāḷ

(Tāykkiḻaviyin poyvārttai)

vaipōka mākavumē - reṇṭu
mācamum iruntēn nēcamatāy
poyporunta vēyuraittāḷ - yārō
pōṭṭikku enniṭa viṭṭaiyumē

kaṇṇam pōṭṭup pāvimakaṉ - entak
kaḷḷaṉō eṉmutal uḷḷatellām
poṉṉuṭaimai pūṣaṇamum - taṅkap
poṭṭiyilē nāṉum iṭṭuvaittiruṇṭēṉ

kaṇṭatu kaṇṭārpōl - eṉṉaik
kāṇāmalē koṇṭu pōṉāṉeṉṟāḷ
eṉṟāḷ kiḷaṭṭōri - poykaḷ
eḷḷaḷa vākiluñ colvatillai

appā marumakaṉē - eṉṟu
ayyayyō veṉṟoru poyyuraittāḷ
neyppā ruḷḷamatil - iṉi
neñcai oḷittoru vañcakamōveṉṟu

(Tāci paṇampaṟittu veḷiyēṟṟal)

kālāṭip poṭṭimakaḷ - eṉmuṉ
kaṇṇaip picaintavaḷ niṉṉaḻutāḷ
mēlāṉa poṉṉuṭaimai - poṭṭa
veppili tappili yāṉāḷē

keṭṭimuttu māmayilukku - nālla
keṭṭi muttuccara miṭṭēṉē
aṭṭikaiyum poṉkārai - muttu
aṉṉat taḷukkaippōl paṇṇuvaṉō

nittiya uṭaimaiyellām - makaḷveku
nērttiyākap pōṭṭup pārttāḷē
. . . .
. . . .

eṇṇi eṇṇittāṉē - nalla
īreṭṭu nūṟupoṉṉai viṭṭeṟintēṉ
kaṇṇē kaṇmaṇiyē - untaṉ
kaiyiluḷḷa tellām vaiyumeṉṟāḷ

eṉṟāḷē poḷavācci - avaḷukku
īntaṉayyā paṇam nērntaṉayyā
oṉṟum lapikkavillai - nāṉum
ōṭṭāṇṭi yāṉēṉē teṭṭūṇiyālē

keṭṭimuttu māmayilāḷ - eṉṉaik
keṭṭik kāraṉeṉṟu teṭṭiviṭṭāḷ
keṭṭaṉa patarēyeṉṟāḷ - nāṉum
keṭṭu muṭṭaic cāmpalāṉēṉē.
- *tantāṉat tāṉataṉaṉā* -

The old Beldam and her Daughter welcoming Pakaleṭṭi

32. To Bhavani then I came, the holy confluence
Of sacred rivers, situate in Vaṭakara region;
Passing by the market, like a tiger fierce
I entered the house of my beloved damsel;
Seeing the tiger in her trap, the old mother
Kāntāri[29] like, ran up with folded hands
And greeted me vociferously: "Great Sir!
Son-in-law dear to me! welcome! welcome!
My Lord! should you be like this even with us,
One foot in land and one foot in the sea,
(To one thing constant never)?
I will give my daughter for your mistress,
On sale outright for your own exclusive use",
She blabbered; and the young woman rushed up
With vehement protestations of passionate love:
"Lord! I surrender myself, body and soul
To you for ever! only those who are patient
Will rule the world; and others
Who seethe in anger will meet
Only disgrace and shame. There is none like you,
My patient Lord, in all this world!
Do not be angry with me, my lord!
Can those in love feel insult or shame
And sulk in dudgeon? But yesterday,
Only last night, I dreamt, I was in your arms
In close embrace, sating my thirst of lust.

Today I see my lord, my God, before me in truth.
Gone are our penury and want, for good!
See, see, my Lord! my passion pouring from my eye!
Abuse me, revile me, chastise me,
To your heart's content, if I have wronged you.
Forgive me, O Lord: my longing will be satisfied,
Only if you hug me tight!"
And then promptly on the bed of fresh flowers
She fell upon me, fondling and kissing me.

The Beldam's brazen lies

Two months long I was with her
In happy loving congress passionate,
And now declared the old woman all falsely:
'Some jealous thief burgled my house
Making a hole with his iron-jemmy,
Some foul villain, some damned thief;
All my gold possessions and ornaments I had kept
Locked up in my chests; the which the rascal opened
And plundered them, all unknown to me."
Thus cried the old vixen: "I never tell lies!
No, not a whit! what I say is the truth!
O my Lord son-in-law, alas! alas!"
Thus the old witch lamented loudly
Evoking pity in my tender heart.

The whore plundering Pakaletti's gold

For her part the young wench, the cheating bitch
Full of wile and guile, stood before me
Rubbing her knuckles into her eyes and shedding
Tears copious. Thus began the second plundering!
All my golden possessions, my moneys, I gave away
To the false wretch Keṭṭimuttāḷ, who stood

Without a single jewel on her body now,
Like a barren land without any greenery;
Moved by pity and love I gave her,
Lovely to me as a peafowl rare, -
Pearl chaplets, diamond chokers, golden collars,
And two ear-rings shaped like swans;
All these the jade put on happily
Admiring her own appearance before the mirror!
Counted I out, twice eight hundred coins;
'My Lord, my love, O apple of my eyes!
Give me all the money you have on hand."
She cooed and billed, cajoling me,
The cunning slut! And fool that I was,
I gave away all I had in coins of gold.
But I got pretty little out of it; and soon
I became again a pauper, thanks to my own folly,
The heartless jade Keṭṭimuttāḷ pushed me out
Calling after me: "Run away you useless chaff! Your fool!"
And I truly became worthless, even like
The burnt cinders of dried cow-dung cakes!

29. Kānthāri - Here, a cruel wily woman.

(பகலெத்தி தன் விதியை நினைத்தல்)

விருத்தம்

33. *தெள்ளுசெந் தமிழோர் போற்றும் திங்கள்மா நகரில் [1]மேவும்*
[2]வள்ளிதெய் வானை கந்தன் மகிமையால் வானி யூரில்
கொள்ளையாய்ப் பணத்தை [3]யானும் கோதையர்க் கீந்த பின்னை
தள்ளிவிட் டிடவே யிந்தச் சனிபல னென்றுற் றேனே

தெள்ளு - ஆராய்ந்த. செந்தமிழோர் - தூய தமிழ் பேசுவோர். வள்ளி தெய்வானை- முருகக்கடவுளின் தேவியர்கள் கந்தன் - முருகக் கடவுள் மகிமை - சிறப்பு. வானியூர் - பவானி. கோதையர் - பெண், இங்கு தாசி கெட்டிமுத்தாள் பின்னை- பிறகு. சனிபலன் - கிரகபலன். உற்றேன் - நினைத்தேன்.

***பாடவேறுபாடு** - 1. வாழும் 2. வள்ளி தேவியானை 3 யெல்லாம்.*

(Pakaletti taṉ vitiyai niṉaittal)

Viruttam

teḷḷucen tamiḻōr pōṟṟum tiṅkaḷmā nakaril mēvum
vaḷḷitey vāṉai kantaṉ makimaiyāl vāṉi yūril
koḷḷaiyāyp paṇattai yāṉum kōtaiyark kīnta piṉṉai
taḷḷiviṭ ṭitavē yintac caṉipala ṉeṉṟuṟ ṟēṉē.

Pakaletti thinking of his fate

33. By the dispensation of Lord Kantaṉ, spouse of Vaḷḷi
And Dēvayānai enshrined in Tiṅkaḷūr,
Adored by bards who hail him in limpid Tamil,-
In the town of Bhavāni, I gave away
My piles of gold to the prostitute there
Who bled me dry and pushed me out.
I put it all down to the evil effect
Of the malefic influence of the planet Saturn.

(தன் விதியை நினைத்துப் புலம்புதல்)

தரு

34. தெட்டிமுத்தாள் பெற்றெடுத்த மகளுக்கு - வெகு
சீர்பெறு வியாழதிசை பார்வையதுதானே
[1]அட்டமச் சனியனும் வந்தென்னைத் - தொட்டது
ஆகையால் [2]பொருள்களைப்பெண் மாய்கையால்கொடுத்தேன் 1

[3]முட்டியொன்று கையிலெடுத்தேனே - கோல்
முட்டிக்கடைச் சந்துக்குள்ளே [4]முட்டிநுழைந்தேனே
பட்டபாடு சொல்ல முடியாது - என்ன
பாவஞ்செய் தேனோமுன்செய்த தீவினையோ காணேன் 2

[5]அத்த ரொக்கமாகப் பொருளையெல்லாம் - வானி
[6]ஆத்தில் கரைத்தபுளிபோல் ஆயித்தென்றேனே
மொத்தை மொத்தையாக் கொடுத்தேனே - என்னை
மோசம்செய்தாள் தேவடியாள் [7]நாசக்காலி தானே 3

ஓம்நம சிவாய பரமேசா - உன்கையில்
ஓடிருக்கு தென்றென்கையில் ஓடுங்கொடுத்தாயோ
மானம் கெட்டுப்போ னேனேசாமி - வட்ட
வாசிக்கி மாவிடிக்கவே ராசிக்கம்புசேதம் 4

சாரங்க பாணித்துரை யேஉன்னைக் - [8]கிருஷ்ண
தாசனென்ற தற்கோமொட்டைத் தாசனென்று வகுத்தாய்
தாரணியோர் புகழ்முரு கய்யா - உன்னைச்
சட்டிமுகன் என்றதற்கோ சட்டிகையில் கொடுத்தாய் 5

ஆரணனே நாலுமறை யோனே - உனக்கு
அஞ்சுதலையி லொன்றில்லையெனக் கஞ்சுதலை யாச்சே
வாரணியும் [9]பூண்முலை வேதாம்பாள் - உன்னை
மலையன்மகள் என்றொரு மலையாய்நம்பி னேனே 6
வாலியொரு பெண்ணால் இறந்தா - னென்ற
வார்த்தையறிந் தாலுமிவள் ஆத்துக்குச் செல்லேனே
சீலமுடி ராவணனும் அன்று - அந்தச்
சீதையாலிறந் தானென்ற சேதியும் கேளேனே 7

கீசகன் பெண்ணாலிறந் தானென்ற - சேதியுங்
கேட்டாலோ கெட்டிமுத்தாள் வீட்டுக்குச் செல்லேனே
ஆசைகொண்டு பெண்மீதில் தேவேந்திரன் - தனக்கு
ஆயிரம்கண் ணாகவந்த [10]மாயம்அறியேனே 8

(வருகிற வழியில் தீச்சகுனங்களைக் காணுதல்)

பெண்ணாலே கெட்டபேர் மெத்தவுண் - டென்று
பெரியோர்கள் சொன்னவாக்கியந் தெரியாமல் போனேனே
தொன்னைத்தடி கையிலெடுத் தேனே - வெகு
துடிகள்பெற வேமேற்கே தடம்பிடித்தேனே 9

சம்பையுந் தளவாய்ப் பேட்டைத் தாண்டி - நானும்
தடத்தில் வருகவேபோத் திடத்தினில் ஏறச்
[11]சொம்பொன்றுங் கையில்பிடிக் காமல்தான் - வெகு
திறத்துடன் ஒற்றைப்பார்ப்பான் குறுக்கேவந்திடவே 10

புரட்டுக்குள் ஆந்தை ஒற்றைச்சத்தம் - அது
போடவே யிதுக்குமென்ன கேடுகாலமென்றேன்
குறுக்கையுங் கொடியிட மாச்சே - தீய்க்
கொள்ளியுங்கொண் டங்கேயொரு குள்ளநாவிதன் வந்தான் 11

கெடுமதி கண்ணுக்குத் [12]தோற்றாது - ஆர்க்கும்
கேடுவரும் போதில்மதி [13]கெட்டுவருந்தானே
விடுவனோ சனியனு மென்னை - வெகு
விடம்போலே சனியனும் தொடர்ந்ததுதானே 12

[14]அன்னெழுதும் வேதனென் தலையில் - பின்னை
அழிச்செழுதப் போறானோ [15]தடப்பளி கடந்தேன்
என்னைக் கிருந்தாலும் இனித்தானே - சும்மா
[16]இறப்பதுமெய் யென்றெண்ணி விறப்பாக நடந்தேன் 13
சத்திமங்கலம் [17]தணாயக்கன் கோட்டை - ரெண்டுந்
[18]தாட்டியேபூ திக்குப்பைக்கு ஓட்டமாக நடந்தேன்
வெற்றிபெறத் துடைதட்டிக் கொண்டேன் - [19]கெண்டி
மீசையை முறுக்கிக் கையை வீசிநடந்தேன் 14

(மைசூர்க்கு வந்து அந்நகரைச் சுற்றிப்பார்த்தல்)

[20]கெச்சரெட்டிக் கணவாயுந் தாண்டி - ஒரு
கேக்கையிட்டுத் தண்டுப்பாதை [21]மார்க்கம்பற்றி நடந்தேன்
அச்சணம் வயிற்றுப் பசியாலே - நல்ல
அம்மணியம்மாள் சத்திரத்தில் தர்மச்சோறும் வாங்கி 15

உண்டேன் பசியாற்றிக் கொண்டேன் - ஒரு
ஒட்டத்தில் நஞ்சுண்டகூடல் [22]தாட்டிநடந்தேனே
மண்டலீகர் [23]கண்டுகொண்டாடத் - தினம்
வாசமான [24]மைசூர்க்கெடி வாசலில் சென்றேனே 16

கோட்டைகள் கொத்தளமும் கண்டேனே - துரைக்
கொலுவுங் கண்டேனவர் வலுவுங் கண்டேனே
பேட்டைகள் எல்லாம் [25]சுற்றிப் பார்த்தேனே - வேதப்
பிராமணர்அக் ராரவீதித் தராதரமும் பார்த்தேன் 17

தீட்டுச்செந்தமிழ் நாவலோர் போற்றும் - தினம்
தியானம்செய்யும் மைசூர்ச மஸ்தானம் சுற்றிப்பார்த்தேன்
மேட்டிமை யாகநடந்து வந்தேன் - அந்த
[26]வேளையத்தி லேகுதிரைப் பாளையத்தைக்கண்டேன் 18

(பகலெத்தி பக்கிரி வேடம் பூணுதல்)

பக்கிரியென்று வேஷங்கொண்டேனே - நல்ல
பச்சைக்கல்லுக் [27]காதில்கட்டி குச்சுக்குல்லாத்தரித்து
கைக்கிசைந்த [28]துட்டுத்தடி கொண்டேன் - எந்தன்
கழுத்துக்கு அக்குப்பாசி அழுத்திக்கொண்டேனே 19

கச்சுப்புரைப் பொக்கணத் திலேதான் - சடைக்
கஞ்சாவும் குடுகுடுக்கை கஞ்சாரொட்டி அபினி
உச்சிதத் திலதமிட்டேனே நல்ல - இடையில்
உடைப்பட்டை யுங்கட்டித் திடத்துடன் நடந்தேன் 20

(குதிரை திருட குதிரைத்தண்டுபாளையத்திற்கு வருதல்)

குதிரை பிடிக்கக் கடிவாளம் - கையில்
கொண்டு நடந்தேன் குதிரைத் தண்டுபாளையந் தன்னில்
அதிவீர பராக்கிரம சூரன் - நல்ல
அசரத்துக் கானுசாயபு உசேனுமகாராசன் 21

துரங்கத்தைக் கண்ணிலேநான் கண்டேன் - நல்ல
சுழிசுத்தம் பார்த்தனொன்றும் பழுதில்லைத்தானே
இரந்தேனே பாளையங்கள் தோறும் - அங்கே
எல்லாருஞ் சலாம்செய்யவே அல்லாஅல்லா வென்றேன் 22

[29]இரட்டைத்துட்டுத் துக்காணி தந்தாரே - குதிரை
[30]இராவுத்தர் திறத்தையெல்லாம் இராவெத்த நானும்பார்த்தேன்
மட்டில்லாப் படைக்குச் சருதானி - ஆர்க்கும்
வல்லவன் உசேனுகானு நல்லமகராசன் 23

கூடாரந் தன்னில் சென்றேனே - வெகு
குணத்துடன் அல்லாவென்று வணக்கஞ் செய்தேனே

[31]தாடாளன் உசேனுகானு சாயபு - வெகு
[32]தன்னிமையாக நாலுநாள் அன்னமுந் தந்தாரே. 24

- தானத் தந்தானத் தனனா - தனனா
தானத் தந்தானத் தனனா -

தெட்டிமுத்தாள் - தாசியின் தாய் வியாழதிசை - குருதிசை பார்வை - ஆட்சி அட்டமச்சனியன் - எட்டாமிடத்துச் சனி. தொட்டது - பிடித்தது. மாய்கை - மயக்கம் முட்டி - பிச்சைப்பாத்திரம் கோல் - தடி, ஊன்றுகோல். முட்டி - ஊன்றி. சந்து - தெரு. முட்டி - தட்டுத்தடுமாறி. தீவினை - பாவம் அத்த ரொக்கம் - கையிலுள்ள பணம். வானி ஆத்தில் - பவானி ஆற்றில் ஆயித்து - ஆயிற்று மொத்தை - மொத்தம். மோசம்- வஞ்சனை நாசக்காலி - நாசக்காரி - கேடுசெய்பவள் ஓம்நமசிவாய - சிவமந்திரம் பரமேசன்- சிவன். ஓடு - பிச்சைப்பாத்திரம். மானம் - பெருமை. வாசி - பணம், நாணயம் ராசிக்கம்பு - மொத்தத் தானியம். சாரங்கபாணி - சாரங்கத்தைக் கையிலுடையவன், திருமால் தாரணி - பூமி. சட்டிமுகன் - சஷ்டிமுகன் - ஆறுமுகன். சட்டி - பானை. ஆரணன் - பிரமன் நாலு - நான்கு. மறையோன் - பிரமன் அஞ்சுதலை - ஐந்து தலைகள், பிரமனுக்கு ஐந்து தலைகள் உண்டு. இவற்றில் சிவனால் ஒருதலை கொய்யப்பட்டது. அஞ்சுதல் - பயப்படுதல். வார் - கச்சு. பூண்முலை - ஆபரணம் அணிந்த முலை. வேதாம்பாள் - பார்வதி, மலைமகள். மலையன் மகள் - இமவான் மகள், பார்வதி மலையாய் - உறுதியாய். வாலி - கிட்கிந்தை மன்னன் ஆத்துக்கு - வீட்டிற்கு. இராவணன்- இலங்கை மன்னன் சீதை - இராமனின் மனைவி. சேதி - செய்தி என்பதன் கொச்சைச்சொல் கீசகன் - விராடதேசத்து அரசன், இவன் திரௌபதியை மோகித்த காரணத்தால் வீமனால் கொல்லப்பட்டான். தேவேந்திரன் - தேவ அரசன், கௌதம முனிவரின் மனைவி அகலிகையை மோகித்து அவளைப் புணர்ந்ததால், அம்முனிவரால் அவனது தேகத்தில் பெண்குறிகள் ஆயிரம் வர சாபம்பெற்றான் மாயம் - தீமை மெத்த- மிகவும் தொன்னை - இலைக்கலம். துடி - சுறுசுறுப்பு, வேகம். தடம் - வழி. சம்பை, தளவாய்ப்பேட்டை - ஊர்கள் போத்து - செம்போத்து என்னும் பறவை. இடத்தினில் ஏற - இடப்பக்கத்தில் செல்ல. சொம்பு - செம்பு நீர் அருந்தும் பாத்திரம். ஒற்றைப் பார்ப்பான் - பிரமச்சாரி அந்தணன் புருட்டு- மரப்பொந்து கேடுகாலம் - அழிவுறுங் காலம் குறுக்கை - குறுக்கே கொடி - காகம். இடமாச்சு - இடப்பக்கம் சென்றது. தீக்கொள்ளி - நெருப்புக்கோல். நாவிதன் - அம்பட்டன். கெடுமதி - கெடுபுத்தி. தோற்றாது- தோணாது. சனியன் - சனீஸ்வரன் விடம் - நஞ்சு அன்னெழுதும் - அன்றெழுதும் வேதன் - பிரமன். பின்னை - மேலும், பிறகு தடப்பளி - தடப்பள்ளி - கொங்குநாட்டின் 24 நாடுகளில் ஒன்றான ஒடுவங்க நாட்டில் உள்ள ஓர் ஊர் விறப்பாக - தைரியமாக. சத்திமங்கலம், தணாயக்கன் கோட்டை, பூதிக்குப்பை - கொங்குநாட்டிலுள்ள ஊர்கள். தாட்டி - தாண்டி. கெண்டி - கெட்டி கெச்சரெட்டிக்கணவாய் - கெஜ்ஜல்கட்டிக் கணவாய் இரு மலைகளுக்கிடையேயான வழிப்பகுதி. கேக்கையிட்டு - ஒருவித ஒலிக் குறிப்பு செய்து. மார்க்கம் - வழி அச்சணம் -அச்சமயம் நஞ்சுண்டகூடல் - ஓர் ஊர் மண்டலீகர்- அரசர். வாசமான - புகழான. கெடிவாசல் - மலைக்கோட்டை வாசல் கொலு - கொலுமண்டபம். வலுவு - வலிமை. தராதரம் - அந்தஸ்து, செயல்நிலை.

சமஸ்தானம் - இராஜ்யம் மேட்டிமை - மேன்மை குதிரைப்பாளையம் - ஓர் ஊர். பக்கிரி- பரதேசி, பிச்சைக்காரன் குச்சு - குஞ்சு - குஞ்சம். துட்டுத்தடி - குறுந்தடி அக்குப் பாசி- அக்குமணி- சங்குமணி. கச்சுப்புரை - இடைக்கட்டு மடிப்பு. பொக்கணம் - ஒருவகைப் பை, சோளி சடைக்கஞ்சா - சடைக்குச்சு, தலைமயிர் அணி. குடுகுடுக்கை - மைச்சிமிழ் கஞ்சா ரொட்டி அபினி - சொக்குப்பொடிகள் உச்சிதம் - உசிதம். திலதம் - பொட்டு. உடைப்பட்டை- உடைமேல் அணியும் ஆபரணம். கடிவாளம் - குதிரையின் வாயில் மாட்டும் இரும்புக்ககருவி குதிரைத்தண்டுபாளையம் - குதிரைப்பாளையம் எனும் ஊர். அசரத்துக் கானுசாயபு உசேன் - சீரங்கப்பட்டணம் எனப்பெறும் மைசூர் சமஸ்தானத்தின் அரசனான **ஹைதர் அலி பாச்சாவினுடைய** *நண்பரான கோயமுத்தூரை வென்று கண்காணித்து வந்த பெரும் படைத்தலைவன் இவன். துரங்கம் - குதிரை. சுழிசுத்தம் - உரோமச் சுழியின் இலக்கணம். இரந்தேன் - யாசித்தேன். சலாம் - வணக்கம்.* **அல்லா** *- முகமதியர் வழிபடும் கடவுளின் பெயர். இரட்டைத் துட்டுத்துக்காணி - இரு தம்படி கொண்ட செம்பு நாணயம். குதிரை இராவுத்தர் - குதிரைச் சேவகன். இராவெத்த் - இரவில் எத்த; இரவில் திருட மட்டில்லா - அளவில்லா சருதானி - படைத்தலைவன். கூடாரம்- துணியால் மேய்ந்த வீடு தாடாளன் - முயற்சியுடையோன். தன்னிமை - தன்மை. நாலு - நான்கு என்பதன் குறைச்சொல். அன்னம்- உணவு*

பாடவேறுபாடு *- 1. அஷ்டமச் 2 பொருள்யெல்லாம் 3. முட்டிஎடுக்காத குறையொன்றால் 4. முட்டிநடந்தேனே 5. அஷ்த்த 6. ஆத்திலே புளிகரைத்தாப் போலே ஆச்சுதென்றேனானே 7 நாசக்காரிதானே 9. பூமுலை 10. மாய்கை 11 செம்பொன்றும் 12 தோணாது 13 கெட்டுவரு முன்னே 14. அன்றெழுதும் 15. தடப்பளி 16 இரப்பது 17. டணாயக்கன் கோட்டை 18. தாண்டியே 19 கெட்டி 20. கெச்சறட்டைக் கணுவாயுந் 21. மார்க்கம் பற்றினேனே 22 தாண்டி 23.கண்டகோதண்டர் 24 மைசூர்க் கோட்டை 26. வேளையிலே குதிரைப் பாளையமுங் கண்டேனே 27. காலில்கட்டி 28. துண்டுத்தடி 30. ராவுத்தர் 31 தயாளன் 32. தன்மையாக.*

சுவடிச்சொல் *- 8. கிஷ்ண 25. சுத்திப்பாத்தேனே 29 றட்டைத்*

(Tan̲ vitiyai nin̲aittup pulamputal)

Taru

teṭṭimuttāḷ peṟṟeṭutta makaḷukku - veku
cīrpeṟu viyāḻaticai pārvaiyatutān̲ē
aṭṭamac can̲iyan̲um vanten̲n̲ait - toṭṭatu
ākaiyāl poruḷkaḷaippeṇ māykaiyālkoṭuttēn̲

muṭṭiyon̲ṟu kaiyil eṭuttēn̲ē - kōl
muṭṭikkaṭaic cantukkuḷḷē muṭṭinuḻaintēn̲ē
paṭṭapāṭu collamuṭiyātu - en̲n̲a
pāvañcey tēn̲ōmun̲ceyta tīvin̲aiyōkāṇēn̲

atta rokkamākap poruḷaiyellām - vāṉi
āttil karaittapuḷipōl āyitteṉṟēṉē
mottai mottaiyākak koṭuttēṉē - eṉṉai
mōcamceytāḷ tēvaṭiyāḷ nācakkāli tāṉē

ōṃnama civāya paramēcā - uṉkaiyil
ōṭirukku teṉṟaṉkaiyil ōṭuṅkoṭuttāyō
māṉam keṭṭuppō ṉēṉēcāmi - vaṭṭa
vācikki māviṭikkavē rācikkampucētam

cāraṅka pāṇitturai yēuṉṉaik kiruṣṇa
tācaṉeṉṟa taṟkōmoṭṭait tācaṉeṉṟu vakuttāy
tāraṇıyōr pukaḻmuru kayyā - uṉṉaic
caṭṭimukaṉ eṉṟataṟkō caṭṭikaiyil koṭuttāy

āraṇaṉē nālumaṟai yōṉē - uṉakku
añcutalaiyi loṉṟillaiyeṉak kañcutalai yāccē
vāraṇiyum pūṇmulai vētāmpāḷ - uṉṉai
malaiyaṉmakaḷ eṉṟoru malaiyāynampi ṉēṉē

vāliyoru peṇṇāl iṟantā - ṉeṉṟa
vārttaiyaṟin tālumivaḷ āttukkuc cellēṉē
cīlamuṭi rāvaṇaṉum aṉṟu - antac
cītaiyāliṟan tāṉeṉṟa cētiyum kēḷēṉē

kīcakaṉ peṇṇāliṟan tāṉeṉṟa - cētiyuṅ
kēṭṭālō keṭṭimuttāḷ viṭṭukkuc cellēṉē
ācaikoṇṭu peṇmītil tēvēntiraṉ - taṉakku
āyiramkaṇ ṇākavanta māyamaṟiyēṉē

(Varukiṟa vaḻiyil tīccakuṉaṅkaḷ ik kāṇutal)

peṇṇālē keṭṭapēr mettavuṇ - ṭeṉṟu
periyōrkaḷ coṉṉavākkiyan teriyāmal pōṉēṉē
toṇṇaittaṭi kaiyileṭut tēṉē - veku
tuṭikaḷpeṟa vēmēṟkē taṭampiṭittēṉē

campaiyun taḷavāyppēṭṭait tāṇṭi - nāṉum
taṭattil varukavēpōt tiṭattiṉil ēṟac
compoṉṟuṅ kaiyilpiṭik kāmaltāṉ - veku
tiṟattuṭaṉ oṟṟaippārppāṉ kuṟukkēvantiṭavē

purattukkuḷ āntai orraiccattum - atu
pōṭavē yitukkumeṉṉa kēṭukālameṉreṉ
kuṟukkaiyuṅ koṭiyiṭa māccē - tīyk
koḷḷiyuṅkoṉ taṅkēyoru kuḷḷanāvitaṉ vantāṉ

keṭumati kaṇṇukkut tōṟṟātu - ārkkum
kēṭuvarum pōtilmati keṭṭuvaruntāṉē
viṭuvaṉō caṉiyaṉu meṉṉai - veku
viṭampōlē caṉiyaṉum toṭarntatutāṉē

aṉṉeḷutum vētaṉeṉ talaiyil - piṉṉai
aḷicceḷutap pōṟāṉō taṭappaḷi kaṭantēṉ
eṉṉaik kiruntālum iṉittāṉē - cummā
iṟappatumey yeṉreṇṇi viṟappāka naṭantēṉ

cattimaṅkaḷam taṉāyakkaṉ kōṭṭai - reṇṭun
tāṭṭiyēpū tikkuppaikku ōṭṭamāka naṭantēṉ
veṟṟiperat tuṭaitaṭṭik koṇṭēṉ - keṇṭi
mīcaiyai muṟukkikkaiyai vīcinaṭantēṉ

(Maicūrkku vantu annakaraic cuṟṟippārttal)

keccareṭṭik kaṇavāyun tāṇṭi - oru
kēkkaiyiṭṭut taṇṭuppātai mārkkampaṟṟi naṭantēṉ
accaṇam vayiṟṟup paciyālē - nalla
ammaṇiyammāḷ cattirattil tarmaccōṟum vāṅki

uṇṭēṉ paciyāṟṟik koṇṭēṉ - oru
ōṭṭattil nañcuṇṭakūṭal tāṭṭinaṭantēṉē
maṇṭalikar kaṇṭukoṇṭātat - tiṉam
vācamāṉa maicūrkketi vācalil ceṉṟēṉē

kōṭṭaikaḷ kottaḷamum kaṇṭēṉē - turaik
koluvuṅ kaṇṭēṉavar valavuṅ kaṇṭēṉē
pēṭṭaikaḷ ellāmcuṟṟip pārttēṉē - vētap
pirāmaṇarak rāravītit tarātaramum pārttēṉ

tīṭṭuccen tamiḻnāvalōr pōṟṟum - tiṉam
tiyāṉamceyyum maicūrca mastāṉam cuṟṟippārttēṉ
mēṭṭimai yākanaṭantu vantēṉ - anta
vēḷaiyatti lēkutiraip pāḷaiyattaikkaṇṭēṉ

(Pakaletti pakkiri vēṭam pūṇutal)

pakkiriyeṉṟu vēṣaṅ koṇṭēṉē - nalla
paccaikkalluk kātilkaṭṭi kuccukkullāttarittu
kaikkicainta tuṭṭuttaṭi koṇṭēṉ - entaṉ
kaḻuttukku akkuppāci aḻuttikkoṇṭēṉē

kaccuppuraip pokkaṇat tilētāṉ - caṭaik
kañcāvum kuṭukuṭukkai kañcāroṭṭi apiṉi
uccitat tilatamiṭṭēṉē nalla - iṭaiyil
uṭaippaṭṭai yuṅkaṭṭit tiṭattuṭaṉṉaṭantēṉ

(kutirai tiruṭa, kutiraippāḷaiyattiṟku varutal)

kutirai piṭikkak kaṭivāḷam - kaiyil
koṇṭunaṭantēṉ kutirait taṉṭupāḷaiyantaṉṉil
ativīra parākkirama cūraṉ - nalla
acarattuk kaṉucāyapu ucēṉumakārācaṉ

turaṅkattaik kaṇṇilēṉāṉ kaṇṭēṉ - nalla
cuḻicuttam pārttanoṉṟum paḻutillaittāṉē
irantēṉē pāḷaiyaṅkaḷ tōṟum - aṅkē
ellāruñ calāmceyyavē allāallā veṉṟēṉ
iraṭṭaittuṭṭut tukkāṇi tantārē - kutirai
irāvuttar tiṟattaiyellām irāvetta nāṉumpārttēṉ
maṭṭillāp paṭaikkuc carutāṇi - ārkkum
vallavaṉ ucēṉukāṉu nallamakarācaṉ

kūṭāran taṉṉil ceṉṟēṉē - veku
kuṇattuṭaṉ allāveṉṟu vaṇakkañ ceytēṉē
tāṭāḷaṉ ucēṉukāṉu cāyapu - veku
taṉṉimaiyāka nālunāḷ aṉṉamun tantārē.

-tāṉat tantāṉat taṉaṉā - taṉaṉā
tāṉat tantāṉat taṉaṉā -

Pakaletti lamenting his fate

34. The daughter of Teṭṭimuttāḷ, the old baw,
Must surely have the planet Jupiter in the ascendant!
Whereas for me, Saturn, the malefic, must be

In the eighth place! And that was why
All my wealth I gave away thus,
Crazed with lust for a scheming female!
Now with a begging bowl in hand
And a stick in the other I wended my way
Through lanes and by-ways begging for alms
Indescribable was my suffering; what sins
I must have done in the past to merit this?
Surely my sins are catching up with me!
All the money in my hand I had wasted away
Even like tamarind dissolved in Bhavāni river!
Piles after piles I gave away in gold,
To this wily whore who has ruined me!
Om Namacivāya! Lord Supreme! Did you give me too
A begging bowl because you have one in hand?
Oh, I have lost my name and become a laughing-stock!
For a little gain, I have lost my entire harvest.
O Cāraṅkapāṇi! is it for hailing you as Lord Kiruṣṇa,
That you have deprived me, your slave, of all I had,
To be like a beggar with a shaven pate?
O Lord Murukaiya! Is it for hailing you
As the six-faced Caṇmuka, that you have given me
An empty mud-pot, to beg like a mendicant?
O Brahma, Lord of the Vedas four!
You did lose one of your five heads!
But I now have cause enough to fear for my life!
O Goddess Pārvati with cinctured breasts!
I trusted you like a rock,
Daughter as you are, of the mountain-God!
Oh, had I remembered that Vāli died
All because of a woman, I would not have
Gone to this whore's house! I forgot also

That ten-headed Rāvaṇa died in consequence
Of his lust for Princess Sītā!
Nor did I remember the story
Of Kīcaka who was slain (By Bhīma)
Because of his desire for Draupati!
I have not learnt even from the tale
Of how Dēvēndra acquired a thousand eyes
Owing to his passion for a woman (Akalikai).
Oh, I suffered thus as I failed to remember
The wise words of elders: "Many are the men
Who ruined themselves on account of women"

Encountering evil omens on the way

I picked up a stout cudgel in my hand
And walked westwards, briskly crossing on the way
Towns like Jambai and Daḷavāipēṭṭai;
A crow-pheasant flew across
From right to left; a single brahmin
Without a water-vessel in hand, swiftly crossed
My path; from within a tree-hollow
An owl did hoot. Disturbed I was
By all these evil omens, wondering what
May be yet in store for me; and a crow
Did fly from right to left across my path!
Holding a fire-brand in his hand,
A dwarfish barber came before me!
Evil cannot be foreseen; bad times
Are preceded by stupid and foolish action.
Malefic Saturn followed me close
As if proclaiming: "Will I let you off so easily?",
Like deadly venom, he continued to harass me:
Will Brahma who writes the fate of everyone
Change what he has written on my head?

I crossed Taṭapaḷḷi, picking up my courage
And telling myself: "Some day or other, a man must die!"
Boldly I crossed the towns Cattiyamaṅkalam,
Taṉāyakkaṉpēṭṭai and Pūtikkuppai,
Beating my thighs confident of success again,
And twirling my thick moustaches,
I walked proudly along swinging my hands.

Coming to Mysore and sightseeing there

Crossing Keccareddi Pass and whistling cheerfully
I walked along the pathway, till I reached a choultry
Named after Ammaṇiammāḷ where I was given
Free food for travellers with which I relieved
My hunger: refreshed, I briskly walked
Till I reached Nañcuṇṭakūṭaḷ; and then
Further beyound, I saw the fort of Mysore
Where lived the ruler of the land;
I stood amiring the ramparts tall
And the fortifications - the Durbar hall grand,
Where the mighty king held his court;
I went round the royal city viewing
The various settlements and the brahmin quarters;
The estate regal, of Mysore I marvelled at,
Of the king hailed daily by scholars and bards,
In sweet panegyrics in Tamil pure,
Indited by them. Proudly I stepped along,
Till at last I saw the barracks of Kutiraippāḷayam.

Pakaletti putting on a Fakir's Dress

I transformed myself now into a mendicant fakir
Rings set with green stones dangling from my ears;
A cap with silken tassels on my head,
A short cudgel in my hand, a collar of shell-beads
Round my neck, a bag hanging from my waist-cloth,

An ornament on my hair-with all these,
I held in my hand a tiny taboret;
Armed with powders of opium and cannabis,
A suitable round mark on my dress,
Jauntily I walked along!

Coming to the Cavalry Barracks with intent to steal a Horse

Providing myself with a horse's bit I came
To Kutiraippāḷayam barracks under the command
Of General Hazrat Khan Sahib Hussain.
I saw there a horse with perfect limbs,
Free from any fault or defect.
In all the encampments I begged,
Crying 'Allah, Allah' at which they salaamed,
Pleased with my manner and gave me a two-pice coin,
I admired their skill with the horses
And decided to match it against mine,
By stealing a steed during the night!
Brave Hussain Khan was the Sardar
For all the troops assembled there;
The general was truly a good man!
Boldly I went into his tent without fear,
And paid my humble respects to him,
Uttering the name of 'Allah' often!
The kind commander Hussain Khan, graciously
Did feed me well for four days together.

(மாறுவேடம் பூணுதல்)

விருத்தம்

35 *கொக்குமா [1]தளைகள் வாழைக் குலாவிய திங்க ளூர்வாழ்*
[2]முக்கணன் அருள்மா மேரில் முருகர்தன் கிருபை யாலே
பக்கிரி [3]வேச மாறிப் பரிதனைக் களவு செய்யத்
திக்கென இருட்டில் யானும் திருடவே [4]நினைந்துற் றேனே.

கொக்கு - மாமரம். மாதளை - மாதுளம் மரம் குலாவிய - சூழ்ந்து விளங்கிய. முக்கணன் - முக்கண்ணன், சிவன் அருள்மாமேர் - அருள்மலை கிருபை - அருள். பரி- குதிரை களவு - திருட்டு.

பாடவேறுபாடு - 1. துளைகள் 2. முக்கண்ணன் 3 வேஷ 4. நினைத்திட்டேனே.

(Māṟuvēṭam pūṇutal)

Viruttam

kokkumā taḷaikaḷ vāḻaik kulāviya tiṅka ḷūrvāḻ
mukkaṇaṉ aruḷmā mēril murukartaṉ kirupai yālē
pakkiri vēca māṟip paritaṉaik kaḷavu ceyyat
tikkeṉa iruṭṭil yāṉum tiruṭavē niṉaintuṟ ṟēṉē.

Pakaletti changing his disguise again

35. By the grace of Lord Muruka enshrined
In Aruḷmalai of the three-eyed God,
Adjacent to fertile Tiṅkaḷūr surrounded
By mango, plantain and pomegranate trees,-
I changed my disguise again, in order that
I may steal a horse in the darkness of the night.

(குதிரையைத் திருடுதல்)

தரு

36 திக்கெனவே [1]நானுமெழுந்து - குதிரை
திருடவே நானிந்த [2]இரவில்வந்து
சொக்குப்பொடி கையிலெடுத்தேன் - படைமன்னர்
தூக்கத்தைச் சோதித்துப் பராக்கிரமித்து 1

அசுவந் தனையடுத்தேன் - [3]சணத்தில்
அச்சமற்றுக் குதிரையை [4]நொச்சங்கொட்டினேன்
[5]சசுவாய் இருந்ததய்யா - முதுகையுந்
தட்டியேபின் காலதனை நெட்டைவாங்கினேன் 2

கால்க்கயிறு தனையறுத்தேன் - குதிரைக்குக்
[6]கடிவாளம் இட்டனய்யா தடையில்லாமல்
ஆக்கிரமித் தனுமானித்துக் - குதிரையும்
ஆட்டங் கொண்டேவெகு சேட்டைசெய்து 3

. . . .

. . .   .

வேற்றாளென் றறிந்துதான் - குதிரை
மிரண்டதய்யா படை திரண்டதய்யா 4

கூக்குரல் சத்தமாக - அங்கனே
குதிரையை விட்டுநானும் [7]பிதிருகெட்டு
சீக்கிரமாய் நடந்தேன் - அவ்விடத்தில்
சேவகர் வீரியர் காவலரும் 5

இதடாக் கள்ளனென்று - சேவகர்
என்னைத்தொ டரவேசனி பின்னைத்தொடர
சதிவந்து [8]நேர்ந்தவுடன் - என்னிட
தந்திரமும் கள்ள மந்திரமும் 6

புதைபுதை யாய்நுழைய - என்னிட
பொக்கணத்தி லேயிருந்த [9]சொக்குப்பொடிகள்
மதிகெட்டுத் தான்பறக்க - என்னிட
மந்திர மருந்துகள் எந்திரமும் 7

(விதியின் வலிமை)

சனியன் முன்னது நிற்குமோ - தெய்வம்
தான்நிற்கு மோஎன்ன தான்நிற்குமோ
சனியன் பெரியவன்காண் -ஈசனைத்
தலையோட்டி லேஇரந்துண் டலையவைத்தான் 8

[10]கிட்டிணனும் வெண்ணைதிருடி - உரலுடன்
கெட்டியாகக் [11]கயிற்றினில் கட்டியேவைத்தான்
வெட்டுமென்று குறவர்சொல்ல - வேலவரை
வேங்கை மரமாகவே ஏங்கவைத்தான் 9

தேவேந்திரன் தனக்காயிரங் - கண்
தேகமெல் லாம்அது வாகவைத்தான்
[12]மாவலி வாணனிட - தனது
வல்லமைய டக்கிபூமிக் குள்ளேவைத்தான் 10

சந்திரன் உடலிழந்தான் - நல்ல
சரசமன்ம தனும்அவன் உருவழிந்தான்
ஐந்தலைப் பிரமன் - தனையும்
ஆக்கிரமித் தொருதலையை [13]போக்கிவிட்டான் 11
இரவிதன் பல்லையொடித்தான் - அன்று
இரணியனை நகத்தில் [14]அரிவகுத்தான்
தரணியில் எனைப்பிடித்தான் - இந்தச்
சனியனும் விடுவானோ இனிஎன்னமோ 12

(பகலெத்தி பிடிபடுதல்)

என்றுசொல்லி இண்டம்புதைக்குள் - நுழைந்துகொண்டு
இருந்தேனே அங்கேவெகு பெருந்தேளு
தின்றுதின்று எனைக்கொட்டவே - அட்டைகள்
செய்யானும் பூரானும் பைய்யரவமும் 13
கடித்த கடிவாயில் - வலியொன்றுங்
காணேனே புத்தி தோணேனே
துடுக்காகவே சேவுகர் - தாரைமேல்
துடர்ந்து துடுக்காகவே நடந்துவந்து 14
கள்ளனிந்த இண்டம்புதைக்குள் - இதவரக்
காணுமென்றான் ஒருவன் காணோமென்றான்
வெள்ளைசெய்யும் வண்ணாந்துறை - முசல்போல்
விருக்குவிருக் கென்றுநான் இருக்கவுமே 15
சேவுகர் வீரியரும் - இண்டஞ்
செடிக்குள்ளே நுழைந்தென்னைப் பிடித்திழுத்துத்
தாவியே கட்டியிறுக்கிச் - சும்மா
சண்ணுமென்பார் சிலபேர் [15]கொன்றுபோடென்பார் 16

(படைத்தலைவன் முன் கொண்டு விடுதல்)

குத்துக்குத் தென்பார் சிலபேர் - இவனைக்
கொல்லவே [16]துரையப்பணை இல்லையுமென்று
கர்த்தர்திருச் சமுகத்திற்கு - இடைக்கட்டுக்
கட்டியென்னைக் கொண்டுபோய் விட்டவுடனே 17

தளகர்த்தர் மதிமந்திரிகள் - மற்றபிர
    தானிகர் படைமன்னர் வாணிபரும்
வளமுள்ள [17]கரணிக்கர்கள் - அஷ்தகர்
    வாருவெடிச் சேவுகர் வீரியரும் 18
கண்டார் என்முகத்தைத் - திருட்டுக்
    கள்ளனிட கரமது துள்ளிவிழவே
துண்டந் துண்டமாக வெட்டுங்கோ - என்றவுடன்
    துரைமனதி ரங்கியே திருடனையும் 19

(மாறுகால் மாறுகை துண்டிக்கப்படுதல்)

மாறுகாலும் மாறுகையும் - வாங்குமென்று
    [18]வாக்குப்ப யிர்ந்தவுடன் சீக்கிரமாய்க்
கூறிவருந் தலையாரி - கானகத்தில்
    கொண்டுவந்து என்னையவன் கண்டிதஞ்செய்தான் 20
ஒற்றைப் புளியமரம் - அதன்கீழ்
    ஒற்றைக்காலும் ஒற்றைக்கையும் பற்றியறுத்தான்
கொற்றவன் எதிராலே - கால்தரித்தக்
    குறிகாட்டி யேவெகு திறமைபெற்றான். 21

- தந்தானனா தனதனனா -

பராக்கிரமித்து - வீரமுடன். அசுவம் - குதிரை. சணத்தில் - நொடிப்பொழுதில் அச்சம் - பயம் நொச்சங்கொட்டி - ஒருவித ஒலிப்பு செய்து சசுவாய் - சத்தமிடாமல். நெட்டை வாங்கி - சோம்பல் முறித்து ஆக்கிரமித்து - பிடித்து சேட்டை செய்து - முரண்டு பிடித்து பிதிரு கெட்டு - கால அளவு தவறி இதரன் - அந்நியன், கீழ்மகன் சனி - சனீஸ்வரன். சதி - மோசம் பொக்கணம் - ஒருவகைப்பை, சோளி. மதிகெட்டு- அறிவழிந்து எந்திரம் - மந்திரச்சக்கரம். ஈசன் - சிவன். இரந்து - யாசித்து. கிட்டிணன்- கண்ணன் குறவர் - குற இனத்தவர். வேலவர் - முருகக் கடவுள், முருகன் வள்ளியைத் தேடித் தினைப்புனம் வந்தபோது அவளின் அண்ணன்மார்கள் வர, வேங்கை மரமாகி குறவர்களால் வெட்டப்பட்டான் தேவேந்திரன் - தேவ அரசன், கௌதம முனிவரின் மனைவி அகலிகையை மோகித்து அவளைப் புணர்ந்ததால், அம்முனிவரால் தேகத்தில் பெண்குறிகள் ஆயிரம் வர சாபம் பெற்றான் மாவலிவாணன் - மகாபலி சக்கரவர்த்தி, திருமால் இவனிடம் மூன்றடி மண் தானமாகப் பெற்று ஓரடியால் வானுலகையும், ஓரடியால் பூமியையும் அளந்தார்; மூன்றாவது அடியை இவனது தலையில் வைத்துப் பாதாளத்தில் அழுத்தினார் சந்திரன் - திருப்பாற்கடல் கடைகையில் பிறந்தவன்; தட்சனின் பெண்கள் இருபத்தெழுவரை மணந்து அவர்களிடத்து ஒருமித்து ஆசை வைக்காது உரோகிணி என்பவளிடம் மாத்திரம் அன்பு வைத்ததால் இதையறிந்த தட்சன், நாள்தோறும்

ஒவ்வொரு கலை தேயவும் க்ஷயரோகம் அடையவும் சாபம் தந்தனன். மன்மதன் - சிவனால் எரிக்கப்பட்டவன். ஐந்தலை - ஐந்து தலை. பிரமன் - படைப்புக் கடவுள் சிவன் எனது புத்திரன், என்னால் உலகம் எல்லாம் உண்டாயிற்று என்று செருக்குக் கொண்ட காலத்துச் சிவமூர்த்தியால் இவனது ஐந்தாவது சிரம் கிள்ளியெறியப்பட்டது இரவி - சூரியன்; இராகு, கேது ஆகிய கிரகங்களினால் சூரியன் ஒளியிழக்கப்பெற்று இருள் அடையும் நிலை; அதாவது சூரியக்கிரகணம். பல் - ஒளி இரணியன் - இரணியாட்சன், நரசிம்ம மூர்த்தியாற் கொல்லப்பட்டவன் அரி - திருமால். வகுத்தான் - பிளந்தான். தரணி - பூமி. இண்டம் புதை - இண்டஞ் செடி மறைவிடம் தேளு - தேள் செய்யான் - ஒரு பூரான் வகை அரவம் - பாம்பு தாரை - வழி. துடர்ந்து - தொடர்ந்து. சண்ணுதல் - தாக்குதல் துரை- தலைவன் அப்பணை - ஆணை கர்த்தர் திருச்சமுகம் - தலைவன் இருக்குமிடம். இடைக்கட்டு - இடுப்பில் கயிறு கட்டி. பிரதானிகர் - அமைச்சர்கள் கரணிக்கர் - கணக்கன். அஷ்தகர் - அஷ்டகர்- எட்டு வகையான காவலர்கள். வாக்கு - சொல். பயிர்ந்தவுடன் - கூறியவுடன். தலையாரி- ஊர்க்காவற்காரன். கானகம் - காடு கண்டிதம்- வெட்டுதல், துண்டித்தல் கொற்றவன்- அரசன், தலைவன் கால்தரித்து - காலினை எடுத்து, சுமந்து. குறிகாட்டி - அடையாளங் காட்டி திறமை - பரிசு

பாடவேறுபாடு - 1 நானெழுந்து 2 இருளில்வந்து 3. சனத்தினில் 4 நொச்சங்கூட்டினேன் 5. சாதுவாய் 7 தறுகெட்டு 9. சொக்குப்பொடியும் 10 கிஷ்டணனும் 11 கயறுதன்னில் 12 மாபலி ஆனவனுடன் 13 போக்கியேவைத்தான் 14 சீறிவைத்தான் 15 கொன்றுடென்பார் 16 துரையப்பனை 17 கர்னல்கள் 18. வாக்குப்பிறந்தவுடன்.

சுவடிச்சொல் - 6 கடுவாளம் 8. நேந்தவுடன்.

(Kutiraiyait tiruṭutal)

Taru

tikkeṉavē nāṉumeḻuntu - kutirai
tiruṭavē nāṉinta iravilvantu
cokkuppoṭi kaiyileṭuttēṉ - paṭaimaṉṉar
tūkkattaic cōtittup parākkiramittu

acuvan taṉaiyaṭuttēṉ - caṉattil
accamaṟṟuk kutiraiyai noccaṅkoṭṭiṉēṉ
cacuvāy iruntatayyā - mutukaiyun
taṭṭiyēpiṉ kālataṉai neṭṭaivāṅkiṉēṉ

kālkkayiṟu taṉaiyaṟuttēṉ - kutiraikkuk
kaṭivāḷam iṭṭaṉayyā taṭaiyillāmal
ākkiramit taṉumāṉittuk - kutiraiyum
āṭṭaṅ koṇṭēveku cēṭṭaiceytu

.... -......

....

vērrāḷeṉ ṟarintutāṉ - kutirai
 miraṇṭatayyā paṭai tiraṇṭatayyā

kūkkural cattamāka - aṅkaṉē
 kutiraiyai viṭṭunāṉum pitirukeṭṭu
cīkkiramāy naṭantēṉ - avviṭattil
 cēvakar vīriyar kāvalarum

itaṭāk kaḷḷaṉeṉṟu - cēvakar
 eṉṉaitto ṭaravēcaṉi piṉṉaittoṭara
cativantu nērntavuṭaṉ - eṉṉiṭa
 tantiramum kaḷḷa mantiramum

putaiputai yāynuḷaiya - eṉṉiṭa
 pokkaṇatti lēyirunta cokkuppoṭikaḷ
matikeṭṭut tāṉpaṟakka - eṉṉiṭa
 mantira maruntukaḷ entiramum

(Vitiyiṉ Valimai)

caṉiyaṉ muṉṉatu niṟkumō - teyvam
 tāṉṉiṟku mōeṉṉa tāṉniṟkumō
caṉiyaṉ periyavaṉkāṉ - īcaṉait
 talaiyōṭṭi lēirantuṇ ṭalaiyavaittāṉ

kiṭṭiṇaṉum veṇṇaitiruṭi - uraluṭaṉ
 keṭṭiyākak kayiṟṟiṉil kaṭṭiyēvaittāṉ
veṭṭumeṉṟu kuṟavarcolla - vēlavarai
 vēṅkai maramākavē ēṅkavaittāṉ

tēvēntiraṉ taṉakkāyiraṅ - kaṇ
 tēkamel lāmatu vākavaittāṉ
māvali vāṇaṉiṭa - taṉatu
 vallamaiya ṭakkipūmik kuḷḷēvaittāṉ

cantiraṉ uṭaliḷantāṉ - nalla
 caracamaṉma taṉumavaṉ uruvaḷintāṉ
aintalaip piramaṉ - taṉaiyum
 ākkiramit torutalaiyai pōkkiviṭṭāṉ

iravitaṉ pallaiyoṭittāṉ - aṉṟu
iraṇiyaṉai nakattil arivakuttāṉ
taraṇiyil eṉaippiṭittāṉ - intac
caṉiyaṉum viṭuvāṉō iṉieṉṉamō

(Pakaletti piṭipaṭutal)

eṉṟucolli iṉtamputaikkuḷ - nuḻaintukoṇṭu
iruntēṉē aṅkēveku peruṅtēḻu
tiṉṟutiṉṟu eṉaikkoṭṭavē - aṭṭaikaḷ
ceyyāṉum pūrāṉum paiyyaravamum

kaṭitta kaṭivāyil - valiyoṉṟuṅ
kāṇēṉē putti tōṇēṉē
tuṭukkākavē cēvukar - tāraimēl
tuṭarntu tuṭukkākavē naṭantuvantu

kaḷḷaṉinta iṉtamputaikkuḷ - itavarak
kāṇumeṉṟāṉ oruvaṉ kāṇōmeṉṟāṉ
veḷḷaiceyyum vaṇṇanturai - ṃucalpōl
virukkuviruk keṉṟunāṉ irukkavumē

cēvukar vīriyarum - iṉtañ
ceṭikkuḷḷē nuḻainteṉṉaip piṭittiḻuttut
tāviyē kaṭṭiyiṟukkic - cummā
caṇṇumeṉpār cilapēr koṉṟupōṭeṉpār

(Paṭaittalaivaṉ mun koṇṭu viṭutal)

kuttukkut teṉpār cilapēr - ivaṉaik
kollavē turaiyappaṉai illaiyumeṉṟu
karttartiruc camukattiṟku - iṭaikkaṭṭuk
kaṭṭiyeṉṉaik koṇṭupōy viṭṭavuṭaṉē

taḷakarttar matimantirikaḷ - maṟṟapira
tāṉikar paṭaimaṉṉar vāṇiparum
vaḷamuḷḷa karaṇikkarkaḷ - aṣṭakar
vāruveṭic cēvukar vīriyarum

kaṇṭār eṉmukattait - tiruṭṭuk
kaḷḷaṉiṭa karamatu tuḷḷiviḻavē

tuṇṭan tuṇṭamāka veṭṭuṅkō - eṉṟavuṭaṉ
turaimaṉati raṅkiyē tiruṭaṉaiyum

(Māṟukāl māṟukai tuṇṭikkappaṭutal)

māṟukālum māṟukaiyum - vāṅkumeṉṟu
vākkuppa yirntavuṭaṉ cīkkiramāyk
kūṟivarun talaiyāri - kāṉakattil
koṇṭuvantu eṉṉaiyavaṉ kaṇṭitañceytāṉ

oṟṟaip puḷiyamaram - ataṉkīḻ
oṟṟaikkālum oṟṟaikkaiyum paṟṟiyaṟuttāṉ
koṟṟavaṉ etirālē - kāltarittak
kuṟikāṭṭi yēveku tiṟamaipeṟṟāṉ.
-tantāṉaṉā taṉataṉaṉā -

Horse Stealing

36. In the middle of the night, sudden I rose
With intent to steal a goodly horse;
Armed with my magic powders in hand
I made sure if the captain was deep asleep;
Then boldly I sidled up to the horse
I had set my heart upon; and without fear
Of discovery, clicked my tongue and caressed
And patted the animal's back and stretched its legs -
To all of which it was silent!
I cut off its tethering rope and fixed
The bridle-bit I had brought with me
And seized it, hoping for the best.
But alas, the horse began to kick and move;
Sensing a stranger's touch on its back
It grew scared and neighed in fear
Rousing all the sleeping guards; at which,
In a hurry I left the place and swiftly
Walked away, but to no avail!
Shouting 'Thief, Thief', the servants all

Did follow me steps as I ran,
Of no use were all my cleverness and guile,
Magic powders and tricks;
My bags fell off here and there,
And all my courage and skill
Grew powerless before malefic Saturn!

The Power of Destiny

The very Gods, can they stand
Before the might of the planet Saturn?
Saturn is truly great, for did he not
Make Ēswara himself beg for food
Like a mendicant, with a skull in hand?
Lord Kiruṣṇa himself when he stole butter,
Was tied to a mortar with a rope so tight!
When the Kuṟuva-hunters chased Vēlavaṉ
Did he not stand desolate as a Vēṅkai tree?
Dēvēndra, king of the celestials, acquired
A thousand eyes all over his body,
All because of its malefic power!
Mahābali, emperor of the Demons
Lost all his power and got banished
To the underworld (by Tirumāl and Vāmaṇa)!
The Moon-God came under a curse,
To waste away digit by digit for fifteen days;
Lovely Maṉmath lost his corporeal frame
And became invisible, owing to his fate.
Five-headed Brahma lost one head
At the hands of Civa, fate, again!
The Sun-God Pūsa[30] lost his tooth
(At the hands of Rudra during a sacrifice)!
Hari with his nails tore the Demon Hiraṇya

And slew him. If such wore his power, then,
Will malefic Saturn ever let me go?

Pakaletti getting caught

Thus lamenting I did myself in a thicket
Of *intai*[31] bush but not unhurt,
For, I was bitten by scorpions big,
Red centipedes, leeches and snakes
And millipedes, though no pain I felt
As my misery was ever so great!
All around me I heard the servants
Haughtily beating the bushes in their search;
"May be, the rascal thief is hiding
Inside the *intai* bush! Let us see" said one.
And another cried! "He is not here,"
Till atlast as I lurked fearfully
Within the bush, like a frightened rabbit
Trembling in a washerman's ghat,
The servants spotted me and pulled me out,
Tied me up securely, all the while shouting curses
'Beat him', 'punch him', 'cut him', until
A soldier said; "we have no orders to kill him";
And they took me to the General's tent.

Pakaletti being brought before the commander

They brought me hands and feet bound fast,
Before the presence of the Lord-commander
Surrounded by his captains, counsellors
And other officers, traders, accountants
Altogether eight kinds of subordinates
Gunners, warriors- all of whom on seeing me
Cried in one voice: "Cut him to pieces
That his pride may be put out for good"

Whereat however, the Lord-General
Taking pity on my plight declared:

Alternate limbs of Pakaletti being cut off

'Do not kill him, but cut off
His right leg and left hand!"
And accordingly the headmen present,
Brought me to the neighbouring wood
And severed one leg and one hand of mine
On either side, standing beneath
A single tamarind tree; and taking
My severed limbs to his master as proof
That he had carried out his order,
He got thereby a reward substantial!

30. Pūsa - One of the names of the Sun-God.
31. Īṇṭai - Eight-pinnate soap-pod: (Acacia intsia caesia)

(தன் விதியை நினைத்துப் புலம்புதல்)

விருத்தம்

37. *நதியணி அருள்மா [1]மேரில் நாதனே பரனே எந்தன்*
சதிகள வதனால் [2]கால்கை தறித்திடப் பரத வித்து
மதியினால் வாழ்வா ருண்டோ வையகந் தன்னி லேதான்
விதிதனை வெல்லப் போமோ விசாரமாய்ப் [3]புலம்பி னேனே

நதியணி - கங்கையை அணிந்த. அருள்மாமேர் - அருள்மலை பரன் - சிவன் தறித்திட - வெட்டிட பரதவித்து - வருந்தி மதி - அறிவு. வையகம் - பூமி. விசாரம்- கவலை, மனச்சஞ்சலம்

பாடவேறுபாடு - 1. மேருவில் 2 கைகால் 3 புலம்பலுற் றேனே

(Taṉ vitiyai niṉaittup pulamputal)

Viruttam

natiyaṇi aruḷmā mēril nātaṉē paraṉē entaṉ
catikaḷa vataṉāl kālkai taṟittiṭap parata vittu
matiyiṉāl vāḻvā ruṇṭō vaiyakan taṉṉi lētāṉ
vititaṉai vellap pōmō vicāramāyp pulampi ṉēṉē.

Pakaletti lamenting his fate

37. Racked by pain after my mutilation
I grieved my fate: 'O Supreme Lord
With Ganga in your matted locks,
Enshrined in Arulmalai! It's because
Of my plan to steal that I have had
My limbs cut off? I suffer terrible agony;
Can anyone live with his wits alone?
Who on earth can conquer destiny?"

(காட்டில் காசி அந்தணர்கள் கண்டு வினவுதல்)

அகவல்

38 பாவிநான் வனத்தில் பதைப தைக்கத்
தாவியே பிடித்துத் தலையாரி மார்கள்
கானகந் தன்னில் கைகால் [1]தனையே
ஊனமாய்த் தறிக்க உருவது குலைந்து
முடவனைப் போலே முடங்கியே கிடக்க
வடதே [2]சத்தில் மருவிய காசி
தன்னிலே யிருந்து சனங்கள்வந் தார்கள்
என்னையே [3]பார்த்து இப்படி யேனோ
என்றுதான் உரைக்க விபரமாய் மொழிந்தேன்
நன்றென அவர்களை [4]நானினிப் பார்த்து
எந்தவூர் என்றேன் இருப்பதுங் காசி
அந்தணர் என்றார் அவர்களைப் பார்த்து
இங்குநீர் வந்த [5]தேதென் றியம்பக்

(திங்களூரின் பெருமைகள்)

கொங்குமண் டலத்தில் குறுப்புநன் னாட்டில்
இந்துமா நகரென் றிருக்கும் தலமதிலே
அய்ந்தலை நாகம் ஆடவெண் சாரை
தவளைக் கல்லும் சந்திர லிங்கமும்
தவளைச் சங்கும் [6]சடைப்பனை யதுவும்
பூமன் தினமும் போற்றுமய்ங் கரனும்

வீமன் கிணறும் வெண்டா மரைக்குளமும்
திக்குளோர் புகழத் தென்னர சுடனே
முக்குக் கல்லும் [7]முன்வட துருத்தியும்
[8]இரத்தக் கள்ளியும் இரணமுகப் பூதமும்
[9]சித்துமு விகையும் செந்தமிழ்ச் சங்கமும்
தோன்றவே காணாச் [10]சுனைக்கரு நொச்சியும்
மூன்றுமண் டலமும் முல்லை நிலங்களும்
நெய்தலும் பாலை நிலத்துடன் குறிஞ்சி
செய்தநல் மருதம் சென்னெலுங் கமுகும்
[11]கட்டிமாங் கன்னல் கதலி பலாவையும்
எட்டியே தாவி ஏறியே கவிகள்
வட்டமே கொண்டு வளங்கனி யதனைப்
புட்டெறிந் திடரசம் பொங்கியே புனலில்
கெண்டைமீன் வாளை கெளிறு குராவினம்
நண்டுகூர் மங்கள் நாட்டியஞ் செய்ய
க்ண்டுதான் [12]செந்நாய் கழுகுகாக் கையினம்
தண்டமேற் கொண்டு தாவியே சீறி
[13]நரண்டைகள் சூழ நதியில் நாரைகளும்
குரண்டமேல் மூக்கால் கொத்தியே [14]யிழுத்து
நிறையப் [15]புசித்து நீண்ட வாய்க்காலில்
குறையற் றிருக்கும் குறுப்புநன் னாட்டில்
திங்கள் மாநகரில் சிறந்த சிவாலயம்
அங்கே யோரடிக்கு ஆயிர லிங்கமும்
தெப்ப வாவிகளும் சிறந்த தடாகமும்
ஒப்பில் லாத்தங்க உயர்ந்தஉப் பரிகையும்
சித்திர மண்டபம் [16]சிகரகோ புரங்கள்
அத்தலம் அதிலே அகரவீ திகளும்
ஒன்பது [17]மணியும் உயர்கடை வீதியும்
செம்பொன் னாலமைத்த சித்திரத் தேர்களும்
நரியதை வைகை நாட்டிலே யன்று
பரியது வென்று பாண்டியர்க் கீய்ந்த
குருதே சிகனும் [18]குறுப்புநன் னாட்டில்
வருகும் மாணிக்க வாசக மூர்த்தி

தண்டிகை ஒருபுறம் தாங்கியே வருகத்
தண்டிகை ஒருபுறம் தான்சும்மா நடக்க
கண்டுதா னுலகுளோர் காரண மென்ன
பண்டுமா மறையோன் [19]பாரியாள் வயிற்றில்
பெற்றிடும் ஊமைப் பிள்ளையைப் பேசி
வைத்த மாணிக்க வாழ்மலைக் குருவும்
சந்திர சேகரருந் [20]தான்பெரிய நாயகி
நந்துதா னிலங்கும் நட்டூ ரழகரும்
நாத்தை எடுத்து நடுப்பாத் தியிலே
[21]பார்த்து நடென்ற பள்ளனை மிதித்து
வாளது கொண்டு வதைத்தகொண் டத்துக்
காளிநா யகியும் கன்னி கருப்பணன்
வீரபத் திரனும் விளங்கிய அங்கு
நாரணி மாரி நாயகி யுடனே்
அப்பச்சி மாரய்யன் அன்னசத் திரமும்
இப்படி அதிசயம் [22]இருக்குமிந் தூரில்
இந்நகர்க் கிணையென் றியம்பியே எடுத்துச்
சொன்னவன் வாயில் சொரியுமே புழுக்கள்
அந்நகர் அதுக்கிணை யான்சொல்ல மாட்டேன்
இன்னமுச் சிதங்கள் இருக்குது கேளும்
இந்திர புரியில் இமையவர் முதலாய்
சந்திர புரிக்குத் தான்வரு வாரே
திங்களூர் அதுக்குத் தேவர்செல் லாவிடில்
அங்கேதான் தேவர்க்கு அமுத்மு மெங்கே
எந்தூ ரதுவும் ஈசனார் முடியில்
இந்தூ ரதுபோல் இலங்கவும் காணேன்
அம்புலி யதுபோல் அநேகநட் சத்திரம்
அம்புலிக் கிணையென் றதைச்சொல்ல லாமோ
இருவினை மும்மலம் இலங்குமைம் பூதம்
கருவிகள் நான்கு கரணமைம் புலனை
விதிவல் வினையால் விலக்கமாட் டார்கள்
மதிநகர் எய்தால் வல்வினை பயக்கும்

(அருள்மலையின் பெருமைகள்)

அன்னக ரதிலே அருள்மலைப் பெருமையை
இன்னதென் றெடுத்து இயம்பவும் மாட்டேன்
ஆனா லென்ன அறிந்தமாத் திரங்கள்
நானே யுனக்கு நவிலவுங் கேளும்
மகாமே ருவுக்கு வடபா ரிசத்தில்
தகமையாய் அருள்மலை தானொன் றுளது
அந்தமா மலையோ அரனுக்கு [23]மோன
மந்திரஞ் செபித்த [24]மகமே ரதுவாம்
இந்தலோ கத்தில் இந்துமா நகரில்
அந்தமா மலைபோல் அருள்மலை யுளது
இம்மலை யிதுவோ ஈசனை முகத்தருள்
அம்மனோர் முகத்தருள் அருள்மலை யானது
ஆகையால் அறுமுகர் அசுரனைச் செயித்து
தோகைமா [25]மயில்மேல் தோன்றிய மலையாம்
[26]இந்தநல் மொழியை இதுநிச மென்றபேர்
சந்திரா தித்தர் தானுள்ள வரைக்கும்
இந்திர பதத்தில் இருந்துதான் முடிவில்
முந்துசா யுச்சிய முத்திபெற் றிருப்பார்
ஆகையால் நாங்கள் அந்நகர் தேடி
வேகமாய் வந்த விபரமென் றுரைத்து

(அந்தணர்கள் நொண்டிக்கு மரக்கால் அளித்தல்)

அருள்மலை மீதில் அங்கேநீ சென்று
முருகனைப் போற்றி முத்திபெற் றிடவே
உனதுடை கைகால் ஒருநொடி யளவில்
இனிதுடன் வளரும் என்றுதா னுரைத்துப்
பச்சிலை மருந்து பறித்துநல் லெண்ணெயில்
பச்சங் கனிச்சார் பகரவே [27]வார்த்திடக்
கைகால் புண்ணது கருந்தமும் பேற
மைசேர் மலையில் மரமது கொண்டு

(அருள்மலை முருகனை வேண்டிப் பரவுதல்)

பொந்திதான் காலில் பொருந்தவே பூட்டி
குந்தியே நடந்து குறுப்புநன் னாட்டில்
[28]வந்துதான் இந்து மாநகர் எய்திச்
சந்தனச் சுனையில் ஸ்நானங்கள் [29]செய்து
அருள்மலை மீதில் அங்கேநான் செல்ல
இரவியும் மதியும் இந்திரன் இமையோர்
வந்துதான் புஷ்ப மாரிகள் பெய்ய
துந்துமி முழங்கச் சுருட்டிகள் நிழற்றக்
கின்னரர் வாழ்த்த கெருடகந் தருவர்
பன்னியே நாரதர் பரதகீதஞ் செய்ய
இருள்வினை யகற்றும் இறையவன் ஈன்ற
அருள்மலை யான அறுமுகக் கடவுள்
சன்னதி முன்பால் தறிமரம் போலே
நின்றுதான் வீழ்ந்து நெடுந்தவம் புரிந்து
திருமகள் மருகா சேனா பதியே
முருகனே ஆறு முகவனே பரனே
மோனமந் திரத்தில் முளைத்தசெந் திருவே
கானக் குறத்தி கணவனே குகனே
குஞ்சரி கந்தா குமரகாங் கயனே
சஞ்சலம் அகற்றும் சடாட்சரப் பொருளே
அய்யுங் கிலியும் ஆனதற் பரனே
மெய்யெங் கினிலும் வீற்றிருப் பவனே
கண்ணுக் குள்ளே கருணைச் சுடரே
விண்ணுக் கப்பால் வெளியிலுற் றவனே
தசைநரம் [30]புக்குள் தனஞ்செய னாக
விசைநரம் புக்குள் வீற்றமெய்ப் பொருளே
திருநீ றிடவே தீவினை தூள்படவே
வருவாய் வருவாய் மயிலேறி வருவாய்
பெற்றதாய் தந்தை பிள்ளையை வெறுத்தால்
மற்றதாய் தந்தை [31]வளர்த்தின துண்டோ
அன்னையும் நீயே அப்பனும் நீயே

என்னுள் ளத்தில் இருப்பவன் நீயே
ஏசுவ துனையே இகழ்வது முனையே
பேசுவ துனையே பிதற்றுவ துனையே
சொல்வது முனையே துதிப்பது முனையே
வல்வினை யதனால் வருத்தினே னுனையே
வேலா யுதனே [32]வெண்ணீ றிடவே
காலது வளர காட்சிதந் தருள்வாய்

(கைகால் வளரப்பெறுதல்)

என்றுநான் போற்ற இறையவன் அருள்சேர்
குன்றிலே கைகால் கொடுத்துமுன் னெனக்கு
பேர்நொண்டி யென்று பெருமையாய்த் திங்க
ளூர்நொண்டி யென்று பேருங் கொடுத்திடவே

(ஆசிரியர் வரலாறு)

**கந்தமே மிகுந்த கடப்பமா லிகையான்*
கந்தவேள் கருணா கடாட்சம் உற்றவன்
மேன்மை கள்சேர் வீரவா கேந்திரன்
வமிசம் அதிலே வந்தசெங் குந்தர்
குலக்கொழுந் தான குள்ளையன் தனயன்
இலக்கணத் தொகையான் இனியஅவி நாசி
நாவலன் ஆனவன் நன்னூல் தெரிந்து
பாவினம் எழுத்தும் பயனசைச் சீரும்
பந்தம் அடிதொடை பகர்ந்துசெந் தொடையால்
செந்தமிழ் மாலையைச் சேர்க்க வல்லவன்
பகுபதம் என்னும் பகாப்பதந் தன்னைத்
தகைமையாய் நெஞ்சில் தான்கற் றறிந்தவன்
குற்றிய லுகரமும் குற்றிய லிகரமும்
சுற்றிய மாத்திரை தொகையது கற்றவன்

**அடிஎண் 155-178 வரையிலுள்ள இப்பாடல்கள் பதிப்பிற்குப் பயன்படுத்திய சுவடியில் இல்லை பாடவேறுபாட்டிற்குப் பயன்படுத்திய தமிழ்ப்பல்கலைக்கழகச் சுவடியிலிருந்தும், தாள் சுவடியிலிருந்தும் கிடைக்கப்பெற்றவை.*

எழுதளை விகற்பமொடு இயல்தரு குருவை
பழுதறப் பார்த்துப் படித்தகெம் பீரன்
பன்னியல் பொருத்தம் பாட்டியல் கற்றவன்
பன்னூல் சிதம்பரப் பாட்டியல் தெரிந்தவன்
பஞ்சகா வியங்கள் படித்தநா வலனிட
கஞ்ச மலர்ப்பதம் கருத்தில் சேர்ப்பவன்
நற்றமி ழாலே நாதன் அருள்மலை
கொற்றவன் மீதில் கூறிய நொண்டியை
நாட்டியஞ் செய்தேன் நாடுகள் தோறும்
பாட்டியல் கேட்டுப் பரிசுதந் தாரே

வனம் - காடு ஊனம் - குறைவு. மருவிய - பொருந்திய. காசி - ஒரு நகரம் சனம் - மக்கள். கொங்கு மண்டலம் - கொங்கு நாடு. குறுப்பு - குறுப்பு நாடு. இந்துமாநகர்- திங்களூர். அய்ந்தலை நாகம் - ஐந்து தலைகளுடைய பாம்பு வெண்சாரை- பாம்புவகை தவளைக்கல், சந்திரலிங்கம், தவளைச்சங்கு, சடைப்பனை, பூமன் - பிரமன், காமன். ஐங்கரன் - ஐந்து கைகள் உள்ளவன், விநாயகன் வீமன் கிணறு, வெண்டாமரைக்குளம், தென்னரசு - தென்+அரசு. தென்பகுதியிலுள்ள அரசமரம். முக்குக்கல், வடதுருத்தி - வடப்பகுதியிலுள்ள ஊதுந்துருத்தி இரத்தக்கள்ளி, இரணமுகப்பூதம், சித்துமூலிகை, செந்தமிழ்ச் சங்கம், காணாச்சுனை, கருநொச்சி - இவை யாவும் திங்களூரில் அமைந்துள்ள அதிசயங்களாகக் கூறப்படுகிறது மண்டலம் - நாடு, நாட்டுப்பகுதி முல்லை, நெய்தல், பாலை, குறிஞ்சி, மருதம் - ஐவகை நிலங்கள் சென்னெல் - செந்நெல் மா - மாமரம். கன்னல் - கரும்பு. கதலி - வாழை கவி - குரங்கு. கெண்டை, வாளை, கெளிறு, குரவை- மீன் வகைகள் கூர்மம் - ஆமை தண்டம் - சண்டை நரண்டை - நரந்தை - நரந்தம் - காகம். நாரை, குரண்டம் - கொக்கு வகைகள் திங்கள் மாநகர் - திங்களூர். சிவாலயம் - சிவன் கோயில் தெப்பவாவி- தெப்பக்குளம். தடாகம் - குளம் உப்பரிகை - மேல் மாடம் சித்திர மண்டபம் - ஓவியச்சாலை, ஓலக்க மண்டபம் அகரவீதி - பார்ப்பனர் தெரு வைகை நாடு - பாண்டி நாடு பரி - குதிரை பாண்டியர் - அரிமர்த்தன பாண்டியன் குறுதேசிகன்- மாணிக்கவாசகர். தண்டிகை - பல்லக்கு பண்டு - பழைமை, முற்காலம் மாமறையோன் - வேதியன், அந்தணன். பாரியாள் - மனைவி சந்திரசேகர், பெரியநாயகி- திங்களூர் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனாகிய சிவனும் இறைவியாகிய உமாதேவியும். நந்து - சங்கு நட்டூரழகர் - திங்களூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருமால். நாத்து - நாற்று. பள்ளன் - உழவன் கொண்டத்துக்காளி - திங்களூரில் எழுந்தருளியிருக்கும் காளி தெய்வம் கருப்பணன், வீரபத்திரன் - சிறு தெய்வங்கள் நாரணி, மாரி - துர்க்கை அப்பச்சி மாரய்யன் அன்னசத்திரம் - திங்களூரிலுள்ள சத்திரம் இந்தூர்- இந்து+ஊர் - திங்களூர். உச்சிதம் - மேன்மை. இந்திரபுரி - இந்திரன் தலைநகராகிய அமராவதி. இமையவர் - தேவர் சந்திரபுரி - திங்களூரின் பழைய பெயர் ஈசன் - சிவன் முடி -தலை. இந்தூர் - திங்களூர் இலங்க - விளங்க. அம்பு- சந்திரன். இருவினை - நல்வினை, தீவினை. மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை என்னும் மூவகை மலங்கள்.

இலங்கும் - விளங்கும் ஐம்பூதம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியனவாகும். கருவிகள் நான்கு கரணமைம்புலம் - மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய நான்கு கரணமும், அவை: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்து புலன்களுமாகிய கருவிகள். மதிநகர் - திங்களூர், பயக்கும் - நீங்கும். அருள்மலை - அருள்மலை எனும் தலம் மகாமேரு - மேருமலை. பாரிசம் - பக்கம், திசை. தகைமை- தகுதி, பெருமை. அரன் - சிவன். இந்துமாநகர்- திங்களூர் அசுரன் - சூரன். நிசம் - உண்மை. சந்திராதித்தர்- சந்திரர் சூரியர். இந்திரபதம் -இந்திரனாயிருக்கும் நிலை, துறக்கம். முந்து - ஆதி, முன்பு. சாயுச்சியம் - மனித ஆன்மா கடவுளிடம் ஒன்றும் நிலை முத்தி - வீடுபேறு மைசேர் - பசுமை மிகுந்த. பொந்தி - கம்பு, கட்டை. எய்தி- சேர்ந்து ஸ்நானம் -தலைமுழுகுதல். இரவி - சூரியன். மதி - சந்திரன். இமையோர் - தேவர். புஷ்பமாரி - பூ மழை. துந்துமி-பேரிகை சுருட்டி - குடை. நிழற்ற - நிழல் அளிக்க , கின்னரர் - மனித உடலும் குதிரை முகமும் உடையராய் இசையில் வல்ல தேவசாதியார். கெருட கந்தருவர் - பதினெட்டு தேவசாதியுள் ஒருவகையார், இசைவல்ல சிறகுடைத் தேவகுலத்தார். நாரதர் - பிரமனின் மகன். இருள்வினை - தீவினை இறையவன் - சிவன் சன்னதி - சன்னிதி. தறிமரம் - வெட்டுண்ட மரம். நின்னு - நின்று என்பதன் கொச்சைச்சொல். திருமகள் - திருமாலின் தேவி மருகன் - மருமகன். கானக்குறத்தி - வள்ளி குஞ்சரி - தேவயானை. சஞ்சலம் - மனக்கவலை சடாட்சரம் - ஆறெழுத்து மந்திரம், 'நமகுமாராய' அல்லது 'சரவணபவ' என்னும் முருகன் மந்திரம். அய்யும் கிலியும் - ஐம் ஹ்லீம் மந்திரம். தற்பரன்- கடவுள். மெய் - உடல் தனஞ்செயன்- உடலைவிட்டு உயிர் நீங்கினும் தான் நீங்காது சிறிது நேரம் நின்று வெளியேறும் வாயு, தீ. திருநீறு - விபூதி தூள்பட ~ அழிய. வெண்ணீறு - விபூதி. அருள்சேர் குன்று - கருணை நிறைந்திலங்கும் அருள்மலை. கந்தம்- மணம். கடப்பமாலிகையான் - கடம்பமாலை யணிந்த முருகன். கந்தவேள் - முருகக் கடவுள் கடாட்சம் - அருள். வீரவாகேந்திரன் - வீரவாகுதேவர் - முருகவேள் கணத்தலைவன்; முருகனுக்குத் துணைபுரிந்த ஒன்பது வீரர்களில் ஒருவன் வமிசம் - வம்சம், சந்ததி. செங்குந்தர் குலம்- வீரவாகு தேவர் முதலியோர் தோன்றிய குலம். குள்ளையன் - அவிநாசிப் புலவரின் தந்தை. தனயன் - மகன் அவிநாசி - இந்நூலின் ஆசிரியர் நன்னூல்- நல்ல நூல்கள் பாவினம் - தாழிசை, துறை, விருத்தம் என்னும் முப்பகுதியான பாவின் வகை. எழுத்து, அசை, சீர், பந்தம் - தளை, அடி, தொடை - யாப்பின் உறுப்புகள். பகர்ந்து - சொல். செந்தொடை - மோனை முதலாகப் புகன்ற தொடை புகலாது தொடுப்பது செந்தமிழ் மாலை - செம்மையான தமிழ் நூல்கள் பகுபதம் - பகுதி விகுதி முதலியவுறுப்பினான் இயன்றபதம் பகாப்பதம் - பகுப்பிற் பயன்படாப்பதம். குற்றியலுகரம் - மாத்திரை குறுகின வுகரம். குற்றியலிகரம் - மாத்திரை குறுகின இகரம். எழுதளை - ஏழுதளைகள் விகற்பம் - வேற்றுமை இயல் - ஆகமம், கல்வி. குரு - ஆசிரியர். பன்னியல் பொருத்தம் பாட்டியல் - பன்னிரு பாட்டியல், இலக்கியத்திற்கு இலக்கணம் கூறும் நூல் பன்னூல்- பலநூல்கள். சிதம்பரப்பாட்டியல் - பரஞ்சோதியார் இயற்றிய நூல் பஞ்சகாவியம் - சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐம்பெரும் காப்பியங்கள். கஞ்சமலர் - தாமரை மலர். பதம் - பாதம். நற்றமிழ் - இனியதமிழ் கொற்றவன் - கடவுள். நாட்டியம் - கூத்து பாட்டியல் - பாட்டின் தரம் பரிசு - வெகுமதி.

பாடவேறுபாடு - 1 அதனை 2 யத்தில் 4 நன்னிப்பாத்து 5 தென்று கேட்க 6 சடப்பனை 7. முனைவட 9 சித்தர் மூலிகையும் 10. சொனைக்கரு 11 கட்டிமா மரமும் 12 சென்னாய் கழுகு காக்கயன் 13 நரந்தைகள் 14. யிழுக்க 15 பொசித்து 16. சிறந்தகோ புரங்கள் 17 தெருவும் 19 பாரிதன் 20 தான்பெரியாயி 22 இயல்பா யிருக்கும் 23 மேலான 24 மாமலை யதுவாம் 25 மலையில் 26 இத்தல மகிமைமெய்ய நிஜமென்ற பேர்கள் 28 வந்துதா னிருந்து மனக்களிப்பெய்தி 29. பண்ணி 30 பதனில் 31 வாழ்த்தி னதுண்டோ 32 வேண்டிநீ றிடவே.

சுவடிச்சொல் - 3 பாத்து 8 ரத்தக் கள்ளியும் ரணமுகப் 18 குருப்புநன் 21 பாத்து 27 வாத்திட

(Kāṭṭil kāci antaṉarkaḷ kaṇṭu viṉavutal)

Akaval

pāvināṉ vaṉattil pataipa tāikka
tāviyē piṭittut talaiyāri mārkaḷ
kāṉakan taṉṉil kaikāl taṉaiyē
ūṉamāyt taṟikka uruvatu kulaintu
muṭavaṉaip pōlē muṭaṅkiyē kiṭakka
vaṭatē cattil maruviya kāci
taṉṉilē yiruntu caṉaṅkaḷvan tārkaḷ
eṉṉaiyē pārttu ippaṭi yēṉō
eṉṟutāṉ uraikka viparamāy moḻintēṉ
naṉṟeṉa avarkaḷai nāṉiṉip pārttu
entavur eṉṟēṉ iruppatuṅ kāci
antaṉar eṉṟār avarkaḷaip pārttu
iṅkunīr vanta tēteṉ ṟiyampak

(Tiṅkaḷūriṉ perumaikaḷ)

koṅkumaṉ ṭalattil kuṟuppunaṉ nāṭṭil
intumā nakareṉ ṟirukkum talamatilē
ayntalai nākam āṭaveṉ cārai
tavaḷaik kallum cantira liṅkamum
tavalaic caṅkum caṭaippaṉai yatuvum
pūmaṉ tiṉamum pōṟṟumayṅ karaṉum
vīmaṉ kiṇaṟum veṇṭā maraikkuḷamum
tikkuḷōr pukaḻat teṉṉara cuṭaṉē

mukkuk kallum munvaṭa turuttiyum
irattak kaḷḷiyum iraṇamukap pūtamum
cittumū likaiyum centamiḻic caṅkamum
tōṉṟavē kāṇāc cuṉaikkaru nocciyum
mūṉṟumaṉ ṭalamum mullai nilaṅkaḷum
neytalum pālai nilattuṭaṉ kuṟiñci
ceytanal marutam ceṉṉaluṅ kamukam
kaṭṭimāṅ kaṉṉal katali palāvaiyum
eṭṭiyē tāvi ēṟiyē kavikaḷ
vaṭṭamē koṇṭu vaḷaṅkaṉi yataṉaip
puṭṭeṟin tiṭaracam poṅkiyē puṉalil
keṇṭaimīṉ vāḷai keḷiṟu kurāviṉam
naṇṭukūr maṅkaḷ nāṭṭiyañ ceyya
kaṇṭutāṉ cennāy kaḷukukāk kaiyiṉam
taṇṭamēṟ koṇṭu tāviyē cīṟi
naraṇṭaikaḷ cūḻa natiyil nāraikaḷum
kuraṇṭamēl mūkkāl kottiyē yiḻuttu
niṟaiyap pucittu nīṇṭavāyk kālil
kuṟaiyaṟ ṟirukkum kuṟuppunaṉ nāṭṭil
tiṅkaḷ mānakaril ciṟanta civālayam
aṅkē yōraṭikku āyira liṅkamum
teppa vāvikaḷum ciṟanta taṭākamum
oppil lāttaṅka uyarntaup parikaiyum
cittira maṇṭapam cikarakō puraṅkaḷ
attalam atilē akaravī tikaḷum
oṉpatu maṇiyum uyarkaṭai vītiyum
cempoṉ ṉālamaitta cittirat tērkaḷum
nariyatai vaikai nāṭṭilē yaṉṟu
pariyatu veṉṟu pāṇṭiyark kīyṇta
kurutē cikaṉum kuṟuppunaṉ ṉāṭṭil
varukum māṇikka vācaka mūṟtti
taṇṭikai orupuram tāṅkiyē varukat
taṇṭikai orupuram tāṉcummā naṭakka
kaṇṭutā ṉulakuḷōṟ kāraṇa meṉṉa
paṇṭumā maṟaiyōṉ pāriyāḷ vayiṟṟil

perritum ūmaip pillaiyaip pēci
vaitta māṇikka vālmalaik kuruvum
cantira cēkararun tāṉperiya nāyaki
nantutā ṉilaṅkum naṭṭū ralakarum
nāttai eṭuttu naṭuppāt tiyilē
pārttu naṭeṉṟa pallaṉai mitittu
vāḷatu koṇṭu vataittakoṇ ṭattuk
kāḷinā yakiyum kaṉṉi karuppaṇaṉ
vīrapat tiraṉum viḷaṅkiya aṅku
nāraṇi māri nāyaki yuṭaṉē
appacci mārayyaṉ aṉṉacat tiramum
ippaṭi aticayam irukkumin tūril
innakark kiṇaiyeṉ ṟiyampiyē eṭuttuc
coṉṉavaṉ vāyil coriyumē pulukkaḷ
annakar atukkiṇai yāṉcolla māṭṭēṉ
iṉṉamuc citaṅkaḷ irukkutu kēḷum
intira puriyil imaiyavar mutalāy
cantira purikkut tāṉvaru vārē
tiṅkaḷūr atukkut tēvarcel lāviṭil
aṅkētāṉ tēvarkku amutama meṅkē
entū ratuvum īcaṉār muṭiyil
intū ratupōl ilaṅkavum kāṇēṉ
ampuli yatupōl anēkanaṭ cattiram
ampulik kiṇaiyeṉ ṟataiccolla lāmō
iruviṉai mummalam ilaṅkumaim pūtam
karuvikaḷ nāṉku karaṇamaim pulaṉai
vitival viṉaiyāl vilakkamāṭ tārkaḷ
matinakar eytāl valviṉai payakkum

(Aruḷmalaiyiṉ perumaikaḷ)

aṉṉaka ratilē aruḷmalaip perumaiyai
iṉṉateṉ ṟeṭuttu iyampavum māṭṭēṉ
āṉā leṉṉa aṟintamāt tiraṅkaḷ
nāṉē yuṉakku navilavuṅ kēḷum
makāmē ruvukku vaṭapā ricattil

takamaiyāy arulmalai tāṉōṉ ṟuḷatu
antamā malaiyō araṉukku mōṉa
mantirañ cepitta makamē ratuvām
intalō kattil intumā nakaril
antamā malaipōl aruḷmalai yuḷatu
immalai yituvō īcaṉai mukattaruḷ
ammaṉōr mukattaruḷ aruḷmalai yāṉatu
ākaiyāl aṟumukar acuraṉaic ceyittu
tōkaimā mayilmēl tōṉṟiya malaiyām
intanal moḻiyai itunica meṉṟapēr
cantirā tittar tāṉuḷḷa varaikkum
intira patattil iruntutāṉ muṭivil
muntucā yucciya muttipeṟ ṟiruppāṟ
ākaiyāl nāṅkaḷ annakar tēṭi
vēkamāy vanta viparameṉ ṟuraittu

(Antaṇarkaḷ noṇṭikku marakkāl aḷittal)

aruḷmalai mītil aṅkēnī ceṉṟu
murukaṉaip pōṟṟi muttipeṟ ṟiṭavē
uṉatuṭa kaikāl orunoṭi yaḷavil
iṉituṭaṉ vaḷarum eṉṟutā ṉuraittup
paccilai maruntu paṟittunal leṇṇaiyil
paccaṅ kaṉiccār pakaravē vārttiṭak
kaikāl puṇṇatu karuntaḻum pēṟa
maicēr malaiyil maramatu koṇṭu

(Aruḷmalai Murukaṉai vēṇṭipparavutal)

pontitāṉ kālil poruntavē pūṭṭi
kuntiyē naṭantu kuṟuppunaṉ ṉāṭṭil
vantutāṉ intu mānakar eytic
cantaṉac cuṉaiyil snāṉaṅkaḷ ceytu
aruḷmalai mītil aṅkēṉāṉ cella
iraviyum matiyum intiraṉ imaiyōr
vantutāṉ puṣpa mārikaḷ peyya
tuntumi muḻaṅkac curuṭṭikaḷ niḻaṟṟak
kiṉṉarar vāḻtta keruṭakaṉ taruvar

pan̲n̲iyē nāṟatar paratakītañ ceyya
iruḷvin̲ai yakaṟṟum iṟaiyavan̲ īn̲ṟa
aruḷmalai yān̲a aṟumukak kaṭavuḷ
can̲n̲ati mun̲pāl taṟimaram pōlē
nin̲ṟutān̲ vīḻntu neṭuntavam purintu
tirumakaḷ marukā cēn̲ā patiyē
murukan̲ē āṟu mukavan̲ē paran̲ē
mōn̲aman tirattil muḷaittacen tiruvē
kān̲ak kuṟatti kaṇavan̲ē kukaṇē
kuñcari kantā kumarakāṅ kayan̲ē
cañcalam akaṟṟum caṭāṭcarap poruḷē
ayyuṅ kiḷiyum ān̲ataṟ paran̲e
meyyeṅ kin̲ilum viṟṟirup pavan̲ē
kaṇṇuk kuḷḷē karuṇaic cuṭarē
viṇṇuk kappāl veḷiyiluṟ ṟavan̲ē
tacainaram pukkuḷ tan̲añceya n̲āka
vicainaram pukkuḷ viṟṟameyp poruḷē
tirunī ṟiṭavē tīvin̲ai tūḷpaṭavē
varuvāy varuvāy mayilēṟi varuvāy
peṟṟatāy tantai piḷḷaiyai veṟuttal
maṟṟatāy tantai vaḷarttin̲a tuṇṭō
an̲n̲aiyum nīyē appan̲um nīyē
en̲n̲uḷ ḷattil iruppavan̲ nīyē
ēcuva tun̲n̲iyē ikaḻvatu mun̲aiyē
pēcuva tun̲aiyē pitaṟṟuva tun̲aiyē
colvatu mun̲aiyē tutippatu mun̲aiyē
valvin̲ai yatan̲āl varuttin̲ē n̲un̲aiyē
vēlā yutan̲ē veṇṇī ṟiṭavē
kālatu vaḷara kāṭcitan taruḷavāy

(Kaikāl vaḷarappeṟutal)

en̲ṟutān̲ pōṟṟa iṟaiyavan̲ aruḷcēr
kun̲ṟilē kaikāl koṭuttumun̲ n̲en̲akku
pērnoṇṭi yen̲ṟu perumaiyāyt tiṅka
ḷūrnoṇṭi yen̲ṟu pēruṅ koṭuttiṭavē

(Āciriyar varalāṟu)

kantamē mikunta kaṭappamā likaiyāṉ
kantavēḷ karuṇā kaṭāṭcam uṟṟavaṉ
mēṉmai kaḷcēr vīravā kēntiraṉ
vamicam atilē vantaceṅ kuntar
kulakkoḻun tāṉa kuḷḷaiyaṉ taṉayaṉ
ilakkaṇat tokaiyāṉ iṉiyaavi nāci
nāvalaṉ āṉavaṉ naṉṉūl terintu
pāviṉam eḻuttum payaṉacaic cīrum
pantam aṭitoṭai pakarntucen toṭaiyāl
centamiḻ mālaiyaic cērkka vallavaṉ
pakupatam eṉṉum pakāppatan taṉṉait
takaimaiyāy neñcil tāṉkaṟ ṟarintavaṉ
kuṟṟiya lukaramum kuṟṟiya likaramum
cuṟṟiya māttirai tokaiyatu kaṟṟavaṉ
eḻutaḷai vikaṟpamoṭu iyaltaru kuruvai
paḻutaṟap pārttup paṭiṭṭakem pīraṉ
paṉṉiyal poruttam pāṭṭiyal kaṟṟavaṉ
paṉṉūl citamparap pāṭṭiyal terintavaṉ
pañcakā viyaṅkaḷ paṭittanā valaṉiṭa
kañca malarppatam karuttil cērppavaṉ
naṟṟami ḻālē nātaṉ aruḷmalai
koṟṟavaṉ mītil kiṟiya noṇṭiyai
nāṭṭiyañ ceytēṉ nāṭukaḷ tōṟum
pāṭṭiyal kēṭṭup paricutan tārē.

Brahmins from Banāras encountering Pakaletti

38. As thus I lay on the ground under a tree
In the forest, shivering from pain unbearable
And anguish, after losing my limbs
At the hands of the headman and becoming a lame man,
From the northern region, from Banāras,
A number of holy men came that way;
And on seeing me and my plight,

They enquired with concern how it came about!
And I narrated in detail all that happened.
'Well, Sirs, whence are you?" "Banāras,"
They replied. "We are Brahmins on pilgrimage".
"What brings you to these parts?, "I queried.

The Greatness of Tiṅkaḷūr

"In Koṅku region, in Kuṟuppu tract
Is a place named after the moon, -
Tiṅkaḷūr, the great: these are its landmarks!
Five-headed serpent; dancing white snake,
Toad-stone; Cantiraliṅkam; toad-conch:
Talipot-palm; the five-handed deity
Worshipped daily by Bhūmaṉ; Bhīma's well;
The tank with white lotuses: the far-famed
Peepul tree in the South: the triple rock;
The blazing forge in the North, blood-red cactus;
The goblin with a gory visage;
Wonderful herbs; the congress of Tamil bards;
The invisible tarn; black *nocci* tree;
The triple regions; the five tracts
Such as *Mullai, Neytal, Pālai, Kuṟiñci,*
And *Marutam,* rich in superior paddy, areca palms;
Plump mango, sugarcane, plaintain
And jack-fruit trees haunted by monkeys
That leap to pluck the fruits and throw them down,
The juices thereof dripping into the steam beneath;
While carp and cat-fish and scabbard fish,
Crabs, tortoises and other, leap and dance
In the waters; on seeing which, the red dholes,
Kites, and vultures and crows fly low
Over the waters to seize them, while the storks

And cormorants and king-fishers pierce
Them with their sharp beaks to state their hunger!
Such the canals and streams of the Kuruppu tract,
And such its fertility; in this prosperous region,
In the great city of Tiṅkaḷūr, there is a temple
To Lord Civa. Thousands of liṅkams abound
Therein; tanks and ponds full of water
There are; a peerless golden terrace high,
A fine picture gallery and peak-like towards,
Mark the greatness of the place.
Broad streets for brahmins; noble marts
Rich with gems of nine kinds; artistic cars
Made of virgin gold there are.
The great preceptor saint Māṇikkavācakar
For whom in Vaikai land, the Lord transformed foxes,
Into horses to be paraded before the Pāṇṭiya,
In Kuruppu region travelled in a palanquin
Carried by faithful servitors on one side,
And invisible *bhūtas* on the other,
Which made the people cry in wonder!
Once of old in the womb of a Vedic Brahmin's wife
Was born a dumb child, who by His grace
Acquired the power of speech
Thanks to the intercession of Māṇikkavācakar,
Cantiracēkara and Periyanāyaki
The God and the Goddess are enshrined
In Tiṅkaḷūr, along with Lord Tirumāl
With the conch so bright, - Naṭṭūraḷakar
Here too dwell, Koṇṭattukkāḷi who with her sword
Did slay the Paḷḷaṉ who ordered her
To take up the seedlings and plant them
In the middle of the miry field; besides

Karuppaṉṉaṉ, Vīrabhadraṉ, Nārāyaṇi and Māriammaṉ
To whom the locals offer worship. Here too there is
A choultry dispensing free food to travellers
Bearing the name of Appaccimāraiyyaṉ
So rare and wonderful is Tiṅkaḷūr, the great:
None its equal: Who so speaks of another place
To rival this, will find worms pouring out
Of his mouth. I cannot find another like unto it.
More there is, to proclaim its greatness:
On hear! all the Gods unwinking, from Indra's city
Do come down often to Cantirapuri
Which is Tiṅkaḷūr, for where else can they get
Nectar to drink? It's like a jewel bright
On the Lord's crown, none brighter!
Many stars shine like the lambent moon,
But can any be compared to the moon at all?
And those who reach this lunar city
Will not suffer the consequences
Of twyfold Karma, or the triple *malas*,[32]
The four *Karaṇas*,[33] or the five senses
And their concomitant actions.

The Greatness of Aruḷmalai

I cannot attempt to do justice
To the greatness of Aruḷmalai near Tiṅkaḷūr!
Still I shall narrate as well as I can,
All that I know for your benefit.
To the north of great Mēru,
There is a holy mount called Aruḷmalai.
This was the great hill where Hara himself
Got instructed in the mystic Mantra (OM)
Here in these parts, in Tiṅkaḷūr,
There is too an Aruḷmalai equally holy:

There, Grace Abounding Eswara and the Goddess
Are personified in this Hill of Grace -- Aruḷmalai!
Hence, here it was that Caṇmuka appeared victorious,
On his fantailed-peacock mount, after vanquishing
The demon hordes of Cūrapatma!
And those who accept this as holy truth
Will live as long as the Sun and the Moon exist,
Opulent as if in Indra's heaven
And in the end, attain surely the blissful state
Where souls do become oned with the Supreme.
And that is the reason why we came
In eager search of this holy town."

The Brahmins providing the lame man with a wooden leg

Thus explaining their presence there
The brahmins proclaimed to Pakaletti:
'If you go to Aruḷmalai and offer worship
To Lord Murukaṉ hailing His grace, surely
Your limbs will grow again."
Not stopping with these words of advice,
They searched about for medicinal herbs
Whose juice along with that of fruits ripe,
They boiled in gingelly-oil, which they applied
As ointment on his wounded leg and hand,
Which healing rapidly, became blackenedscars:
Then they cut off suitable lengths of wood
From the green hillside to make a crutch
For Pakaletti to walk with its aid.

Praying to Arulmalai Murukaṉ

Using the crutch provided by the kindly Brahmins,
Pakaletti limped his way through Kuṟuppur land
Till he reached the city of the moon, Tinkaḷūr,
Bathing in the pool therein, fragrant as sandal,

The lame thief went up Aruḷmalai holy:
And before the shrine he fell prostrate
And headlong, like a tree that had been felled
Before the shrine of Him, Lord Caṇmuka
Himself a hill of Grace, (sired by the God
Who does remove twofold Karma dark)
Even as the sun and the moon, Indra,
And the unwinking celestials do rain
Showers of flowers, and the divine drums
Do beat, the canopies provide shade umbrageous,
And too the Kiṉṉarars bless,
The Garudas and Gandarvas chant melodies
And the sage Narada plays on his lyre!.
And in devotion pure I hailed the Lord:
'Nephew of Goddess Lakṣmi! commander great!
Muruka! Caṇmuka! Supreme Ens!
Red Opulence! engendered in the mystic mantra!
Spouse great of the Kuṟava maiden from the glen!
Kuka! Kanta wedded to Dēvayāni! Kumara!
Kāṅkēya! Essence of the mystic sestet
That aye removes doubt and distress!
Great God hailed by the mystic syllables, "Haim" and "Haim"!
Lord who is truly omnipresent! Ray of Grace
Flashing from the eye! O you who exists
Behind the Beyond, in skye space!
O you who continues to dwell
Within the nerves as Daṉanjaya, the vital air!
Come, O Lord come! come upon your peacock mount
And with the sacred ash daubed on my forehead
Pulverise all my evil Karma!
Oh, if the son is hated by his father and mother,
Will other parents care for him?
You, are my mother! and you, my father!

You alone dwell in my heart permeating my being!
Whatever I say in praise or abuse
It is you who are ever in my mind!
You are my magnificent obsession!
Yours alone, the praise I speak!
You alone, I worship in adoration meek!
My evil Karma alone did make me
Forget you! Lord armed with the spear!
As I smear myself with white sacred ash,-
My God, appear before me that my limbs may grow!"

Pakaletti's hand and leg grow again

As thus I worshipped the Lord of Grace,
Hailing him in passionate devotion.
The God enshrined in Aruḷmalai great
Did restore my severed limbs to me
And gave me an honourable name
'The Noṇṭi of Tiṅkaḷūr' by which appellation
I have been called ever since that day.

About the Author

In the line of great Vīrapāku blessed
By Lord Kanta adorned with fragrant Kaṭampa wreaths,
Appeared the Ceṅkuntar clan; the scion
Of this race was one Kuḷḷaiyyaṉ whose son
I am, Avināci by name, well-versed in grammar,
And learned in poetical texts;
I have mastered Tamil prosody and the art
Of inditing Tamil verses of diverse kinds.
I have conned all the grammatical texts
Written by experts such as Parañjōti and others
The five great epics of Tamil I have mastered,
Ever keeping in mind the lotus feet of the Lord;

Equipped as I am with all this learning
And expertise, I've made bold to write in goodly Tamil,
A verse-drama, -its hero being a certain lame man,
Who got redemption by the grace of the Lord of Arulmalai.
And in all the regions, patrons and admirers
Have enjoyed my work and honoured me
With many a gift and reward in cash and kind.

32. Malas - The three impurities of the soul according to Saiva Siddhanta.
33. Karanas - Organs of sense.

(இந்நூலிற்குக் கொடைகொடுத்தோர்)

தரு

39. பாருலகில் ஆசுகவி நொண்டி - தன்னைப்
படித்துநடிக் கத்தியாகங் கொடுத்தாரைச் சொல்லுகிறேன்
மாரய்யன் [1]மடப்பதியில் சென்று - அப்பச்சி
மாரய்யனைப் போற்றியேவித் தாரமாகப் படித்தேன் 1

கொற்றவன் குருகுல வசீரன் - நல்ல
கோகனகம் போலேயுற்ற வாகைமாலை மார்பன்
பத்தியுள்ள சிவபூசை வேடன் - நல்ல
பார்த்திபர்கள் மெய்க்கச்சிவன் ராத்திரியுண்டு பண்ணினோன் 2

தின்றுருசி யானகறி தன்னை - சிவனே
தின்னப்பா வெனக்கொடுத்த கண்ணப்ப வங்கிஷத்தான்
அன்றுலகில் புகழ்பெற்ற தூயன் - என்னை
ஆண்டமுத்து ராயனவன் வேண்டியபொன்கொடுத்தான் 3

மற்றாநாள் அங்கிருந்து வந்தேன் - நல்ல
வஸ்துவான் வயித்தியன் சத்திரியகுலதீரன்
சித்திக்கும் வித்தியா பிரபலன் - ஆசுமதுரம்
சித்திரவித் தாரக்கவி முத்தமிழில்பேசும் 4

கொற்றவனாம் எங்கள் [2]கிருஷ்ணதாசு - மன்னன்
கொடுத்தானே [3]இருபத்தெட் டுத்தங்கக்காசு
அத்தனையும் முடிந்துகொண்டேனே - நல்ல
அம்புலிந கர்க்கதிபன் சம்பன்ன [4]கிரேசத்தான் 5

காராள குலத்திலுற்ற தூயன் - நல்ல
காரைச்சிறை விடுவித்து பாராளும் கெம்பீரன்
ஏரெழுபதும் படித்த கம்பன் - தனக்கு
என்றுமடிமை நாங்கள் என்றெழுதிக் கொடுத்தோன் 6

சொல்லில் அரிச்சந்திர மகமேரு - நல்ல
சூலிமுதுகில் சோறிட்டு நீலிபழிதுடைத்தோன்
இல்லையென்ற [5]சொல்லை மறவாதான் - இரவில்
ஏராளமா கவேமுளை வாரியமுதளித்தோன் 7

[6]வண்ணக்கன் குலத்திலுற்ற தீரன் - நல்ல
வண்மையுள்ள பட்டிலிங்கன் மன்னனரு ளால்வந்த
கண்ணின்மணி யானபுண்ணிய சாலி - துரைக்
காளிமன்னன் அவனொரு சாளிகைப்பொன்கொடுத்துக் 8

குதிரைமட் டங்கள் ஒன்றீய்ந் தானே - அவனைக்
கும்பிட்டுநான் வாழ்த்திக்கொள்ள இன்பத்தைப்பெற்றேனே
திதமிகுஞ் செந்தமிழ்ப் பிரசங்கம் - பெற்ற
திங்கள்நகர் தன்னில்வாழும் செங்குந்தர்பாலில் சென்றேன் 9

வல்லானையும் வென்றமகா வீரர் - வீர
வாகுவச்சிர வாகுபெற்ற யோகனவச்சிரதேகன்
[7]எல்லோருங் கூடினசபை மீதில் - வந்து
இருந்துசெந் தமிழ்மாலை தெரிந்துசொல்லவுமே 10

*அங்கணன் வசீகரன் வேலப்பன் - துணைவன்
ஆறுமுக தீரன்தம்பி ஆனபொன்னுராயன்
செங்கடப்ப மாலைபுனை தூயன் - மகளூர்
தீரனும்அம் மாசை அண்ணன் தீரன்மங்கை மார்பன் 11

*நேர்த்தியுள்ள பார்த்திபர்கள் மெய்க்க - நல்ல
நீண்டபுகழ் பெற்றதுரைத் தாண்டவ மகிபன்
வாத்தியன் வைத்தியன் அவிநாசி - வாணன்
மாமனாக வந்தமுத்து ராமய்ய வசீகரன் 12

---

* பாடவேறுபாட்டிற்குப் பயன்பெற்ற சுவடியான தாள் சுவடியிலிருந்து கிடைக்கப்பெற்ற கூடுதலான 2 பாடல்கள்.

கீர்த்திபெற்ற செங்குந்தர் எல்லோரும் - கூடிக்
கெண்டிராயன் இருபத்தி ரெண்டுபொன்னுங் கொடுத்தார்
நாற்றிசை மதிக்கவாழ்த்தி னேனே - குறுப்பு
நாட்டிலுள்ள கவுண்டர்கள் நாட்டிமைசெய்வோரும் 13

(பகலெத்தி திருமணம் செய்தல்)

தண்மையாய்த் தியாகமது தந்து - நல்ல
தாரமும்பண் ணிக்கோவென்றுத் தாரமுஞ்சொன்னாரே
வண்மையுள்ள புலித்தேவன் தம்பி - சின்னா
மறவன்வள வில்நாங்கள் விவாகமது செய்ய 14

உறவுகொண் டாடியே வந்து - நல்ல
உத்திரநட் சத்திரத்தில் முகூர்த்தங் குறித்துத்
திறமையாய் உறமுறையார் வந்து - நல்ல
சீலமுட னேமணக் கோலஞ்செய்தாரே 15

அம்மிவலமாக அரசாணி - முன்
பாகமங்கிலியம் பூட்டிவி வாகம்நிறைவேற
ரம்மியமாய் அருந்ததி கண்டு - நாங்கள்
ரதியும்மத னும்போலே இருதயம் மகிழ்ந்து 16

(வாழிப்பாடல்)

போகபோக் கியங்கள்செய் தோமே - நல்ல
புத்திரனைப் பெற்றெடுத்தேன் எத்திசையும் வாழி
ஆகம புராணகலை வாழி - எங்கள்
அருள்மலைக் குமர குருபரனும் வாழி 17

குருவுங் கலைமகளும் வாழி - எங்கள்
குலத்துக் கதிபனான புலித்தேவன் வாழி
திருவுங் குருபரனும் வாழி - எங்கள்
தேவர் முனிவர்களும் வாழிமிக வாழி 18

அரனுமை யாளுடன் வாழி - நல்ல
ஆழியுண்ட [9]நட்டூர் அழகரும் வாழி
திருவுங் கலைமகளும் வாழி - எட்டுத்
திக்கிலுள்ள [10]தேவர்களும் முக்கியமாய் வாழி 19

இந்திரன் இந்திராணியுமே வாழி - நல்ல
எழில்பெற்ற மதுரைமா காளிசத்தி வாழி
கந்தன்வள்ளி தெய்வானை வாழி - கரிய
காளியும் கொண்டத்துக் காளியும்மிக வாழி 20

கெடிராசன் படைமன்னர் வாழி - மழைக்
கெச்சிதமாய்ப் பெய்யப்பயிர் பச்சையெல்லாம் வாழி
குடியான பேர்கள்தினம் வாழி - நல்ல
குறுப்புநாட்டுக் கவுண்டர் திறத்துடன் வாழி 21

[11]சீர்பெறு கணக்கர்தட்டார் வாழி - கொங்கு
[12]தேசத்துச் செந்தமிழ்க்கவி ராசர்களும் வாழி
பார்புகழ் நொண்டிநாடகந் தன்னை - தினம்
படித்துப்படித் துக்கொண்டு [13]நடித்தார்கள் வாழி 22

இன்பமுடன் காதினில் கேட்போரும் - [14]இதை
எழுதிப் [15]படித்தபேர்கள் கிளையெல்லாம் வாழி
[16]தென்புடன் தியாகந்தந்தார் வாழி - அனு
தினமும்புவி யிலுள்ளோர் தினம்தினமும் வாழி. 23

அப்பச்சிமாரய்யரது துணை லட்சிக்கவும்.

